
கி. ராஜநாராயணன்
மாயமான
காலச்சுவடு
தமிழ்
கிளாசிக்
சிறுகதைகள்
IDAISEVAL


கி. ராஜநாராயணன்
மாயமான்
காலச்சுவடு
தமிழ்
கிளாசிக்
சிறுகதைகள்
IDAISEVAL



## மாயமான்

கி. ராஜநாராயணன் (பி. 1923)

கோவில்பட்டி அருகே இடைசெவல் கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ண ராமானுஜம் - லக்ஷ்மி அம்மாள் தம்பதியரின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயண பெருமாள் ராமானுஜம் நாயக்கர். இவரது முன்னோர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெலுங்கு தேசத்திலிருந்து வந்து இங்கே குடியேறியவர்கள்.

கி.ரா.வின் படிப்பு எட்டாவது வகுப்புடன் நின்றுவிட்டது. ஆனால் நிறைய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். கரிசல் பூமியும் அதன் மக்களும் இவரை எழுதத் தூண்டின. தந்தையிடமிருந்து கேட்ட கதைகள் அதற்கு உரமிட்டன. கி.ரா.வின் எழுத்து நடை கிராமிய மணமும் கரிசல் மண்ணின் அழகும் கொண்டது. பாமர மக்களின் பேச்சுவழக்கையும் சொலவடைகளையும் லாவகமாகக் கையாள்பவர். முதல் நாவல் ‘கோபல்ல கிராமம்’ பெரிய வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து நாடோடி இலக்கியம், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்று முப்பதுக்கும் மேற்பட்ட நூற்கள் வெளிவந்துள்ளன. இவரது வட்டார வழக்குச் சொல்லகராதி ஒரு முக்கியத் தொகுப்பு.

கதைசொல்லி என்ற இதழைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். அங்குள்ள பல்கலைக் கழகத்தில் நாட்டுப்புறவியல் துறையின் இயக்குநராகப் பணிபுரிந்துள்ளார்.

சாகித்ய அகாதெமி விருது உட்பட பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

## சபரிநாதன் (பி. 1989)

தொகுப்பாசிரியர்

பொறியியல் பட்டதாரி. தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையைச் சேர்ந்தவர். பணி நிமித்தமாக சென்னையில் வசித்து வருகிறார். 2011இல் ‘களம் - காலம் - ஆட்டம்’ என்ற கவிதைத்தொகுதியையும் 2016இல் ‘வால்’ என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளது. தாமஸ் ட்ரான்ஸ்ட்ரோமரின் கவிதைகளை ‘உறைநிலைக்குக் கீழே’ என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார். தொடர்ந்து இலக்கியம் குறித்த விமர்சனக் கட்டுரைகள் எழுதிவருகிறார்.

கி. ராஜநாராயணன்

# மாயமான்

தொகுப்பாசிரியர்

சபரிநாதன் (பி. 1989)

காலச்சுவடு பதிப்பகம்

அன்பார்ந்த வாசகருக்கு,

வணக்கம்.

காலச்சுவடு நூலை வாங்கியமைக்கு நன்றி.

நூலின் உள்ளடக்கம், உருவாக்கம், அட்டைப்படம் இன்ன பிற அம்சங்கள் பற்றிய உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் காலச்சுவடு வரவேற்கிறது. தகவல், எழுத்து, வாக்கியப் பிழைகள் தென்பட்டால் கட்டாயம் தெரிவித்து உதவுங்கள். நூல் தயாரிப்பில் கடும் குறைபாடு இருப்பின் மாற்றுப் பிரதி உங்களுக்குக் கிடைக்கக் காலச்சுவடு ஏற்பாடு செய்யும்.

மின்னஞ்சல்: publisher@kalachuvadu.com

காலச்சுவடு நாகர்கோவில் தலைமையகத்துக்கும் கடிதம் அனுப்பலாம்.

தங்கள்

எஸ்.ஆர். சுந்தரம் (கண்ணன்)

பதிப்பாளர் - நிர்வாக இயக்குநர்

மாயமான் / சிறுகதைகள் /ஆசிரியர்: கி. ராஜநாராயணன் / தொகுப்பாசிரியர்: சபரிநாதன்/ © கி. ராஜநாராயணன் / முதல் பதிப்பு: டிசம்பர் 2018 / வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629001

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 875

maayamaan / Stories /Author: Ki. Rajanarayanan /Compilor:

Sabarinathan /© K. Rajanarayanan / Language: Tamil / First Edition: December 2018

Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669 K.P. Road, Nagercoil 629001, India /Phone: 91-4652-278525 /e-mail: publications @kalachuvadu.com

ISBN: 978-93-5244-105-1

# பொருளடக்கம்

முன்னுரை: மண்ணும் மனிதரும்

கதவு

மாயமான்

கோமதி

கன்னிமை

வந்தது

பேதை

புறப்பாடு

ஜீவன்

சந்தோஷம்

கறிவேப்பிலைகள்

விளைவு

வேட்டி

கனிவு

குருபூசை

நிலை நிறுத்தல்

**கண்ணீர்**

கரிசல்க்காட்டில் ஒரு சம்சாரி

முன்னுரை

# மண்ணும் மனிதரும்

கதைகளும் நதிகளைப் போலத்தான். மனித வாழ்விற்கும் அதன் விதிக்கும் காலங்காலமாக நதிகள் ஒப்பிடப்பட்டு வந்துள்ளன. கதைகளோ வாழ்வையும் விதியையும் புரிந்துகொள்ள முயன்றுள்ளன. கல் பொருதி இறங்கும் ஆறுகள், தாம் கடந்துவந்த நிலம் அனைத்தின் தாதுக்களையும் சுமந்துசெல்வது போல, மனிதர்களூடே பயணிக்கும் கதைகளில், அவர்தம் உடலைமைப்பிலிருந்து அவரைத் தாங்கியிருக்கும் நிலவெளி வரை அதன் மனமும் ருசியும் சத்துகளும் கரைந்து கலந்துள்ளன. ஒரு வாய் தண்ணீர் அருந்துகையில் நாம் நதியின் பல்லாயிரம் காத பயணத்தை உணர்ந்தறியக் கூடும். ஆனால் ஒரு கதையைக் கேட்கையில் அது கடந்துவந்த காலத்தொலைவையும் ஏறியிறங்கிய நிலப்பரப்பின் சுருக்கங்களையும் ஊகிக்க முடியுமா என்ன?

கிரா போன்ற கதைசொல்லியின் வருகைக்கும், மக்கள் வரலாற்றை, அவர்களது உண்மையான பண்பாட்டை மீட்டெழுத முனைந்த மார்க்ஸியத்தின் கருத்தியல் முயற்சிக்கும் தொடர்பிருக்கிறது. குறிப்பாக இத்துடன் ஓர் அறிவுத்துறையாக நாட்டார் வழக்காற்றியலின் தோற்றுவாய் தருணத்தை பொருத்திப்பேச இடமுள்ளது. 1960இல் அகில இந்திய கம்யூனிஸ்ட் தலைவரான பி.சி. ஜோஷி தலைமையிலான மாநாடு இதில் ஒரு முக்கியமான உந்து சக்தியாக இருந்ததாகவும் இதில் நா. வானமாமலை, கிரா உட்பட பலர் கலந்துகொண்டதாகவும் சொல்லப்படுகிறது. கிரா போன்று நாட்டார் வேளாண் பின்னணியில் இருந்து வந்துள்ள ஓர் எழுத்தாளருக்கு அது போன்றவொரு சந்தர்ப்பம், இனி செய்யவேண்டியது தனக்குத் தெரிந்தவற்றை சொல்லுவதுதான் என்று எண்ணச்செய்திருக்கலாம். தான் நின்றுகொண்டிருக்கும் மரத்தடியே

பெரும் புதையல்தான் என்ற சுயநினைவுக்கு ஒரு பூதம் வருவதற்கு ஒப்பானது இது. அப்படி தனது ஆஸ்தியைத் தானே அறிந்துகொண்ட முதல் தமிழ் எழுத்தாளர் அவர். கிட்டத்தட்ட சொலவடை ஆகிவிட்ட கிராவின் வாசகம் ஒன்று 'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கினேன். ஒதுங்கியவன் பள்ளிக்கூடத்தை பார்க்காமல் மழையையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டேன்.' உண்மை தான். கிரா அகல்வியின் (ஏட்டுக்கல்விக்கு எதிராக கோணங்கி பிரயோகிக்கும் பதம்) துணையில் எழுதியவர்தான். தனது சுயகற்றலைப் பள்ளிக்கு வெளியே நிகழ்த்திக் கொண்டவர்தான். ஆனால் அறிவுப்புலத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கி இப்போது கல்வித்துறையின் வலிமையான தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் நாட்டார் வழக்காற்றியலின் பிறப்பிற்கும் கிரா மாதிரியான ஒருவரின் கதைவெளிப்பாட்டிற்கும் இடையுள்ள இவ்விசித்திர உறவு நிச்சயம் சுவாரஸ்யமான ஒன்று.

நவீனத்துவம் தனிமனிதனை அடிப்படை அலகாகக் கொண்டது. அவனது உள்முரண்களையும் வெளிப் போராட்டத்தையுமே பேசுபொருளாய்க் கருதியது. இதை நவீன இலக்கியத்தின் தொடக்கத்திலேயே தெளிவுறக் காணலாம். அன்னா கரீனினாவும் ரஸ்கோல்நிகோவும் கூர்முனைச் சுயத்தின் பிரபலமான உதாரணங்கள். இத்தகைய செவ்வியல் படைப்புகளில் நவீனத் தன்னிலையினது பிறப்பின் முக்கல் முனகலைத் தெளிவாகக் கேட்கலாம். நவீனத் தன்னிலையில் இருந்துதான் நவீனப்புனைவு உருவாகிறது. தமிழ்ப்புனைவை எடுத்துக்கொண்டால் நவீனத்துவத்தை தொடங்கிவைத்த புதுமைப்பித்தனைச் சற்று தூக்கலாகவே தனிநபர்வாதத்தை வெளிக்காட்டிய படைப்பாளி. கிராவின் சமகாலத்தவர்களான அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, ஜி. நாகராஜன், ஜெயகாந்தன் எனப் பலரும் வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு அளவுகளில் தனிநபர்வாதத்தை முன்னெடுத்தவர்கள்தாம். வேறு வழியில்லை, உலகம் முழுக்க நவீன இலக்கியத்தின் மைய முடிச்சாக தனிநபர் தான் இருந்திருக்கிறார். கிராவின் தீவிர செயல்பாட்டுக்காலம் தமிழில் நவீன இலக்கியம் தெளிவுருகொண்டு தீவிரம் பூண்ட சமயம். மார்க்ஸியர்களின் எதிர்ப்பைத் தவிர்த்துவிட்டால் தனிநபர்வாதப் பார்வை

பெரும்பாலும் நவீன இலக்கியத்தில் நிலைபெறுகின்ற காலகட்டமும்கூட. தனிநபர்வாதத்திலிருந்துதான் தனிமையும் அந்நியமாதலும் பேருருக் கொள்கின்றன, தனி ஒருவனுக்கும் சமூகத்திற்கும் இடையேயான உராய்வுகள் கவனத்திற்கு வருகின்றன, அவனது கொந்தளிக்கும் அகமும் அதன் துயரும் பக்கத்தை நிரப்புகின்றன. அகத்திலிருந்து உதிக்கும் சத்தியமும் தரிசனமும் புறஎதார்த்தத்தின் போலிப்பாவனைகளோடு மோதுகின்றன. சுருக்கமாக சொல்வதெனில் பெருங்கனம் கொண்ட சுயம் ஈர்ப்புமையமாகிப் படைப்பை சுழற்றுகிறது.

ஆனால் கிராவின் கதையுலகம் அப்படியானதல்ல. வலிய பல கதாபாத்திரங்கள் உலவும் இடம்தான் அவரது கதைப்பிரதேசம் எனினும் அங்கு சுயமானது கூர்ந்து தற்கணத்தில் அல்லல் உறுவதில்லை. தனிமனித உளவியல் சலனம் தென்படும் இடங்கள் உண்டெனினும் தீவிர அகப்பார்வையின் நெருக்கடி நிலை கிடையாது. அதேபோல கிராவின் கதை சொல்லல் முறையும் நவீனத்துவ பொதுப்பாணியுடன் ஒட்டாமல், பெரிதும் வாய்மொழிக் கதை மரபை அடியொற்றி வார்க்கப்பட்ட ஒன்று. இதனால்தான் பல கதைகள் கடந்த காலத்தில் நடந்து முடிந்தவையாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. மேலும் கிரா நடுவயதில் எழுத்துப்பணியைத் தொடங்கிய ஒருவர். அதுவரையான வாழ்வனுபவம் தரும் நிதர்சன நோக்கும் நிதானமும்கூட இத்தகைய விகாசமான பார்வைக்கு அவரை அழைத்து வந்திருக்கலாம்.

இதுபோன்ற காரணங்களாலேயே அவரது புனைவுலகம் நவீனத்தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான ஒரு பிராந்தியமாகத் தோற்றம் பெற்றது. புதிய நிலம் வருகிறபோது புதிய மனிதர்களும் அவர்களுடன் புதிய கதைகளும் நுழைந்துவிடுகின்றன. நவீன வாசகர்கள் அல்லாத ஏனையவரும் கிராவின் எழுத்திற்குள் விரும்பி நுழைவதற்கு இதுவுமொரு காரணமாயிருக்கலாம். ஏனெனில் இப்போதும்கூட இந்த தேசம் நவீன மனோபாவத்திற்குள் முழுக்கக் கட்டுப்பட்டு உள்ளடங்கி இருக்கும் இடம் அல்லவே.இங்குள்ள அனைவரும் முற்றாய் நவீன மனம் படைத்தவர் என அறிவிக்க முடியுமா? மறக்க இயலாத பல பாத்திரங்கள் அமையப்பெற்றது

எனினும் இக்கதைகள் ஒரு கிராமத்தின் கூட்டுப்பங்கேற்பினால் நிகழ்பவை. அந்த வகையில் ஒவ்வொரு கதையும் அந்த ஊரின் கதையே. அந்த ஊர் இடைசெவலாகவோ கோபல்லபுரமாகவோதான் இருக்க வேண்டும் என்றில்லை. மாறாக அது இப்பெருநிலத்தின் எந்தக் கிராமமாகவும் இருக்கலாம். இப்படியாகக் கிராமிய நிலவுடமைப் பண்பாட்டின் பெருஞ்சித்திரத்தை கிரா புனைய விரும்புகிறார் எனலாம். அதற்கேற்ப நகரம் என்பது அதை வைத்துக் கதை செய்யவேண்டிய நிலப்பரப்பாகவும், கிராமம் என்பது கதைகள் கொட்டிக்கிடக்கும் இடமாகவே தோற்றமளிக்கிறது. அந்தத் தோற்றத்தை, அதைப் பதிவதற்கான அந்த எழுத்தாளப் பட்டாளத்தை உருவாக்கியதில் கிராவுக்கு முதன்மைப் பங்கு உண்டு.

கிராமம் எனும் அலகு இந்தியச் சமூகக் கட்டமைப்பின் அணு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றை அச்சுப்பிசகாமல் அப்படியே நாம் இப்போதும் இந்தியக் கிராமங்களில் பார்க்கலாம் என்கிறார் வரலாற்றாசிரியர் கோசாம்பி. பொதுவாகவே மார்க்ஸியர்கள் இந்திய கிராமப் பொருளாதாரத்தைத் தேக்கமடைந்த மாற்றமிலாத சமூக ஏற்பாடு என்ற கருத்துடையவர்கள். கிரா காட்டும் கரிசல் கிராமம் புறச்சக்திகளால் பெரிதும் தாக்கமுற்றதாகவோ அதனோடு உரசி முட்டிமோதி மாற்றத்தின் உருள்சக்கரங்கள் ஒலியெழுப்பும் ஒன்றாகவோ தோன்றவில்லை. அது தன்னளவில் முழுமையுற்ற, தனது முரண்பாடுகளைத் தனக்குள்ளேயே நீவிவிட்டுக்கொள்ளும் ஒரு தன்னிறைவான மூடிய உலகமாகவே காட்சி தருகிறது. அரசு எந்திரம் எனும் நவீன ஜனநாயகத்தின் இடையீடு மட்டுமே இந்த உலகைத் தொந்தரவு செய்கிறது. அதிலும் மொத்த எதிர்மறைப் பங்கும் ஜனநாயகத்தின் அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள்ள நேரிடுவதால் மீண்டும் கிராமம் தனது சுவாதீனமான உள்ளிணக்கத்தை மீட்டுக்கொள்கிறது.

பொதுவாகத் தொடக்ககால இந்திய நவீன இலக்கியத்தின் தீவிர, வெகுஜனப் பரப்பு இரண்டிலுமே ஒரு கதைக்கருவை அடிக்கடி காணலாம்.

அதாவது பாரம்பரிய வழிவந்த மரபிற்கும் புதிதாக நுழைந்த நவீனத்துவத்திற்கும் இடையிலான மோதல். கிராவின் உலகில் அத்தகைய மோதலைப் பார்க்க முடிவதில்லை.முரண்பாடுகளும் மோதல்களும் உறுதிபெற்று முற்றிய நிலை கிராவின் உலகில் இல்லை. மற்ற ஆசிரியர்கள் பிரியமாக இந்த நெருக்குதல்களைக் கையாளுகையில் கிரா அதைவிடுத்துத் தன் கிராமத்தில் மக்கள் இயற்கையோடும் ஊழோடும் கிடந்து போராடுவதைத்தான் பதிவுசெய்ய விரும்புகிறார். இந்த போராட்டத்தில் அவர்கள் நவீன மனிதனைப்போல விரக்தியுறவோ அவநம்பிக்கை கொண்டு சோரவோ செய்யவில்லை. மாறாக மண்ணிற்குப் பழகியவர்கள் ஆகையால் நம்பிக்கையோடு பாடுபடுகிறார்கள், துன்பம் வரும்போது அழுகிறார்கள் பிறகு சிரிப்பு வரும்போது சிரிக்கிறார்கள். விடிந்ததிலிருந்து அடைவது வரை உழைப்பு, இயற்கையை போலவே விதியையையும் புரிந்துகொள்ள முயல்கிறார்கள். வழி இல்லையேல் வழிபடுகிறார்கள். இதுதான் பெரும்பான்மையான இந்தியர்களின் நிலையும் மனமுமாக இருந்தது. இதை இலக்கியத்திற்குள் இழுத்து வந்ததுதான் கிராவின் முதற்பெரும்பணி. பூமணி சொல்வதைப்போல அதனால்தான் அவர் முன்னத்தி ஏர், கரிசலுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டார் வாழ்வியல் இலக்கியத்திற்கும். இன்றுவரை தமிழில் வெளிவரும் புனைவிலக்கியத்தில் செம்பாதி நாட்டார் பின்புலம் கொண்டவை என்பது எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்று. அந்த பெருங்கதவைத் திறந்துவைத்தவர் கி. ராஜநாராயணன்.

எனவே நவீன காலகட்டத்தை நோக்கிய பாய்ச்சலையோ அல்லது நவீனத்துடனான உராய்வுகளையோ கிரா கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. பாரம்பர்யத்தின் தொடர்ச்சியாகவும் எச்சமாகவும் வாழ்ந்துகொண்டிருக்கும் தானறிந்த சம்சாரி வாழ்வைப் பதிவு செய்யவே விரும்பினார். ஆனால் இதில் சுவாரஸ்யமான விஷயம் கிரா தான் எழுதிய முதல் கதையான 'மாயமா'னிலேயே இந்த நவீனத்தின் புறத்தாக்குதலை ஒருவகையில் எதிர்கொண்டார் என்பதுதான். கிராவின் முதல் கதை இது. 1958இல் சரஸ்வதி இதழில் வெளியானது. கரிசக்காட்டைச் சேர்ந்த சம்சாரி ஒருவர் கதைமுடிவில் நிலத்தை விற்றுவிட்டு ரயிலேறி மதுரை தாண்டிச்

செல்லும் கதை. கிராமத்தில் பொட்டிக்கடை நடத்தும் அப்பாவு செட்டியார் கோவில்பட்டி எனும் சிறுநகரிலிருந்து சாமான்களைச் சைக்கிளில் கொண்டு - ஹேண்ட்பாரில் தினப்பத்திரிகையுடன் - வரும் காட்சியுடன் தொடங்குகிறது. அன்று சுதந்திர தினம். கிரா எழுதப்புகுந்த காலப் பின்புலத்தையும் சமூக நிலவரத்தையும் இந்தக் காட்சி தெளிவாகச் சுட்டிவிடுகிறது. சுதந்திரக்கனவும் அதன் மகசூலாய் வந்த அரசும் எப்படி மையப்படுத்தப்பட்ட மேலை மாதிரிகளின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தால் விவசாயிகளை நிலத்தைவிட்டுக் கண்ணீரோடு ரயிலடிக்கு வந்துசேர்பவர்களாய் மாற்றியது என்ற நிதர்சனத்தின் முதல் தகவல் அறிக்கை என்று இந்தக் கதையைச் சொல்லலாம். கடைசியில் அதே தினசரியைச் சுக்குநூறாய் கிழித்துப் போடும் அப்பாவு செட்டியாரைப் பார்த்து தந்தை நல்லசிவம் செட்டியார் கோணலாய் சிரிக்கிறார். அவர் ஏன் இறுதியில் ஆவேசிக்காமல் அழாமல் கோணலாய் சிரிக்கிறார்.மகனுக்குத் தெரியாத எது தந்தைக்குத் தெரிந்திருந்தது. தினசரி வாங்குவது பழக்கமாகிவிட்ட அப்பாவு செட்டியார் ஏதோ ஓர் விதத்தில் அப்புராணியாக நவீன அரசிற்குள் நுழைந்துவிட்டவர்.அவரது அப்பா முந்திய மரபின் பிரதிநிதி எனக்கொண்டால் . . . பிள்ளைக்குத் தெரியாதது அப்பாவிற்குத் தெரிந்ததைப் புரிந்து கொள்ளலாம். அதை மண்ணின் விவேகம் எனலாம்.அதற்குதான் மாயமானைப் பற்றித் தெரியுமோ என்னவோ. நவீன மையஅரசும் அறிவியலும் வேளாண் பொருளாதாரத்திற்கு என்ன செய்தது என்பது கிராவின் முக்கியமான பேசுபொருள்களில் ஒன்று. 'வேட்டி', 'கொத்தைபருத்தி', 'கரண்டு அவுரி' என பல கதைகளை இதற்கு உதாரணமாய்ச் சொல்லலாம்.

'மாயமான்' கதையில் ஊரைவிட்டு வெளியேறும் கதாபாத்திரம்போல கிராவின் உலகில் பிறகு எந்தப் பாத்திரமும் ஊரைவிட்டு வெளியேறவில்லை. 90களுக்கு பின்னர்வந்த கதாசிரியர்களுக்கோ, ஊரைவிட்டு வெளியேறி கஞ்சிப்பாட்டுக்குத் திண்டாடும் மனிதர்களையும் பாரம்பர்ய பொருளாதாரத்தின் முறிவினால் சிதறியடிக்கப்பட்ட உபரித் தொழிலாளிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவது பிடித்தமான கருவாக இருந்தது. முன்னர் விவசாயம் தொழிலாக மட்டுமில்லை, அது

ஒரு வாழ்வியல் முறையாக இருந்தது. அதுவும் வானம் பார்த்த பூமியில் கேட்க வேண்டாம். அவர்களது உழைப்பும் வாழ்வும் வேறாக இல்லை. ஆனால் இப்போது அப்படி இல்லை, இதோ இந்நாட்களில் இங்கு சம்சாரிகள் பலரும் வெளியூரோ வெளிநாடோ சென்றுவிட்ட மகனை நம்பி கிளம்பிச் செல்கின்றனர். காற்றாலைக்காகவும் அரசுத்திட்டங்களுக்கும் மக்கள் நிலத்தை விற்கத் தயாராகிவிட்டனர். குக்கிராமங்கள் பலவும் முதியோர் மட்டுமே தங்கி வாழும் இல்லங்களாக மாறத்தொடங்கியாயிற்று. பல கதைகளில் கிரா முன்னரே ஊகித்ததுதான் இது.

கிராவின் எந்தப் புனைவையும் வாசகர் முதலில் புலன்களால் தான் அறிமுகம் செய்துகொள்கிறார். அவரது விழியும் செவியும் நாசியும்தான் வரவேற்புப் பெறுகின்றன. 'கோபல்லகிராம'த்தின் அற்புதமான தொடக்கத்தை உதாரணமாகச் சொல்லலாம். கோபல்லபுர மக்களின் தொடக்கமும் அப்படியேதான். முதலில் நிலமும் பொழுதுமே தீட்டப்படுகின்றன. பிறகுதான் மனிதர்கள் அதற்குப் பிறகுதான் கதை. கிரா அளவிற்கு புறவுலகிற்கு முக்கியத்துவம் வழங்கிய பிறிதொரு புனைவாசிரியர் இல்லை எனலாம். அது வெறுமனே உத்தியாக அல்ல அவரது கதைசொல்லலின் பகுதியாகவே அமைந்துள்ளது. வாய்மொழி மரபிலிருந்து அவர் விலகும் புள்ளிகளில் ஒன்றாகவும் இதைப் பார்க்கலாம். தவிர நவீனத்துவர்களிடம் காணக்கிடைக்கும் மனிதமையப் பார்வை கிராவிடம் கிடையாது. எப்போதும் இக்கதைகளில் பொழிவதற்கும் பொய்ப்பதற்கும் தயாராக உள்ளது வானம். சிட்டுக்களும் மாடுகளும் மண்ணில் சாட்சியாக. மானுட நாடகத்தின் அரங்காக இங்கு திகழ்வது மனம் இல்லை நிலம்.

எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமுள்ள இடைவெளியைவிட கதைசொல்லிக்கும் வாசகனுக்கும் உள்ள இடைவெளி குறைவு. கதைசொல்லிக்கும் கேட்பவருக்கும் உள்ள இடைவெளி அதனினும் குறைவு. இந்தக் கதைகளின் பேச்சுவழக்கு மொழி இயல்பாகவே வாசகனை எளிதில் உள்ளிழுத்துக் கொள்கிறது. ஏனெனில் கதைசொல்லல் என்பது அடிப்படையில் நிகழ்த்துக்கலையை ஒட்டிய ஒன்று. கிராவின்

கதைகளும் பெரும்பகுதி நிகழ்த்தப்படுகிறது என்பதாலேயே அவை வாசகப் பங்கேற்பிற்கு எளிதாக இடம் அளிக்கின்றன. மேலும் கதைசொல்லிகளிடம் காணக்கூடிய இன்னொரு விடயம் கதையை எந்த சுயத்துக்குள்ளும் மூழ்கடிக்காத தன்மை.இதையும் கிராவின் கதைகளில் காணலாம்.

ஏற்கனவே பலரால் எடுத்துக்காட்டப்பட்டதைப்போல கிராவின் பார்வை பொதுவுடமைச் சித்தாந்தச் சார்பினாலும், ரசிகமணியின் அழகியல் ரசனை அணுகுமுறையினாலும் வடிவமைக்கப்பட்டது. கிரா என்ற கதைசொல்லி நவீன எழுத்தாளராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது, இத்தகைய கருத்தியல் தாக்கங்களால் உருப்பெற்ற பார்வையைக் கொண்டிருந்ததாலும் அதனாலமைந்த ஒரு விமர்சனப் பார்வையைச் சேர்த்துக்கொண்டதாலும்தான். சொல்லல் முறையில் மட்டுமே வாய்மொழிக் கதைமரபின் கூறுகளைப் பயன்படுத்தினாலும் கருத்தேர்விலும் கட்டமைப்பிலும் கதாபாத்திர சித்திரிப்பிலும் கிராவை நவீன இலக்கியக் கருத்துக்களால் உத்வேகம் பெற்ற ஒருவராகவே கருதமுடியும். ஆனால் முன்னரே சொன்னதைப்போல சக நவீனத்துவப் படைப்பாளிகளிடமிருந்தும் கணிசமான தொலைவிலேயே கிரா தன்னை அமர்த்திக்கொள்கிறார். அடித்தள வாழ்வியல் தொடர்பினாலும் மக்கள் பண்பாட்டு நெருக்கத்தினாலும் சகபாடிகளிடம் இருந்து வேறான பார்வையும் அணுகுமுறையும் வாய்க்கிறது அவருக்கு.

இவ்விதம் நவீனத்துவ எழுத்தாளர்களிடமிருந்து இவர் காட்டிய விலக்கமும் தனித்துவமுமே அதற்குப் பின்வந்த படைப்பாளிகளை இவரிடம் நெருங்கச் செய்தது எனலாம். பின் நவீன இலக்கிய போக்கானது கதை சொல்லி என்ற அடைமொழியில் இருந்து தொன்மம் அதீதம் மிகை எதார்த்தம், அநேர்கோடு, மாய யதார்த்தம், மக்களின் குரல் என பலவகைகளில் கிராவின் பாணிக்கு இசைந்து வருவதாக சூழலை மாற்றியது.தவிர கிராவை ஒட்டி இப்போது பரிசீலிக்கையில் கீழைத்தேய கதைமரபிற்கு சுத்த யதார்த்தவாதம்தான் இறக்குமதி சரக்கோ என்றும் சந்தேகம் எழுகிறது.

நல்ல இலக்கியத்திற்கு பொருத்தப்பாடு என்பது ஒரு பொருட்டே அல்ல. ஒவ்வொரு தலைமுறையும் வெவ்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி மிகப்பழைய இலக்கியங்களைக் கூட தமக்கு வேண்டியவையாக ஏற்றுக்கொள்ளும். நல்ல கதைகளும் கவிதைகளும் பொக்கிஷங்களைப்போல, மனித இனம் அவற்றை அத்தனை சுலுவில் விட்டுக்கொடுக்காது. பெட்ரோ பரோமாவின் கொமாலா கிராமம் இப்போது இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு தெரியாது இருந்தாலும் மெக்சிகோவில் எங்கே இருக்கிறது என்றெனக்குத் தெரியாது அது அவசியமும் இல்லை. அது என்னைத் தொடுகிறது, ஒரு மனிதனாக அது என்னை பாதிக்கிறது அவ்வளவுதான். என்றென்றைக்குமான மனித உணர்வுகளையும் கேள்விகளையும் எழுப்புகிறது. எப்போதுமே நல்ல கலைப்படைப்புகள் அதை முன்னிட்டுத்தான் இயற்றப்படுகின்றன. இப்போது மீளவும் திரும்பி வாசிக்கையில் கிராவின் தீவிரமும் முனைப்பும் கூடிய தொடக்க காலக் கதைகளே அதிக எண்ணிக்கையில் என்னைக் கவர்பவையாகத் தோன்றுகின்றன. அதேபோல விகடன் குமுதம் போன்ற வெகுஜன இதழ்களில் வெளிவந்த பல கதைகள் ஈர்ப்புடையனவாகச் சொல்லமுடியாது.

கிராவின்மீது வைக்கப்படுகிற இன்னொரு குற்றச்சாட்டு அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தையும் கிராமத்தில் நிலவுகிற சாதிய முரண்பாடுகளையும் கவனிக்கத் தவறினார் என்பது. கட்டாயம் அத்தகைய அடையாளச் சுட்டல்களையும் அத்தகைய உரசல்களையும் அவர் பயன்படுத்தவில்லை என்றாலும் அப்படி அழைக்கப்பெறாமல் அவரின் கதைகளில் இடம்பெறும் ஒடுக்கப்பட்ட மனிதர்கள் அநேகம். சொல்லப்போனால் அவருடைய வலிய பல கதாபாத்திரங்கள் கிராமியச் சமூகமைப்பின் மைய அதிகார கேந்திரங்கள் அல்ல மாறாக பெண்கள், உழைக்கும் கூலிகள், பேரற்ற வீட்டு வேலையாட்கள், ஊர்பேர் தெரியாத அநாதைகள், மாற்றுத்திறனாளிகள், சுயம் திரண்டு வராத கோட்டிகள், இப்படிக் கிராமத்தின் விளிம்புநிலை எல்லைகளில் வாழ நிர்பந்திக்கப்பட்டவர்களே. அவரது காலத்தின் கருத்தியல் சட்டகம் காந்தியத்தின் இலட்சியச் சாயைமீது மார்க்ஸிய வெளிச்சத்தாலும் அல்லது

அதையொட்டி எதிர்த்து வலுப்பெற்ற மனிதத்துவ வண்ணங்களாலும் வரையப்பட்டது. அந்தச் சட்டகமே அவரது பார்வையைத் தீர்மானித்தது. அச்சமயத்தில் பால்மை மற்றும் தலித்திய நோக்கிலமைந்த விடுதலைக் கருத்தியல்கள் அறிமுகமாகி இருக்கவில்லை. எனினும் கிரா ஒரு எழுத்தாளுமையாகப் பெண்கள் மீதும் நிலவுடமைச் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மனிதர்கள்மீதும் வேறு பார்வையில் அமைந்த கரிசனத்தால் அவர்தம் பாடுகளையும் வேதனையையும் பேசியிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

கிராவின் கதைகளினூடே நாம் கவனத்தில் இருத்த வேண்டிய பிராதன விஷயங்களாக மூன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்று அவரது உலகில் இயல்பாக பதிவுபெறும் தொன்மப் பின்புலம். மரபுசார்ந்த வழக்காறுகள், வாய்மொழிக்கதைகள், ஐதீகங்கள் என இத்தகைய நம்பிக்கை சார் விஷயங்களைக் கையாள நல்லவேளையாக அரசியல் சரிநிலைகள் அவருக்குத் தடையாக இருக்கவில்லை. ஏனெனில் இத்தகைய தொன்மப் பயன்பாட்டினால்தான் 'பேதை', 'நிலைநிறுத்தல்' போன்ற காலாதீதமான கதைகள் சாத்தியமாயின. அவ்வழியில்தான் இந்தப் பண்பாட்டின் அடித்தளத்தைக் கட்டியிருக்கும் ஆழமான வேர்முடிச்சுகளைத் தொட்டுச் செல்லவும் முடியும்.உதாரணத்திற்கு, கிராவின் வெற்றிகரமான பெண் பாத்திரங்கள் ஏதோ ஒரு விதத்தில் தெய்வத்தைத் தொட்டு மீள்வதை காணலாம். ஏனெனில் தாய்வழிச்சமூகத்தின் காத்திரமான தாக்கம் உடைய தென்னகத்தின் தொல்மனவமைப்பிற்கும் இத்தகு பாத்திரப்படைப்பிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. எடுத்துக்காட்டாக 'கண்ணிமை' கதையின் நாயகி 'நாச்சியாராகவே' காட்சி தருகிறாள். பேதையின் பேச்சி 'பேச்சியே'தான். கர்மவினை போன்ற பெருங்கருத்துகளை கிராமிய மனங்கள் புரிந்துகொள்ள முயலும் கண்ணீர் கதையின் ஒரு சுடுகணத்தில் அம்மனும் மனுஷியும் ஒருவரையொருவர் புரிந்துகொள்கின்றனர். ஒரு பெண் அழுகிறபோது அவள் அவளுக்காக மட்டுமல்ல பெண் இனத்திற்காகவே அழுகிறாள் என்பதும் ஒரு கவித்துவக் கண்டறிதல்.

அதேபோலக் கிராவின் கதைகளில் திடுமென வந்துவிழும் ஆழ்படிமங்கள் தனிப்பண்பாட்டின் கரைகளைக்கூடத் தாண்டிச்செல்லுமோ என்ற சந்தோஷமான ஐயம் எனக்குண்டு. 'வந்தது' கதையில் சித்திரிக்கப்படும் கனவு அப்படியான ஒன்று. அதே வரிசையில் கனா என்றொரு கதையையும் குறிப்பிட வேண்டும். ஆதிக்காலத்தின் இருட்டினூடேகூட்டு நனவிலியின் உள்ளடக்கம் மின்னி மறையும் இத்தகைய கனவுகளைப் பதிவு செய்வதற்கு, இவற்றின் முக்கியத்துவம் தெரிந்த, அதேபோது நவீனத்துவத்தின் மனத்தடைகளை மீறிய ஒருவரால்தான் இயலும். நமது கதைகளைவிட நமது கனவுகள் ஆழமானவை, சாரம் கொண்டவை. நமது வரலாற்றைவிடத் தொன்மத்திற்கு எடை அதிகம். அதனால்தான் கிரா வரலாற்றுத் தொடர்புடைய ஒரு நாவல் எழுதுவதற்கு ஆவணக்காப்பகங்களுக்குப் பதில் மக்களின் வாய்மொழிக்கதைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் சென்றார் போல. அது அகல்வியின் வெளிச்சத்தால் அவர் கண்டறிந்தது.தொன்மங்கள் பண்பாட்டின் அடிநீரோட்டத்தைக் குறிக்கும் மெல்லிய சைகைகள். ஆழ்படிமங்கள் புவித்தொன்மையை திறக்கும் சிறிய கடவுச்சொற்கள். இத்தகைய கதைகள் நவீன மனத்தாலும் காரணியத்தின் கருவிகளாலும் வாசித்து முடிக்க முடியாதவை.

இதை ஓர் ஊகமாகவே முன்வைக்கிறேன், அதாவது பொதுவாக உளவியல் ஆர்வம் கொண்ட நவீன இலக்கியவாதிகள் தனிநபர் நனவிலிக்குக் குரல் கொடுக்க முயன்றார்கள். ஆனால் கிராவோ, அவ்வப்போதுதான் எனினும், அந்த பண்பாட்டின் அல்லது ஒரு மக்கள் குழுமத்தின் கூட்டுநனவிலிச் சமிக்ஞைகளுக்கு ஊடகமானவராகத் தென்படுகிறார்.

அடுத்தது கிராவின் கதைகளில் வெளிப்படும் கிராமிய விவேகம். இது ஒரு சமூகத்தின் கூட்டுக்கற்றலின் கனிகள். இத்தகைய வாழ்வியல் அறிவுதான் செவ்வியலாக்கத்திற்குப் பிறகு காவியங்கள் வாயிலாகவும் நீதி நூல்களாகவும் ஒரு மொழியின் செந்தொகுப்பில் இடம்பெறுகின்றன. அவற்றின் மூலாதாரங்கள் மக்கள் மொழிவழியே தெறிக்கக்கூடிய நாட்டார்பாடுகள் தாம்.உதாரணத்திற்கு ஆய்வாளர் தொ. பரமசிவனிடம்

'புறப்பாடு' கதையைப் பற்றி பேசிக்கொண்டிருந்தபோது எனக்கு 'சாதலும் புதுவது அன்றே' என்ற வரி நினைவிற்கு வந்தது. அவரிடம் சொன்னபோது அவர் சொன்னார் 'இந்தக் கத அந்த வரிக்கு பொழிப்புரை எழுதின மாரி இருக்குல்ல' என்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்த வரி எந்த வழியில் உருக்கொண்டிருக்குமே அதே வழியில் இருந்துதான் இந்தக் கதையும் நேரடியாக எழுதப்பட்டிருக்கும் என ஊகிக்க வாய்ப்புள்ளது.

மூன்றாவது விஷயம் கிராவின் உலகில் கொப்பளிக்கும் உயிர்த்துவம். கிராவின் கரிசல் கிராமம் மனிதர்களால் மட்டும் ஆனதல்ல. அது பல்நூறு உயிர்களால் பொங்கிப் பிரவகிக்கும் ஜீவப்பிரபஞ்சம். அவரது சுவாரஸ்ய நடையில், கவித்துவத்தில், சித்திரிப்பில், சொல்லும் சொகத்தில் என எங்கும் வாழ்வின் ருசி. மாடுகள், மயில்கள், பூச்சிகள் என உசுப்பிராணிகளின் கெச்சட்டம். நிலத்தின் மழையின் நறுமணம். அன்னை மடியில் இருப்பது போன்றதோர் பாதுகாப்பும் வெதுவெதுப்பும். கூடவே சொக்கவைக்கும் மொழி. பேச்சுவழக்கு என்றபோதும் கிராவின் கண்கள் சதா அழகைத் தேடியபடியே உள்ளன ஒவ்வொரு வரியிலும். கவிதைபோல வரிக்குவரி இடைவெளி விடுவதைத் தன் கதைகளில் வாடிக்கையாகவே கொண்டுள்ளார் கிரா. இசைமை, சிருங்காரம், குதூகலம், செழிப்பு, நளினம், எளிமை என இந்த மொழிநடைக்காகவே இக்கதைகளைப் படிக்கலாம். கூடவே சொல்லவேண்டியது அந்த நாட்டார் வாழ்வியலின் நகைச்சுவையும் துளைக்கும் ஏகடியமும். கசப்புக்கும் சலிப்புக்கும் இங்கு இடமில்லை. அறிவியல் புனைகதைகள் தொலைக்காட்சித் தொடர்களாக வலம்வரும் ஒரு காலம் வந்தால்கூட அப்போதும் கிராவின் புனைவுகள் தன் பழைமையையே மாயமாகச் சூடிக்கொண்டு தனது சித்திரங்களைப் படிமங்களாக மாற்றிக் கொண்டு வாசகர்களில் இருந்து குறியியலாளர்கள் வரை ஈர்த்திழுக்கக்கூடிய கதைப்பரப்பாகவே வாழும்.

தத்துவ வழக்காற்றில் குறிப்பானவற்றையும் உலகளாவிய வற்றையும் எதிர்வுகளாக வைத்து உரையாடும் இயல்பு உண்டு. ஆனால்

கலைத்துறையைப் பொருத்தளவில் குறிப்பான ஒன்றை மிகச் செம்மையாகப் படைத்தால் அதுவே உலகளாவியவையாக உலகளாவியவையாக மாறிவிடும் என்பார்கள். சொல்லப்போனால் மிக அரூபத்தன்மை உடைய குறியீட்டுக் கதைகளைவிட இந்த எளிய கிராமியக் கதைகள் தமிழிலிருந்து எடுத்து முன்வைக்கத்தக்க பொதுமை அம்சம் கொண்டவையாக உள்ளதைப் பார்க்க முடிகிறது.உலகளாவிய தன்மைக்கான எந்தப் பிரயத்தனமுமின்றி இவை உள்ளபடியே அத்தகைய உயரத்தை அடைகின்றன. ஏனெனில் இவை ஒரு பண்பாட்டின், பலநூற்றாண்டுத் தொடர்ச்சியுடைய ஒரு மரபின் நுண்மாதிரிப் படிமங்கள்.

சென்னை

05.12.2018

சபரிநாதன்

***

# கதவு

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்துகொண்டார்கள்.

"எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க" என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்", என்று சத்தம் போட்டார்கள்.

"எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம். அப்பறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்".

"இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ."

"சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?"

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டார்கள். ஒருவன் "திருநெல்வேலிக்கு" என்று சொன்னான். "திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு" என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக் கொண்டிருந்தாள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட் கிழித்துக்கொடுத்து முடித்ததும், கதவில் பிடித்துத் தொத்திக்கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னுமாக ஆட்டினார்கள். தன்மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை, அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப்போய் இருக்கும். அக்குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. "திருநெவேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக்கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

*

அது பழையகாலத்துக் காரை வீடு. பெரிய ஒரேகதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும்; இன்னொன்று கைக்குழந்தை.

அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

*

ஒருநாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப்படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டது என்று.

படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து, தலையை கொஞ்சம் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். சிரித்துக்கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும்முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக்கொண்டே போனாள், சந்தோசம் தாங்கமுடியாமல்.

லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைக் கையில் தாங்கிக்கொண்டு வாசல் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தைப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, "டேய் நா

என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு பாப்போம்" என்றாள்.

"என்ன கொண்டு வந்திருக்கியோ? எனக்குத் தெரியாது"

"சொல்லேன் பாப்போம்"

"எனக்குத் தெரியாது"

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

"அக்கா அக்கா, எனக்குத் தரமாட்டியா" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். 'முடியாது' என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தான். "ம்ஹூம் முடியாது. மாட்டேன் . . . நான் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக்கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?" என்றாள்.

"ஒரே தடவை பாத்துட்டுக் கொடுத்துர்றேன். அக்கா, அக்கா" என்று கெஞ்சினான்.

"பாத்துட்டுக் கொடுத்துறணும்"

"சரி"

"கிழிக்கப்படாது"

"சரி சரி"

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோசத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

"டேய் உள்ளே போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா. இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்" என்றாள்.

"ரொம்ப சரி" என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.

இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோசத்தினால் கைதட்டிக் கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்துவீட்டுக் குழந்தைகளும் ஓடிவந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதேமாதிரி வேறு ஒரு படம் ஒன்றை ஒட்டி இருப்பது தெரியவரும். அந்தப்படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப்போய் இருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும்போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

"லட்சுமி உங்க ஐயா எங்கே?"

"ஊருக்குப் போயிருக்காக"

"உங்க அம்மா?"

"காட்டுக்குப் போயிருக்காக"

"வந்தா, தீர்வையைக் கொண்டு வந்து போடச் சொல்லு. தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு".

"சரி" என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

*

மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப்

பாக்கியைக் கேட்டான்.

"ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலிவேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம்; உங்களுக்குத் தெரியாததா?" என்றாள்.

இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை; இந்த மாதிரியான வசனங்களை பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு; இந்த வருசம் எப்படியாவது கண்டிப்பா தீர்வை போட்டறணும். அப்புறம் எங்க மேலே சடைச்சிப் புண்ணியம் இல்லை" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

*

ஒரு நாள் காலை, வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். தலையாரி, நான்குபேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் கழற்ற முயன்றார்கள்; முடியவில்லை. குழந்தைகள் வீட்டுப்பக்கம் ஓடிவந்து பா £த்தார்கள். அவர்களுக்கு இது ஒரு வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒருமாதிரி கழற்றி, நான்குபேரும் கதவைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அதை ஒரு ஊர்வலம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப்போல் கைகளை வைத்துக்கொண்டு

"பிப்பீ . . . பீ . . . பீ" என்று சத்தம் காட்டி விரல்களை நீட்டிக்கொண்டு, உடலைப் பின்வளைத்துத் துடைகளின்மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை

செய்து "திடும் . . . . திடும் . . . . ததிக்குண" என்று தவுல் வாசிப்பவனைப்போல் முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக்கொண்டான், இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்கமுடியவில்லை. "இப்போ போகிறீர்களா இல்லையா கழுதைகளே" என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக்கொண்டான். இப்படி வெகுநேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், "நான் வீட்டுக்குப் போறேன்" என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். இதற்குள் சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக் கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள்.

"பாப்பாவைத் தொட்டுப்பாரு அக்கா; உடம்பு சுடுது" என்றான். லட்சுமி தொட்டுப் பார்த்தாள்; அனலாக தகித்தது.

சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள். சுள்ளிகள் சேகரிக்கும்போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக்குழந்தையை வாங்கிக்கொண்டாள். 'உடம்பு சுடுகிறதே?' என்று தனக்குள் கேட்டுக்கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில்

நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.

செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது; உடம்பெல்லாம் கண்ணுக்குத் தெரியாத ஒரு நடுக்கம் பரவியது. அவள் விடும் சுவாசத்தின் வெப்பம் அதிகமாகியது. வயிற்றில் தாங்கமுடியாத ஒரு வலி தோன்றியதுபோல், குழந்தையை இறுகப் பிடித்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக்கூடாது என்று எவ்வளவுதான் அடக்கினாலும் முடியவில்லை. "என்னைப் பெத்த தாயே" என்று அலறிவிட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். இனம் தெரியாத பயத்தின் காரணத்தினால் அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

*

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. இரவு வந்துவிட்டால் குளிர் தாங்கமுடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள்; கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப்போல் வீட்டினுள் வந்து அலை மோதிக்கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக்கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டைவிட்டு அவர்களையும் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.

*

சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் ஆர்வம் கொள்ளவில்லை.

"அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கி; சாப்பிட்டு இந்தப்படத்தை ஒட்டனும்"

"தம்பீ, கஞ்சி இல்லை" இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.

"ஏன்! நீ காலையில் காய்ச்சும்போது நான் பார்த்தேனே"

'ஆ'ம் என்ற முறையில் தலையசைத்துவிட்டு, "நான் வெளிக்குப் போயிருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது. தம்பி . . . கதவு இல்லையே" என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக்கடந்த கம்மம் பருக்கைகளை எடுத்துப் படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவரில் ஒட்டினான். படம் கீழே விழுந்துவிட்டது. அடுத்த இடத்தில் அடுத்த சுவரில், எல்லாம் ஒட்டிப் பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.

சாயந்திரம் வட்சுமி சட்டிபானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொணடிருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தான். "அக்கா அக்கா நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு. அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டுக் கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பார்த்தேன்" என்றான்.

"அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பார்ப்போம்" என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள், இருவரும் கிராமச் சாவடி நோக்கி ஓடினார்கள்.

உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தூரத்திலிருந்தே தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச்சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றும்முற்றும் பார்த்தார்கள்.

ஒருவரும் இல்லை.

அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லமுடியாது.

அங்கே முளைத்திருந்த சாரணத்தியும் தைவாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள. அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.

கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக்கொண்டாள். அழ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு! சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது, சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துக் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

தாமரை, ஜனவரி 1959

***

# மாயமான்

அப்பாவு செட்டியார் சைக்கிளில் வந்து 'ஜம்' என்று இறங்கினார் அவர் வருகைக்காக காத்துக் கொண்டிருந்த கிராமத்து இளைஞர்கள் சைக்கிளின் பக்கம் நெருங்கி, 'ஹேண்ட்பாரில்' சொருகி இருந்த தினப் பத்திரிகையை உரிமையோடு எடுத்து, உலக விஷயங்களில் மூழ்க ஆரம்பித்தார்கள்.

செட்டியார், சைக்கிளை 'ஸ்டாண்டு' போட்டு நிறுத்திவிட்டு இந்தப் பக்கம் திரும்பினார். அவருடைய தர்மபத்தினி உலகம்மாள் தண்ணீரும் செம்புமாய் தயாராக நின்றுகொண்டிருந்தாள். செம்பைக் கையில் வாங்கி முகம் கைகால் சுத்தி செய்தார். இதற்குள் அவருடைய மகன் சிவக்கொழுந்து கடையில் இருந்து இறங்கிவந்து சைக்கிளில் உள்ள சாமா £ன்களை ஒவ்வொன்றாய் இறக்கி கடைக்குள் கொண்டு போனான். இந்தக் காரியத்துக்கு அவனுடைய தாயாரும் உதவி செய்தாள்.

செட்டியார் செம்பை வாசல்படியில் வைத்து விட்டு, முகத்தைத் துடைத்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார்.

"இப்பத்தான் வர்ரயா? நல்ல எதிர்காத்து" என்று மகனைப் பார்த்து அன்புடன் கேட்டார் வயசாளியான நல்லசிவம் செட்டியார்.

"ஆமா . . . கைலாசத்தே எங்கே காணோம்?" என்று தன் சின்ன மகளைக் கேட்டார் செட்டியார்.

"பள்ளிக்கூடத்திலிருந்து இப்பதான் வந்து காப்பி சாப்பிட்டது. வெளியே எங்கேயாவது விளையாடப் போயிருக்கும் . . ."

"கருப்பட்டிச் சிப்பம் என்ன விலை?"

"பய இன்னிக்கி ஏழு ரூபாய் போட்டுத்தள்ளீட்டான்!" என்று சொல்லிக்கொண்டே 'பக்கெட்'டிலிருக்கும் கச்சாத்துகளை எடுத்து வைக்க

ஆரம்பித்தார். செட்டியாரின் தாயார் வடிவம்மாள் இரண்டு தம்ளர்களில் காப்பியைக் கொண்டுவந்து வைத்தார். சாப்பிட்டு முடிந்ததும், கச்சாத்துகளையும் ரூபாய் நோட்டுக்களையும் ஒழுங்குபண்ணி தன் மனைவியிடம் கொடுத்து, பெட்டியில் வைக்கச் சொல்லிவிட்டு, கடைக்கு முன்னால் 'பேப்பர்' படித்துக் கொண்டிருந்தவர்களிடம் வந்தார்.

"என்னைய்யா கோவில்பட்டியில் என்ன விஷேசங்கள்?" என்று அருகிலிருந்த ஒருவர் சாதாரண வழக்கமாகக் கேட்டார் செட்டியாரைப் பார்த்து.

"இன்னைக்கி என்ன அங்கே ஒரே கூட்டம், ஜே ஜேன்னு!"

"கூட்டமா . . . அப்படி என்னைய்யா விசேஷம்?"

"நாசமாப் போச்சு! இன்னைக்கி சுதந்திர தினமில்லே?" என்று பூரிப்போடு சொன்னார் செட்டியார்.

இதற்குள் பேப்பரைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு இளைஞர் தொண்டையைக் கனைத்துவிட்டு பலமாகச் சத்தம்போட்டு ஒரு செய்தியை வாசிக்க ஆரம்பித்தார். எல்லோரும் தங்கள் பேச்சுக்களை நிறுத்திவிட்டு கவனமாய்க் கேட்க ஆரம்பித்தார்கள்.

"மழை இல்லியே என்று இனி விவசாயிகள் கவலைப்பட வேண்டாம். புஞ்சைப்பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கிணறு தோண்ட ஒரு கிணற்றுக்கு நானூறு ரூபாய் இனாமாகக் கொடுக்கிறார்கள். புஞ்சை நிலங்களை வளமான தோட்டங்களாக்கி, உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகள் லாபம் அடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதுதான் செய்தியின் சாரம். இந்தச் செய்தி அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இனம் புரியாத சந்தோஷம் உண்டானது. ஆனால் அவர்களுக்கு நம்பச் சிரமமாக இருந்தது. செட்டியாரைத் தவிர ஒருவரும் நம்பவில்லை.

"இது என்னய்யா வேடிக்கையா இருக்கு, இது நெசந்தானா?"

"நெசமாவது ஒண்ணாவது எல்லாம் பேப்பர்காரன் விட்ட அவுட்டு! வெறும் டுப்பு!"

"சேச்சே, அப்படி எல்லாம் இருக்காது! இதிலே ஏதாவது கொஞ்சம் நிஜமும் இருக்கும்?"

"நீர் ஒண்ணு! உமக்கு இன்னும் பித்தம் தெளியலெ போலிருக்கே!"

"யோவ், எதையும் 'பட்' டெண்ணு நிதானிச்சிரப்படாது. 'மானாங்காணியா' பேப்பர்காரன் போடுவானா வேய்?"

"ஐயோ . . . என் தலையில் எழுத்தா, ஆனானப் பட்டவனுக்கெலாம் கடனே இல்லை என்னுட்டானே! இனாமாகக் கொடுக்க என்ன தெருவிலேயா கிடக்கு?" செட்டியார் பார்த்தார், "ராமசாமி அதை இப்படிக் கொண்டா" என்று வாங்கி அதைத் தானே உரக்கப்படித்தார். என்ன இருந்தாலும் விவசாயிகளால் நம்பமுடியவில்லை. அவர்களுடைய பேதமையை நினைத்துச் செட்டியார் மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.

அந்தி மயங்கி எழுந்து மறையும் நேரம் ஆகிவிட்டதால், அந்தக் கோஷ்டி இது சம்பந்தமான பேச்சைப் பேசிக்கொண்டே கலைய ஆரம்பித்தது. செட்டியாரும் வீட்டுக்குள் வந்தார். வீட்டு முற்றத்தில் கிழவர் குளித்துக்கொண்டிருந்தார். வடிவம்மாள் அவருக்கு முதுகு தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"தம்பி, நீயும் குளிச்சிறேன் நேரம் காணாதா" என்றார் பெரியவர்.

செட்டியார் "குளிக்கணும்" என்று சொன்னாரே தவிர மனசு அங்கு இல்லை. அவருடைய எண்ணம் எல்லாம் தன்னுடைய புஞ்சை நிலத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அந்தக் கிராமத்திலேயே கொஞ்சம் சௌகரியமாக உட்கார்ந்து

சாப்பிடக்கூடிய புள்ளிகளில் நம்முடைய செட்டியாரும் ஒருவர். அவருக்கு, செழிப்பான மந்தை நிலம் நாலரை ஏக்கர் உண்டு. மேலும் ஒரு சின்ன கடை ஒன்று அந்த ஊருக்குத் தகுந்தமாதிரி வைத்திருந்தார். நிலத்திலிருந்து வருகிற தானியம் சாப்பாட்டுக்கும் கடையிலிருந்து வருகிற வருமானம் குடும்பச் செலவுக்குமாக வண்டி ஒருமாதிரி ஓடிக் கொண்டிருந்தது.

இனாமாகக் கிணறுவெட்ட சர்க்காரால் கொடுக்கும் அந்த நானூறு ரூபாயையும் வாங்கி நம்முடைய நிலத்தில் ஒரு கிணறு வெட்டி, அதை நல்ல ஒரு தோட்டமாக ஆக்கிவிட்டால் என்ன? நிறைய வருமானமும் கிடைக்கும், ஏதோ நம்முடைய குழந்தைகுட்டிகளுக்கு பிற்காலத்தில் ஒரு சௌகரியம் செய்து வைத்த மாதிரியாகவும் இருக்கும், என்று நினைக்கலானார். தகப்பனார் குளித்து முடிந்து வந்து கட்டிலில் உட்கார்ந்தார்.

"நம்ம நிலத்தில் ஒரு கிணறு வெட்டினால், என்ன?" என்று கேட்டார் செட்டியார்.

"கிணறா, அது எதுக்கு? தோட்ட நிலம் என்றால் அதுக்கு நிறைய சிரமப்படவேணும். நமக்கு கடைகண்ணியை நிர்வகிக்கவே நேரம் சரியாக இருக்கு. தோட்டத்திலெல்லாம் சொந்த ஆள் பாடுபட்டால்தான் லாபம் உண்டு. அதோடு அதில் போட்டு எடுப்பதற்கு நிறையப் பணம் வேணும். இதுக்கெல்லாம் நாம் எங்கே போகிறது? இதையெல்லாம் உத்தேசம்பண்ணித்தான் நம்னுமுடைய பெரியவர்கள் அதை அப்படியே புஞ்சை நிலமாக வைத்திருக்கிறார்கள்!"

"பணத்தைப் பத்திக் கவலை வேண்டாம். சர்க்காரிலேருந்து கிணறு ஒன்றுக்கு நானூறு ரூபாய் இனாமாகக் கொடுக்கிறார்கள்."

"அப்படியா? அப்படி இருந்தாலும் அந்த ரூபாய் காணாதே!"

"காணாதுதான், ஏதோ அவர்களால் கொடுக்கமுடிந்தது அவ்வளவு தான்.

அதையாவது இனாமாகக் கொடுக்கிறார்களே."

"இனாமாகக் கொடுக்கவேண்டாம். கடனாகவே கொடுக்கட்டும். குறைந்தது ஒரு இரண்டாயிரமாவது கொடுக்க வேண்டும். நீண்டகாலத் தவணையில். பத்து அல்லது இருபது வருஷத்துக்குள் அதை நாம் திருப்பிக் கட்டிவிடலாம்."

"இது என்னப்பா நீங்கள் சொல்கிறது வேடிக்கையாக இருக்கே! நம்மதேசத்தில் எத்தனை கிணறுகள் வெட்டவேண்டியது இருக்கும்? எவ்வளவு தொகை ஆகும்? அவ்வளவு தொகையும் அவர்களால் கொடுக்கமுடியுமா? இனாமாகக் கிடைக்கிற நானூறு ரூபாயை வைத்துக்கொண்டு தோண்டவேண்டியதுதான். மீதியை எப்படியாவது போட்டுச் சரிக்கட்ட வேண்டியதுதான். கண்டும் காணாததற்கு கொஞ்சம் கடன் வாங்கினால், வருகிற மகசூலில் கட்டிவிட்டால் போகிறது,"

"என்னமோப்பா உனக்குத் தைரியமாய் இருந்தால் செய். எனக்கும் இத்தனை வயதாகிறது. ஒருத்தன்கிட்டே கடன் என்று கையைக் கட்டி நின்றதில்லை. பகவான் அருளால் நமக்கு அப்படியெல்லாம் வராது." என்று சொன்னார் பெரியவர்.

சாக்காரிடம் இருந்து ரூபாய் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டது. தாலுகா ஆபீஸிற்கு செட்டியார் நடையாய் நடந்தார். கிராம அதிகாரிகளைச் "சரிக்கட்டு" வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. பணம் வருமா, வராதா என்ற சந்தேகம் பலத்தது. ஆரம்பத்திலிருந்தே கையிலிருந்து ஒரு ஐம்பது ரூபாய் வரை செலவாகி விட்டது. செட்டியாரும் அலுத்தார். கடைசியில் ஒரு நபர்மூலம் உண்மை 'பளிச்' சென்று தெரியவந்தது. வருத்தப்பட்டு என்ன செய்ய? செட்டியார் அதற்குப் பணிந்தார். பணிந்துதான் தாமதம். காரியங்கள் கிறுகிறென்று நடந்தது. இப்பொழுது செட்டியார், ரூபாயைத் தேடிச் செல்லவில்லை. ரூபாய் செட்டியாரைத் தேடிவந்தது! ஆனால் எண்ணிப் பார்க்கையில் அவருடைய கைக்குக் கிடைத்தது ரூபாய் முந்நூறுதான்.

கிணறு தோண்ட ஆரம்பித்த செட்டியாருக்கு ரூபாய் முந்நூறும் போன மூலை தெரியவில்லை. 'சரி, ஒரு ஐந்நூறு கடன் வாங்க வேண்டியதுதான்' என்று தீர்மானித்தார். ரூபாய்க்குப் பக்கத்து ஊரிலுள்ள முதலாளி அய்யவார் நாயக்கரிடம் போவது என்று முடிவுசெய்தார்.

காலையில் எழுந்து முடிக்கவேண்டிய ஜோலிகளையெல்லாம் முடித்துவிட்டு ராகுவேளையைப் போக்கி நல்லநேரம் சகுனங்கள் எல்லாம் பார்த்து ஸ்ரீமான் அய்யவார் நாயக்கருடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தார் செட்டியார்.

அப்போதுதான் நாயக்கர் அவர்கள் எண்ணெய் ஸ்நானம் செய்துவிட்டு, வெள்ளை வேஷ்டியைக் கட்டிக்கொண்டால் எண்ணெய்ச் சிக்கு ஆகும் என்று ஒரு பழைய கண்டாங்கிச் சேலையை வேஷ்டிக்குப் பதிலாக உடுத்திக்கொண்டு அந்தச் சேலையின் மறுகோடியையே தலையில் கட்டி கொண்டைபோல் சுற்றிவிட்டு, நெற்றிக்கு இட்டுக் கொள்ள நாமம் குழைத்துக் கொண்டிருந்தார்.

செட்டியாரைப் பார்த்ததும், "மருமகப்பிள்ளை வாருங்க. மருமகப் பிள்ளை வாருங்க, ஏது வழி தப்பினாப்புலே இருக்கே. இப்படி உக்காருங்க" என்று உபசாரம் செய்தார் நாயக்கர்.

செட்டியார் தன்னைத் தேடி வந்த காரியம் இதுவாகத்தானிருக்கும் என்று யூகித்தும் ஒன்றும் தெரியாதது போல் இருந்தார். பேப்பர் சமாச்சாரங்களிலிருந்து ஆரம்பித்து எங்கெல்லாமோ சுற்றிக் கடைசியாக கடன் கேட்பதில் கொண்டுவந்து நிறுத்தினார் செட்டியார். நாயக்கரோ எல்லாவற்றையும் நாமம் போட்டுக் கொண்டே கேட்டுக்கொண்டே வந்தார்.

"ரூபா வேணுமா, அதுக்கென்ன தாராளமாய் வாங்கிக் கொண்டு போ. மருமகனே, உனக்கில்லாத ரூபாயா?" என்றார்.

செட்டியாருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ரூபாய் கிடைத்தது விட்டதாக செட்டியாருக்கு எண்ணம்; நாலரை ஏக்கர் நிலம் கிடைத்துவிட்டதாக நாயக்கருக்கு எண்ணம்!

"இன்றைக்கு என்ன புதன்கிழமையா, சரி நாளைக்கு வந்து வாங்கிக்கொண்டு போ" என்றார்.

மறுநாள் நோட்டு எழுதி 'ரெடி'யாக இருந்தது. ஸ்டாம்பின்மீது கையெழுத்தைப் போட்டுவிட்டு செட்டியார் நோட்டை வாசித்துப் பார்த்தும் திடுக்கிட்டார். ஐந்நூறுக்கு ஆயிரம் ரூபாயாக எழுதி இருந்தது!

"மாமா இது என்ன . . . இப்படி" என்று தயங்கினார் செட்டியார் "அதுக்கென்ன மருமகனே. இதெல்லாம் ஒரு சம்பிரதாயம்தானே. எவ்வளவு எழுதினால் என்ன?"

"வட்டியும் ஒண்ணுக்கு ஒண்ணேகால் போட்டிருக்கிறீர்களே . . ."நாயக்கருக்கோ சிரிப்பு வந்துவிட்டது. சத்தம் கேட்காமல் உடம்பு மாத்திரம் குலுங்கச் சிரித்தார்.

"ரூபாய் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்" என்று சொல்லி ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை இரண்டு மூன்று தரம் எண்ணி செட்டியாரிடம் கொடுத்துவிட்டு, தன் தலையைத் தடவிக்கொண்டார், நாயக்கர். இது அவருக்கு என்று உள்ள ஒரு பழக்கம்.

கடன் வாங்கியது வீண்போகவில்லை என்று செட்டியார் நினைத்தார். தண்ணீரைக் கிணற்றில் கண்டுகொள்வதற்கும் வாங்கிய கடன் செலவாகி முடிவதற்கும் சரியாக இருந்தது. கிணற்றுக்கு மேல் பக்கம் உட்கார்ந்து செட்டியார் யோசனையில் ஆழ்ந்தவண்ணம் இருந்தார். கடையைச் சரியாகக் கவனித்துப் பல நாட்கள் ஆகிவிட்டது. நேரடியான கவனம் இல்லாததால் வியாபாரம் மந்தமாகிவிட்டது; விற்பனையும் குறைந்து போய்விட்டதே, என்ற யோசனையில் பலமாக ஆழ்ந்திருந்தார்.

கற்களைச் சம்மட்டியால் அடித்து உடைக்கிற ஓசையும் கம்பியில் இடைவிடாமல் விழும் சுத்தியலின் ஒலியும் கிணற்றுக்குள் இருந்து கேட்டுக்கொண்டே இருந்தது.

கிணற்றுக்குள் இருந்து, "நல்லதண்ணீர், நல்ல தண்ணீர்" என்ற குரல் கேட்டுத் திரும்பினார் செட்டியார். சப்தங்கள் எல்லாம் நின்றன.

"அடிச்சது யோகம்! அப்படியில்லே இருக்கணும்."

" சரியான தண்ணி. இப்படித் தண்ணி இந்தப் பக்கத்திலேயே கிடையாது!"

செட்டியார் வேகமாகக் கிணற்றுக்குள் இறங்கினார். ஒருவாய் தண்ணீர் கையினால் அள்ளிக் குடித்தார். அவருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. நம்மைப் பிடித்த பீடையெல்லாம் இன்றோடு ஒழிந்தது, என்று நினைத்தார்.

ஊறிய தண்ணீர் நல்லதாக இருந்ததே தவிர, அரை ஏக்கர் மகசூல் வைக்கக் காணாது. கிணற்றில் கூலிவேலை செய்பவர்கள், "முதலாளி, தோண்டியது தோண்டிவிட்டீர்கள். இனி ஒருரெண்டு கெஜம் தோண்டுவதற்கு யோசிக்கலாமா? கையோடு கையாகச் செய்துமுடித்துவிட்டால் தான் நல்லது. யானையை வாங்கிவிட்டு தொறட்டிக்கு யோசிப்பார்களா?" என்றார்கள்.

செட்டியார் சிரித்துக்கொண்டார். "இவர்களுக்கென்ன, சொல்கிறவர்களுக்கு. மாட்டின் புண் வேதனை காக்கைக்குத் தெரியுமா?" என்று நினைத்தார். ஆனாலும் இவ்வளவு பாடுபட்டுத் தோண்டியும் பிரயோஜனம் இல்லாமல் போகிறதே, என்று எண்ணினார்.

வீட்டிற்குச் சென்ற செட்டியார் தன் மகன் சிவக்கொழுந்தை அனுப்பி கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீரை எடுத்துவரச் சொன்னார். வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் தண்ணீரைச் சாப்பிட்டு "நன்றாக இருக்கிறதே" என்று வியந்தார்கள். நல்லசிவம் செட்டியாருக்கு மாத்திரம் தண்ணீர் ருசிக்கவில்¬லை! இதற்குள் இந்த நல்லதண்ணீர் விஷயம் தீபோல ஊருக்குள் பரவிற்று, ஆண்கள் செட்டியாரின் யோகத்தைப்பற்றிப் பேசினார்கள். பெண்கள் தண்ணீர் எடுக்க கிணற்றின்மேல் படையெடுத்தார்கள். தண்ணீரின் அருமை அவர்களுக்கல்லவா தெரியும்?

இதை அறிந்த செட்டியார் பொங்கிப் பூரித்துப்போனார்.

செட்டியாருக்கு இப்பொழுது இரண்டு பிரச்சனைகள் எழுந்தன. புதிதாக ஒரு ஜோடி காளைகள் வாங்கவேண்டும்; கிணற்றை இன்னும் ஆழப்படுத்தவேண்டும். தகப்பனாரிடம் கலந்தார்.

"மகனே, உனக்கு என்ன தோன்றுகிறதோ அதன்படி செய். கடவுள் விட்டவழி" என்று கூறிவிட்டார். திரும்பவும் அய்யவார் நாயக்கர் வீட்டை நோக்கி நடந்தார் செட்டியார்.

விஷயத்தை அறிந்த நாயக்கர் மிகவும் சந்தோஷம் கொண்டார்.

"மாப்பிள்ளை, குடிதண்ணீருக்குக் கஷ்டப்படுகிற ஒரு ஊரில் ஒரு நல்லதண்ணீர் கிணறு கிடைத்ததே பெரிய தருமம் அல்லவா?"என்று பாராட்டிவிட்டு, 'சரிதான் கமலைக்கு மாடுகளும், அதுக்கு வேண்டிய சாமான் போக்குவரத்துக்களும் வேண்டுமென்கிறாய். கிணற்றை வேறு இன்னும் ஆழப்படுத்த வேண்டுமென்கிறாய். இகற்கெல்லாம் குறைந்தது ரூபாய் ஆயிரத்துக்குக் குறையாமல் வேண்டுமே, என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

"மாமா, அதற்குத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன். நீங்கள்தான் அதற்கு ஒரு வழி செய்யவேண்டும். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று பணிவோடு சொன்னார் செட்டியார்.

நாயக்கர், ஏதோ மனசுக்குள் தீர்மானிப்பதுபோல் பாவனை செய்து, தன்னுடைய பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு தீர்க்கமான குரலில், "இப்பொழுது இருக்கிற நிலையில் ஏக்கர் முந்நூறு ரூபாய்தான் பெறும். நாலரை ஏக்கருக்கு, நாமூணா பன்னிரண்டு, அரைஏக்கருக்கு ஒரு நூத்தி அம்பது. ஆயிரத்தி இருநூறும் நூத்தி அம்பதும், ஆயிரத்தி முந்நூத்திஅம்பது" என்றார். செட்டியாருக்கு 'திடுக்' என்றது.

"என்ன மாமா இப்படிச் சொல்லுகிறீர்களே!" என்று தயங்கினார். ஆனாலும்

மனசுக்குள் என்ன விலை போட்டுக் கொண்டால் நமக்கென்ன. விலைக்கா கொடுக்கப்போகிறோம், என்று நினைத்து, "என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்" என்றார்.

"அப்பாவு. நான் சொல்கிறதைக் கேள். பேசாமல் நிலத்தையும் கிணற்றையும் அடமானம் செய்து கொடுத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போ. சம்மதம் இல்லையென்றால் வேறு எங்காவது ரூபாய் கிடைத்தால் மகராஜனாக வாங்கிக்கொள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நான் கொடுத்த ஐந்நூறு ரூபாயைக் கொடுத்துவிடு" என்றார். செட்டியாரால் என்ன சொல்லமுடியும்?

"நல்லது, நீங்கள் சொன்னபடியே அடமானம் செய்து கொடுக்கிறேன்" என்று ஒப்புக்கொண்டார். அடமானம் செய்யப்பட்டது. பத்திரத்தில் குடும்பத்தில் உள்ள எல்லோரும் கையெழுத்துப் போட வேண்டுமென்றார் நாயக்கர். நல்லசிவம் செட்டியாரிடம் பேனாவைக் கொடுத்தார்கள். கைகள் நடுங்க கையெழுத்துப் போட்டார்.

செட்டியாரிடம் பேனாவைக் கொடுத்தார்கள். "தனக்காகவும் மைனருக்காகவும்" என்று எழுதி கையெழுத்துப் போட்டார். ரூபாய் ஆயிரம் பெற்றுக் கொண்டார். பத்திரத்தில் ரூபாய் இரண்டாயிரத்துக்கு அடமானம் என்று எழுதி இருந்தது!

கழுகுமலை சந்தையில், செட்டியார் இரண்டு செவலைக் காளைகள் பிடித்தார். விலை அறுநூறு ரூபாய். செலவு வேறு. கமலைக்கு வேண்டிய சாமான்கள், கூனை, வடம், வால் கயிறு, மண்வெட்டி முதலிய சாமான்கள் வாங்கி ஆயிற்று. இனி கூனைவால் தைக்கத் தோல் வாங்கவேண்டும். கூடவந்த விவசாயிகளோடு தோல் கடைக்குப் போனார் செட்டியார். தோலின் விலை ஐம்பது ரூபாய் என்று சொன்னான் கடைக்காரன். "என்ன, தோலின் விலை ஐம்பது ரூபாயா என்னய்யா அநியாயமாக இருக்கிறதே. ஒரு கூனைக்கு வேண்டிய தோல் ஐம்பது ரூபாய் என்றால் . . .", கூடவந்த விவசாயிகள் செட்டியாரைப்பார்த்துச் சிரித்தார்கள். அதில் ஒரு வயசான விவசாயி "அட பயித்தியக்காரச் செட்டியாரே, விவசாயம்

செய்கிறதென்றால் என்னவென்று நினைத்துக்கொண்டீர்? 'விவசாயி கணக்குப் பார்த்தால் தார்க்குச்சிதான் மிச்சம்' என்று சொன்னவன் பயித்தியக்காரனா" என்று கேட்டார். கடேசியில் நாற்பது ரூபாய் என்று சுமாரான தோல் ஒன்று எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்தார்.

கிணற்றை ஆழப்படுத்துதல் முதல், இதர தோட்ட சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளுக்கும் ரூபாய் ஆயிரத்துக்கும் சரியாக இருந்தது. புதிதாக ஒரு வேலைக்காரனும் நியமிக்கப்பட்டான். அவனுக்குத் தோட்ட சம்பந்தமான எல்லா விஷயங்களும் தெரியும். சாப்பாடு போக மாதம் பத்து ரூபாய் சம்பளம் என்றும் தீர்மானம் ஆயிற்று.

தோட்டத்தில் மிளகுச் செடி நட ஏற்பாடு நடந்தது. அந்தச் சமயம் மிளகு வத்தலுக்கு ஏகப்பட்ட கிராக்கி. பொதி ஒன்றுக்கு முந்நூறு ரூபாய் விற்றது. ஒரு ஏக்கரில் சுமாராக விளைந்தாலும் ஐந்து பொதி விளையும். செட்டியார் தோட்டத்துக்கு வேண்டிய உரங்களைப் பக்கத்து ஊர்களிலெல்லாம் சென்று விலைக்கு வாங்கினார். வாடகை கொடுத்து வண்டிகளில் கொண்டுவந்து சேர்த்தார். மேற்கே ஒரு ஊரில் மிளகு நாற்று வாங்க முப்பது ரூபாய் கொடுத்து ஒரு ஆளை அனுப்பினார். இப்படியாக காரியங்கள் வெகு தடபுடலாக நடந்துகொண்டிருந்தது.

அந்த வேளையில் செட்டியாருக்கு ஒரு சமாச்சாரம் வந்தது. அது உண்மை என்றும் தெரிய வந்தது. சர்க்காரில் "இனாமாகப் பணம் வாங்கிக் கிணறு வெட்டியவர்கள் மூன்று வருஷத்துக்கு மிளகு, பருத்தி போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்யக்கூடாது. உணவுப் பொருள்தான் சாகுபடி செய்யவேண்டும்". இப்படி சர்க்கார் அதிகாரிகள் சொன்னார்கள். 'ஆஹா மோசம் போச்சே' என்று செட்டியார் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார். இந்தப் பேரிடியிலிருந்து மீள அவருக்குப் பல நாட்கள் ஆகியது. தகப்பனார் நல்லசிவம் செட்டியாரோ படுத்த படுக்கையாகிவிட்டார்.

'சரி' இனி கேப்பை பயிரிடவேண்டியதுதான், என்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். கையிலிருந்த பணமெல்லாம்

கரைந்துபோய்விட்டது. கடையில் புரண்டுகொண்டிருந்த பணத்தையும் எடுத்துச் செலவழிக்கவேண்டியதாகிவிட்டது. கடைவியாபாரம் படுத்து விட்டது. கடை திறந்திருந்ததே தவிர சாமான்கள் ஒன்றும் இல்லை.

கேப்பைப் பயிர் 'கன்னங்கரேர்' என்று செழித்து வளர்ந்திருந்தது. பார்ப்பவர்கள் கண்திருஷ்டி போடாமல் இருப்பதற்காக, ஒரு மண் கலயத்தின் மீது சுண்ணாம்பு அடித்து அதன்மேல் கறுப்புப் புள்ளிகள் குத்தித் தோட்டத்தின் நடுமையத்தில் ஒரு கம்பை ஊன்றி அந்தக் கலயத்தை அதன்மேலில் கவிழ்த்தி வைத்தார் செட்டியார்.

பயிர் பொதிவுக்கு வந்த சமயத்தில் கிணற்றில் தண்ணீர் இல்லை. மழை பெய்வதாகக் காணோம். ஊரிலுள்ள தோட்டப் பயிர்களும் மானாவாரி புஞ்சைப் பயிர்களும் வாடின; கருகின.

ஊரார் எல்லோரும் சேர்ந்து மழைக்கஞ்சி எடுத்தார்கள்; கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். ஊர் தேவதைகளுக்கும் வனதேவதைகளுக்கும் கிடாய் வெட்டிப் பொங்கலிட்டார்கள். விராட பர்வம் வாசித்தார்கள். தினப்பத்திரிகைகளில் போட்டிருக்கும் காலநிலையை ஊன்றிப்படித்தார்கள். சாதாரண ஜோஸியர்களிடம்கூட "மழை எப்பொழுது பெய்யும்?" என்று கேட்டார்கள். மழை பெய்வதாக இல்லை. வெள்ளைவெயில் அடித்தது. என்றாவது ஒருநாள் கருமேகங்கள் கூடி சூரியனை பலமாகப் பந்தல் போட்டு மறைக்கும். சூல்மேகங்கள் கனம் தாங்காது இப்போது பூமியில் இறங்கிவிடும் போலிருக்கும். திடீரென்று எங்கிருந்தோ பெருங்காற்று வந்து மேகங்களையெல்லாம் பாய் சுருட்டுவதுபோல் சுருட்டிக்கொண்டு போய்விடும். ஜனங்கள் முணுமுணுப்பார்கள். முகத்தைச் சுளித்துக்கொள்வார்கள். ஒருவரிடம் ஒருவர் மாறிமாறி ஒன்றுமில்லாமல் போய்விட்டதே இப்படி என்று கேட்டுக்கொள்வார்கள். "நாம் என்னத்தைப் பிழைக்கப் போகிறோம்" என்று சலித்துக்கொள்வார்கள். செட்டியாரின் முகத்திலிருந்து கவலை மாறி பீதி படர்ந்தது.

பயிர்கள் எல்லாம் கருகிச் சருகாக மாறின. விவசாயிகள் வெறும் தாளை அறுவடை செய்தார்கள். கால்நடைக்கு கொஞ்சம் தீவனம்

கிடைத்துவிட்டது; மனிதனுக்கு என்ன செய்வது?

கிணறுகளில் குடிதண்ணீர் இல்லை. வாளிக்கு உழக்கு தண்ணீர் வந்தது. வயது முதிர்ந்த கிழவர்கள் தாதுவருஷப்

பஞ்சத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

*

துட்டு இருப்பவர்கள் மொச்சக்கொட்டை வாங்கிச் சாப்பிட்டார்கள். கையில் துட்டு இல்லாதவர்கள் காடுகளில் முளைத்துள்ள சாணைக்கிழங்குகளைத் தோண்டி எடுத்து வேகவைத்துத் தின்றார்கள். செட்டியார் எப்போதோ கடையை இழுத்து மூடிவிட்டார். வீட்டிலிருந்த பெண்கள் நகையை அடகு வைத்து ரேஷன் நெல் வாங்கிக் குத்தி சமைத்துச் சாப்பிட்டார்கள். வாழ்க்கை கசந்து வீட்டில் ஒருவர்க்கொருவர் மனப்பூசல், சண்டை. நல்லசிவம் செட்டியார் "ஐயோ எனக்கு சாவு வராதா. பகவானே என்னைக் கொண்டு போய்விடேன்!" என்று வாய்திறந்து சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

ஆனால் சாவு அவருக்கு வரவில்லை. வடிவம்மாளுக்கு வந்தது. தலையில் ஓங்கி அறைந்துகொண்டார் நல்லசிவம் செட்டியார். அப்பாவு செட்டியார் கீழேவிழுந்து புரண்டார். "அய்யோ" என்று கல்தூணில் முட்டினார். பக்கத்திலிருந்தவர்கள் செட்டியாரைப் பிடித்துக்கொண்டார்கள். ஆசுவாசப்படுத்தினார்கள். "அம்மா, எங்களையெல்லாம் இப்படி விட்டுவிட்டுப் போய்விட்டாயே" என்று கூக்குரலிட்டார்.

"அப்பாவு என்ன இது? நீ ஆண்பிள்ளை இப்படி மனசை விடலாமா, அடக்கிக்கொள்" என்று பக்கத்திலிருந்தவர்கள் தேறுதல் சொன்னார்கள். இப்படி அவர்கள் சொல்லவும் அவருடைய துக்கம் முன்னைவிடப் பலமடங்கு அதிகமாக பீறிட்டு வெளிவந்தது. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு உடம்பு குலுங்க கேவிக்கேவி அழுதார்.

வடிவம்மாளை செட்டியாரின் தோட்டத்திலேயே அடக்கம் செய்தார்கள்.

அமரக்கிரியைகள் எல்லாம் முடிந்த சிலநாட்கள் கழித்து செட்டியாரை வரச்சொல்லி ஆள் அனுப்பினார் நாயக்கர். செட்டியார் போனார். தாயார் இறந்த விஷயங்களையெல்லாம் துக்கம் விசரித்துவிட்டு "ஏதோ ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டீர்கள் ரூபாயில் கொஞ்சமாவது கொடுக்கமுடியவில்லை என்றாலும் இந்த வருஷ வட்டியாவது கொடுத்தால் நன்றாக இருக்கும்" என்றார். செட்டியார் ஒன்றும் பேசவில்லை.

"நல்லது, மாமா உங்களுக்கு நான் வட்டி கொடுத்துவிடுகிறேன்" என்று மட்டும் சொன்னார். நேராக வீட்டுக்குவந்து தன்னு¬ட்ய குழந்தை கைலாசத்தின் நகைகளை விற்று மூன்றாவது மனுஷனுக்குத் தெரியாமல் வட்டியைக் கட்டிவிட்டார்.

ஊரிலிருந்து ஏழை விவசாயிகள் எல்லாம் தஞ்சாவூர் என்றும் ஆந்திரதேசம் என்றும் பஞ்சம் பிழைக்கச் சென்றார்கள்.

இந்த நிலைமை ஒரு வருஷம் பூராவும் நீடித்தது. அடுத்த வருஷமாவது பஞ்சம் தெளியும் என்று எதிர்பார்த்தார்கள். அந்த ஜனங்களுடைய துரதிருஷ்டம் அடுத்த வருஷமும் அப்படியேதான் இருந்தது. ஆடுமாடுகளை விற்றார்கள். பண்ட பாத்திரங்களை விற்றார்கள். தங்களிடம் உள்ள எதெயெல்லாம் விற்று ஜீவிக்கமுடியுமோ அதையெல்லாம் விற்றார்கள்.

செட்டியாரால் மறுவருஷம் வட்டி கட்ட முடியவில்லை. நாயக்கர் ஆள்மேல் ஆள் அனுப்பி நெருக்கினார். என்ன செய்வார்கள. பாவம்! வீட்டையும் நிலத்தையும் தவிரஅவர்களிடம் என்ன இருக்கிறது? இரண்டையுமே நாயக்கருக்குத் தாரை வார்த்துவிட்டார்கள்.

நாயக்கர் தயாள குணமுள்ளவர்; அவர்கள் பஞ்சம் பிழைக்கச் செல்வதற்கு நூறு ரூபாயும் கொடுத்தார்! செட்டியார் குடும்பத்தோடு புறப்பட்டார்; தான் பிறந்து வளர்ந்த அந்தக் கிராமத்தைவிட்டு, தவழ்ந்து விளையாடிய அந்த மண்ணைவிட்டுப் புறப்பட்டார்.

அவருடைய தோட்டத்தின் வழியாகத்தான் பாதை. தன்னுடைய நிலத்தின்மேல் கால் பட்டதும் செட்டியாருக்கு உடம்பு புல்லரித்தது.

கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது. தாயாரை அடக்கம் செய்த இடத்துக்கு வந்ததும் அப்படியே தரையில் மரம் போல் சாய்ந்தார். சாய்ந்து அந்த மண்ணின்மேல் புரண்டார். பெண்களும் குழந்தைகளும் 'குய்யோ முறையோ' என்றழுதார்கள். நல்லசிவம் செட்டியார் சமைந்த கல்லாக நின்றார்.

சிறிதுநேரம் கழித்து மகனைத் தூக்கி நிறுத்தினார் பெரியவர். எல்லோருடய அழுகையும் நின்றுவிட்டது. ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

ரயில் ஒவ்வொரு ஸ்டேஷனையும் தாண்டி வடக்கே போய்க்கொண்டிருந்தது. பசுமலையும் தாண்டி மதுரையை நெருங்கிவிட்டது. தூரத்தில் வரும்போதே கிழவர் கோபுரங்களைக் கண்டுகொண்டார். தலைக்குமேல் இரண்டு கைகளையும் வைத்துக் கண்களை மூடிக்கொண்டார்.

செட்டியாரின் குடும்பத்தைத் தவிர அந்தப் பெட்டியில் இருந்தவர்கள் எல்லோரும் மதுரையில் இறங்கிவிட்டார்கள். செட்டியார் பிளாட்பாரத்திலுள்ள கடைகளில் குழந்தைகள் தின்பதற்கு பலகாரம் வாங்கினார். அதோடு அன்றைய தினப் பத்திரிகை ஒன்றும் வாங்கினார். செட்டியார் எப்பொழுதும் பத்திரிகை வாசிப்பதில்லை. ஆனால் வாங்கத் தவறமாட்டார். இந்த நிலையிலும் பழக்கம் என்பது அவரை விட்டுப் போய்விட வில்லை.

வாங்கிய பலகாரங்களை எல்லோரும் சாப்பிட்டார்கள். பத்திரிகை மட்டும் அப்படியே பெஞ்சில் கிடந்தது. சோழவந்தான் ஸ்டேஷனில் நாலைந்து பேர்கள் ஏறி செட்டியாரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்கள். ரெயில் புறப்பட்டது. வந்தவர்களில் ஒருவர் செட்டியாரின் பக்கத்தில் கிடந்த பத்திரிகையை எடுத்துப் படித்துக்கொண்டிருந்தார். திடீரென்று தன்

சகாக்களை நோக்கி ஒரு செய்தியை பலமாக வாசித்தார். எல்லோருமே அதைக் கேட்டார்கள்.

"கிணறு வெட்ட சர்க்காரால் இனாமாக ரூபாய் வழங்கப்படும் திட்டத்தை, விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து நீடித்திருக்கிறார்கள், இந்த வருஷம் கிணறு ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் இனாமாகக் கிடைக்கும். விவசாயிகள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி தேச சுபிட்சத்துக்குப் பாடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்."

செய்தியைக் கேட்ட மற்றவர்கள் சந்தோஷப்பட்டார்கள். செட்டியாரின் ரோமங்கள் குத்திட்டு நின்றன. கண்கள் கோவைப்பழம் போல் ஜிவ் என்று சிவந்தன. வேகமாகப் பாய்ந்து பத்திரிகையை 'டபக்' என்று பிடுங்கி சுக்குநூறாகக் கிழித்தார். எல்லோரும் திகைத்தார்கள். என்ன காரணம் என்று ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை! நல்லசிவம் செட்டியார் மாத்திரம் ஒரு கோணல் புன்னகை செய்தார்.

சரஸ்வதி, நவம்பர் 1958

***

# கோமதி

கோமதிசெட்டியாருக்கு வயசு முப்பது. அவனது பெற்றோர்கள் அவனுக்கு பெண்குழந்தை என்று நினைத்துத்தான் கோமதி என்று பெயர் வைத்தார்கள். அவனுக்குமுன் பிறந்த ஏழும் அசல் பெண்கள். இவனுக்கு சிறு பிராயத்திலிருந்தே ஜடைபோட்டு பூ வைத்துக்கொள்வதிலும், வளை அணிந்துகொள்வதிலும் கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும், இயல்பு அச்சு அசல் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்கு குழந்தையாக இருக்கும்போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண்குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போவான். ஆண்களோடு விளையாடவேண்டியது ஏற்பட்டுவிட்டால் வீடுகட்டி, கல்யாணம் பண்ணி விளையாடும் விளையாட்டில்தான் பிரியம் அதிகம். அதிலும் மணப்பெண்ணாக தன்னை வைப்பதென்றால்தான், விளையாட வரச் சம்மதிப்பான்.

வயசு ஆக ஆக அவன் ஆண்களோடு சேர்ந்து பழகுவதையே விட்டு விட்டான். பெண்கள் இருக்கும் இடங்களில்தான் சதா அவனைப் பார்க்கலாம். ஏதாவது அதிசயமான சங்கதியைக் கேள்விப் பட்டால் பட்டென்று கையை தட்டி இடதுகை மணிக்கட்டின்மேல் வலது முழங்கையை ஊன்றி ஆள்காட்டி விரலைக் கொக்கிபோல் வளைத்துத் தன் மூக்கின்மேல் ஒட்டவைத்துக் கொள்வான். அகலமான கருஞ்சாந்துப் பொட்டை வைத்து வெற்றிலை போட்டுக்கொண்டு கீழ் உதட்டைத் துருத்தியும், நாக்கை நாக்கை நீட்டியும் சிகப்பாகப் பிடித்திருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக்கொள்வான். தலைமுடியை அள்ளிச் சொருகி 'கொப்பு' வைத்து பூ வைத்துக்கொள்ளுவான். அவன் அணிந்திருக்கும் பாடி பெண்கள் அணிந்துகொள்ளும் ஜம்பரின் மாடலில் அமைந்திருக்கும். மேலே போட்டுக்கொள்ளும் துண்டை அடிக்கடி மாராப்பை சரி பண்ணுவதுபோல் இழுத்து இழுத்து விட்டுக்கொண்டு இடுப்பை இடதும்

வலதும் ஆட்டி அசல் பெண்களைப்போல் கையை ஒய்யாரமாக வீசி நடப்பான். எவ்வன புருஷர்களைக் கண்டுவிட்டால் கோமதிக்கு எங்கோ இல்லாத வெட்கம் வந்துவிடும்.

பெண்கள் இவனை வித்தியாசமாகவே நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்கு சென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக்கொள்வார்கள். ஆண் பெண் சம்பந்தமான பால் உணர்ச்சிக் கதைகளைச் சொல்லி அவர்களை மகிழ்விப்பான். மனசைத் தொடும்படியான ஒப்பாரிகளைப் பாடி அவர்களின் கண்ணீரை வரவழைப்பான். ஆனால் ஒரு இடத்தில் நிலைத்து இருக்கமாட்டான். ஒரு வீட்டில் சிலநாள் இருப்பான்; திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் இன்னொரு வீட்டிற்குப் போய்விடுவான்.

இவனுக்கு ஒரே ஒரு கலை அற்புதமாகக் கைவந்திருந்தது. சமையல் பண்ணுவதில் இவனுக்கு நிகர் இவனேதான். விருந்து நாட்களில் கோமதி கோமதி என்று இவனுக்கு ஏகப்பட்ட கிராக்கி.

ஒரு தடவை, தூரத்து ஊரிலுள்ள தனது பந்துக்கள் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகும்படி நேர்ந்தது இவனுக்கு. கல்யாணவீட்டுக்கு வந்திருந்த பெண்களில், பிரசித்து பெற்ற ரகுபதி நாயக்கரின் வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களுடைய அழகையும் நகை ஆபரணங்களையும் உடைகளையும் உல்லாசமான பேச்சுக்களையும் கண்டு கோமதி அப்படியே சொக்கிப்போய் விட்டான்!

ரகுபதி நாயக்கரின் இளையபேத்தி குமாரி சுலோ இவனைக் கண்டதும், இவனுடைய அங்க அசைவுகளையும் தளுக்கையும் கண்டு தன் வைர வளையல் குலுங்க கைகொட்டிக் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கோமதி தன் மனசைப் பறிகொடுத்தான். அவளால் தன் சிரிப்பை அடக்கமுடியாமல் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். கிரிப்பை அடக்க அவள் அவனோடு பேச்சுக் கொடுத்தாள். ரகுபதி நாயக்கரின் வீட்டுப் பெண்களுக்கு, இவனைப் பற்றி அங்கிருந்த ஒருத்தி விஸ்தாரமாகச் சொல்லி அறிமுகம் செய்து

வைத்தாள்.

பெண்கள் விலகி உட்கார்ந்து அவனைத் தங்கள் அருகே உட்கார வைத்துக்கொண்டார்கள். பட்டுச் சேலைகளின் சரசரப்பும் வியர்வையோடு கலந்த மல்லிகைப் பூவின் சுகந்த நெடியும் கோமதியைக் கிறங்க அடித்தது. பெண்கள் ஒருவருக்கொருவர் காதோடு காதாக பேசிக்கொண்டு சிரிக்கும் ஒலி, வளையல் ஒலியோடு போட்டியிட்டது. கோமதி ஏதோ வாய்திறந்து பேச ஆரம்பித்தபோது சுலோ குனிந்து தன் காதை அவன் வாய் அருகே நீட்டினாள்.

"யக்கா, இந்தச் சேலை என்ன விலை?"

சுலோ சிரித்தாள். சிரித்துவிட்டு, "இதோ - இது ஐநூறு ரூபாய் விலை -" அவள் வாயிலிருந்து ஒரு மதுரமான வாடை வீசியது.

"யக்கா, உனக்கு இந்தச் சேலை ரொம்ப நல்லாயிருக்கு."

சுலோ மீண்டும் சிரித்தாள். பெண்மைக்கே உரிய நாணம் கலந்த சப்தமில்லாத குமிழ்ச் சிரிப்பு வந்து அவளைக் குலுக்கியது.

"நீ எங்க வீட்டுக்கு வாரையா? சமையல் செய்ய?"

சரி, என்ற பாவனையில் தலையை ஆட்டினான் கோமதி.

கோமதிக்கு, சுலோ தன் வலதுகை நிறைய அணிந்திருந்த வளையல்கள்மீதுதான் கண்ணாக இருந்தது.

அந்த வளையல்கள்தான் அவளுடைய சங்குபோன்ற வெண்ணிறமான கைக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தது. ரகுபதி நாயக்கரின் வீட்டுப்பெண்கள் எல்லோருமே அப்படித்தான் ஒரு கையில் வைர வளையல்களும் ஒரு கையில் கருவளையல்களும் அணிந்திருப்பார்கள். அந்த வீட்டுப் பெண்களை நினைத்தாலே சிவந்த உதடுகளும் வெண்மையான பற்களுமே ஞாபகத்துக்கு வரும்.

இப்போது இருக்கும் ரகுபதி நாயக்கரின் பேரனாரான ரகுபதி நாயக்கர் தன் குடும்பத்திலுள்ள அழகை மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தினார். தன்னுடைய அழகுமிகுந்த நான்கு புத்திரர்களுக்கும் ஆந்திரதேசத்துக்குச் சென்று தங்கவிக்ரகங்களைப்போலுள்ள எட்டு ஸ்திரி ரத்தினங்களைக் கொண்டுவந்து ஆளுக்கு இரண்டு பேரை கல்யாணம்பண்ணி வைத்தார். தன் குடும்பத்திலிருந்து வெளியே கொடுக்கவேண்டிய பெண்களுக்கும் அவர் அழகுமிகுந்த மாப்பிள்ளைகளையே தேர்ந்தெடுப்பார். இந்த மாப்பிள்ளைகளுக்கு சொத்து இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அழகுமிகுந்த பெண்ணையும் கொடுத்து அவனுக்கு வேண்டிய சொத்தையும் எழுதி வைப்பார். எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும் குறைவுபடாத சம்பத்து இருந்தது அவர்கள் குடும்பத்திற்கு.

இப்பேர்ப்பட்ட ஒரு இடத்துக்குத்தான் கோமதி சமையல் உத்தியோகத்துக்குப் பெட்டி படுக்கையுடன் போய்ச் சேர்ந்தான். பக்கத்து வீட்டிலுள்ள பெண்களெல்லாம் இவனைப் பார்க்க வந்து விட்டார்கள். இவனுடைய நடையையும், நீட்டிப்பேசுகிற பேச்சையும், அசைவுகளையும் கண்ட பெண்கள் சிரித்து ரஸித்தார்கள். உற்சாகமூட்டினார்கள். அன்று எல்லோருக்கும் ஒரு பெரிய விருந்தே நடந்தது. அவன் படைத்த உணவை ருசிபார்த்தபின்தான் பெண்களுக்கு அவன் மீதுள்ள இளப்பம் ஓரளவு நீங்கியது. அவனை பரிவாகவும் இரங்கத் தக்க ஒரு ஜீவனகவும், தங்களோடு, தங்கள் இனத்தோடு சேர்ந்த ஒரு ஆத்மாவாகவும் நடத்தினார்கள்.

சாப்பிட்டு முடிந்த ரகுபதி நாயக்கர், இந்தப் புது சமையல் காரனை பார்க்கவேண்டுமென்று சொல்லி மாடியிலுள்ள தன்பகுதிக்கு வரவழைத்தார். கோமதி பயந்து ஒரு பூனைபோல் மெல்ல நுழைந்து அவர் எதிரே வந்து நின்றான். இவனைப் பார்த்ததுதான் தாமதம். ரகுபதி நாயக்கர் ஆகாயத்தை நோக்கி கடகடவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அவருடைய வெண்ணிறமான மீசையோடு பற்களின் ஒளி போட்டியிட்டது. கோமதி உண்மையாகவே பயந்து போனான். அவனுடைய பயத்தைக் கண்டு ரகுபதி நாயக்கர் இன்னும் உரக்கச் சிரித்தார். வீட்டுப்பெண்கள்

எல்லாம் சிறிது தள்ளி நின்று இதை வேடிக்கை பார்த்தார்கள்.

"பலே, பலே; வா இங்கே. உன் பேர் என்ன?"

"கோமதி"

"கோமதியா! பேஷ் பேஷ் . . !" என்று முழங்காலில் கையால் தட்டிக்கொண்டு மீண்டும் அந்த கடகடத்த சிரிப்பையும் அவிழ்த்துவிட்டார் ரகுபதி நாயக்கர். பின்பு எழுந்து தன் பீரோவைத் திறந்து ஒரு ஜோடி பட்டுக்கரை வேஷ்டிகளை எடுத்து "இந்தா, பிடி" என்று கொடுத்தனுப்பினார்.

*

வேறு யாராவது இருந்தால் இந்த வெகுமதியைக் கண்டு மகிழ்ந்து போயிருப்பார்கள். ஆனால் கோமதி அந்த வேஷ்டிகளை கடைசிவரையும் உடுத்தவே இல்லை.

ஒரு நாள் பகல் உணவுக்குப்பிறகு 'அந்தப்புர'த்தில் பெண்கள் எல்லோரும் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார்கள். சிலர் பதினைந்தாம் புலியும், சிலர் தாயமும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கோமதி, ஒரு பெண்ணுக்குத் தலையில் பேன் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு திடீரென்று என்ன உற்சாகம் வந்ததோ தெரியவில்லை. தன் இனிமையான பெண்குரலில் சோகம் ததும்ப ஒரு ஒப்பாரியைப் பாடினான். உணர்ச்சியோடு பாடினான். விதவைக்கோலம் பூண்டு விட்ட ஒரு பெண் சொல்லுவதாக பாவம்:

கருப்பும் சிகப்புமாய் - நான்

கலந்துடுத்தும் நாளையிலே

சிகப்பும் கருப்புமாய் - நான்

சேர்ந்துடுத்தும் நாளையிலே

நீலமும் பச்சையுமாய் - நான்

நிரந்துடுத்தும் நாளையிலே

கைக்களையன் சேலையை - என்

கழுத்திலிட்டுப் போனியளே

கைக்களையன் சேலை: எந்தன்

கழுத்தை அறுக்காதோ

ஈழுவன் சேலை: எந்தன்

இடுப்பை முறிக்காதோ

அங்கிருந்த விதவைப்பெண்கள் இதைக் கேட்டவுடன் அழுதே விட்டார்கள். சுமங்கலிகள் மௌனமாகக் கண்ணீர் வடித்தார்கள். உடனே கோமதி கருவளையைப்பற்றிய ஒரு வேடிக்கையான நாடோடி பாடல் ஒன்றைப் பாடி அபிநயம் பிடிக்கத் தொடங்கினான்

சோளம் இடிக்கையிலே

சொன்னயடி ஒரு வார்த்தை - ஐயோ

கையைப் பிடிக்காதிங்கோ - என்

கருவளைவி சேதமாகும் . . .

கொல்லென்று பெண்கள் சிரித்தார்கள்; வடித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சிரித்தார்கள்.

*

அதிகாலையில் பரபரப்பாகவும் உற்சாகமாகவும் கோமதி வேலை செய்துகொண்டு இருந்தான். பெண்கள் குளிக்கும் அறைகளில்கொண்டுபோய் வெந்நீர் ரொப்புவதும், சோப்புகளும்

துவாலைகளைக் கொண்டு கொடுப்பதும் அவர்களுக்கு முதுகு தேய்த்துவிடுவதுமாக வழக்கமான வேலைகளில் பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தாள். அவளுடைய சுதாரிப்புக்கு இன்று ஒரு காரணமுண்டு. சுலோவின் அண்ணன் ரகு பட்டணத்திலிருந்து இன்று மாலை லீவுக்கு வருகிறான். தன்அண்ணனைப்பற்றி சுலோ கோமதியிடம் பல சந்தர்ப்பங்களில் சொல்லக் கேட்டிருக்கிறாள் . . . அவருக்கு என்னென்ன சமையல் வகைகள் பிடிக்கும் என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தாள் கோமதி.

அந்த மாலை நேரம் இப்போதே வந்துவிடக்கூடாதா என்றிருந்தது பிற்பகல் நத்தைபோல் ஊர்ந்து அந்த மாலைநேரமும் வந்தது. போர்டிகோவுக்குள் கார் வந்து நின்றதும் முன்பக்கம் பெண்களெல்லாம் வந்தார்கள். கோமதி மட்டும் கதவு இடுக்குவழியே ஒளிந்துகொண்டு பார்த்தாள். சுலோ ஓடிச்சென்று காரின் பின்கதவைத் திறந்தாள். ஆணழகனான ரகு ஆஜானுபாகுவாக இறங்கி ஜம் என்று நின்றான். பெண்கள் அவனுக்கு திருஷ்டி சுற்றி கழித்து அவன் உள்ளே வர விலகி நின்றார்கள். ரகுவைப் பார்த்த கோமதிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. முதலில் அதிர்ச்சியாயிருந்தது. மலமலவென்று கண்களை மூடித் திறந்தாள். திடீரென்று எங்கேயும் இல்லாத வெட்கம் வந்து அவளைச் சூழ்ந்துகொண்டது. ஒருவரும் பார்ப்பதற்குள் உள்ளே ஒரே ஓட்டமாகப்போய் குளிப்பறைக்குள் போய்க் கதவை பூட்டிக்கொண்டாள்!

இரவு சாப்பாட்டின்போது ரகுவுக்கு சுலோவே பரிமாறினாள். கோமதி மறைவில் நின்றுகொண்டு ரகு சுவைத்துச் சாப்பிடுவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். "சாப்பாடெல்லாம் புதுமாதிரி இருக்கிறதே. இப்போது சமையலுக்கு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான். 'புது ஆள் வந்திருக்கிறதண்ணா' என்று சொல்லிக்கொண்டே பின்புறம் பார்த்தாள். கோமதி மறைந்துகொண்டு தன்னைப்பற்றி சொல்லவேண்டாம் என்று ஜாடை செய்தாள். சுலோவும் சிரித்துக்கொண்டே ரகுவுக்குத் தோன்றாமல் வேறு பேச்சுக்கு மாற்றிவிட்டாள்.

ரகு மாடிக்குப் போனபிறகு சுலோ கோமதியைக் கூப்பிட்டு, "அண்ணா உன்னைப் பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவான்; மண்டு! நீ ஏன் வேண்டாம் என்று சொன்னாய்? பாலை எடுத்துக்கொண்டு வா" என்று சொல்லிவிட்டு அண்ணாவின் அறைக்குப் போய்விட்டாள்.

கோமதிக்கு உடம்பெல்லாம் வேர்த்து படபடவென்று வந்தது. தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டு நிலைக்கண்ணாடியின் முன்போய் நின்று தன்னை நன்றாகப் பார்த்து, தலையிலுள்ள பூவை சரிப்படுத்திக்கொண்டான். பால் டம்ளரை ஒரு தட்டில் எடுத்துக்கொண்டு மாடியை நோக்கி இப்பொழுதுதான் புதுப்பெண் முதல் இரவுக்குப் போகிறதைப்போல அடிமேல் அடிவைத்து ஏறிச்சென்றான். தட்டோடு கை நடுங்கியதால் எங்கே பால் கொட்டி விடுமோ என்று நினைத்து தம்ளரை ஒரு கையால் பிடித்துக்கொண்டே போனான்.

"கோமதி . . . கோமதி . . . உள்ளே வாயேன்" என்று சுலோ கூப்பிட்டாள்.

"யார் கோமதி?" என்று கேட்டான் ரகு.

"அதுதான்; நான் அப்போ சொல்லவில்லையா; சமையலுக்கு ஒரு புது ஆள் வந்திருக்கிறதென்று?".

"ஓஹோ; சரிதான்" என்று சொல்லிக்கொண்டு தலையை ஆட்டிக் கொண்டான். "யாரோ பெண்பிள்ளை போலிருக்கிறது" என்று எண்ணிக்கொண்டு சுலோவைப் பார்த்தவாறு தன் பேச்சைத் தொடர்ந்தான்.

கோமதி மெதுவாகப் பக்கத்தில் வந்து நின்றான்.

"அண்ணா பாலை எடுத்துக்கொள்."

ரகு திரும்பிப் பார்த்தான். முகத்தைச் சுழித்தான். இந்த ரஸ விஹாரத்தை அவன் ஆண்மை நிறைந்த உள்ளத்தால் தாங்க முடியவில்லை. சுலோவை இதெல்லாம் என்ன என்ற முறையில் கோபத்தோடு பார்த்தான். சுலோ

கலகலவென்று சிரித்தாள். கருங்கல் தரையில் கண்ணாடி வளையல்கள் தொடர்ந்து விழுந்து உடைவதுபோல் இருந்தது அவளுடைய சிரிப்பு.

இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை கோமதிக்கு. அவமானம் தாங்கவில்லை. தட்டை மேஜைமீது வைத்துவிட்டு கையால் முகத்தை மூடிக்கொண்டு மூஸ்மூஸ் என்று அழ ஆரம்பித்துவிட்டான். ரகு கோமதியை நோக்கி "சீ போ வெளியே" என்று கத்தினான். கோமதி துயரம் தாங்காமல் வெளியே ஓடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

*

"என்ன காரியம் செய்து விட்டாயண்ணா"

சுலோவிற்கு மனசு மிகவும் கஷ்டமாகப் போய்விட்டது. தான் விளையாட்டாக நினைத்தது இப்படி அண்ணாவுக்கு எரிச்சலை உண்டுபண்ணிவிடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. கோமதியை நினைத்து மிகவும் துக்கப்பட்டாள்.

"இரக்கப்படத் தகுந்த ஒரு ஜென்மத்திடம் இப்படிக் கொடுமையாக நடந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள். ரகுவுக்கும், 'பாவம்' நாம் ஏன் இப்படி நடந்துகொண்டோம் என்று பட்டது. "தான் இனிமேல் அவனிடம் சுமுகமாக நடந்து கொள்வதாகக்" கூறினான்.

அன்றிரவு தனக்குக் சாப்பாடே வேண்டாம் என்றுவிட்டு வெறும் தரையில் படுத்துக்கொண்டான் கோமதி . . .

*

மறுநாள் சுலோ கோமதிக்கு எவ்வளவோ சமாதானம் சொல்ல வேண்டி இருந்தது. என்ன சொல்லியும் கோமதிக்கு மனசு சமாதானப்படவில்லை.

ரகு வந்து கோமதியிடம் சிரித்துப் பேசியதும் கோமதிக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டது: பழைய கோமதி ஆனான். குளிப்பறையில் ரகுவுக்கு தண்ணீர் எடுத்து வைத்தான். சோப்பும் துவாலையும் கொண்டு வைத்தான். ரகுவும் சந்தோஷமாகக் குளிக்க வந்தான்.

"சரி, நீ போகலாம்; நான் குளித்துக்கொள்கிறேன்" என்றான் ரகு.

"உங்களுக்கு நான் முதுகு தேய்க்கிறேனே . . !" என்று குழைந்தான் கோமதி . . .

"வேண்டாம் வேண்டாம்; நானே தேய்த்துக்கொள்வேன்" என்று சொல்லி, பிடரியைப் பிடித்து தள்ளாத குறையாக கோமதியை வெளியேற்றி கதவைப் பூட்டிக்கொண்டான் ரகு. அந்தக் கதவுக்குமேல் ஒரு சிறு பாட்டு ஜன்னல் ஒன்றிருந்தது. பக்கத்திலிருந்த பெரிய ஆட்டுரல்மேல் ஏறி அந்த ஜன்னல் வழியாய்க் குளிப்பறைக்குள் திருட்டுத்தனமாக வேறு எதையோ பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தான் கோமதி. சுலோ இந்த நாடகத்தையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்களில் பிதுங்கும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அப்பால் போய்விட்டாள்.

"சாப்பிடுங்கள்; இன்னுங்கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கோமதி பலமாக உபசரித்துக்கொண்டே ரகுவுக்குப் பரிமாறினான்.

"வேண்டாம்; வேண்டாம் போதும்; போதும்" என்று சொல்லும்வரை திணற அடித்தான். தன் மனதுக்குப் பிடித்தவர்களை தான் சமைத்ததை தன் கையாலேயே பரிமாறி அவர்கள் உண்பதைக் காண்பதில் எப்பவுமே கோமதிக்கு பரம திருப்தி. அதோடு சுலோவும் சேர்ந்துகொண்டு ரகுவைத் திண்டாட வைத்து வேடிக்கை பார்த்தாள்.

"சுலோ, இந்தப் பயலுக்கு நீ ரொம்பவும் இளக்காரம் கொடுக்கிறாய், இவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. நான் இவனை வெறுக்கிறேன்" என்று ரகு இங்கிலீஷில் சொன்னான்.

'ஐயோ பாவம்; அண்ணா, அப்படியெல்லாம் சொல்லாதே' என்று பதிலுக்குச் சொன்னாள். சொல்லிவிட்டு சுலோ கோமதியின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். இவர்கள் இரண்டுபேரும் பேசிக் கொண்டது கோமதிக்கு விளங்கவில்லையானாலும் தன் சமையலைப் பற்றியும் தன்னைப்பற்றியும்தான் தன் எஜமானர்கள் புகழ்ந்து பேசிக்கொள்கிறார்கள் என்று எண்ணி மகிழ்ந்தான் கோமதி.

அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு மாடிக்குப் போனபின் கோமதி பெண்களின் குளிப்பறைக்குப் பக்கத்தில் தனக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தன்னுடைய தனித்த அறையில் வெற்றிலைப் பாக்கு, புகையிலைகளைப் போட்டு முழக்கிக்கொண்டிருந்தான். சந்தோஷத்தை அவனால் அடக்கமுடியவில்லை. குரலெடுத்துப் பாடவேண்டும்போல் இருந்தது.

*

இரவுச் சாப்பாடு முடிந்தது. வழக்கம்போல் கோமதி ரகுவுக்கு பால் எடுத்துக்கொண்டு போனான். ரகு தனியாக உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். பக்கத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு எதிரேயுள்ள கண்ணாடியில் தன் முகத்தை இப்படியும் அப்படியுமாக ஒரு தடவை பார்த்துக்கொண்டான். ரகுவுக்கு படுக்கையைத் தட்டிப் போட்டான். மீண்டும் பக்கத்தில் வந்து உராய்ந்துகொண்டு "பாலைச் சாப்பிடுங்கோன்னா; ஆறிப்போகிறது" என்று கொஞ்சலாகச் சொன்னான். சொன்னதோடு அவன் நின்றிருந்தாலும் ரகுவிற்கு கோபம் வந்திருக்காது; நாடியையேறு தொட்டுத் தாங்கினான். ரகு பேனாவை எறிந்துவிட்டு அப்படியே கோமதியின் செவிட்டில் ஓங்கி ஒரு அறை விட்டான். இதை கோமதி எதிர்பார்க்கவில்லை. கன்னத்தைக் கையால் பொத்திக்கொண்டு ரகுவைப் பார்த்து சிரிக்க முயன்றான்; சிரிக்கமுடியவில்லை. பீதியும் மாறிமாறி முகத்தில் தோன்றி இறுதியில் பீதி முற்றி பயங்கரமாக முகம் மாறியது. இது ரகுவுக்கு இன்னும் ஆவேசத்தை உண்டு பண்ணியது. தன் வலது காலை உயர்த்தி ஓங்கி அவன் நெஞ்சில் உதைத்துத் தள்ளினான்.

"ஓ" என்று பயங்கர ஊளையுடன் தடால் என்று தரையில் விழுந்தான் கோமதி. பக்கத்தறையிலிருந்த சுலோ ஓடிவந்து ரகுவை தடுக்காவிட்டால் கோமதி என்னவாகி இருப்பானோ.

அன்று இரவு மூன்று பேர்களும் தூங்கவில்லை. குளிப்பறைக்குப் பக்கத்திலிருந்த அறையிலிருந்து இரவு பூராவும் ஒப்பாரி வைத்து அழும் சோகக் குரல் கேட்டுக்கொண்டே இருந்தது.

மறுநாள் ரகு ஏதோ அவசர ஜோலியாக பட்டணத்துக்குப் புறப்பட்டுவிட்டான். சுலோவின் முகத்தில் அருளே இல்லை. இதை ரகு கவனித்தான். கோமதி தன் அறையிலிருந்து வெளியே வரவே இல்லை.

எல்லோரிடமும் சொல்லிக்கொள்ள வந்தபோது ஸ்திரிகள் கூட்டத்தில் கோமதி இல்லாதது கண்டு, "அவன் எங்கே; கோமதி," என்று கேட்டான் ரகு.

"அவனுக்கு உடம்புக்கு சரியில்லை போலிருக்கிறது. இன்று வெளியிலேயே காணோம்" என்று சொன்னார்கள். சுலோ ஒன்றுமே தெரியாததுபோல் மௌனமாக இருந்தாள். ரகு கையில் ஒரு பொட்டலத்துடன் கோமதியின் இருப்பிடம் சென்றான்.

"கோமதி! யேய் கோமதி; கதவைக் திற" என்று அன்போடு கேட்டான். கோமதியும் கதவைக் திறந்தான். தலைவிரிகோலமாக கண்கள் வீங்கப் பார்க்கப் பாவமாக இருந்தான்.

"இந்தா இதை வைத்துக்கொள்" என்று அந்தப் பொட்டலத்தை கோமதியிடம் கொடுத்தான் ரகு. அதை தலைகுனிந்தவாறே மௌனமாக வாங்கிக்கொண்டான். "அதில் என்ன இருக்கிறது என்று பார்!"

கோமதி பொட்டலத்தை அவிழ்த்தான். நிறைய செவந்திப் பூக்களும், அருமையான கருவளைகளும் இருந்தன. பெண்களெல்லோரும் சிரித்தார்கள். கோமதியும் சிரித்தான்; அவன் கண்களில் கண்ணீர் வந்தது.

ரகு ஊருக்குச் சென்று பல நாட்கள் ஆகிவிட்டது. கோமதி எல்லா வேலைகளையும் முன்போலவே செய்கிறானென்றாலும் அவன் முன்போல கலகலப்பாக இல்லை. தனியாக ஏதாவது ஓரிடத்தில் இருந்து கொண்டு எதையோ பறிகொடுத்தவன்போல் எதையாவது பார்த்துக்கொண்டிருப்பான். மனதை அறுக்கும் பெருமூச்சுக்களை அடிக்கடி விடுவான். உடம்பு மெலிந்துவிட்டது. சுலோ இதையெல்லாம் மௌனமாக கவனித்துக்கொண்டு வந்தாள்.

ஒருநாள் இரவு இரண்டுமணி இருக்கும். சுலோ தற்செயலாகக் கண்விழித்தாள். கீழே கோமதியின் அறையில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. 'ஏன்?' என்று பார்க்கவேண்டும்போல் இருந்தது. மெதுவாக இறங்கி வந்தாள். பார்த்தாள். கோமதியைக் காணோம். உள்ளே ஒரு பெண் மட்டும் தனியாக உட்கார்ந்துகொண்டிருப்பது தெரிந்தது. திகிலும் ஆச்சரியமாகவும் இருந்தது.

யார் இந்தப் பெண்; கோமதி எங்கே?

அரவமில்லாமல் சுலோ பக்கவசத்திலிருந்த ஜன்னல் வழியாகப் போய்ப் பார்த்தாள். அந்தப் பெண் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். கைகள் நிறைய கருவளைகள் போட்டுக் கொண்டிருந்தாள். தலையில் ஜடைநிறைய செவ்வந்திப் பூக்கள். அவள் எதிரே ரகுவின் போட்டோ படம் இருந்தது! சுலோ முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அந்தப் பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக இறங்கிக் கொண்டிருந்தது. முன்னால் குனிந்து வளையல்கள்மீது முகத்தைக் கவிழ்ந்துகொண்டாள் அந்தப் பெண். அவளுடைய கண்களின் நீர்பட்டு அந்தக் கருவளைகள் நனைந்து அதிலிருந்து பிரகாசமான வைரங்களைப்போல் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

எதிரேயுள்ள ஜன்னல் வழியாக இப்பொழுது நன்றாகப் பார்க்க முடிந்தது சுலோவால். அடையாளம் கண்டுக்கொண்டாள். சேலையுடுத்திக்கொண்டிருந்த அது வேறு யாருமில்லை.. கோமதிதான்!

சுலோ திடுக்கிட்டுப் போனாள். பீதியால் நிலைக்கொள்ள முடியவில்லை. திரும்பி மாடிப்படி ஏற காலைத்தூக்கி வைக்க முயன்றாள்- முடியவில்லை, அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

தீபம் 1964.

***

# கன்னிமை

சொன்னால் நம்பமுடியாதுதான்! நாச்சியாரம்மாவும் இப்படி மாறுவாள் என்று நினைக்கவேயில்லை.

அவள் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி. நாங்கள் எட்டுப்பேர் அண்ணன் தம்பிகள். 'பெண்ணடி'யில்லை என்று என் தாய் அவளைத் தத்து எடுத்துத் தன் மகளாக்கிக் கொண்டாள்.

அம்மாவைவிட எங்களுக்குத்தான் சந்தோஷம் ரெம்ப. இப்படி ஒரு அருமைச் சகோதரி யாருக்குக் கிடைப்பாள்? அழகிலும் சரி, புத்திசாலித்தனத்திலும் சரி அவளுக்கு நிகர் அவளேதான்.

அவள் 'மனுஷி'யாகி எங்கள் வீட்டிலுங் கன்னிகாத்த அந்த நாட்கள் எங்கள் குடும்பத்துக்கே பொன் நாட்கள்.

வேலைக்காரர்களுக்குக்கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால்தான் திருப்தி. நிறைய்ய மோர்வுட்டுக் கம்மஞ்சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகு வத்தலைப் பக்குவமாக எண்ணெயில் வறுத்துக் கொண்டு வந்து வைத்துவிடுவாள். சருவச் சட்டியிலிருந்து வெங்கலச் செம்பில் கடகடவென்று ஊற்ற, அந்த மிளகு வத்தலை எடுத்து வாயில் போட்டு நொறுநொறுவென்று மென்று கொண்டே, அண்ணாந்து கஞ்சியை விட்டுக் கொண்டு அவர்கள் ஆனந்தமாய்க் குடிக்கும்போது பார்த்தால், 'நாமும் அப்படிக் குடித்தால் நன்றாக இருக்கும்போலிருக்கிறதே!" என்று தோன்றும்.

ஒரு நாளைக்கு உரித்த பச்சை வெங்காயம் கொண்டுவந்து 'கடித்துக்' கொள்ள கொடுப்பாள். ஒரு நாளைக்குப் பச்சை மிளகாயும், உப்பும். பச்சை மிளகாயின் காம்பைப் பறித்துவிட்டு அந்த இடத்தில் சிறிது கம்மங்கஞ்சியைத தொட்டு அதை உப்பில் தோய்ப்பார்கள். உப்பு அதில்

தாராளமாய் ஒட்டிக் கொள்ளும். அப்படியே வாயில் போட்டுக்கொண்டு கசமுச என்று மெல்லுவார்கள். அது, கஞ்சியைக் 'கொண்டா கொண்டா' என்று சொல்லுமாம்! இரவில் அவர்களுக்கு வெதுவெதுப்பாகக் குதிரைவாலிச் சோறுபோட்டு தாராளமாக பருப்புக்கறி விட்டு நல்லெண்ணெயும் ஊற்றுவாள். இதுக்குப் புளி ஊற்றி அவித்த சீனியவரைக்காய் வெஞ்சனமாகக் கொண்டுவந்து வைப்பாள். இரண்டாந்தரம் சோற்றுக்குக் கும்பா நிறைய ரஸம். ரஸத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை அவர்கள் கைநிறைய எடுத்துப் பிழிந்து உண்பார்கள்.

வேலைக்காரர்களுக்கு மட்டுமில்லை, பிச்சைக்காரர்களுக்குக் கூட நாச்சியாரம்மா என்றால் 'குலதெய்வம்' தான். அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்குப் படைத்துப் படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்தி.

அவள் வாழ்க்கைப்பட்டு, புருஷன் வீட்டுக்குப் போனபிறகு எங்கள் நாக்குகள் எல்லாம் இப்போது சப்பிட்டுப் போய்விட்டது. உயர்ந்த ஜாதி நெத்திலியைத் தலைகளைக் கிள்ளி நீக்கிவிட்டுக் காரம் இட்டு வறுத்துக் கொடுப்பாள். இப்போது யாருமிலல்லை எங்களுக்கு. அந்தப் பொன்வறுவல் பக்குவம் யாருக்கும் கைவராது. பருப்புச்சோற்றுக்கு உப்புக்கண்டம் வறுத்து வைப்பாள். ரஸ சாதத்துக்கு முட்டை அவித்துக் காரமிட்டுக் கொடுப்பாள். திரண்ட கட்டி வெண்ணெயை எடுத்துத் தின்னக் கொடுப்பாள், அம்மாவுக்குத் தெரியாமல்.

அவள் அப்பொழுது எங்கள் வீட்டிலிருந்தது வீடு நிறைந்திருந்தது. தீபம்போல் வீடு நிறைஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தாள்.

மார்கழி மாசம் பிறந்துவிட்டால் வீட்டினுள்ளும் தெருவாசல் முற்றத்திலும் தினமும் வகை வகையான கோலங்கள் போட்டு அழகு படுத்துவாள். அதிகாலையில் எழுந்து நீராடி திவ்யப்பிரபந்தம் பாடுவாள். இப்பொழுது பல திருப்பாவைப் பாடல்களை என்னால் பாராமல் ஒப்புவிக்கமுடியும். சிறுவயசில் அவளால் பிரபந்தப் பாடல்களைப் பாடக்கேட்டுக்கேட்டு எங்கள்

எல்லோருக்கும் அது மனப்பாடம் ஆகிவிட்டது.

அப்பொழுது எங்கள் வீட்டில், மரத் திருவிளக்கு என்று ஒன்று இருந்தது. அது அவ்வளவும் மரத்தினாலேயே ஆனது. தச்சன் அதில் பல இடங்களில் உளிகளைப் பதித்து நேர்கோடுகளால் ஆன கோலங்களைப் போட்டிருந்தான். மொங்காங்கட்டையின் வடிவத்தில் நிற்கும் அந்தத் திருவிளக்கின் தண்டில் ரம்பத்தின் பற்களைப்போல் பெரிதுபெரிதான பற்கள் இருக்கும். அதில் உயரத்துக்குத் தகுந்தபடி ஏற்றவும் இறக்கவும் வசதியாக இருக்கும்படியாக 'ட' வடிவத்தில் ஒரு துளையிட்ட சக்கையில் 'சல்ல முத்த' என்று சொல்லப்படும் மாட்டுச்சாண உருண்டையின்மீது மண் அகல்விளக்கு வைக்கப்பட்டு எரியும் சாணி உருண்டை தினமும் விளக்கு இடும்போதெல்லாம் மாற்றிவிட்டுப் புதிதாக வைக்கப்படும். அப்புறம் X மாதிரி ஒரு போர்வைப் பலகை ஒன்று. அதில் கனமான கம்பராமாயண வசனப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு இரவு வெகு நேரம் வரைக்கும் பெண்கள் புடைசூழ இவள் உரக்க ராகமிட்டு வாசிப்பாள். வாசித்துக்கொண்டே வரும்போது இவளும் மற்ற பெண்களும் கண்ணீர் விடுவார்கள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தொண்டை கம்மத் திரும்பவும் ராகமிட்டு வசனத்தைப் பாடுவாள். அவர்கள் கண்ணீர் விடுவதையும் மூக்கைச் சிந்துவதையும் நான் படுகையில் படுத்துக்கொண்டு பேசாமல் இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டேயிருப்பேன்.

அவள் வாசிப்பதை என் காதுகள் வாங்கிக்கொள்ளாது. என் கண்களே பார்க்கவும் செய்யும்; 'கேட்கவும்' செய்யும்.

விளக்கின் ஒளியில்தான் அவள் எவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிறாள். அழகுக்கும் விளக்கின் ஒளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. கறிக்கு உப்பைப்போல் அழகுக்கும் அதி ருசி கூட்டுகிறதுபோலும் விளக்கு.

தானாகக் கண்கள் சோர்ந்து மூடிக்கொண்டுவிடும்.

*

அதிகாலையில் ரங்கையா வந்து என்னை எழுப்பினான். ராமர், லக்ஷ்மணர், சீதை மூவரும் எங்கள் தெருவின் முடிவிலுள்ள கிழக்காகப் பார்த்த ஒரு வீட்டிலிருந்து இறங்கிக் காட்டுக்குப் போகிறார்கள். பார்வதி அம்மன் கோயிலைத் தாண்டி பள்ளிக்கூடத்தையும் கடந்து, கம்மாய்க்கரை வழியாக அந்த மூவரும் போகிறார்கள்.. எனக்குத் தொண்டையில் வலித்தாற் போல் இருக்கிறது. முகத்தைச் சுளிக்க முடியவில்லை. ரங்கையா தோள்களைப் பிடித்துப் பலமாக உலுக்கியதால் விழித்துவிட்டேன். சே! நன்றாக விடிந்துவிட்டிருந்தது. ரங்கையா சிரித்துக்கொண்டு நின்றிருந்தான், கிளம்பு கிளம்பு என்று ஜரூர்ப்படுத்தினான்.

நாச்சியாரம்மா செம்பு நிறையத் தயிர் கொண்டுவந்து வைத்தாள், இருவரும் வயிறுமுட்டக் குடித்துவிட்டுக் கிளம்பினோம்.

ரங்கையா எங்கள் மச்சினன்; 'வீட்டுக்குமேல்' வரப்போகும் மாப்பிள்ளை. நாச்சியாரம்மாவை இவனுக்குத்தான் கொடுக்க இருக்கிறோம். அவனும் நாச்சியாரம்மாபேரில் உயிரையே வைத்திருக்கிறான்; அவளும் அப்படித்தான்.

'புல்லை'யையும் 'மயிலை'யையும் பிடித்து ரங்கையா வண்டி போட்டான். அவை இரண்டும் எங்கள் தொழுவில்பிறந்தவை, ஒன்று இரண்டு; இன்னொன்று நாலுபல். பாய்ச்சலில் புறப்பட்டது வண்டி. ஊணுக் கம்பைப் பிடித்துத் தொத்தி, அவற்றில் இரண்டைக் கைக்கு ஒன்றாகப் பிடித்துக்கொண்டு குனிந்து நின்றுகொண்டேன். சட்டத்தில் இரும்பு வளையங்கள் அதிர்ந்து குலுங்கிச் சத்தம் எழுப்பியது. வண்டியின் வேகத்தினால் ஏற்பட்ட குலுக்கலில் உடம்பு அதிர்ந்தது. கல்லாஞ்சிரட்டைத் தாண்டி வண்டியின் அறைத் தடத்துக்குள் வந்தபிறகுதான காளைகள் நிதானங்கொண்டு நடைபோட்டன.

நடுவோடைப் பாதையிலுள்ள வன்னிமரத்தருகில் வண்டியை அவிழ்த்து, காளைகளை மேய்ச்சலுக்காக ஓடைக்குக் கொண்டு போனோம்.

காட்டில் பருத்தி எடுக்கும் பெண்கள் காட்டுப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே நாச்சியாரம்மாவும் நிரைபோட்டுப் பருத்தி எடுத்துக்கொண்டிருந்தாள். பருத்தி 'காடாய்' வெடித்துக் கிடந்தது; பச்சை வானத்தில் நட்சத்திரங்களைப்போலே. ரங்கையா தன் மடியிலிருந்த கம்பரக் கத்தியால் கருவைக் குச்சியைச் சீவி, பல் தேய்க்கத் தனக்கு ஒன்று வைத்துக்கொண்டு எனக்கு ஒன்று கொடுத்தான். போக இன்னொன்று தயார் செய்து வைத்துக்கொண்டான்!

நேரம், கிடை எழுப்புகிற நேரத்துக்கும் அதிகமாகிவிட்டது. காளைகள் வயிறு முட்டப் புல்மேய்ந்து விட்டு வன்னிமர நிழலில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன.

நாச்சியாரம்மா, பருத்தியைக் கருவமரத்து நிழலில் கூறுவைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். மடிப் பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடு பருத்தி என்று பகிர்ந்து போட, பள்ளுப் பெண்கள் சந்தோஷமாக நாச்சியாரம்மாவை வாழ்த்திக் கொண்டே வாங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் ஒப்பமாட்டார்கள். நாச்சியாரம்மாதான் வேணும் அவர்களுக்கு.

கிஸ்தான் தாட்டுக்களில் பகிர்ந்த பருத்தி அம்பாரத்தைப் பொதியாகக்கட்டி வண்டியில் பாரம் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டோம். பள்ளுப்பெண்கள் முன்கூட்டிப் புறப்பட்டுப் போய் விட்டார்கள் - நாச்சியாரம்மாவும் நானும் வண்டியில் ஏறிக்கொண்டு பருத்திப் பொட்டணங்களின்மேல் உட்கார்ந்து கொண்டு ஊணுக்கம்புகளைப் பிடித்துக்கொண்டோம். ரங்கையா வண்டியை விரட்டினான்.

வருகிற பாதையில மடியில் பகிர்ந்த பருத்தியோடு நடந்து வருகிற பெண்டுகளின் கூட்டத்தைக் கடந்துகொண்டே வந்தது வண்டி. அவர்கள்

வேண்டுமென்று குடிகாரர்களைப்போல் தள்ளாடி நடந்துகொண்டே வேடிக்கைப் பாடல்களைப் பாடிக் கொண்டும் ஒருவருக்கொருவர் கேலிசெய்து தள்ளிக்கொண்டும் வந்தார்கள். தொட்டெரம்மா கோயிலின் பக்கத்தில் வந்ததும் ரங்கையா கயிறுகளை முழங்கைகளில் சுற்றி இழுத்து வண்டியை நிறுத்தினான். தொட்டெரம்மா கோயிலின் இலந்தைமுள் கோட்டையின்மேல் நாச்சியாரம்மா ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்திப் பயபக்தியோடு அந்த முள் கோட்டையின்மீது போட்டாள். பின்னால் வந்துகொண்டிருந்த பள்ளுப்பெண்கள் குலவையிட்டார்கள். ரங்கையா கயிற்றை நெகிழ்ந்து விட்டதும் புல்லையும் மயிலையும் வால்களை விடைத்துக்கொண்டு பாய்ந்து புறப்பட்டது.

*

ஊரெல்லாம் ஒரே சலசலப்பு. என்ன ஆகுமோ என்ற பயம். தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே வந்து சேர்ந்தான் ரங்கையா. 'என்ன ஆச்சி?' என்று அவனைக் கேட்பதுபோல் பார்த்தோம் யாவரும். அவன் என்னை மட்டிலும் 'ராஜா, இங்கே வா' என்று தனியாகக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான்.

எங்கள் ஊரில், சுந்தரத்தேவன் என்று ஒரு பெரிய போக்கிரி இருந்தான். ஏழுதடவை ஜெயிலுக்குப் போனவன். மூன்று கொலைகள் செய்தவன். அதில் ஒன்று இரட்டைக் கொலை. அவனுடைய மகனை, எங்கள் தகப்பனார் எங்கள் புஞ்சையில் 'வாங்கித்திங்க' பருத்திச்சுளை எடுத்தான் என்றதுக்கு ஊனுக்கம்பால் அடி நொறுக்கி எடுத்து விட்டார். பையனை கட்டிலில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து அவனுடைய வீட்டில் கிடத்தியிருக்கிறார்கள். சுந்தரத்தேவன் வெட்டரிவாளை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான். விஷயம் இதுதான். ரங்கையா போய் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை அவன்.

நாச்சியாரம்மா சுந்தரத்தேவன் வீட்டை நோக்கிப் போனாள். அவள் அங்கு

போயிருப்பாள் என்று நாங்கள் முதலில் நினைக்க வில்லை; பிறகுதான் தெரியவந்தது.

அங்கு அவள் போனபோது ஒரே கூட்டம். அழுகைச் சத்தம். நாச்சியாரம்மா நுழைந்ததும் பரபரப்பு உண்டானது. பெண்கள் பணிவாக வழிவிட்டு விலகி நின்றனர். அடிப்பட்ட சிறுவனை அந்தக் கட்டிலிலேயே கிடத்தியிருந்தது. இரத்த உறவு கொண்ட பெண்கள் ஓவென்று அழுதுகொண்டிருந்தார்கள். சிறுவனின் தாய் கதறியது உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. நாச்சியாரம்மா சிலையானாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது. அவள் சுந்தரத்தேவனை ஏறிட்டுப் பார்த்தாள். பின்பு கட்டிலின் சட்டத்தில் உட்கார்ந்தாள். தன் முந்தானையால் கண்ணீரை ஒத்திக்கொண்டு அச்சிறுவனின் இரத்தம் உறைந்த முகத்தைத் துடைத்தாள். சுந்தரத்தேவன் கட்டிலின் பக்கத்தில் நெருங்கி அரிவாளைத் தரையில் ஊன்றி ஒற்றைக் கால் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு இடது முழங்கையைக் கட்டிலின் சட்டத்தில் ஊன்றி முகத்தை ஐந்து விரல்களால் விரித்து மூடிக்கொண்டு ஒரு குழந்தைபோல் குமுறி அழுதான்.

நாச்சியாரம்மா சிறுவனை மூர்ச்சை தெளிவித்தாள். வீட்டிலிருந்த புளித்த மோரை வருத்திச் சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். மஞ்சணத்தி இலைகளைப் பறித்துக்கொண்டு வரச் சொன்னாள். அதை வதக்கித் தன் கையாலேயே ஒத்தடம் கொடுத்தாள். சுவரொட்டி இலைகளை வாட்டிப் பக்குவப்படுத்திக் காயங்களைக் கட்டினாள் பின்பு வீட்டுக்கு வந்து, பத்துப் பக்கா நெல் அரிசியும், இரண்டு கோழிகளையும் கொடுத்தனுப்பினாள். நாங்கள் ஊமைகளைப்போல் ஒன்றுமே பேசாமல் அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

எங்கள் தகப்பனாரோ, இப்பொழுதுதான் ஒன்றுமே நடக்காதது போல் தலையில் கட்டிய லேஞ்சியோடு நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு சுவர்நிழலில் சூரித்தட்டை வீசிக்கொண்டிருந்தார். இடையிடையே வாயில் ஊறும் வெற்றிலை எச்சியை இரண்டு விரல்களை உதட்டில் அழுத்திப்

பதித்துக்கொண்டு பீச்சித் துப்புவார். அது கம்மந்தட்டைகளையெல்லாம் தாண்டித் தூரப்போய் விழும்.

*

எல்லாப் பெண்களையும்போல் நாச்சியாரம்மாவுக்கும் ஒருநாள் கல்யாணம் நிச்சயமானது. அந்தக்காலத்துப் பெண்கள் தங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானவுடன் அழுவார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்று இன்றுவரைக்கும் நான் யாரிடமும் காரணம் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால், அதில் ஒரு 'தேவ ரகஸியம்' ஏதோ இருக்கிறது என்று மட்டும் நிச்சயம். நாச்சியாரம்மாவும் ஒரு மூணுநாள் உட்கார்ந்து கண்ணீர் வடித்து 'விசனம்' காத்தாள்.

வழக்கம்போல் மூன்றுநாள் கல்யாணம். அந்த மூன்று நாளும் அவள் 'பொண்ணுக்கு இருந்த' அழகைச் சொல்லிமுடியாது. கல்யாணம் முடிந்த நாலாம்நாள் அவள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து மறுவீடு போகிறாள். சுமங்கலிகள் அவளுக்கு ஆரத்தி எடுத்தார்கள். ஆரத்தி சுற்றிக்கொண்டே அவர்கள் பாடினார்கள். அந்தப் பாடலின் ஒவ்வொரு கடேசி அடியும் கீழ்க்கண்டவாறு முடியும் -

'மாயம்ம லஷ்மியம்ம போயிராவே . . .'

(எங்கள் தாயே லஷ்மி தேவியே போய் வருவாய்)

அந்தக்காட்சி இன்னும் என் மனசில் பசுமையாக இருக்கிறது. அவளை நாங்கள் உள்ளூரில்தான் கட்டிக்கொடுத்திருக்கிறோம். ஐந்து வீடுகள் தள்ளித்தான் அவளுடைய புக்ககம். அவளுக்கு நாங்கள் விடை கொடுத்து அனுப்புவது என்பதில் அர்த்தமில்லை தான். ஆனால் ஏதோ ஒன்றுக்கு நிச்சயமாக விடை கொடுத்தனுப்பி இருக்கிறோம்.

அந்த ஒன்று இப்பொழுது எங்கள் நாச்சியாரம்மாவிடம் இல்லை, அது அவளிடமிருந்து போயே போய்விட்டது,

# 2

ஆம் அது ரொம்ப உண்மை.

ராஜா அடிக்கடி சொல்லுவான். இப்பபொழுதுதான் தெரிகிறது எனக்கு.

நான் நாச்சியாரம்மாவைக் கல்யாணம் செய்து அடைந்து கொண்டேன். ஆனால் அவளிடமிருந்து எதையோ பிரித்துவிட்டேன்.

அவள் இப்பொழுது ரெட்டிப்புக் கலகலப்பாக உண்மையாகவே இருக்கிறாள். என் குடும்பத்தைப் பிரகாசிக்கச் செய்கிறாள், எங்கள் கல்யாணத்துக்கு முன்பு எனக்கு இருந்த நாச்சியாரம்மாள்; இப்பொழுது இருக்கும் என் நாச்சியாரம்மாள்; நான் அந்த அவளைத்தான் மிகவும் நேசிக்கிறேன்.

இப்பொழுது மூணு குழந்தைகள் எங்களுக்கு, தொடர்ந்த பிரசவம். இது அவளைப் பாதித்திருப்பது உண்மைதான். குழந்தைகளையும், குடும்பத்தையுமே சதா கவனிக்கும் சுயநலமி ஆகிவிட்டாள். எங்கோ ஓர் இடத்தில் கோளாறாகிவிட்டது. சந்தேகமே இல்லை. ஓய்வு ஒழிச்சலில்லாமல் முன்னைவிடப் பலமடங்கு அவள் இப்பொழுது உழைக்கிறாள். உழைத்து ஓடாய்த் தேய்ந்து வருகிறாள் என்னவள். ஒரு நாளில் அவள் தூங்குகிற நேரம் மிகவும் அற்பம். என்ன பொறுமை; என்ன பொறுமை!

குழந்தைக்கு முலையூட்டிவிட்டு விலகிய மாராப்பைக் கூடச் சரி செய்து கொள்ளாமல் தூளியில் இட்டு ஆட்டும் இந்த இவளா அவள்?

ஏகாலிக்கும், குடிமகளுக்கும் சோறுபோட எழுந்திருக்கும்போது முகம் சுளிக்கிறாள். குழந்தைக்குப் பாலூட்டும்போதோ, அல்லது தான் சாப்பிட உட்காரும்போதோ பார்த்துத்தான் அவர்கள் சோறு வாங்கிப் போக வருகிறார்கள் தினமும் என்று புகார் செய்கிறாள். பிச்சைக்காரர்களுக்கு 'வாய்தாப்' போடுகிறாள். வேலைக்காரர்களின்மேல் எரிந்து விழுகிறாள்.

'அப்பப்பா என்ன தீனி தின்கின்றான்கள் ஒவ்வொருத்தரும்' என்று வாய்விட்டே சொல்ல ஆரம்பித்துவிட்டாள்.

குடுகுடுப்பைக்காரன் இப்பொழுதெல்லாம் அட்டகாசமாக வந்து எங்கள் தலைவாசலில் வெகுநேரம் புகழ்வதில்லை. பெருமாள் மாட்டுக்காரன் தன் மாட்டுக்கு கம்மஞ்சோற்றையும் பருத்திக் கொட்டையையும் தவிட்டையும் கலந்து வைக்கும் அந்த 'நாச்சியார்' எங்கே போனாள் என்று தேடிக்கொண்டிருக்கிறான்.

*

கல்யாணத்துக்குமுன் நாச்சியாரு, நிறை கண்ணிப்பிள்ளை சேகரித்து மெத்தைகள், தலையணைகள் தைப்பாள். மெத்தைகளிலும் தலையணை உறைகளிலும் பட்டு நூலால் வேலைப்பாடுகள் செய்வாள். அவள் தனியாக உட்கார்ந்து கொண்டு நிம்மதியாகவும் நிதானமாகவும் யோசித்து யோசித்துச் செய்யும் அந்தப் பின்னல் வேலைகளில், தன் கன்னிப் பருவத்தின் எண்ணங்களையும் கனவுகளையுமே அதில் பதித்துப் பின்னுவதுபோல் தோன்றும். இடையிடையே அவளுக்குள் அவளாகவே குறுநகை செய்துகொள்வாள். சில சமயம் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பார்வை எந்தப் பொருள்பேரிலும் படியாமல் 'பார்த்து'க்கொண்டே இருப்பாள். அப்புறம் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மீண்டும் தையலில் மூழ்குவாள்.

ஒருநாள் நாச்சியாருவின் வீட்டுக்குப் போயிருந்தேன். எனக்கு ஒரு புதிய ஏர்வடம் தேவையாக இருந்தது. அவர்களுடைய வீட்டில் அப்பொழுது களத்த ஜோலியாக எல்லாரும் வெளியே போயிருந்தார்கள். அடுப்பங்கூடத்தை ஒட்டி ஒரு நீளமான ஓடு வேய்ந்த கட்டிடம். அதில் 'குறுக்க மறுக்க' நிறையக் குலுக்கைகள். குதிரைவாலி, நாத்துச்சோளம், வரகு, காடைக்கண்ணி முதலிய தானியங்கள் ரொம்பி இருக்கும். புதிய ஏர் வடங்கள் ஓட்டின் கைமரச் சட்டங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. தொங்கிய கயிறுகளுக்கு மத்தியில், மண் ஓட்டில் ஓட்டை போட்டுக்

கோத்திருந்தார்கள். ஏர்வடத்தைக் கத்தரிக்கக் கயிறு வழியாக இறங்கி மண் ஓட்டுக்கு வந்ததும் எலிகள் கீழே விழுந்துவிடும். ஆள் புழக்கம் அங்கு அதிகமிராததால் தேள்கள் நிறைய இருக்கும். பதனமாகப் பார்த்துக் குலுக்கை மேல் ஏறி நின்றேன். மத்தியான வெயிலால் ஓட்டின் வெக்கை தாள முடியாததாக இருந்தது. தற்செயலாக மறுபக்கம் திரும்பிப் பார்த்தேன். அங்கே தரையில் நாசிசியாரு ஒரு தலைப்பலகையை வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தாள்! மார்பின்மீது விரித்துக் கவிழ்க்கப்பட்ட 'அல்லி அரசாணி மாலை'ப் புத்தகம். பக்கத்தில் வெங்கலப் பல்லாங்குழியின் மீது குவிக்கப்பட்ட சோழிகள். ஜன்னலில் ஒரு செம்பு, பக்கத்தில் ஒரு சினுக்குவலி, இரண்டு பக்கமும் பற்கள் உள்ள ஒரு மரச்சீப்பு, ஒரு ஈருவாங்கி, ஒரு உடைந்த முகம்பார்க்கும் கண்ணாடி முதலியன இருந்தன. அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பால் நிறைந்துகொண்டே வரும் பாத்திரத்தில் பால்நுரைமீது பால் பீச்சும்போது ஏற்படும் சப்தத்தைப்போல் மெல்லிய குறட்டை ஒலி. அவள் தூங்கும் வைபவத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அடர்ந்த நீண்டு வளைந்த ரெப்பை ரோமங்களைக் கொண்ட மூடிய அவள் கண்கள் அவ்வளவு அழகாய் இருந்தது. மெதுவாக இறங்கிப் போய் அந்த மூடிய கண்களில் புருவத்துக்கும் ரெப்பை ரோமங்களுக்கும் மத்தியில் முத்த மிட வேண்டும்போல் இருந்தது.

சொல்லி வைத்ததுபோல் நாச்சியாரு கண்களைத் திறந்தாள். தூக்கத்தினால் சிவந்த விழிகள் இன்னும் பார்க்க நன்றாக இருந்தது. குலுக்கைமேல் இருந்த என்னை அதே கணம் பார்த்துவிட்டாள். 'இது என்ன வேடிக்கை!' என்பதுபோல் சிரித்துப் பார்த்தாள். அவள் எழுந்த வேகத்தில் புஸ்தகம் அவளுடைய காலடியில் விழுந்தது. விழுந்த புஸ்தகத்தைத் தொட்டு வேகமாக இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு அதை எடுத்து ஜன்னலில் வைத்தாள். பின்பு லஜ்ஜையோடு சிரித்துத் தலைகவிழ்ந்துகொண்டே, நழுவும் மார்புச் சேலையை வலதுகையினால் மார்போடு ஒட்ட வைத்துக்கொண்டு மெதுவாக அந்த இடத்தைவிட்டு நழுவினாள்.

கல்யாணத்துக்கு முன்பிருந்தே நாங்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்துகொண்டோம். யாரும் அறியாமல் தொலைவில் இருந்துகொண்டே ரகசியமாக ஒட்டிப் பழகினோம். இதயங்கள் அப்படி ஒன்றி ஊசலாடின. பேசாத ரகசியங்கள்தான் எங்களுக்குள் எத்தனை!

எனக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமென்று நான் உணர்த்தாமலே அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆச்சரியப்படும்படி அவைகள் செய்து முடிக்கப்பட்டிருக்கும் அப்போது.

*

ஒரு நாள் கோவில்பட்டியிலிருந்து ராத்திரி வந்தேன். அன்று வீட்டிற்கு நிறையச் சாமான்கள் வாங்க வேண்டியதிருந்தது. காலம் முன்னைமாதிரி இல்லை. ஒரும்பாகிவிட்டது. முன்னெல்லாம் கொஞ்ச ரூபாயில் நிறைய சாமான்கள் வாங்கிக்கொண்டு வரலாம். இப்போதோ நிறைய ரூபாய்கள் கொண்டுபோய் கொஞ்ச சாமான்களையே வாங்கமுடிகிறது.

வந்ததும் வராததுமாய்ச் சாமான்களையெல்லாம் வண்டியிலிருந்து இறக்கி வைத்துவிட்டுப் பணப்பையையும் கச்சாத்துகளையும் நாச்சியாருவிடம் கொடுத்துவிட்டு அப்படியே வந்து கட்டிலில் விழுந்தேன். உடம்பெல்லாம் அடித்துப்போட்டதுமாதிரி வலி. கண்கள் ஜிவ்வென்று உஷ்ணத்தைக் கக்கிக்கொண்டிருந்தது. மண்டைப் பொருத்தோடுகளில் ஆக்ரா இறக்கியது போல் தெறி. கம்பளியை இழுத்துப் போர்த்திக்கொண்டேன். குழந்தைகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தன. அரிக்கன் லாம்பை சரியாகத் துடைத்துத் திரியைக் கத்தரித்து விட்டாததாலோ என்னவோ சுடர் பிறைவடிவில் எரிந்துகொண்டிருந்தது. சிம்னியில் புகைபிடிக்க ஆரம்பித்திருந்தது.

அந்த வெளிச்சத்தில் அவள் கச்சாத்துக்களிலிருந்த தொகைகளைக் கூட்டிக்கொண்டும், மீதிப்பணத்தை எண்ணிக் கணக்குப் பார்த்துக்கொண்டுமிருந்தாள்.

கணக்கில் ஒரு ஐந்து ரூபாய் சொச்சம் உதைத்தது. அந்த ருபாய்க்கான கணக்கு என்ன என்று என்னிடம் கேட்டாள்.

'எல்லாத்தையும் எடுத்துவை

கணக்கு எங்கெயும் போய்விடாது;

காலையில் பாத்துக்கலாம் எல்லாம்.'

அவள் பிடிவாதமாகக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எனக்கு கண்களைத் திறக்க முடியவில்லை. மூடிக்கொண்டே இருக்கவேண்டும்போல் இருந்தது. என்னுடைய நெற்றி ஒரு இதமான விரல்களின் ஒத்தடத்துக்கு ஏங்கியது. மூக்கு மயிர் கருகும்படியான உஷ்ணக்காற்றை நான் வெளிவிட்டுக்கொண்டிருந்தேன். நல்ல உயர்ந்த காய்ச்சல்.

சூழ்நிலையின் பிரக்ஞை வட்டம் சுருங்கிக்கொண்டே வந்தது. சின்ன, மெல்லிய சப்தங்கள்கூடக் கோரமாகக் கேட்டன. கண்களைத் திறந்து நாச்சியாரு என்ன செய்கிறாள் என்று திரும்பிப் பார்த்தேன். அவள் ரூபாய் அணா பைசாவில் மூழ்கியிருந்தாள். குளிர்ந்த காற்றுப் பட்டதால் கண்கள் நீரை நிறைத்தன, துடைத்துக்கொள்ளக் கையை எடுக்க இஷ்டமில்லை. அதை இமைகளாலேயே மூடி வெளியேற்றினேன். மீண்டும் நாச்சியாருவையே பார்த்தேன். அவளுடைய ரவிக்கையின் அவிழ்க்கப்பட்ட முடிச்சு முடியப்படாமலே தொங்கின. கூந்தல் வாரிச் சேர்க்கப்படாததால் கற்றைகள் முன்முகத்தில் வந்து விழுந்து கிடந்தன.

என்ன ஆனந்தமான 'சொகம்' இந்தக் கண்களை மூடிக் கொண்டே இருப்பதினால்! கானல் அலைகளைப்போல் என் உடம்பிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் உஷ்ண அலைகள் கண்களால் பார்க்கமுடியாமலிருந்தாலும் தெரிந்தது. நான் எரிந்துகொண்டிருக்கும் ஒரு சிதைக்குள் படுத்திருப்பதுபோல் குளிருக்கு அடக்கமாக இருந்தது.

உயர்ந்த காய்ச்சலின் போதை இடைவிடாது மீட்டப்படும் சுருதிபோல் லயிப்பு மயமாக இருந்தது. இந்த ஆனந்தத்தில் பங்குகொள்ள எனக்கு ஒரு துணைவேண்டும்போல் இருந்தது. அவள் எங்கே? அவள்தான்: என் அருமை நாச்சியாரு.

'நாச்சியாரு, என் பிரியே! நீ எங்கிருக்கிறாய்?'

தீபம் . . .

***

## வந்தது

அவன் பஸ்ஸிலிருந்து இறங்கி வெதுவெதுப்பான தரையில் கால் வைத்ததும், சத்தமில்லாமல் பஸ் வழுக்கிக்கொண்டுபோய் மறைந்துவிட்டது.

இரண்டு பர்லாங் தூரம் இருக்கும் ஊர். ஒரு சுடுகுஞ்சியைக்கூட காணோம்!

போதை நிறைந்து வழியும் குடிகாரனதுபோல அவனுடைய பிரக்ஞையின் வட்டம் சுருங்கி இருந்தது. நிலவின் பிரகாசம் தெளிவாக இருந்தது. வழியில் சிதறிக்கிடக்கும் காக்காப்பொன் துகள்களில் நிலவின் பிரகாசம் பட்டு மின்னின. நிரம்பிய குட்டங்களில் தண்ணீரின் சூடு இன்னும் ஆறாததால் அதிலிருந்து அடிக்கும் அவைகளின் சுவாசம் வெப்பமாக இருந்தது. சிள்வண்டுகளின் இடைவிடாத இரைச்சல் கேட்டுக்கொண்டே இருந்தது.

அவன் கம்மாய்க் கரையோரம் வந்தபோது அவனைக் கடந்து இரண்டுபேர்கள் போனார்கள். அவர்களை அவன் எங்கோ பார்த்திருந்தானாயினும் ஜாடை பிடிபடவில்லை. அவர்கள் ஒரு பன்றியை நாலு கால்களையும் சேர்த்துக்கட்டி ஒரு நீளக்கம்பில் காவட்டுபோட்டு தோளில் வைத்துக்கொண்டு நடந்தார்கள். பன்றியின் வாயைப் பளை நாரினால் இறுக்கிக் கட்டியிருந்தார்கள். வாலை அதன் ஒரு தொடையிடுக்கில் இழுத்துச் சொருகியிருந்தார்கள்.

முன்னால் சென்றவனுக்கு ஒரு கண்ணைக் காணோம். அது இருந்த இடத்தில் ஒரு ஆழமான கிடங்கு மட்டுமேயிருந்தது. மூக்கு, நெற்றியின் நடு மேட்டிலிருந்தே தொடங்கியிருந்தது. ஒரு கறுப்பு நிறத்துண்டை இடைவாருக்கு பதிலாக இடுப்பில் இறுக்கிக் கட்டியிருந்தான், மாரில் கரும்புல்லாய் மயிர் அடர்ந்திருந்தது. வலதுகால் பெருவிரல் நீண்டு

இடதுபக்கம் கோணியும், இடதுகால் பெருவிரல் நீண்டு வளர்ந்து வலதுபக்கம் கோணியும் இருந்தது.

பின்னால் சென்றவனுக்கு, வலது புஜத்திலிருந்து கை வள்ளிசாக இல்லை. பீச்சாங்கையினால் மட்டுமே காவட்டைப் பிடித்திருந்தான். அவனுடைய நடுமுதுகில் கிளிமூக்கு மாம்பழம் அளவு ஒரு கழலை தொங்கிக்கொண்டிருந்தது. அதன் நுனியில் முலைக் காம்பைப்போல ஒரு பாலுண்ணி இருந்தது. வலதுகாலைவிட இடதுகால் கொஞ்சம் குட்டையாக இருந்ததால் கிந்திக்கிந்தி நடந்தான்.

பக்கத்தில் எங்கோ குழந்தை அழும் சத்தம் கேட்டது. அவர்கள் உடனே வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

'ஆடிக்கு இன்னும் நாட்கள் இருக்கிறதே அதற்குள் என்ன பன்றி வேட்டை!' என்று நினைத்துக்கொண்டான்.

ஊருக்குள் யாரையுமே காணோம். வீடுகளின் கதவுகள் எல்லாமே விரியத் திறந்தது திறந்தமானைக்கே கிடந்தன.

தெருச் சுவரடிகளில் கொக்கராளிச் செடிகள் வளர்ந்து அடர்ந்து போயிருந்தது. வீடுகளை இணைக்கும் சந்து குறுக்குச் சுவர்களின்மேல் கரும்பச்சை வெல்வெட்டாய்ப் பாசி படர்ந்து போயிருந்தது, சிலதில் சுவரொட்டிச் செடிகள் காணப்பட்டன.

ஒரு வீட்டின் முன்னால் ஆரத்தி சுற்றி வாங்கிய செந்நீர் கொட்டப்பட்டிருந்தது. இன்னொரு வீட்டில் தெரு முற்றத்தில் ஒரு மண்குடத்தில் நிறைநீர் வைத்து வேப்பங்குழைக் கொத்தால் கும்பம் வைக்கப்பட்டிருந்தது. வீட்டு வாசலிலும் வேப்பங்குழை சொருகப்பட்டிருந்தது. அந்த வீட்டை வேகமாகக் கடந்தான். பக்கத்துத் தெருவில், ராப்பாடியின் கனத்த கீழ்ஸ்தாயியில் நடுங்கிப் பாடுங்குரலும் மணியோசையும் கேட்டு அவனுடைய உடம்பு புல்லரித்தது.

ஊர் பூராவையும் சுற்றிச்சுற்றிப் பார்த்தாகிவிட்டது. அவனுடைய வீட்டைக் காணோம்.

ஊருக்கு வடக்கே சற்றுத் தொலைவிலுள்ள பள்ளிக்கூடத்துக்குப் போனான். ஒருவேளை அங்கே அவனுடைய குழந்தைகள் யாராவது இருக்கலாம். ஆனால் அங்கேயும் ஒருத்தரையும் காணோம். சுவரில் சாத்திவைக்கப்பட்டுள்ள ஒரு கரும்பலகையின் இடுக்கில் ஒரு பெரிய கருப்புப்பூனை மட்டும் நெருப்புக் கண்களை வைத்துக்கொண்டு அவனையே குர் என்று பார்த்துக் கொண்டேயிருந்தது.

ஊரைச் சுற்றி திரும்பவும் கம்மாய்க்கரைக்கு, வந்தான். கரை நெடுகிலும், காய்ந்து இற்றுப்போன பனம்பூவின் துணுக்குகளைப் போல உலர்ந்த மனித மலங்கள் அங்கங்கே கிடந்தன.

கம்மாயின் தண்ணீர் வற்றிய தரையில், லாட சன்னியாசிகள் நாலுபேர் அரளைக் கற்களைக்கூட்டி வைத்து சமையல் செய்வதற்காகத் தரையைத் தோண்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் தெற்கே தள்ளி, ஒரு கிழவி; சோப்பு நுரையாய் நரைத்திருக்கும் பரட்டைத் தலை, தொங்கிய கீழ் உதடு, ஒரு பல் கிடையாது. அரிவாள்மனையில் நறுக்கிக்கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரேயிருந்த மண்சட்டிக்குள்ளிருந்து குழந்தையின் இரண்டு கைகளும் ஒரு காலும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. கிழவி, குழந்தையின் மற்றொரு காலை அரிவாள்மனையில் வைத்து நறுக்கிக்கொண்டே அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வருவதற்குப்பதிலாக அவளுடைய வாயின் இரு பக்கங்களின் வழியாகவும் நீர் சொட்டிக்கொண்டேயிருந்தது.

அதுக்கும் கொஞ்சம் தெற்கே தள்ளி, ஒரு நரிக்குறத்தி ஆலமரத்தின் தரையூன்றிய விழுது ஒன்றின்மேல் சாய்ந்துகொண்டு, மடியில் ஒரு நரிக்குட்டிக்குத் தன்னுடைய செழிப்பான மாரைத் திறந்து பால் கொடுத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கும் பக்கத்தில் ஒரு வனஸ்பதி டப்பா நிறைய கம்மஞ்சோறும் ஊறுகாயும் இருந்தது. மாரிலிருந்து பால் இறங்குகிற சொகத்தில் அவள் லயித்து கண்களைச் சொருகி மூடி மூடித்

திறந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில், வேலி அமைத்ததுபோல் பாம்புக் கூட்டங்கள் ஆள் இடுப்பு உசரத்துக்கு வாலைத் தரைகளில் ஊன்றி நின்றுகொண்டு பல ஜோடி ஜோடிகள் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு பிணசலாடிக் கொண்டிருந்தன. நல்லபாம்பும் நல்லபாம்பும்; சாரைப் பாம்பும் நல்லபாம்பும்; இப்படி.

அவன், பையப் பின்வாங்கி தண்ணீரைச் சுற்றி அலவாக் கற்களின் மேல் கால் வைத்து ஏற முயன்றான். 'கோடித்துண்டு கொண்டு வராமல் போனமே. புதுப் பட்டுத் துண்டு இருந்தால்தான் நல்லது. இப்படியே பிணசலாடிக்கொண்டிருக்கும் பாம்புகளின்மேல் போட்டிருக்கலாம். வீட்டுக்குப்போய் இனி துண்டு எடுத்துக்கொண்டு வருவதற்குள் அவைகள் விடுபட்டுப் போய்விடலாம்.'

தக்கிமுக்கிக் கரையேறி நின்றபொழுது, கரை மரத்தின் வேர்களில் கட்டியிருந்த காய்க்காளை அவனைக் கண்டதும் செறுக்குப் போட்டுக் கொம்புகளால் தரைமண் குத்தி வீசியது. வாலை நிமிர்த்திச் சீத்தடித்துக் கட்டுக்களை அறுக்க முனைந்தது.

ஒரு கட்டு அறுந்துவிட்டது. இன்னொரு கட்டு அறுந்து விடுவதற்கு முன் அங்கிருந்து தப்பித்தாக வேண்டும். திரும்பவும் கம்மாய்க்குள் இறங்கி வேறுவழியாக அவர்களுடைய சாளையை நோக்கிப் போனான். அங்கே அவனுடைய மனைவி குழந்தைகள் எல்லாருமே இருந்தார்கள்.

கம்மங்கதிர் சாணையை இழுத்து வட்டம் போட்டிருந்தார்கள். பிணையலடிக்க மாடுகள் தயாராகி நின்று கொண்டிருந்தன. வேலைக்காரர்கள் பிணையற்கண்ணிகளால் மாடுகளை ஒரு பிணையலுக்கு நாலு மாடுகள் வீதம் இணைத்துக் கொண்டிருந்தார்கள். ஐந்து பிணையலுக்கான மாடுகளும் தயாராய் நின்றுக்கொண்டிருந்தன. முழங்கால் உயரத்துக்கு வட்டம் இருந்தது. சக்கைப் பிறட்டிகள், பொலிப்பலகைகள், வாளிப்பு மார்கள், கடகங்கள், சுளகுகள் எல்லாம்

களத்தின் ஒரு மூலையில் தயாராய் வைக்கப்பட்டிருந்தன.

அவனுடைய இரண்டு வயசுக் கடைக்குட்டி அவளுடைய அம்மாவிடமிருந்து அவனிடம் வரத் தாவிக்கொண்டிருந்தான். அவன் அதைப் பாராததுபோலப் பிராக்குப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு அவனுடைய மனைவி ரஸித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்!

பிணையல் மாடுகள் வட்டத்தை நோக்கிக் கதிர் தின்னும் ஆவலில் வேகமாகப் பாய்ந்து வந்தன. வேலைக்காரர்கள் 'பொலி பொலி பொலி' என்று உறக்கச் சொல்லிப் பிணையலை அதிவேகமாகச் சுற்றிவிட்டார்கள். அவனும் ஒரு பிணையலைப் பத்தினான். மருண்டு விரண்ட மாடுகளை மடக்கி வட்டத்துக்குள் அடித்துச் சுற்ற விட்டார்கள்.

திடீரென்று அவன் மனைவியின் கூக்குரல் கேட்டுப் பிணையல் நின்றது.

ஐயோ எவ்வளவு கோரம்!

அவர்களுடைய கடைக்குட்டி பிணையலுக்குள் எப்படியோ அகப்பட்டு மாடுகளின்கால்களில் மிதிபட்டு நசுங்கிச் சிதைந்து விட்டது. பிணையல் கயிறையும் சாட்டைக் கம்பையும் போட்டுவிட்டுக் குழந்தையைக் கையில் எடுத்தான். சக்கை பாதியும் பொலிபாதியுமாகியிருந்த வட்டத்தில் மண்டியிட்டு, நசுங்கி இறந்துபோன அவளை மடியில் இருத்திக் கொண்டு துக்கத்தால் குலுங்கினான். இந்தக் கோரமான வேதனையை அவனால் தாள முடியவில்லை. வாய்விட்டுக் கத்தமுடியவில்லையாதலால் அப்படியே வட்டத்தின்மேல் படுத்துக் கண்மூடி அழுதுகொண்டிருந்தான். அவனுடைய மனைவி சோகத்தோடு அவன் தோள்மீது கைவைத்தாள். சூடான அவளுடைய கையின் ஸ்பரிசம் பட்டதும் அவன் விழித்து அவளுடைய முகத்தைப் பார்த்தான். அவன் புன்னகை செய்தவாறு அவனுடைய முதுகைத் தடவினாள்.

எழுந்து உட்கார்ந்தான். விளக்கு தூண்டிவிடப்பட்டிருந்தது. பக்கத்தில் அவன் மனைவி அவர்களுடைய கடைக்குட்டிக்குப் பால்

கொடுத்துக்கொண்டிருந்தாள் அமைதியாக.

குழந்தையை அவன் கூர்ந்து பார்த்தான்.

ஆனந்தமாக அது பால் குடித்துக்கொண்டே அவனை கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு ஒரு கையால் மற்றொரு முலைக் காம்பை வருடிக் கொண்டிருந்தது.

கசடதபற, மார்ச்,1971

***

## பேதை

பேச்சி, ஒரு இன்பமான கனவு கண்டாள்.

இரட்டைக் கதவு போட்ட ஒரு வாசல், ஒரு கதவு மட்டும் திறந்திருந்தது. ஒரு கதவு மூடியிருக்கிறது. மூடியிருக்கும் அந்தக் கதவைப் பிடித்திருக்கும் பிஞ்சு விரல்கள் மட்டும் தெரிகிறது, ஒரு குழந்தையின் தலை மெதுவாக எட்டிப்பார்க்கிறது. திரும்பவும் மெல்ல எட்டிப்பார்க்கிறது. பார்த்தவுடன் சிரித்துக்கொண்டே அது சரக்கென்று தலையை இழுத்துக்கொள்கிறது. திரும்பவும் மெள்ள . . .

பார்வதி அம்மன் கோவிலுக்குமுன் இருந்த வேப்பமர நிழலில் பேச்சி படுத்திருந்தாள். நல்ல நிலா. அவளைத் தொட்டுத் தொட்டு உலுக்குவது போல் மேல்காற்று இறைந்து இறைந்து அடித்துக் கொண்டிருக்கிறது. கைகளை அகல விரித்துப்போட்டு மல்லாக்க தன்தரையில் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டு கிடந்தாள் அவள். ரவிக்கை அணியாத மாராப்புச் சேலை வயிற்றில் கிடந்தது. ஆடையும் விலகி 'அலங்கோலமாக' இருந்தது.

தூங்க ஆரம்பித்தபோது அவள் படுத்திருந்த இடத்தில் இப்பொழுது மரத்தின் நிழல் விலகி நிலவு காய ஆரம்பித்துவிட்டது. முகத்தின்மீது மட்டிலுமே வேப்பமரத்தின் அடர்ந்த பந்துபோன்ற கிளையின் நிழல் பேச்சியின் முகத்தில் விழுவதும், காற்றின் தள்ளலால் அது விலகி முகத்தில் நிலவடிப்பதுமாக இருக்கும் போதுதான் பேச்சிமேலே கண்ட கனவைக் கண்டுகொண்டிருந்தாள்.

கனவு நீடித்தது. அவள், குழந்தையை எட்டிப்பிடிக்கப் போனாள். குழந்தை மறைந்துகொண்டது. அவள் பிராக்குப் பார்த்துக்கொண்டிருக்கையில் பேச்சியின் பின்னால் வந்து அவளுடைய சேலையைப் பிடித்து இழுத்தது குழந்தை. பிடிப்பதற்குத் திரும்பினால் குழந்தை மறைந்துவிடும்.

திடீரென்று குழந்தையைப்பேச்சி சேர்த்துப் பிடித்துக் கொண்டுவிட்டாள். ஆவி சேர்த்துக் கட்டி அணைத்து அதன் முகத்தில் மாறிமாறி முத்தமிட்டாள். குழந்தை திணறித் தன்னை உருவிக்கொண்டு போக உளத்துகிறது. ஆடை நீங்கிய திரண்ட மாரில் அந்த உளத்துதல் சொல்லமுடியாமல் பேரின்பமாக உடம்பு புல்லரித்தது பேச்சிக்கு.

இப்பொழுது அவள் கனவு கலைந்து அரை முழிப்பு நிலைக்கு வந்துகொண்டிருந்தாள். தான், சேர்த்துப் பிடித்துக்கொண்டிருந்த குழந்தை தாங்கமுடியாத கனமாகத் தெரியவே தான் கண்டது கனவு அல்ல, நிழலுக்குப் படுத்திருந்த மரமே தன்மீது சாய்ந்து அமுக்கிவிட்டது என்று நினைத்தாள். அடிவயிற்றில் பாரமாக அமுக்கி நெஞ்சின்மீது விழுந்து கிடந்த மரத்தை சேர்த்துப் பிடித்திருந்த இரு கைகளையும் விட்டுவிட்டு, உயிர்தப்பிக்க நினைத்த விசில் ஸ்தாயையில் கோரமான ஒரு குரல் அவளிலிருந்து வெளிப்பட்டது. வெளிப்பட்ட அந்தக் கணத்திலேயே அவள் தூக்கம் தெளிந்தாள்.

சற்று தூரத்தில் யாரோ ஒரு மனிதன் ஓடுவதுபோல் தெரிந்தது.

*

மேகாட்டிலிருந்து பருத்தி வெடிக்கும் காலத்தில் மட்டும் வந்து, பருத்தி எடுக்க வரும் வலசைக்காரர்களில் ஒருத்தியே பேச்சி. அந்தக் கிராமத்துக்கு அந்த சீஸனில் நூற்றுக்கணக்கான வலசைப் பெண்கள் வருவார்கள். அவர்களில் சிலர் சம்சாரிகளின் தொழுக்களில் தங்கிக் காய்ச்சிக் குடிப்பார்கள். இடம் கிடைக்காதவர்கள் பொதுஇடங்களிலும் வசிப்பார்கள். பகிர்ந்து கொண்டுவருகிற பருத்தியில் ஒரு பகுதியை சம்சாரிகளின் வீடுகளிலேயே ஒரு சாக்கில் போட்டுக் கட்டி வைத்துவிட்டு மீதிப் பருத்திக்குக் கடைகளில் சீனிக் கிழங்கும், மொச்சைப் பயறும், கருப்பட்டியும் வாங்கித் தின்பார்கள். முக்கியமான உணவு அவர்களுக்கு மூன்று வேளையும் சீனிக்கிழங்குதான்.

அவர்கள் குளித்து யாரும் பார்த்ததில்லை. பருத்தி எடுத்துக் கொண்டு வெயிலோடு வெயிலாக வந்ததும், தெருக்களில் இருந்துகொண்டு மாராப்புச் சீலையை மட்டும் நீக்கி இடுப்பில் சுற்றிக்கொண்டு ஒரு போகிணித் தண்ணீரினால் முகம், கக்கம், முதுகு, மார்பு, கைகள் முதலியவைகளை மட்டிலும் கழுவிக் கொள்வார்கள். போகிணியில் மீந்த தண்ணீர் இருக்குமானால் பாதங்களையும் நனைப்பது உண்டு.

தகரக் குப்பிகளில் ஊரிலிருந்து அவர்கள் கொண்டு வந்திருக்கும் விளக்கெண்ணெயைத் தலையில் பூசிக்கொள்வார்கள். தெருக்களில் போனாலே ஒருவித துர்வாடை அவர்களிடமிருந்து வீசும். அழுக்கடைந்த குட்டையான பறட்டைத் தலைமயிரும், கைகளில் கனமான கல்வெள்ளிக் காப்புகளும், காதுகளில் வெள்ளி பித்தளைக் குணுக்குகளும், ஊத்தை நிறைந்த மஞ்ச மஞ்சேரென்ற பெரிய மாட்டுப் பற்களும், அழுத்தமான நிறங்களுள்ள கண்டாங்கிச் சேலைகளும், ரவிக்கை அணியாத உருண்ட மார்புகளும், நீட்டி நீட்டிப் பேசுகிற ஒரு விதத் தமிழுடனும் அவர்கள் இலங்குவார்கள்.

பேச்சியை அவர்கள் அவள் எதிரிலேயே 'ஏ கோட்டிக் கழுதை' என்றுதான் கூப்பிடுவார்கள். அவள் ஒருமாதிரி சுபாவம். உடைமரத்தைப்போன்ற பறட்டை மயிர்த்தலை. வாயின் உதட்டோரங்களில் நீண்டு வெளிவந்திருக்கும் சிங்கப்பல்கள். தூங்கும்போது வழிந்தோடிக் காய்ந்தகொடுவாய்க்கறை, இடுங்கிய, பூளைதள்ளிய இல்லிக் கண்கள். அடர்ந்த புருவங்கள், மழை பெய்து நனைந்த பனைமரத்தைப் போன்ற கருப்பு நிறம். கருங்கோரைப் புற்களைப்போல மயிர் நீண்டிருக்கும் வியர்வை ஓடும் கக்கங்கள். திட்டுதிட்டாய்ப் பூராவும் அழுக்கு படிந்து உறைந்துபோன மேல். வங்குபடிந்த வெளிர் நிறங்கொண்ட கால்கள். அதில் குனிந்து நின்று மூத்திரம் பெய்வதால் விழுந்த தெறிப்புகள். நைந்துபோன, அழுங்கல் சிகப்பு நிறக் கண்டாங்கிச் சேலை; இவ்வளவு பிறவிக்கோரங்களுக்கும் மத்தியில், இயற்கை அவளுடைய மேலில் ஒருவிளையாட்டைக் காட்டியிருந்தது. கோயில்சிலைகளையெல்லாம் விஞ்சக்கூடிய ஒரு அப்சரஸின் ஸ்தன்யங்களைப் பெற்றிருந்தாள் அவள்.

*

பேச்சி இப்பொழுதெல்லாம் பருத்தி எடுக்கப் புஞ்சைக்கு சரியாகப் போகிறதில்லை. ராத்திரி நேரங்களில் அந்த மரத்தின் அடியில் இருட்டான இடமாகப் பார்த்துப்போய்த் தனியாக உட்கார்ந்து எதையோ எதிர்பார்த்துக் காத்துக்கிடப்பதாகத் தோன்றும். தாங்கமுடியாத சந்தோஷத்தினால் அழுவதுபோலவும், தாளமுடியாத துக்கத்தினால் சிரிப்பதுபோலவும் செய்வாள் அவள். மீண்டும் மீண்டும் எத்தனையோ தரம் அந்த வேப்பமரத்தின் அடியில் கொடுவாய் வழிய அசிங்கமாக, மரக்கட்டையாய் உறங்கினாள். அதற்குப்பிறகு அந்த மாதிரிக்கனவு ஒன்றை அவள் காணவே இல்லை.

மூணு மாதங்களுக்கெல்லாம் ஒருநாள் பருத்திப் புஞ்சையில் பேச்சி வாந்தி எடுத்தாள். கூடியிருந்த பொம்பளைகள், அவளுக்கு மசக்கை என்று கேலி செய்தார்கள். அதில் எவளுடைய நாக்கு, கருநாக்கோ, பேச்சி நிஜமாகவே மசக்கையாகி இருந்தாள். அவளுடைய முகத்தில், பைத்தியங்களுக்கே இருக்கும் ஒருவித முகக்களைத் தோற்றத்திலிருந்து ஒரு மாறுதல் போன்றுவதுபோல் இருந்தது.

பேச்சி இதுவரை கன்னிகழியாத, கல்யாணமாகாதவளாக இருந்தவள். ஆகவே இப்பொழுது இந்த சமாச்சாரம், காட்டுத்தீ மாதிரி ஊருக்குள் பரவியது. பலர் அதை நம்ப யோசித்தார்கள். முக்கியமாக அந்த ஊரில் அது கன்னிப்பெண்களை திடுக்கிட வைத்தது. பேச்சியின் ஊருக்கும் தகவல் எட்டி அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஆம்பிளைகள் பலர் வந்தார்கள். அவர்கள் பேச்சியை அடித்துக் கேட்டார்கள்.

'யார்; சொல்லு சொல்லு', என்று உதைத்தார்கள். தாங்க முடியாத அடி அவள் மேலில் விழும்போது மாத்திரம் அவள் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்ததுபோல் சுற்றிலும் நிற்பவர்களைப் பார்த்து 'என்ன?' என்று மட்டும் கேட்பாள். அது, என்னைப்போட்டு ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்; பேசாமல் போங்களேன் ஜோலியைப் பார்த்து என்று

சொல்வது போலிருக்கும். சிலசமயம் அடி பொறுக்கமுடியாமல் போகும் போது, 'எனக்குத் தெரியாது; சத்தியமாய் எனக்குத் தெரியாது. ஐயோ கடவுளே எனக்குத்தெரியாது; தெரியாது' என்று கீச்சுக்குரலில் கூக்குரலிட்டு அழுவாள்.

வந்தவர்களுக்கு அவளுடைய காரியம், அவர்களுக்குத் தாங்கமுடியாத அவமானமாகப்பட்டது. தங்கள் சக்தியை எல்லாம் செலவழித்து அவளை அடித்து நொறுக்கி எடுத்தார்கள். பல தடவைகளில் பேச்சி மூர்ச்சையானாள். ஆனாலும் அவளிடமிருந்து அவர்களால் எதையுமே தெரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் தோற்றுவிட்டார்கள். வந்தவர்களில் இரண்டு ஆண்கள், தங்கள் முகத்தில் தாங்களே அறைந்துகொண்டு தலையை இரண்டு கைகளிலும் தாங்கி அந்த இடத்திலேயே உட்கார்ந்துகொண்டு அழுதார்கள். அவர்களைச் சேர்ந்த பொம்பிளைகள் அவளை வைத்த வசவுக்கு கணக்கு வழக்கில்லை, அவர்களில் ஒருத்தி கடேசியாகச் சொன்னாள்,

'இந்த முண்டையை கண்டங்கண்டமா நறுக்கினாலும் மனசு ஆறாது'

இன்னொருத்தி சொன்னாள்,

'ஒரு குழியைத் தோண்டுங்க. இவளை இங்கேயே உயிரோடெ புதைச்சிட்டுப் போயிறுவோம்;.'

ஊருக்குள் தினமும் காலையிலும் ராத்திரியும் சம்சாரி வீடுகளில் சோத்துக்கு வரும் குடிமகளும் வண்ணாத்தியும் இந்த விஷயம்பற்றி வீட்டுப்பெண்களுடன் நின்று நின்று, மூக்கின்மேல் விரலை வைத்து இப்படி உண்டுமா என்று தொடங்கி பேச்சியைப்பற்றி தாங்கள் அறிந்த விஷயங்களோடு கொஞ்சம் கற்பனையையும் கூட்டிச் சேர்த்துப் பேசினார்கள். சோத்துப்பெட்டியைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு குடிமகள் காளி சொன்னாள்.

'அம்மா இனிமே சின்னஞ்சிறுசுகள் வேனல்காலத்திலே வெளியில்,

முத்தத்திலே படுத்துத் தூங்க நீதி இல்லை தாயே நீதி இல்லை'

'எனக்கும் இவ்வளவு வயசாச்சி; இப்படி ஒரு வங்கொடுமை நடந்து இந்தக் கண்ணாலே பார்த்ததில்லை தாயே'

'என்ன செய்யமுடியும்; அவளும் நம்மளைப்போல் பொம்பிளை தானே; அடி பாதகத்தி' என்று செல்லி உணர்ச்சிவசமாகிக் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைக்காமல் வைத்துக்கொண்டே பளீரென்று சிரித்து,

'ஆமம்ம, அப்பவும் ஒரு பொம்பிளைக்கு 'இது'கூடத் தெரியாமலா போய்விட்டது?' என்று கேட்டு மேலும் சிரித்தாள். அந்த நேரத்துக்கு அதே வீட்டுக்கு சோறு வாங்கிக்கொண்டு போக ஏகாலி சுடலியும் கையில் பனைநார்ப்பெட்டியுடன் வந்தாள். வந்தவள் காளி சொன்ன கடேசி அடியைக் கேட்டுக்கொண்டு சொல்லுவாள்,

'தெரியாதா! அப்படியா வரும் தூக்கம் ஒரு பொம்பிளைக்கு? திருட்டுச் சிறுக்கிங்நே. கோட்டியில்லை அவ. கோட்டிக்காரி மாதரி வேசம் போடுதா.?'

ஆனால் காளியும் மற்றவர்களும் இதை நம்பமுடியவில்லை.

'ஏதோ மோசம் போய்விட்டது, அவ்வளவுதான் கதை' என்று சொன்னார்கள். அதை நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்கு வயிறு 'பகீர்' என்றது.

*

அந்த வருஷ ஆடி மாசம் மேல்காற்று அமோகமாய் அடித்ததால் கோடைப்பருத்தி வெடிப்பு ஓய்ந்த பருவமாய்விட்டது. வலசைக்காரர்கள் அவர்கள் ஊர்களுக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். பேச்சி அவர்களோடு போகமுடியாது என்று சொல்லிவிட்டு இந்தஊரிலேயே இருந்துவிட்டாள்.

மாசம் ஆக ஆக வயிறு பெரிசாகிக்கொண்டே வந்தது. வீடுகளில் குதிரைவாலி குத்திக்கொடுக்கிறது. முதலிய காரியங்களை கூப்பிட்ட பேர்களுக்குச் செய்துகொடுத்து அவர்கள் ஊத்திய கஞ்சியைக் குடித்து வயிற்றை வளர்த்து வந்தாள் அவள்.

ஒரு வேலையும் இல்லாத தினங்களில் சில பொம்பிளைகள் ஐய்யோ பாவம்; வாயும் வயிறுமாய் இருக்காளே என்று இரக்கப்பட்டு வடிதண்ணி கொடுக்கிறது உண்டு. திட்டி வைதவர்களும், இளக்காரமாய் பேசினவர்களுங்கூட இப்போ பேச்சியின் பெரிய சரிந்த வயத்தைப் பார்த்து இரக்கப்பட்டு உதவினார்கள்.

வேளை வந்துவிட்டது. வெங்கா நாயக்கரின் மாட்டுத்தொழுவில் பேச்சியின் பேறுகாலத்திற்கு ஒரு மூலையில் நெறசல் வெத்து ஏற்பாடு செய்துகொடுத்தார்கள் பொம்பிளைகள். ஒருபக்கம் குஷி அவர்களுக்கு; ஒருபக்கம் இரக்கம். ஊர் கூடிப் பிரசவம் பார்த்தது இதுவரையில் இல்லை. நடுவீட்டு ரங்கம்மாள் தன் பேறுகாலத்துக்கு இடித்து வைத்திருந்த மிச்ச மருந்து உருண்டைகளைக் கொண்டுவந்து கொடுத்தாள். ஏகாலி நவரட்ணம் மாத்துத் துணிகள் கொடுத்து உதவினாள். குடிமகள் காளி பண்டுகம் பார்க்க வந்தாள்.

சுகப்பிரசவம்.

'கோட்டிக்காரி வயித்திலே முத்துக்குட்டிபோல இப்படி ஒரு ஆம்பளைக் குழந்தை பிறந்திட்டதே!' என்று மூக்கின்மேல் விரல் வைக்காதவர்கள் கிடையாது. அவர்களுக்குத் தெரிந்த முகங்களையெல்லாம் அவரவர்கள் மனசுக்குக் கொண்டுவந்து பிறந்த குழந்தையின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். ஒன்றும், ஒரு நிதானமும் பிடிபடவில்லை அவர்களுக்கு.

அங்கு கூடி இருந்தவர்கள் கேட்டுக்கொண்டபடி, குடிமகள் காளியே குழந்தைக்குச் சேனை வைத்தாள்.

பிரசவத்துக்குப் பிறகு பேச்சியின் முகத்தில் ஒரு ஆச்சரியமான மாறுதல்

உண்டானது. அந்த மீதிப் பைத்தியக்களை பூர்ணமாக விலகி விட்டதுபோலத் தெரிந்தது.

சிரசிலடிக்கும்படியாக அவள் மடுவில் வேகத்தோடு நிறையப்பால் இருந்தது. ஒருபக்கம் குழந்தை வாய்வைத்துக் குடித்துக் கொண்டிருக்கும்போதே அடுத்ததில் வெள்ளை நூல்களாக பால் பீச்சி அடித்துக்கொண்டே இருக்கும். மறு கையினால் மாராப்புத்துணியோடு சேர்த்து, காயத்திலிருந்து பீறிடுகிற இரத்தத்தை அமுக்கிப் பிடித்துக்கொள்கிற மாதிரி அமுக்கிப் பிடித்துக்கொள்வாள். வசதியான வீட்டுப் பொம்பிளைகள் இதைப் பார்த்து அதிசய ஆனந்தங்கொள்வார்கள். பேச்சி தொலைவில் வரும்போதே மனிதப் பாலின் கொச்சை நெடி கொல்லும்.

செழிக்கச் செழிக்கத் தாய்ப்பாலையே குடித்து வளர்ந்த குழந்தையின் ஆரோக்கியம் வர்ணிக்கமுடியாத ஒன்று. கனவில் கண்ட அதே அழகு நிறைந்த குழந்தைபோலவே இருந்தது அது.

பேச்சி இப்பொழுது, வேலை செய்து சாப்பிடுகிற வீடுகளில் போடுகிற சோறு காணாமல் வீடுவீடாகப் பிச்சை எடுத்தும் சாப்பிட்டு வந்தாள். அமுங்குரலில் சொல் இன்னதென்றே விளங்காத தாலாட்டுப் பாடுவாள் குழந்தைக்கு. அந்தியும் வெள்ளனும் அவள், நடுத்தெருவின் சுவர் நிழலில் உட்கார்ந்து குழந்தையை மடியில் உட்கார வைத்துக்கொண்டு, போகிற வருகிற இளவட்டங்களின் முகங்களை அவர்களுக்குத் தெரியாமல் கூர்ந்து பார்க்கிறதும், பிறகு தன் மடியிலுள்ள குழந்தையின் முகத்தைப் பார்க்கிறதுமாகவே இருப்பாள்.

*

திருஷ்டி என்று ஒன்று இருக்கிறதா என்று தெரியாது. பேச்சியின் குழந்தையை அது தைத்துவிட்டது என்று சொன்னார்கள். திடீரென்று ஒருநாள் 'டிப்தீரியா' கண்டு குழந்தை இறந்து போய்விட்டது. ஊர்க்காரர்கள்

பேச்சை அவள் நம்பத் தயாராயில்லை; தன் குழந்தை இருப்பதாகவே அவள் மனப்பூர்வமாக நம்பினாள். வழக்கம்போலவே அதனுடன் கொஞ்சினாள், முத்தமிட்டாள், சிரித்தாள், படுத்துக்கொண்டு பக்கத்தில் கிடத்திப் பீச்சும் இரு ஸ்தனங்களின் அமிர்தப்பாலினால் அதைத் தெப்பமாக நனைத்துக்கொண்டே அந்த சொகத்தில் கண்களைச் சொருகி உறங்கினாள்.

அவளுக்குத் திரும்பவும் கோட்டி வந்துவிட்டது என்று சொன்னார்கள். அவள் அதை இடுக்கிக்கொண்டே வீடு வீடாய் பிச்சை எடுத்தாள். பேச்சியின் ஊருக்குச் சமாசாரத்தைச் சொல்லி அனுப்பினார்கள். அவளுடைய ஊரிலிருந்து ஆட்கள் வந்தார்கள்.

இப்போது ஒரு புதிய 'போராட்டம்' நடந்தது. பேச்சி குழந்தையைப் புதைக்கக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லி ஓட ஆரம்பித்தாள். மூணு நாலு நாளாகிவிட்டதால் குழந்தை உப்பி சில இடத்தில் சதை வெடித்துவிட்டிருந்தது. மறித்து மடக்கி அவளைத் துரத்திப் பிடித்து மல்லுக்கட்டி அவளுடைய குரங்குப் பிடியிலிருந்து பிடுங்கி எடுத்தார்கள். குழந்தையின் ஒருகைகூட கொஞ்சம் பிய்ந்துபோய்விட்டது. அவளிடமிருந்து குழந்தை மீட்டதும் வீல் என்று விசில் ஸ்தாயையில் கத்திக்கொண்டே மூர்ச்சையானாள்.

குழந்தையைப் புதைக்கக் கொண்டுபோனார்கள். மூர்ச்சை தெளிந்த பேச்சி சுடுகாட்டுக்கு ஓடினாள். புதைத்து மூடிக் கொண்டிருக்கும்போது அங்கு வந்து சேர்ந்து, ஆர்ப்பாட்டம் செய்தாள். செம்மையாய் உதைத்துக் கைகால்களைக் கட்டிப் போட்டு ஒரு வண்டியில் அவளை அவள் ஊருக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

அங்கே அவளை ஒரு வீட்டுக்குள் போட்டு அடைத்து வைத்திருந்தார்கள். அன்ன ஆகாரம் எதையும் அவள் தொடவில்லை. முழங்காலில் கைகளைக் கட்டிக்கொண்டு அண்ணாந்து வீட்டின் கைமரங்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். எப்பவாவது சில சமயம் பூட்டிய கதவில் வந்து தலையை பலமாக 'ணங்ணங்' என்று முட்டுவாள். 'ஐயோ . . . உன்

முகத்தைக்கூட நான் பார்க்கலையடா பாவி . . .' மாரில் ஓங்கி ஓங்கி அடித்துக்கொள்கிற சப்தம் கேட்கும்.

ஒரு நாள் அந்த வீட்டின் ஓடுகளைப் பிரித்துக்கொண்டு ராத்திரியே தப்பி ஓடிப்போய்விட்டாள் அவள்.

மறுநாள் எல்லா ஊர்களிலும் அவளைத் தேடினார்கள். யார் கண்ணிலும் தட்டுப்படவில்லை.

அவள் ராவோடு ராவாக ஓடினாள். உடம்பில் ஆடை என்பதே இல்லை. அவள் மங்கம்மா சாலையை கடந்து ஓடும்போது ஏர் வெள்ளிகள் வானத்தில் உச்சியைக் கடந்து வெகுதூரம் இறங்கி விட்டிருந்தது. வரிசையாகக் கூடார வண்டிகள் சாலையில், வண்டியின் அடியில் லைட்டைக் கட்டிக்கொண்டு போவது கொள்ளிவாய்ப் பிசாசுகள் நீளமாகப் போகிறதுபோல் இருந்தது. மாடுகளின் கிணுமணி ஓசையும், உள்வாயில் மசக்கை இல்லாததால் அச்சின் உராய்தலால் ஏற்படும் நீண்ட கீச்சு ஒலிகளும், சக்கரங்கள் சாவியிலும் தெப்பக் கட்டையிலும் மாறிமாறித் தட்டுவதினால் உண்டாகும் சத்தங்களும் இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருந்தன. அந்தக் கூடார வண்டிகள் இலஞ்சியிலிருந்தும், செங்கோட்டையிலிருந்தும் மாம்பழங்களை ஏற்றிக்கொண்டு கோவில்பட்டிக்குப் போய்க்கொண்டிருந்தன. அதில் ஒரு வண்டிக்காரன் சோகமான தெம்மாங்குப் பாட்டு பாடிக்கொண்டே போனான். அந்த அர்த்த ஜாம இருட்டில் அந்தக் குரல் மனசை அறுப்பதுபோல் இருந்தது.

பேச்சி நேராகத் தன் குழந்தையைப் புதைத்த மயானத்தைப் பார்த்து ஓடினாள். அங்கே ஒரு பிரேதம் சிதையின் மூட்டம் விரிந்து நன்றாய்க் கொளுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் தன்னுடைய குழந்தையைப் புதைத்த இடத்தைத் தோண்டினாள். தோண்டித் தோண்டி எடுத்துவிட்டாள். சதை அழுகி நீர் வடியும் அதை மார்புடன் அணைத்துக்கொண்டு கலகல என்று உரக்கச் சிரித்தாள். அப்படிச் சிரிக்கும்போதே அவள் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் வடிந்தது.

திடீரென்று அவளுக்குத் தாளமுடியாத பசி எடுத்தது. நெருப்பில் வாட்டிய சீனிக்கிழங்கை எடுத்துத் தின்பதுபோல் வெகுசாதாரணமாக, எரிந்துகொண்டிருந்த பிரேதத்தின்ஒரு பகுதியை ஒரு குச்சியின் உதவியால் இழுத்து, சூடு ஆறுவதற்காக ஊதி ஊதிப் பற்களால் கடித்து இழுத்து வெந்த பிரேதத்தின் மாமிசத்தை ஆவலோடு தின்றாள். தன்னோடும், தன் குழந்தையோடும் எதையோ சிரித்துப் பேசிக்கொண்டே தின்றாள்.

*

ஊர் அடங்கி, நல்ல தூக்கத்திலிருந்தது. சீந்தரிப்பு மிகுந்த சோளைக்காற்று மேல் திசையிலிருந்து அலை அலையாய்த் தன் முழு வேகத்தோடு பிய்த்து வாங்கியது. மற்ற காலங்களில் அந்த அவ்வளவு மேல்காற்று எங்கேதான் போய்ப் பதுங்கிக்கொண்டு கிடக்குமோ என்று கிராமத்துக்காரர்கள் பேசிக்கொள்வார்கள். சித்திரை பத்துக்குமேல் ஐப்பசி பத்துவரைக்கும் அதன் பேயாட்டம் நடத்தி முடியும். ஒரு நதியின் வேகமான நீரோட்டத்தின் மத்தியில் வாழும் மீன் ஜீவராசிகளைப்போல் சம்சாரிகள் வாழும் இந்தக் கரிசல் பிரதேசத்தில் காற்று, பொங்கப் பொங்கச் சுழியிட்டு, படும் பொருள்களில் எல்லாம் உராய்ந்துகொண்டு சப்தமிட்டவாறு அந்தப் பிரதேசத்தை இரவும் பகலும் கடந்து ஓடிக்கொண்டே இருக்கும். மேற்குக் கருமலையில் ஒரு பெரிய கணவாய் இருக்கிறது. அதில் யார் கண்ணுக்கும் தெரியாத ஒரு பிரமாண்டமான ராக்ஷச மதகுப் பலகையால் அடைக்கப்பட்டிருக்கிறது. சித்திரைமாசம் பத்தாம்தேதி அதை யாரோ திறந்து விடுகிறார்கள்! கடல் மடை திறந்ததுபோல் உடனே காற்று ஓஹோ என்று கொந்தளித்துக்கொண்டு ஒரு நதி ஓட்டமாக அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தைக் கடந்துகொண்டு ஓடி வருகிறது. கொஞ்சங்கொஞ்சமாக அந்தப் பகுதி மனிதர்கள், வீடுகள், படப்புகள், மரங்கள் யாவும் காற்று வெள்ளத்தில் முழ்குகிறது. மூழ்கடித்துக் கிழக்குநோக்கி அது இரைச்சலிட்டு நகர்ந்து வேகமாக ஓடுகிறது.

உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களைத் திடுக்குற்று விழிக்கச் செய்யும் ஒரு

துர்நாற்றம் அந்தக் கிராமவாசிகளை உலுப்பி எழுப்பியது. யாரும் எப்பவும் அப்படி ஒரு நாற்றத்தை அனுபவித்ததில்லை. அதே போதில் உடம்பு புல்லரிக்கும்படியாக ஒரு குலவைச் சத்தமும் கேட்டது. அதைக் கேட்டவர்களின் உடலிலுள்ள சர்வாங்க மயிர்களும் நட்டக் குத்தலாக நின்றது.

அது ராப்பாடியான காலவீரனின் குலவைக் குரல் இல்லை. வரப்போகிற காலத்தைப்பற்றிச் சொல்லும் ஏதோ ஒரு சமிக்ஞை. இந்தப் பூமியில் யாருக்கு யாரோ ஒரு அநீதி இழைத்துவிட்டார்கள். மீண்டும் அதோ அந்தக் குலவைக் குரல் கேட்கிறது. குழந்தைகள் பதறிவிழித்துத் தங்கள் பெற்றவர்களை இறுகக் கட்டி பிடித்துக்கொண்டார்கள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்த மரண நாற்றமும் குலவைச் சத்தமும் தூரத்தில் எங்கேயோ கேட்டு, குறைகிறது. துக்கத்தினால் தொண்டை வலிக்க வீட்டுக்குள் அடைந்து கிடந்த மக்கள் ஒருவரை ஒருவர் பீதியோடு பார்த்துக்கொண்டார்கள். அதன்பிறகு அவர்களுக்குத் தூக்கம் பிடிக்கவே இல்லை. ரகஸியக் குரலில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

*

ஊருக்குத் தொலைவிலுள்ள பெரிய உடங்காட்டில் பேச்சி நிலை கொண்டிருந்தாள். பகலில் கூகையைப்போல் அவள் வெளிப்பட மாட்டாள். பாம்புப்புற்றுகள் சூழ்ந்த உடைமரத்தின்மேல் அவள் இருக்கையாக வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அதன்மீது கிடந்தாள்.

நரகத்தின் நாற்றம்கொண்ட சிறிய எலும்புக் கோர்வையை இடது கையினால் மாரோடு அணைத்துப் பிடித்துக்கொண்டு பயங்கரமாகக் குலவையிட்டுக்கொண்டு வலது கையை வேகமாக வீசி அந்தக் கிராமத்தின் தெருக்களில் நடுராத்திரிக்குமேல், திட் திட் திட்டென்று அதிரும் சத்தத்துடன் குதிகாலைத் தரையில் இடித்து ஊன்றி நடந்து செல்லும் பேச்சியை இன்னசெய்வதென்று தெரியாமல் செயலிழந்து

உட்கார்ந்திருந்தார்கள் ஊர்வாசிகள்.

பகலில் அவள் எங்கே போகிறாள், எங்கே இருக்கிறாள் என்பது யாருக்கும் புரியவில்லை. சுடுகாட்டில் எரியும் பிரேதத்தின் மாமிசத்தைத் தின்பதும், அது கிடைக்காத நாட்களில் உடங்காட்டில் முளைத்துக் கடக்கும் கத்தாழையையும் தின்று ஜீவித்தாள் அவள். இந்த உலக மனுசர்களின் சங்காத்தமே வேண்டாம் என்பதுபோலிருந்தது அவளுடைய காரியம்.

காத்தடிக்காலம் போய், மழைக்காலம், பனிக்காலமும்போய், வேனிற்காலம் வந்தது. கோட்டிக்காரிக்குப் பயந்துகொண்டு ஜனங்கள் வெளியே படுத்து உறங்கமுடியாமல் கஷ்டப்பட்டார்கள்.

ஒரு நாள் பஜனை மடத்தின் எதிரிலுள்ள வேப்பமர வரிசையின் நிலா நிழலில், அந்த ஊருக்கு விருந்தாடி வந்திருந்த இளவட்டம் ஒருவன் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காடி வண்டிகளில் ஒன்றில் இருப்புச் சட்டங்களில் படுத்திருந்தவாறே தூங்கிவிட்டாள்.

நிலா உச்சியிலிருந்து இறங்க ஆரம்பித்துவிட்டது. வேப்ப மொட்டுகள் ஏடவிழ்ந்து வாசனையைக் கொட்டிக்கொண்டிருந்தது. உப்பங்காற்று தென் கிழக்கிலிருந்து சொகமாக வீசிக்கொண்டிருந்தது. கழுத்தடியில் வியர்வை துளிர்க்க அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அவனுக்கு, பேச்சி அந்த இடத்துக்கு வந்ததோ அவள் தன்னை நெருங்கி வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறதோ அவனுக்குத் தெரியாது. அவளுடைய கை அவனுடைய முகத்தை நோக்கி மெதுவாகப் படர்ந்து சென்றது; பட்டென்று பின்னுக்குச் சுதாரித்துக்கொண்டான் கையை. திடீரென்று தன் உயிர்ஸ்தலத்தில் ஏற்பட்ட பிடியின் சிலிர்ப்பு வேதனையால் பதறி விழித்தான். எதிரே விரிந்த கண்களுடன் சிரித்துக்கொண்டு ஆடை தவிர்ந்து நிற்கும் பெண் உருவத்தைப் பார்த்ததும், கோரமாகக் கூக்குரலிட்டு அலறினான். பயத்தினால் அவன் கண்கள் நிலைக்குத்த ஆரம்பித்துவிட்டது.

கிராமத்துக்காரர்கள் ஓடிவந்து, பாய்ந்து வண்டியிலுள்ள ஊணுக்கம்புகளை

உருவி அடிக்குமுன்பு அவள், விசில் ஸ்தாயையில் கூக்குரலிட்டுக்கொண்டே ஓடி மறைந்துவிட்டாள்.

ஒருநாள் பின்இரவில் கிராமத்தார்கள், பேச்சியின் ஊர்க்காரர்களோடு சேர்ந்துகொண்டு, கம்புகள் சகிதம் ஒரு பன்றியை விரட்டி வேட்டையாடுவதுபோல் அவளை மறுக்கி மறுக்கி, விரட்டி, அடித்துப் பிடித்து அவர்கள்வசம் ஒப்படைத்தார்கள்.

*

பேச்சியை அவளுடைய ஊருக்குக் கொண்டுபோய் கை கால்களைக் கட்டி ஒரு மச்சு வீட்டுக்குள் போட்டு அடைத்து விட்டார்கள். பிறகு என்னவெல்லாமோ வைத்தியம் மீண்டும் நடந்தது அவளுக்கு. என்ன செய்தும் பிரயோஜனம் இல்லை. ஒருநாள் ராத்திரி யாருக்கும் தெரியாமல் சுவரில் ஓட்டை போட்டு வெளியேறிவிட்டாள்.

திரும்பவும் அவள், அந்த அடர்ந்து வளர்ந்த உடங்காட்டிலுள்ள பாம்புப்புற்றுகள் சூழ்ந்த உடை மரத்தின்மேல் வந்து அடைக்கலமானாள்.

அந்த ராத்திரிகளில் அதுவும் நல்ல நிலாக்காலங்களில் மட்டுமே அவள் அங்கிருந்து வெளிப்படுவாள். வேட்டையாடும் வெருகுப் பூனைபோல் பதுங்கிப் பதுங்கி வருவாள். முந்திமாதிரி அவள் இப்பொழுது 'ஆர்ப்பாட்டம்' செய்வதில்லை. பார்வதியம்மன் கோவிலுக்கு முன்னுள்ள வேப்பமரத்தின் நிலா நிழலில் கொஞ்ச நேரம் வந்து தங்கிவிட்டுப் போவாள். உறக்கத்தையே அநேக நாட்கள் கண்டிராத அவளுக்கு அந்த வேப்பமரத்தடிக்கு வந்ததும் ஒரு மாதிரிக் கிறக்கம் நிறைந்த அசதியான தூக்கம் வந்து அப்பும். அப்படியே சிறிது நேரம் போர்க்களத்தில் கிடக்கும் ஒரு பிரேதம்போலக் கையையும் காலையும் அகல விரித்துப் போட்டுக்கொண்டு சற்றே சவமாய்த் தூங்குவாள்.

தூங்கி முழித்ததும் அவளுக்குத் தன் குழந்தையின் அழகான சிரித்த

முகம் ஞாபகம் வரும். அப்படியே கொஞ்சநேரம் அந்த வேப்பமரத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சப்தமில்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுவாள்.

அந்த வேப்பமரம் அவளுக்கு எந்தவித ஆறுதலும் சொல்ல முடியாத நிலையில் நின்றது. தன் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, குமுறி வரும் துக்கத்தால் குலுங்கும் பேச்சிக்குப் பல திசைகளிலும் விரிந்த அதனுடைய பல கைகளை வானத்தில் அங்குமிங்கும் ஆட்டி உஸ் என்ற சத்தத்தை வெளியிடும். தாங்கமுடியாத ஒரு பெருமூச்சை அது வெளியிடுவதுபோலிருக்கும்.

பூமியில் ஜீவராசிகள் இதோ, இப்பொழுது ஒவ்வொன்றாய் விழிக்க ஆரம்பிக்கப்போகிறது என்று சொல்லுவதுபோல விடிகாலையின் முதல்க்குரலாக அக்காக் குருவி கூவ ஆரம்பிக்கும். அக்காக் குருவியின் குரல் கேட்டதும் பேச்சி திடுக்கிட்டு எழுந்து, உடை மரத்தை நோக்கி விரைவாள்.

தூக்கங்கள் வரவர, உணர்வுகள் திரும்பத் திரும்ப பேச்சி தன் குழந்தையின் நினைவே ஆனாள். கனவிலாவது குழந்தையைக் காணமாட்டோமா என்று ஏங்கினாள். அதேமாதிரி அவளுடைய குழந்தை ஒருநாள் அவள் கனவில் நிஜமாகவே வந்தான். பகபகவென்று சிரித்தான். அவளைத் தொட்டு விளையாடினான். அவள் தன்னை மறந்து சிலிர்த்தாள்.

*

பல மாசங்கள் கழித்து ஒருநாள் அந்தக் கிராமத்தில் பட்டப்பகலில் திடீரென்று மனிதர்கள் தெருக்களில் கலைந்து பதறித் தங்கள் வீடுகளுக்குள் புகுந்து கதவை அடைத்துக்கொண்டார்கள். ஊருக்குள் புலி வந்து நுழைந்துவிட்டதுபோல் ஒரு நிலை. தாங்கள் பாதுகாப்பாக இருந்துகொண்டு, ஜன்னல் கதவுகளை மட்டும் பாதி திறந்து கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பிறந்த மேனியாக மீண்டும் நிறைமாச கர்ப்பிணியாய் வயிற்றைத் தள்ளிக்கொண்ட அந்தக் 'கோட்டிக்காரி' ஸ்தனங்கள் ஆட, ஒரு ஆணைப்போல் கைகளை முன்னும் பின்னும் வீசிக்கொண்டு திட் திட் என்று பூமி அதிர அந்தக் கிராமத்தின் நடுத்தெருவே நடந்து சென்று கொண்டிருந்தாள்.

சாந்தி, ஜூலை 1966

***

# புறப்பாடு

'தெரியுமா உங்களுக்கு சமாச்சாரம்? நம்ம அண்ணாரப்பக் கவுண்டர்; ஆள் தீந்துபோயிட்டார்!'

சொன்னவனும் சந்தோஷமாகச் சொன்னான், கேட்டவர்களும் சந்தோஷமாகக் கேட்டார்கள்.

'நெசமாத்தான் சொல்லுதயா?' மத்தியில் ஒரு சந்தேகம்.

'அந்தாப் பாருங்க, பொய்யா சொல்லுதேன்; கயத்தாத்து மேளத்துக்கு ஆள் புறப்பட்டாச்சி.'

'லேய் மக்காளி; மக்காளி' என்று அவனைக் கைதட்டிக் கூப்பிட்டு, விசாரிச்சித் தெளிவு கேட்டார்கள். மக்காளியும் பல்லைக் காட்டிக் கொண்டே, கவுண்டர் செத்துப்போனது வாஸ்தவந்தான் என்று சொல்லிவிட்டு வேகமாய்க் காருக்கு நடந்தான்.

'செய்தி' கொஞ்ச நேரத்துக்குள், ஊர் பக்கத்தூர் எல்லாம் பரவ ஆரம்பித்துவிட்டது. எங்கே கண்டாலும் இதேதான் பேச்சு.

'நம்ம அண்ணாரப்பக் கவுண்டர்; ஆள் குளோஸ்'

'நெசமாவா?'

கிராமத்து ஜனங்கள் இப்படி ஆனந்தமாகச் சொல்லவும் கேட்கவும் போதுமான காரணம் இருந்தது.

*

அண்ணாரப்பக் கவுண்டரின் கையைப் பிடித்துப் பார்த்த பண்டிதன்

சம்முகம், 'சரீ' என்கிறமாதிரி தலையை அசைத்தான். அவன் கையைப் பிடித்து நாடியைக் கவனித்துக்கொண்டிருக்கும் போது, அழவேண்டிய சொந்தக்காரர்கள் அவன் தலையைத்தான் கவனித்துக் கொண்டிருப்பார்கள். சரீ என்று ஆட்டியதும் தொடங்கிவிடுவார்கள்.

முதல்காரியம், கிடப்பவனைக் கட்டிலிருந்து கீழே இறக்கிப் போடுவார்கள். கட்டிலில் படுத்துக்கொண்டு உயிரை விடக்கூடாது; அப்புறம் அந்த ஆவி கட்டிலையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும் என்று நம்பிக்கை. அதோடு வீட்டில் வேறு யாருக்கும் உடம்புக்குச் சௌகரியமில்லையென்றால் அந்தக் கட்டிலில் படுத்துக்கொள்ள யோசிப்பார்கள். பண்டிதன் சொன்ன பிறகு அண்ணாரப்பக் கவுண்டரையும் கட்டிலிலிருந்து இறக்கிப் போட்டார்கள்.

அமாவாசை, பாட்டிமை எல்லாம் கழிந்தது.

கவுண்டர் ஒரு நாள் திடீரென்று கண்விழித்துப் பார்த்தார்.

'எவண்டா என்னைக் கட்டில்லே இருந்து கீழே எறக்கிப் போட்டது.' என்று சத்தம் போட்டுவிட்டுக் கட்டிலில் ஏறிப் படுத்துக்கொண்டுவிட்டார்! இந்தச் செய்தி முதலில் பரவியதும் ஊரே சிரிப்பில் குலுங்கியது.

பண்டிதன் சம்முகம் போட்ட 'தவணை' யைத் தாண்டிய தில்லை அதுவரை யாரும். 'இந்தப் பவரணை தாண்டாது' என்பான். சொல்லி வச்சமாதிரி பௌர்ணமியோ முதல் நாளோகூட ஆட்கள் 'புறப்பட்டு' இருக்கிறார்கள்.

ஆனால் கவுண்டர் விஷயத்தில் பண்டிதனின் கணிப்பு ஒன்றும் பலிக்கவில்லை.

*

அண்ணாரப்பக் கவுண்டர், நோய் நொடி என்று ஒன்றும்வந்து

படுக்கையில்விழவில்லை. அவருக்கு நல்ல வயசாகிவிட்டது. எவ்வளவு என்று தெரியாது. அவருக்கே தெரியாது. யார் வயசை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பிறந்த நட்சத்திரம் கூட யாருக்கும் தெரியாது. பாரவண்டியில் மேலே இருந்துகொண்டு கயிறு இறுக்குபவனைப் பார்த்து 'டேய், பார்த்து இறுக்குடா தவறிக் கீழே விழுந்தால் நட்சத்திரம் கழண்டுபோயிடும்.' என்று சொல்லுகிறதில் வருகிற 'நட்சத்திரம்' ஒன்றுதான் தெரியும் அவர்களுக்கு.

அந்தப் பட்டியிலேயே ரொம்ப வயசானவர் அண்ணாரப்பக் கவுண்டர் ஒருத்தர்தான். அவருடைய மூன்று பெண்டாட்டிகளும் இரண்டு தொடுப்புகளும் எப்பவோ செத்துப் போய்விட்டார்கள். மகன்கள் மகள்கள்கூடச் செத்து போனார்கள். பேரன் பேத்திகள் சிலருக்குப் பல் விழுந்துவிட்டது. சிலருக்குத் தலை நரைக்கவும் வழுக்கை விழவும் ஆரம்பித்துவிட்டது. மன்னன் அண்ணாரப்பக் கவுண்டருக்கோ தந்தம் பன்னரிவாள்ப் பல்மாதிரி தேய்ந்துபோனதே தவிர ஒன்றுகூட உதிரவில்லை. 'நாப்பது நாளைக்குக் கோழிக்கறியும் பச்சை நெல்லுச்சோறும் போட்டா இப்பவுங்கூட ஒரு கல்யாணம் பண்ணிக் காட்டுவேன்' என்று சொல்லுவார். அவரால் இப்பவும் சத்தம்போட்டுக் குரல் நடுங்காமல் பாடமுடியும். ஆனால் பேரன் பேத்திகள் சண்டைக்கு வருவார்கள்.

முழு வயோதிகத்தினால் அவருடைய கம்பீரமான உயரமும் உருவமும் வாடிய சருகுபோல் சுருண்டு வளைந்து சிறுத்துவிட்டது. கட்டிலில் மூலை சேர்ந்துவிட்டார், தேய்ந்துபோன கலப்பைமாதிரி.

ஒரு வருஷமாக அவர், இந்தா அந்தா என்று வரகந்தட்டு விளையாட்டில் மறுக்குகிறமாதிரி காலனை மறுக்கிக்கொண்டு பிடிபடாமல் இருந்துகொண்டிருக்கிறார்.

'கவுண்டரின் கணக்கை சித்திரபுத்திரன் தொலைத்துவிட்டான்' என்கிறார்கள் ஊர்வாசிகள். அவருடைய மரணத்துக்காக இப்பொ அழுபவர்கள் யாருமில்லை. இந்தக் கிழடு செத்துத் தொலையமாட்டேங்குதே என்று

சத்தம்போட்டுச் சொன்னார்கள்.

ஒவ்வொரு பௌர்ணமியையும் அமாவாசையையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்தார்கள்.

அந்தப் பெரிய உசிர் பிழைக்கவும் முடியாமல் சாகவும் முடியாமல் காலம் தாழ்த்துவதினால், பல வேலைகள் நடக்க முடியாமல் தடைபட்டன. அவருடைய கொள்ளுப்பேத்திக்கு முகூர்த்தம் நிச்சயிக்க முடியவில்லை. பல விவசாய வேலைகள் தடைபட்டன. வந்த விருந்தாளிகள்கூடப் போகமுடியவில்லை.

ஒருநாள் திடீரென்று அவருக்கு நிலைமை மோசமாகிவிட்டது. ரோட்டுக்கடை வைத்தியரைக் கூட்டிக்கொண்டு வந்து காண்பித்தார்கள். நாடி பிடித்துப் பார்த்த வைத்தியர் 'செய்ய வேண்டிய ஏதுகாரங்களையெல்லாம் செய்துரலாம்; தூர ஊர்களிலுள்ள சொந்தக்காரர்களுக்கு ஆள் அனுப்பிவிடுங்க' என்று உறுதலாகச் சொன்னார். அதோடு பேரன் பேத்திகளின் ஜாதகங்களைக் கொண்டுவரச் சொல்லி, ஒரு தரத்துக்கு ரெண்டுதரம் நன்றாகப் பார்த்து 'இந்தத் 'திசை விடுதி'யில் 'கர்மம்' செய்வதற்கு வேண்டிய 'சட்டம்' இருப்பதால் தப்பாது இந்தத் தடவை' என்று நிச்சியமாய்ச் சொன்னார்.

பந்துக்களுக்கும், தூர பந்துக்களுக்கும்கூட ஆள் அனுப்பி வரச்சொல்லியாகிவிட்டது. பந்தல் போடுவதற்கு, ஊருக்குள் வண்டி வாரிகளையும் வண்டித் தடுக்குகளையும் சேகரித்தார்கள். கவுண்டரின் பெண்வழிப் பேத்திகள் 'பெண்ணடிப் பாயசம்' காய்ச்சுவதற்காக நெல்லுக்கு ஆள் அனுப்பி, கொண்டுவந்து பச்சரிசி குத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள்.

கவுண்டரைச் சுற்றி உட்கார்ந்து ராத்திரியெல்லாம் முழித்துக் கொண்டு கிடந்தார்கள்; தூக்கம் வராமல் இருக்க பலதடவை தேயிலைத் தண்ணிப்போட்டுச் சாப்பிட்டார்கள், 'வாலி மோட்சம்' கதை படிக்கச்சொல்லிக் கேட்டார்கள்.

ஒருநாளா ரெண்டுநாளா, இப்படி எத்தனை நாட்கள்தான் ராத்திரி முழித்துக்கொண்டு தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருக்க முடியும்?

'என்ன, இப்படிப் பிடிவாதம் பண்றார்?'

'கவுண்டர் ரொம்ப பிடிசாதகம் பண்றாரே!' என்று ஒருத்தருக்கொருத்தர் கேட்டுக்கொண்டார்கள்.

விஷயம் தெரிந்த ஒருத்தர் சொன்னார். 'சிலேப்பனம் கட்டணும் ஐயா. தொண்டையில் சிலேப்பனம் கட்டினாலில்ல ஆள் தீரும்.'

'அப்படியா. சிலேப்பனம் கட்றதுக்கு என்ன செய்யனும்?' என்று வீட்டுக்காரர்களில் ஒருவர் ஆவலோடு கேட்டார்.

'பஞ்சுப்பால் விடனும்'

'அது விட்டாச்சே எப்பவே'

'என்ன பால் விட்டீங்க?'

'பசுவம் பால்'

'எருமைப்பால் சொட்டு விடனும். அதுதான் திக்காய் இருக்கும்'

'திக்காய் இருக்கணும்ண்ணா ஆட்டுப்பால் விடலாமே'

'சரிதான்; ஆட்டுப்பாலையும் பசுவம் பாலையும் விட்டு ஆளை எழுப்பிருவிங்க போலிருக்கே! ஆட்டுப்பால் அம்ருதம்! பசும்பாலும் அப்படித்தான், பேசாம எருமைப்பாலையே விடுங்க'

அங்குக் கூடியிருந்தவர்களுக்குப் பளிச்சென்று எருமைக்கும் எமனுக்கும் உண்டான சம்மந்தம் தோன்றவே உடனே அதுக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

'காய்ச்சுவதா பாலைக் காய்ச்சாமல் பச்சையாய் விடுவதா என்று சில சந்தேகிகள் கிளப்பினார்கள். பச்சைப் பாலை விடுவதே சிலாக்கியம் என்று தீர்மானித்தார்கள்.

பேரன் பேத்திகள்; கொள்ளுப்பேரன் பேத்திகளும் கூடி எருமைப்பாலில் பஞ்சை முக்கித் தங்களது முத்தாத்தாவுக்கு திறந்திருந்த அவரது வாயில் பஞ்சுப்பால் பிழிந்தார்கள். திறந்தவாய் மூடாமல், தொண்டைக்கும் வாய்க்கும்தான் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. கண்கள் எப்பவோ பஞ்சடைத்துப்போய் விட்டிருந்தது.

பாலினால் தொண்டையில் சிலேப்பனங்கட்டிக் கொஞ்ச நேரத்துக்குள் உயிர் பிரிந்துவிடும் என்று எல்லாரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். நேரம் மெதுவாக ஆகியது! சொன்னார் ஒருத்தர் 'அப்பதிக்கு இப்ப ஆள் கொஞ்சம் தெளிச்சியாத் தெரியிர மாதிரியில்லா இருக்கு'

'ஏ . . . ஆமா!'

ஊர் முக்கியஸ்தர்கள் கூடி, இந்த மாதிரியான விசேஷ 'கேஸ்'களுக்குச் செய்கிற வழக்கமான 'குளுப்பாட்டி படுக்க வைக்கிறது' என்கிற முறையைக் கையாளத் தீர்மானித்தார்கள். அதன்படி, விளக்கெண்ணெயைக் கொண்டுவந்து கவுண்டரின் தலையிலும் உடம்பிலும் அறக்கித் தேய்த்துத் தப்பளம் போட்டார்கள்.

ராத்திரி நேரம்; மணி பன்னிரண்டு இருக்கும். அது தை மாசம். வீட்டுக்குப் பின்னாலுள்ள கிணத்தடிக்குக் கட்டிலோடு கவுண்டரைத் தூக்கிக்கொண்டு போனார்கள். ஒரு ஆள் கவுண்டரைக் கட்டிலிலேயே உட்காரவைத்துப் பிடித்துக் கொண்டான். மூன்றுபேர்கள் ஆளுக்கு ஒரு தண்ணீர் இறைக்கும் வாளியால் கிணற்றில் சேந்திச்சேந்தி கவுண்டரின் தலையில் தொடர்ந்து குளிர்ந்த நீரைக் கொட்டிக்கொண்டேயிருந்தார்கள்.

இந்த வைபவத்தைப் பார்க்க ரோட்டுக்கடை வைத்தியரும்

வீட்டுக்காரர்களில் முக்கியஸ்தரான கெப்பணக்கவுண்டரும் வெற்றிலை போட்டுக்கொண்டு, அவர் முத்தாத்தா கட்டிய கல் தொழுவைப் பார்வையிட்டவாறே பேசிக்கொண்டே மெதுவாக நடந்து வந்தார்கள். 'உழவு மாடுகளை இந்த வருசம் மாத்திரனும்ண்ணு சொன்னீளே?' என்று கேட்டார் ரோட்டுக்கடை. 'தைப்பூசத்துக்கு கழுகுமலை சந்தைக்குப் போகணும்னு இருந்தேன்; இந்தக் கிழடை இப்படிப் போட்டுட்டு எப்படிப் போக. மாடுகளைப் போன வருசமே மாத்தியிருக்கணும், ஒரு வேலையும் நடக்கலை; ஒண்ணுமே ஓடலை. பொன்னுத்தாயிக்கு நிச்சயமாயிருக்கு; மூர்த்தம் வைக்கமுடியலை, என்ன செய்யமுடியும்; சொல்லுங்க பார்ப்போம்.'

கெப்பணக் கவுண்டர் பேச்சைக் கடேசியில் முடிக்கும்போது இப்படித்தான் முடிப்பார் 'சொல்லுங்க பார்ப்போம்' என்று.

தண்ணீர் அவர்கள்மேல் தெறித்து விழாதபடி கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அவர்கள் பார்த்தார்கள். வாளிகளால் இறைத்துவிடுவது சரியில்லை என்று நினைத்தார் வைத்தியர். குடங்களில் நிரப்பி வைத்துக்கொண்டு இடைவெளி இல்லாமல் விடணும் என்று தீர்மானித்தார்கள். அதன்படி, குடங்களை வீட்டிலுள்ளது போகப் பக்கத்து வீடு பக்கத்துத்தெரு என்று போய் ஆட்கள் சேகரித்துக்கொண்டு வந்தார்கள்.

கட்டிலில் அண்ணாரப்பக் கவுண்டரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த கரியமலை வாடை தாங்காமல் நடுங்கினான். அவனும் தெப்பலாக நனைந்திருந்தான் பாவம். 'குடத்துத் தண்ணி விடும்போது வேற யாரையாவது பிடிச்சிக்கிடச் சொல்லுங்க பெரியப்பா; எனக்கு வாடை நடுங்குது; கையும் காலும் குறக்களிச்சிட்டுப்போகுது' என்று சொன்னான். அவன் தாடை நடுங்கியதில், கீழ்வரிசைப் பல்லோடு கடகடவென்று அடித்துக்கொண்டதைக் கண்ட வைத்தியருக்கு சிரிப்புத் தாங்காததால் உச்சந்தலை வழுக்கையில் உள்ளங்கையால் அடித்துக்கொண்டார்; புகையிலைச் சாறு புரை ஏறிவிட்டது அவருக்கு.

'என்னா இளவட்டம்டா நீ; சாகப்போற கிழவன்; இந்தாபாரு கிணுங்காமல் உக்காந்திருக்கான், நீ என்னடான்னா வாடை நடுக்குதுண்ணா கிடுகிடுண்ணு சாமியாடரே; நல்ல ஆளுதாம் போ' என்று சொல்லி வேறு ஆள் ஒருத்தனை உட்காரச்சொல்லி, ரெப்பிய குடங்களிலுள்ள தண்ணீரை எடுத்து இடைவிடாமல் மூச்சுவிட இடம் இல்லாமல் மடமடவென்று கவுண்டரின் தலையில் கொட்டினார்கள்.

விட்டுக்கொண்டே இருக்கும்போது மத்தியில் ஒரு குடம் தாமதமாகிவிட்டது, கெப்பணக்கவுண்டருக்குக் கோபம் வந்து விட்டது.

இதற்குள், வீட்டுக்கு உள்ளே பொன்னுத்தாயி ஒரு அரைக்கால் ரூபாய் நாணயத்தை எடுத்துப் புளி போட்டு விளக்கினாள். (கால் ரூபாய்க்கு அடுத்து அரைக்கால் ரூபாய் என்று ஒரு வட்ட நாணயம் சுத்தமான வெள்ளியினால் ஆனது - அமுலில் இருந்தது. பெரிய குடும்பங்களில் இப்படிக் காரியங்களுக்கு என்று பந்தோபஸ்தாக வைத்திருப்பார்கள்.) விளக்கித் துடைத்த அரைக்கால் ரூபாயை பொன்னுத்தாயி அங்கு கூடி இருந்த பெரிய பெண்களிடம் காட்டினாள். எல்லோரும் அதன் பிரகாசத்தையும் வடிவையும் பார்த்து சந்தோஷமும் திருப்தியும் பட்டார்கள்.

ஒருத்தி, நாடிக்கட்டுக் கட்டுவதற்கு என்று வெளுத்த மல்பீஸ் துணியைக் கிழித்து, அளவு சரிதானா என்று தெரிந்தவர்களிடம் காட்டிக் கொண்டிருந்தாள்.

தண்ணீர் சேந்தியவர்களும் குடங்குடமாகக் கொட்டியவர்களும் அலுத்துப்போனதால் இவ்வளவுக்குப் போதும் என்று நிறுத்தினார்கள். அண்ணாரப்பக் கவுண்டரின் தலையைத் துவட்டி உடம்பைத் துடைத்தார்கள். வைத்தியர் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு உள்ளே, கொண்டுபோங்கள் என்று சொல்லிவிட்டார்.

வேறு நார்க்கட்டிலில் படுக்கவைத்து, கட்டிலுக்குக் கீழே சாம்ராணிப் புகை போட்டார்கள். பிறகு தரையில் பழைய பாயை விரித்து அதில் கிடத்திவிட்டார்கள். குளிப்பாட்டிப் படுக்க வைத்தபிறகு கவுண்டர்

பார்ப்பதற்குச் சுத்தமாக இருந்தார். ஆடைகளெல்லாம் மாற்றப்பட்டிருந்தன. பலநாள் தூக்கமில்லாததினால் எல்லோருடைய கண்பட்டைகளும் வீங்கி இருந்தன. கவுண்டரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டார்கள். அரிக்கன் லைட்டைத் துடைத்து நன்றாகத் தூண்டிவிட்டார்கள் ஆட்களோடு பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்தக்கொண்டிருந்த பல்ராம் நாயக்கரை 'சித்திரபுத்ர நயினார் கதை'யைப் பாடச் சொன்னார்கள்.

மறுநாள் ஆயிற்று. அதற்கு மறுநாள், அதற்கும் மறுநாள், நாட்கள் ஆமையைப்போல் மெதுவாக நகர்ந்து போய்க்கொண்டே இருந்தது. அந்த உடலில், உயிர் இழையோடிக்கொண்டே இருந்தது.

*

முதலில் பயந்தவர் வைத்தியர்தான்! கவுண்டரின் மூச்சு அவருடைய நாடி சாஸ்திரத்தைக் கேலி செய்வதாக இருந்தது. வீட்டுக்காரர்களும் சுற்றத்தாரும் உண்மையிலேயே துணுக்குற்றார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள்.

அவருக்குப் பிடித்தமான பலகார பண்டங்கள் ஏதோ, அதைச்செய்து விநியோகியுங்கள் என்றார்கள். கவுண்டருக்குப் பிடித்தமான பால் கொழுக்கட்டை முதலியவற்றைச் செய்து, குழந்தைகளுக்கும் கொடுத்து அவர்களும் உண்டார்கள்.

நெருங்கிய பந்துக்களில் ஒருவரும், வயதானவரும், கவுண்டரோடு நெருங்கிப் பழகியவருமான தொட்டேரப்பக் கவுண்டர், கம்பை இரண்டு கைகளாலும் ஊன்றிக்கொண்டு வந்தார். அவருடைய தலை கழுத்தில் நில்லாமல் கிடுகிடுவென்று ஆடிக்கொண்டே இருந்தது. எல்லோரும் அவருக்கு வழிவிட்டு விலகி நின்றுகொண்டார்கள். முன் வளைந்த உடம்பின் வலதுகை கம்பைப் பிடித்துக்கொண்டிருக்க, இடதுகை விரல்களை விரித்துப் புருவங்களின் மத்தியில் ஒட்டவைத்துக்கொண்டு

கொஞ்சநேரம் அண்ணாரப்பக் கவுண்டரையே பார்த்துக்கொண்டிருந்தார். அப்புறம் கொஞ்சம் துக்கத்தால் உணர்ச்சி வசப்பட்டார். பிறகு அதே பார்வையில், கூட்டத்தில் கெப்பணக் கவுண்டரைத் தேடி, இடது கைவிரல்களினால் கிட்டே வரும்படி சைகை செய்தார். எல்லாவற்றையும் கேட்டு நிலவரத்தைத் தெரிந்துகொண்டார். பிறகு தன் நடுங்கும் குரலில் அவர் சொன்ன விஷயமாவது: 'கெப்பணா, எனக்குப் பெரிய கவுண்டரைத் தெரியும். அவர் அரும்பாடுபட்டுச் சம்பாரிச்ச நிலம் அந்த எருவடிப் புஞ்சை. அந்தப் புஞ்சையின் பேரில் அவருக்கு எவ்வளவோ பிரியம். அங்கே போயி - நீதான் போகணும் அந்த நிலத்தில் கொஞ்சம் மண்ணை எடுத்துக்கிட்டு வா. அதைத் தண்ணியிலே கரைச்சி அவருக்கு ஒரு சங்கு ஊட்டு.'

இந்தப் பேச்சைக்கேட்ட அங்குள்ள மக்களில் பலர் ஒரு சத்தியவாக்குக் கேட்டமாதிரி உணர்ச்சிகொண்டார்கள்.

அந்தக் கரிசல் மண்ணைக் கொண்டுவந்து சங்கில் சுண்டைக்காய் அளவு இட்டு அந்த ஊரின் உப்புத் தண்ணீரான குடிநீரில் கரைத்துக் கவுண்டரின் திறந்த வாயில் புகட்டினார்கள்.

அந்த மண்ணைக் கரைத்துப் புகட்டியதாலோ அல்லது தற்செயலாகவோ, மறுநாள் பின்னிரவு எல்லோரும் அலுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தபோது அந்த விவசாயி அண்ணாரப்பக் கவுண்டர் காலமானார்.

*

புஞ்சை மண்ணைக்கரைத்து புகட்டியதும் அவர் இறந்துபோனது சிலருக்கு அதிசயமாகப்பட்டது. சாவு வீட்டில் நிறைந்திருந்த கூட்டத்தில் ஒரு விவசாயிக் கிழவர் சொன்னார், 'பரம பதத்திலிருந்து தேர் ஒன்று வந்தது; ஒருத்தரை உடம்போடு கூட்டிக்கொண்டு போக வந்து இருந்த தேவதூதர்களிடம் அவர் கேட்டாராம், உடம்போடு நான் அங்கே வர

ஆட்சேபணை இல்லை; ஆனால் எனக்கு அங்கே கரிசல் நிலம் எத்தனை ஏக்கர் கிடைக்கும்?' சொன்ன கிழவர் கரிசல் நிலம் என்பதை அழுத்திச் சொன்னார்! கேட்டவர்கள் எல்லோரும் சிரித்துக்கொண்டார்கள்.

வீடு கொள்ளாததால் தெரு நிழலிலெல்லாம் ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். வீட்டினுள்ளிருந்த கூட்டத்தில் ஒரு நாலுவயசுப் பையன், மேலே ஒரு துண்டு மட்டும் கழுத்தில் 'வல்லவேட்' போட்டுக்கொண்டு அம்மணமாக வந்துகொண்டிருந்தான். பயல் சிவப்பாய், பார்க்க நன்றாகவும் துடியாகவும் இருந்தான். அவனைப் பார்க்கிறவர்கள் யார்க்கும் அவனோடு கொஞ்சம் 'வாயாட' வேணும்போலத் தோன்றும்.

கூட்டத்திலிருந்த ஒரு நரைத்த கிருதா மீசைக்காரர், முகத்தில் குறும்பு தோன்ற அவனைத் தன்னிடம் கூப்பிட்டார். அவனும் பயப்படாமல், பழகியவனைப்போல் முகத்தை வைத்துக்கொண்டு கிட்டே வந்தான்.

அவர் அவனிடம் கேட்டார்; ஆண் குழந்தைகள் அம்மணமாக வந்தால் வழக்கமாக கேட்கும் கேள்விதான். பயல் பளிச்சென்று பதில் தந்தான். கூட்டமே சிரித்து உருண்டது.

கயத்தாற்றிலிருந்து மேளம், 'ஓடக்கு' ஆடுகிறவர்கள் பிடாங்கு வேட்டுக்காரன், இவர்களுடைய 'நல்லது பொல்லது'களில் வாசிக்கிற உருமிக்காரன் முதலிய எல்லாரும் வந்துவிட்டார்கள்.

ரொம்ப வயசான கிழடுகள் இறந்துபோய்விட்டால் யாரும் அழமாட்டார்கள்! அழக்கூடாது என்று சம்பிரதாயம். ஆகையால் இன்னேரவரைக்கும் அணணாரப்பக் கவுண்டரின் புகழ்பற்றியே பேசிக்கொண்டிருந்த கூட்டத்துக்கு கயத்தாத்து மேளம் வந்தது 'அப்பாடா' என்று இருந்தது. இந்த மேளத்தில் ஒருவன் பொய்க்கால் குதிரைமேல் இருந்துகொண்டு ஒப்புவைத்து அழுவான் - அதாவது பாடுவான். அதை வாங்கிச் சத்தக் குழல்க்காரனும் கொட்டுக்காரனும் வாசிப்பார்கள். அப்போது பொய்க்கால் குதிரை அந்த இசைப்புக்கு ஏற்றமாதிரிச் சுற்றிச் சுற்றி வந்து ஆடும். திரும்பவும் அவன் ஒப்புச் சொல்லுவான்! அவர்கள் வாங்கி வாசிப்பார்கள்!

அவன் ஆடுவான்.

முதலில் கொஞ்சநேரம் மேளத்துக்கு ஆடிவிட்டுப் பிறகு பொய்க்கால் குதிரைக்காரன் ஒப்பாரி ஆரம்பித்தான்.

'கத்தரிக்காய் எங்களுக்கு

கத்தரிக்காய் எங்களுக்கு

கைலாசம் உங்களுக்கு'

டண்டணக்கு டண்டணக்கு

டண்டணக்கு டண்டணக்கு

மேளக்காரன் அடிக்கும் ஒவ்வொரு கொத்து அடிக்கும் குதிரைக்காரன் 'தாயாரே தாயாரே' என்று மார்பில் இரண்டு கைகளாலும் மெதுவாக ரொம்ப மெதுவாக வலிக்காமல்(!) அடித்துக்கொள்வான். அவன் இப்படி அடித்துக் கொள்கிறதைப் பார்த்த கூட்டத்திலிருந்த ஒரு நடுத்தர வயசுப்பொம்பிளை 'அப்பா மெள்ளப்பா! நெஞ்சிலே ரத்தம் கட்டிக்கிடாமெ!'என்று எடக்காகச் சொல்லவும் கூட்டம் கலகலத்தது; குதிரைக்காரனும் சிரித்துக்கொண்டான்.

'வாழைக்காய் எங்களுக்கு

வாழைக்காய் எங்களுக்கு

வைகுந்தம் உங்களுக்கு'

டண்டணக்கு டணக்கு

தாயாரே தாயாரே

இழவுவீடு கோலாகலமாய் இருந்தது.

கவுண்டரின் உடம்பைத் திரும்பவும் கிணற்றடிக்குக் கொண்டு போனார்கள். பண்டிதன் அவருக்கு முகச்சவரம் செய்தான். மீசையை

ஜோராகத் கத்தரித்துத் திருத்தினான். திருக்குற்றாலத்திலிருந்தும், பாபனாசத்திலிருந்தும் கொண்டுவந்திருந்த அருவித் தண்ணீர்க் குடங்களைக் கொட்டிக் குளிப்பாட்டினார்கள். 'பயணப் பீசை' உடுத்தினார்கள். நெற்றியில் திருமண் இட்டு, அரைக்கால் ரூபாயை அதில் பதித்து ஒட்டவைத்தார்கள். நாடிக்கட்டுக் கட்டினார்கள். இரண்டு கைப்பெருவிரல்களையும் சிறிய நூல் கயிற்றினால் இணைத்தார்கள். கையில் வெற்றிலை வைத்துக்கொண்டிருப்பதுபோல் இருக்க, வெற்றிலையையும் பாக்கையும் கையில் வைத்தார்கள். உதடுகளைக் குங்குமத்தால் சிவப்பாக்கினார்கள். ஒரு பெரிய செவ்வரளி மாலையை அணிவித்தார்கள்.

வீட்டின் முன்னால் பந்தலுக்குக் கீழே கூட்டம் நெருக்கியது. எதிரே மைதானத்தில் உடுக்கு ஆட்டம், எதிர்பாராதபோது திடீர் திடீர் என்று பிடாங்கு வேட்டின் உலுக்கி அதிர்ச்சியடைய வைக்கும் சத்தம்.

சாவுப்பல்லக்கு அலங்கரிக்கப்பட்டு வீட்டுக்கு முன்னால் தயாராக இருந்தது. அண்ணாரப்பக் கவுண்டரைக் கொண்டுவந்து பல்லக்கிலுள்ள நாற்காலியில் சப்பணம் போட்டபடி உட்காரவைத்து, சாய்மானத்தில் ஒரு அழுக்குத் தலையணையைப் போட்டுச் சாய்த்து வைத்தார்கள். அவரது தலை அண்ணாந்து பல்லக்கின் முகட்டைப் பார்த்தவண்ணமிருந்தது.

பல்லக்கைத் தூக்கி ஒரு கட்டைவண்டியில் வைத்தார்கள். இதனால் அவருக்குப் பின்பககம் நின்றுகொண்டு அவருடைய கொள்ளுப் பேரன்மார் இருவர் நெய்ப்பந்தம் பிடிக்கத் தோதாக இருந்தது. முன்பக்கம் இரண்டு பேரன்கள் தங்களுடைய மேல்துண்டை எடுத்து ஆட்டி 'வெஞ்சாமரை' வீசினார்கள்.

கூட்டம் வழிவிட்டு விலகி நிற்க, கைதேர்ந்த சிலம்பு ஆட்டக்காரர்கள், கம்பைப் பல கோணங்களில் பிடித்துக் காட்டி, முன்னாலும், பக்கவாட்டிலும், பின்னாலும் அளவோடு எட்டுகள் எடுத்துவைத்து நடந்து பாவலாச்செய்து கம்பைச் சுழற்றி வீசி அடித்து விளையாடினார்கள்.

ஊர்கோலம், முக்குகளில் திரும்பும்போதும், சிலம்பாட்டம் முடிந்து புறப்படும்போதும் பெண்களின் குலவை ஒலி பலமாகக் கேட்டது. வண்ணார்கள் வேகமாக ஓடி ஓடிக் கவுண்டரின் குடும்பத்தார் நடந்துவரத் தெருக்களில் சேலைகளைத் தரையில் நடைமாத்தாக விரித்தார்கள். கடகப் பெட்டிகளில் கனிந்த கதலிப்பழங்களை உதிர்த்து நிறைத்துக்கொண்டு கூட்டத்தில் சூறை போட்டார்கள். மடிநிறைய்ய சில்லறை நாணயங்களாக மாற்றி நிறைத்துக்கொண்டு கூட்டத்தில் வாரி இறைத்தார்கள். ஜனங்கள் அவைகளை ஓடி ஓடிப் பொறுக்கினார்கள்.

சவ ஊர்வலம் ஊரைவிட்டு வெளியே வந்தவுடன் கொட்டுக்காரர்கள், வழக்கமாக வாசிக்கிறமாதிரி 'அடியின் நடை'யை மாற்றினார்கள்; தூரத்திலிருந்து கேட்பவர்கள் இந்த அடிச் சத்தத்தைக் கேட்டு 'சரி கூட்டம் மயானத்துக்குப் பக்கத்தில் வந்துவிட்டது போலருக்கு' என்று யூகித்துவிடுவார்கள். சத்தக் குழல்காரனின் துயரமான இழைப்பு ஒலி; மேளத்தின் அந்தத் தட்டுதலோடு பெண்களின் குலவையும் சேரும்போது சோகம் மனசை அப்பும்.

நொடி நிறைந்த வண்டிப்பாதை. லம்பல் அதிகமாக இருந்தது. குடிமகன், முறுக்கிய மாத்தை கவுண்டரின் மேல்நெற்றியில் இறுக்கிய கட்டு கொஞ்சம் நழுவியதாலோ என்னவோ வண்டியின் லம்பலில் கவுண்டரின் தலை இடதுபக்கமாகவும் வலதுபக்கமாகவும் ஆடிக்கொண்டே போனது, 'மாட்டேன்' 'மாட்டேன்' என்று சொல்லுவது போலிருந்தது.

சோதனை, ஏப்ரல் 1973

***

# ஜீவன்

கிராமத்திலுள்ள குமரிப்பெண்டுகளுக்கு அங்குப்பிள்ளையைக் கண்டுவிட்டாலே ஒருவித குஷி வந்துவிடும்.

ஜாடை செய்து - ஒவ்வொரு வார்த்தைக்குமே ஜாடை செய்து - 'ஒனக்கு (அங்குப்பிள்ளையைக் காட்டி) கலியாணம் (தாலி கட்டுவதைப்போல கழுத்துப்பக்கம் கைகளைக் கொண்டுபோய்) எப்போ? (விரல்களை முஷ்டி மடக்கிக் குலுக்கவேண்டும்.)

இந்த 'அபிநய முத்திரை'களோடு முகபாவமும் சேர்ந்துகொள்ளும்.

ஊமைகளோடு 'பேசுவது' என்பது எல்லோருக்கும் அவ்வளவு லேசு இல்லை. வேத்துமொழி தெரிந்தவன்தான் அதைப் பேசமுடியும் என்பதுபோல 'ஊமை பாஷை' தெரிந்தவன்தான் அவர்களோடு சரளமாசப் பேசமுடியும்.

'பெண்' என்று சொல்லவேண்டுமானால் மஞ்சள் பூசுகிறதைப்போலக் கன்னத்தில் தேய்த்துக் காண்பிக்கவேண்டும் அல்லது விரலால் மூக்கின்மேல் தொட்டுக் காண்பித்து மூக்குத்தியைத் தெரியப்படுத்தவேண்டும். பருவப்பெண்ணைக் குறிப்பிட வேண்டுமென்றால், விரல்களைக் குவித்து மாரில் வைக்கவேண்டும்.

ஊமைகள் நம்மிடம் பேசும்போது அவர்களுடைய நாக்குக்குப் பதில் முகமே பாவங்களால் பேசும். அதோடு கைஜாடைகள் ஒத்துழைக்கும். தொண்டையிலிருந்து வாய் வழியாகவும் மூக்கின் வழியாகவும் முக்கல் கலந்த ஒருவித ஒலி அவர்கள் நம்மோடு 'பேசும்' போது கசிந்துகொண்டிருக்கும்.

கால்ப்பேச்சு, அரைக்கால்பேச்சு, ஊமைகளும் உண்டு. நம்முடைய

அங்குப்பிள்ளை அரைக்கால் பேச்சுஊமை. என்னை அவன் 'ஹாமா' என்று தெளிவல்லாத தேய்ந்த ஒலியால் குறிப்பிடுவான். இதற்கு 'மாமா' என்று அர்த்தம்!

என்னைக் கண்டுவிட்டால் அங்குவுக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும். 'ஹாமா' என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில் வருவான். பிரகாசத்தால் கண்கள் மின்னும்.

அவன் எப்பவும் துவைத்து நிழலில் உலர்த்திய ஒரு புழுங்க வாடையுள்ள பளுப்புநிற வேட்டியையே உடுத்திக் கொண்டிருப்பான். துண்டுக்குப் பதிலாக மேலே போர்த்திக் கொண்டிருப்பதும் ஒரு வேட்டிதான். அதை ரெண்டாக மடித்துக் குறுக்கு வசத்தில் மேலே போட்டு இடது கக்கத்துக்குள் அதன் மல்க்கோடிகளை இடுக்கிக்கொண்டிருப்பான். தங்கப்பூண் கட்டிய ஒற்றை ருத்ராட்சக் கொட்டை சிகப்புக் கயறுவில் கோர்த்துக் கட்டப்பட்டுள்ள கழுத்து. அணிலின் முதுகிலுள்ள வெண்கோடுகளைப் போலுள்ள மூன்று திருநீர்க் கீற்றுகளும், அர்ச்சனைக் குங்குமமும் அணிந்த குறுகிய நெற்றி. முன்நெற்றியில் சிரைக்கப்பட்டு கமான் வளைவு வைத்த விட்டல் கிராப். சிறு வயசிலேயே தலை முழுவதும் விரவிய பித்த நரை. எப்பவும் மயிர் கலையாமல் பின்பக்கம் சீவியமாதிரியே இருக்கும். அடிக்கடி அதனையறியாமலேயே சரிசெய்து கொள்வதுமாதிரி இடது கை தலையை தடவி விட்டுக்கொண்டே இருக்கும்.

அவனுக்கு நான்கு முன்னத்தம் பற்கள் மிகவும் நீளம். பெரியவர்களின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்போது பற்கள் தெரியாமல் மரியாதைக்காக மூடிக்கொள்ளவேண்டும் என்று நினைத்து உதடுகளால் மறைத்துக்கொண்டு 'ஊ' என்று இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். இதைப் பார்த்து யாராவது சிரித்தால் 'ம், சிரிக்காதே. மாமா அடிப்பார்' என்று ஜாடையால் சொல்லுவான். எங்கள் அப்பா பக்கத்தில் அவன் இருக்கும்போது இந்தக் 'காட்சி'யை அடிக்கடி பார்க்கலாம்.

கிராம முன்சீப் பிள்ளையின் வீட்டில் மூத்த மகன் அங்குப்பிள்ளை இளையவன் ஆதிலிங்கம்பிள்ளை. தம்பியைத் 'தப்பி' என்று சொல்லுவான்

அங்கு. தம்பிக்குத்தான் விசேஷ சலுகை வீட்டில். அங்குவைக் கண்டால் வீட்டில் யாருக்கும் பிடிக்காது; பெற்ற தாய்க்கும்கூட. சாப்பாடு நேரம் மட்டிலும் அவனைச் சாப்பிட அனுமதிப்பார்கள். பிறகு போ போ என்று ஜாடை செய்து வெளியே துரத்திவிடுவார்கள்.

தங்கள் வீட்டில் ஒரு ஊமை இருப்பது அவர்களுக்கு கௌரவக் குறைச்சலாகப்பட்டது. 'எங்க பரம்பரையிலேயே ஊமை என்று யாரும் கிடையாது. இவன் எங்கிருந்து பிறந்தானோ' என்று சொல்லுவார்கள். ஆனால் ஊருக்குள் மற்ற எல்லார் வீடுகளிலும் அவனும் ஒரு பிள்ளை என்று நினைத்து நடத்தி வந்தார்கள். நாயக்கமார்களின் வீடுகளில் எவ்வளவு பசியோடு இருந்தாலும் அவன்கை நனைக்கமாட்டான். அவனுக்குத் தன் ஜாதி உசத்தி என்ற நினைப்பு. அதோடு அவர்கள் சைவம்.

'இண்ணைக்கு எங்க வீட்லெ, (பறவை தானியத்தை தரையில் கொத்துவதுபோல சைகைகாட்டி) கோழிக் கறி சாப்பிடுறியா?' என்று என் தம்பி கேட்பான். உடனே அங்குப் பிள்ளைக்கு சிரிப்புக் கலந்த பொய்க்கோபம் வந்து, அவனை அடிக்கப்போவதுபோல பாவனை செய்வான். அப்புறம் எங்களைப் பார்த்து 'இவன் சுத்த மோசம்; சுத்த மோசம்' என்று முகத்தை வெறுப்பாக வைத்துக்கொண்டு விரல்களைத் தண்ணீரில் நனைத்து உதறுவதுபோல உதறி உதறிக் காட்டுவான்.

இதே கேள்வியை எங்கள் தங்கச்சி கேட்டிருந்தால், 'அய்' என்று மூக்கைப் பிடித்துக்கொண்டு அருவெருப்படைவதுபோல் முகத்தை மட்டும் சுளிப்பான்.

குமரிப்பெண்டுகள் தனியாக் கூடியிருக்கும் இடங்களில் அங்குப் பிள்ளை வந்து சிக்கிக்கொண்டால் அவர்கள் அவனிடம் கேட்கும் முதல் கேள்வி, 'என்னைத் தாலி கட்டுகிறாயா?' என்று அபிநயித்துக் கேட்பார்கள்! அங்கு அதற்குச் சட்டென்று மறுத்துவிடுவான்.

'சரி; இவளை?'

அவன் தனது தோளைத் தட்டிக் காண்பித்து, 'அவள் எனக்குத் தங்கச்சி, அப்படிச் சொல்லாதே' என்று கண்களால் ஆட்சேபிப்பான். (ஊமை பாஷையில் தோள்களைத் தொட்டுக் காண்பித்தால், உடன் பிறப்பு, சகோதரம் என்று அர்த்தம்.)

அந்த ஊரிலுள்ள பிள்ளைமார்; செட்டியார், நாயக்கமார்களோடு சம்மந்தவழி செய்துகொள்ளாவிட்டாலும் பெரியப்பா, சித்தப்பா, மாமா என்றெல்லாம் உறவுமுறை கொண்டாடி வந்தார்கள். ஊமையான அங்குப்பிள்ளை அந்த ஊரில் தனக்கு யார் யார் அண்ணன் தம்பி முறை, சம்மந்தகார முறை என்று தெளிவாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தது ஆச்சரியம்தான்.

நல்ல இளவட்டமான அங்குவைக் குமரிப்பெண்டுகள் விஷமில்லாத தண்ணிப் பாம்புபோல் நினைத்து நடத்தி வந்தார்கள்.

ஒருநாள் நான் மாடியில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். கீழே ஒரே கலகலப்பு. பெண்டுகளின் கெக்கொலி அலை அலையாக வந்து துளைத்துக்கொண்டிருந்தது. அன்று எங்கள் வீட்டில் புதுமணத்தம்பதிக்கு விருந்து. ஊர் அழைத்திருந்தோம், இதில் ஆண்களுக்கு அவ்வளவாக உற்சாகமிராது. பெண் எப்படி இருக்கிறாள்; என்ன புடவை; என்னென்ன நகை பொட்டுக்கொண்டிருக்கிறாள் என்பதிலெல்லாம் ஊர்ப் பெண்களுக்குத்தான் அக்கறை. இந்தமாதிரிக் காரியங்களுக்கு அழையாமலேயே வந்து கூடிவிடுவார்கள். ஆனால் இவ்வளவு கலகலப்புக்கு என்ன காரணம் என்றுதான் முதலில் விளங்கவில்லை எனக்கு. திடீரென்று 'ஹாமா, ஹாமா' என்ற அங்குவின் அபயக்குரல் கேட்டதும்தான், 'சரி பயல் வந்து மாட்டிக்கிட்டான் போலிருக்கு' என்று நினைத்துக்கொண்டேன்.

மொள்ளக் கீழே இறங்கி அவனை அவர்கள் படுத்துகிறதைப் பார்க்கவேண்டும் என்று போனேன்.

பக்கத்து அறைக்குள் புகுந்து அடைத்துக்கொண்டு ஊடுசுவரின் ஒரு

ஜன்னல் கதவைத் திறந்து ஒருச்சாய்த்து வைத்துக்கொண்டு பார்த்தேன். நானிருந்த அறைக்குள் வெளிச்சம் இல்லாததால் அவர்கள் யாரும் என்னைப் பார்க்கமுடியவில்லை.

தடிச்சி சுப்பு அவனை வெளியேவிடாமல் வழியை மறித்துக் கொண்டு அவனைப்பார்த்து ஜாடை செய்து கேட்கிறாள்; 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ?' என்று.

உனக்குத்தான் கலியாணம் ஆய்விட்டதே என்று சொல்லி அவளுடைய கழுத்தில் கிடக்கும் கயிற்றைக் காண்பிக்கிறான்.

அவள் தன் பக்கத்தில் நின்றிருந்த இளம் விதவை வெங்கடம்மாளைக் காட்டி, 'அப்போ இவளைக் கட்டிக்கோ?' என்று சொல்லுகிறாள்.

அங்கு, மேலே கையைக் காட்டி, 'அப்படிச் சொல்லாதே. சாமி கண்ணுமுழியைத் தோண்டிவிடுவார்' என்கிறான்.

'சரி, தள்ளிக்கோ, வழியைவிடு நான் போகணும் என்கிறான்' அவன்.

அவளோ நிலையில் சாய்ந்துகொண்டு ஒரு காலை நீட்டி நிலையின் மறுபக்கத்தில் மிதித்துக்கொண்டு அவனுக்குப்போக வழிவிடாமல், மீண்டும் 'என்னைக்கட்டிக்கோ; உன்னைப் பிரியமா வச்சிக்கிடறேன்' என்று சொல்லுகிறாள். உடனே அங்கு அவள்மீது ஒரு 'குண்டு' போடுகிறான்! 'உனக்குத்தான் - மீசையைத் திருகிவிடுவதுபோல் செய்து காட்டி - இரண்டு புருஷன்கள் இருக்கிறார்களே இது போதாதா! நான் வேறு வேணுமா உனக்கு?' என்று சொல்லவும் பாயில் உட்கார்ந்து கொண்டிருந்த பெண்டுகள் கூட்டம் தரையில் உருண்டு சிரிக்கிறது.

'இது'வெல்லாம் இவனுக்கு எப்படித் தெரிந்தது என்று அங்குள்ளவர் ஒருவருக்கொருவர் பார்த்து புருவத்தை மேலே ஏற்றிச் சிரிக்கிறார்கள். நானும் அசந்து போனேன்! அவள் மீசைக்கார நாயக்கரைத் தொடுப்பாக வைத்துக்கொண்டிருப்பது இவன் எப்படி அறிந்தான்? 'ஊருக்குள் நடப்பது

ஊமைக்குத் தெரியும்' என்பது சொலவடை.

ஆனால் சுப்பி விடுவதாக இல்லை. அவள், 'நிறையக் குளிச்சாக் கூதல் இல்லை' என்பதைச் சேர்ந்தவள். 'எனக்கு ரெண்டு காணாது: மூணு வேணும் எனக்கு' என்று சொல்லுகிறாள். ஆர்ப்பாட்டத்துக்குக் கேக்கணுமா. ஒருத்தி மற்றவளின் முதுகில் 'படார் படார்' என்று அடித்துக்கொண்டே சிரித்தாள்; அடி வாங்கியவள் அடித்தவளின் புஜத்தைப்பற்றி அவளைக் கீழே தள்ளிவிட்டுச் சிரித்தாள்.

அங்குவைக் கோபமும் அவமானமும் பிடுங்கியது. அந்தக் கூட்டத்தில் மூத்த, வயதான பெண்கள் இருக்கிறார்களா என்று கண்களால் தேடுகிறான்; அவர்களிடம் இந்தக் 'கொடுமை'யைப் பற்றி ஆவலாதி சொல்லவேண்டும் என்று. ஆனால் அப்படிப் பட்டவர்கள் யாரும் அங்கே இல்லை. அவன் மாடி இருக்கும் திசையில் மேலே பார்த்து 'ஹாமா' 'ஹாமா' என்று கூவுகிறான்.

தற்செயலாய் அப்பாவின் 'நிழல்' அந்தப்பக்கம் தெரிந்தது. பூவரசு மரத்தில் அந்திநேரத்தில் கூடும் ஊர்க்குருவிகளின் கெச்சட்டம், ஒரு கைதட்டால் அடங்குவதுபோல அடங்கிவிட்டது. சுப்பியை அங்கு கோமாகப் பார்த்து அவள் மாருக்கு நேராக ஒரு விரலை நீட்டி இளநியைப்போல கைகளைக் குவித்துக்காட்டி, பன்னறுவாளால் கறகறவென்று அறுக்கவேண்டும் என்று ஒரு கையின்மீது மற்றொரு கையை வைத்துக் கடுமையாக அறுத்துக் காட்டிவிட்டு ஒரே தாவில் வெளியே பாய்ந்து ஓட்டம் பிடித்தான்.

□

ஊரிலிருந்து எங்கள் மாமனார் வந்திருந்தார். அவர் வந்துவிட்டால் அங்குப்பிள்ளை எங்கேயும் பிதுங்கமாட்டான். சாப்பிடுகிற நேரம் தவிர சதா எங்கள் வீட்டில்தான் கிடப்பான். சாப்பிட்டாச்சா? என்று கேட்டால், தன் கையை நம் மூக்குக்கு அருகே கொண்டுவந்து வாசம் காட்டுவான். அப்படிக் காட்டும்போதெல்லாம் ரசத்தின் வாசனை ஜம்மென்று அடிக்கும்.

அங்குவுக்கு மோரின் மணம் பிடிக்காது. கடுங்காப்பிதான் சாப்பிடுவான். பிரிவு தெரியாததற்கு முன்னால் தாய்ப்பால் சாப்பிட்டிருப்பானோ என்னவோ!

விசேஷ நாட்களில்கூடச் சாப்பிட மறுத்துவிடுவான். அப்பா சொன்னால் மட்டும் ஒரு மடக்கு கடுங்காப்பி குடிப்பான்.

எங்கள் தொழுவுக்கு முன்னுள்ள வேப்பமரத்தடியில் மாமா ஈஸிசேரில் சாய்ந்துகொண்டிருந்தார். அது கோடைக்காலம். தரையெல்லாம் வேப்பம்பூக்கள் உதிர்ந்திருந்தன. கோழிகளுக்கு அம்மா இரைபோட்டுக்கொண்டிருந்தாள். அண்ணா மாடுகளில் பால் கறந்துகொண்டிருந்தான்.

அங்கு ரொம்ப பவ்யமாக மாமாவின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். அப்படி அவன் நிற்கும்போதெல்லாம் தொடைகளுக்குள் வேட்டியை அமுக்கி அமுக்கிச் சொருகிக்கொள்வான். அது மரியாதைக்கு அடையாளம்.

மாமா ஈஸிசேரில் படுத்துக் கைகளைத் தலைக்குமேலே வைத்துக்கொண்டு கால்களை வேகமாக ஆட்டிக்கொண்டே அங்குவைக் குறும்புக் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தார்.

பெண்கள் ஜன்னல் வழியாக 'மாமாவிடம், அதைக் கேளுங்கள் அதைக் கேளுங்கள்; என்று தூண்டிக்கொண்டிருந்தனர்.

என்னத்தைக் கேட்க? ஆயிரம் தடவை கேட்ட பழைய கேள்விதான். மாமா மட்டும் அதை ஒரு நூறுதரமாவது அங்குவிடம் கேட்டிருப்பார்.

அக்கா ஜடையைப் பின்னிக்கொண்டே அது சரியாக விழுந்திருக்கிறதா என்று பார்த்துக்கொண்டே ஜன்னல் அருகே வந்து 'அதைக் கேளுங்களேன்' என்று சொன்னபிறகு மாமா கேட்டார் அங்குவிடம்.

'கல்யாணம் எப்போ உனக்கு?'

அங்குவுக்கு முதலில் வெட்கம் வந்தது. அப்புறம் ஒரு சந்தோசம். பிறகு வழக்கம்போல் பதில். முதலில் வடக்கே தொலைவில் கையைக் காண்பிக்கிறான்; சாத்தூர். அந்த ஊரில் தனக்குச் சொந்தமுள்ள 'ஹாமா' என்று ஒரு மாமனார் இருக்கிறார். அப்புறம் கன்னத்தில் மஞ்சள் பூசகிறதுமாதிரிக் காட்டி, விரல்களைக் குவித்து மார்பில் ஒட்ட வைத்து முகத்தில் நாணத்தைக் காட்டி, அந்தப் பெண்ணைத்தான் நான் கட்டிக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறான். ஜன்னலுக்கு அந்தண்டை நிற்கும் பெண்டுகள் ஒருவரை மற்றவர் முழங்கையால் இடித்துப் புன்னகைகிறார்கள்.

'கல்யாணம் செய்தா எப்படிப் பெண்டாட்டி பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுவே?' மாமனார் ஜாடையால் தொடர்கிறார்.

'நான் மாவு ஆட்டிக்கொடுப்பேன். அவள் தோசை சுட்டுக் கொடுப்பாள். நான் பெட்டியில் எடுத்துக்கொண்டுபோய் விற்று துட்டு சம்பாதித்துக்கொண்டு வந்து அவளிடம் கொடுப்பேன்.'

'ஊமையனாக இருந்தாலும் எவ்வளவு வினயம் இருக்கிறது' என்று மாமா வியக்கிறார்.

புஸ்தகம் பிரித்துவைத்துக்கொள்வதுமாதிரிக் காட்டி அதில் எழுதுவதுபோல் செய்து, நீ கிராம முன்சீப் வேலை பார்க்கலையா?' என்று கேட்கிறார். 'இல்லை, தம்பி நல்லாப் படிக்கிறான்' என்று பரம திருப்தியோடு சொல்லுகிறான் அங்கு. தான் ஊமையாக இருப்பதால் அந்த வேலை பார்க்கமுடியாது என்று தெரிந்தே வைத்திருக்கிறான்.

அங்கு எவ்வனவுக்கு சாதுவோ அவ்வளவுக்கு மூர்க்க மானவன். அவனை ஊமையாக இருக்கிறாயே நீ என்று கேலி செய்யக்கூடாது. மூக்கைச் சொறிந்து காட்டினால் இப்படி அர்த்தம். ஒருதடவை தலையாரித் தேவரின் மகன் தெரியாத்தனமாய் அங்குப்பிள்ளைக்கு எதிரில் மூக்கைச் சொறிந்து காண்பித்துவிட்டான். அவ்வளவுதான். விறகுக் கம்பால் ஒரே போடு. பையன் பிழைத்தது மறு பிழைப்பு. அதிலிருந்து யாரும் மறந்தும் மூக்கை

அவன் எதிரில் - ஊறல் எடுத்தாலும்கூட! - சொறிந்துகொள்ள மாட்டார்கள்.

'வடக்கே இப்படி ஓர் ஊரில் தனக்கு வாக்கப்பட ஒரு பொண் இருக்கிறாள்' என்ற விபரம் அங்குப்பிள்ளையின் தம்பி கல்யாணம் வரைக்கும் நாங்கள் உண்மை என்றே முச்சூடும் நம்பி இருந்தோம் அங்குப்பிள்ளையைப் போலவே.

தம்பி ஆதிலிங்கம் பிள்ளையின் கலியாணத்தின்போதுதான் அது இல்லை என்று தெரியவந்தது. அங்குவின் சிறிய வயசில் அவனுடைய தகப்பனார் கற்பனையாக அவனுக்கு வேடிக்கைக்காகச் சொன்னது அது! அதை அவன் உண்மை என்றே மனதார நம்பிவிட்டான்.

ஆதிலிங்கத்துக்குக் கலியாணம் என்றபோது தனக்கும் சேர்த்தே கலியாணம் என்று நம்பி இருந்தான் அங்கு.

கல்யாண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது எங்கள் அப்பாவிடம் வந்து அங்கு தனக்குக் கலியாணம் என்று பெருமையோடு சொன்னான். நாங்கள் எல்லோரும் அது நிஜம் என்றே நினைத்தோம். (ஆனால் பொதுவாக ஊமைகள் யாருக்கும் அநேகமாகக் கல்யாணம் ஆவது இல்லை.)

அப்பா அம்மாவிடம் பெரிய கிராம முன்சீப் பிள்ளையை ரொம்ப சிலாகித்துப் பேசினார். 'பிராயம் அடைந்தபிறகு ஆண் ஆனாலும் பெண்ணானாலும் கலியாணம் ஆகாமல் இறந்து போவது இந்த உலகத்தில் பெரிய பாவம்' என்று சொன்னார். ஆணுக்கும் கன்னி கழிந்த பிறகே மரணம் சம்பவிக்கவேண்டும் என்று சொன்னார். அப்பா இப்படிப் பேசியது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. அவர் விஷயத்தின் முற்பகுதி அவளுக்கு உடன்பாடுதான். ஆனால் அச்சானியமாகச் சாவு அது இது என்று அவர் சொல்லியிருக்க வேண்டாம். ஆனால் அம்மா முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தது, இதுக்காக இல்லை என்று யூகித்தேன். ஒருவேளை அங்குவைக் கல்யாணம் செய்யப்போகும் பொண்ணுக்குப் பரிதாபப்பட்டு அப்படி இருந்திருக்கலாம். ஆனால் அம்மா

அடிக்கடி சொல்லுவாள் அப்பாவுக்குக் கறுநாக்கு என்று. அது சரியாகிவிட்டது.

கிராம முன்சீப் பெரியபிள்ளை, கல்யாண சம்மந்தமான ஏதோ ஒரு விஷயமாக அவசரமாக அப்பாவைப் பார்க்க வந்திருந்தார். அப்போது பெரிய பிள்ளையை அப்பா பாராட்டினார். அதைக் கேட்ட பிள்ளைவாள் முகத்தில் ஒரு கலவரம் பரவிப் பிறகு அது சிரிப்பாக வந்தது. 'அந்தக் கோட்டிச் சுடுகாட்டுக்கு அது ஒண்ணுதான் குறைச்சல்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். கல்யாணவீட்டு வாசலில் ஒரு பெட்டி வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பொண்தான் இறங்கியது; இரண்டு இல்லை.

அங்கு அவனுடைய தகப்பனாரிடம்போய் 'என்ன விஷயம் ஒரு பொண் வந்திருக்கிறதே' என்று விசாரித்தான்.

'போடா உள்ளே, மூச்சுக்காட்டினால் அறைஞ்சு தள்ளிடுவேன்'

என்று கையை ஓங்கினார்.

அங்கு அம்மாவிடம் போய் விசாரித்துத் தெரிந்துகொண்டான். தனக்குக் கல்யாணம் இல்லை; தம்பிக்கு மட்டும்தான் என்று,

'வடக்கே ஊரிலிருக்கும் மாமாவின் பொண் என்னாச்சு' என்று கோபமாய்க் கேட்டான்.

அப்போதுதான் அந்தத் தாய் திடுக்கிட்டாள். அவளுக்கு ஒருபக்கம் துக்கம் பொங்கி வந்தது. குடும்பத்தோடு சேர்ந்து செய்த தப்பிதங்களுக்காகப் பச்சாதாபப்பட்டாள்.

அங்கு அந்தக் குடும்பத்தில் பிறந்த பாவம் ஒன்றுதான். அவன் ஊமை என்று தெரிந்த நாளிலிருந்து வெளியூருக்குக்கூட அவனைக் கூட்டிக்கொண்டு போகமாட்டார்கள். அவன் சாப்பிட்டான்! ஊருக்குச் சொன்னபடி கேட்டான். தேருக்கும், திருவிழாவுக்கும், நடந்து போயே

திரும்பி வந்துவிடுகிற வெளியூர்களுக்கெல்லாம் மற்ற குடும்பத்தாரோடேயேதான் போய்வந்தான்.

எவ்வளவுக்கெவ்வளவு அவனுடைய குடும்பத்தார் அவனை அலட்சியப்படுத்தினார்களோ, தள்ளிவைத்தார்களோ அவ்வளவுக்கு அவன் தன் குடும்பத்தாரை நேசித்தான், போற்றினான், விசுவாசமாக இருந்தான்.

அங்கு அழுதுகொண்டே எங்கள் அப்பாவிடம் ஓடி வந்தான். இதற்கு முன்னால் ஊமைகள் அழுது நான் பார்த்ததில்லை. அவன் தொண்டையிலிருந்து சப்தமே வெளிவரவில்லை. வெறும் காற்றுதான் வந்துகொண்டிருந்தது; சிலசமயம் ஒரு கோரமான ஒலி வெளிவந்தது. ஆவென்று வாயைத்திறந்துகொண்டு கண்களை இறுக்க மூடிக்கொண்டே அழுதான். அவனைச் சுற்றி ஒரு வேடிக்கை பார்க்கும் கூட்டம். அது எங்கள் அப்பாவுக்கு பயந்து கொண்டு தெருவோடு நின்றுகொண்டது. எங்கள் அம்மாவைப் பார்த்ததும் அங்குவின் அழுகை அதிகமாயிற்று.

அப்பாவுக்கு என்ன செய்கிறதென்று தெரியவில்லை. அவர் அம்மாவைப் பரிதாபத்தோடு பார்த்தார். அம்மா முந்தானையால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள். அப்பா அங்குவிடம் ஜாடை செய்து 'அழாதே; அழாதே' என்றார்.

'நீ அங்கே போகவேண்டாம். அவர்கள் சுத்த மோசம் இங்கேயே என் வீட்டில் இரு' என்று சொன்னார்.

'உனக்குக் கலியாணம் நான் செஞ்சிவைக்கிறேன்; வருத்தப் படாதே. அழாதே, கோட்டிப்பிள்ளை, இதுக்கு ஏன் அப்படி அழுறே?' என்றெல்லாம் சொன்னார்.

ஆதரவோடு அவனுடைய புஜத்தைத் தடவிக்கொடுத்த எங்கள் அப்பாவின் கையை அவன் அலட்சியமாகத் தள்ளினான். 'என்னைத் தொடாதே,' என்கிறமாதிரிப் பார்த்தான். 'நீயும் எங்க அப்பாவோடு சேர்ந்தவன்தான், தெரியும் எனக்கு' என்று சொல்லுகிறது போலிருந்தது.

அழுதுகொண்டேயிருந்தவன் அவனாகவே சட்டென்று அழுகையைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு எங்கள் யாரிடமும் சொல்லாமல், யாரையுமே பார்க்காமல் 'விறு விறு' என்று புறப்பட்டுவிட்டான்.

அப்பா என்னைப் பார்த்துத் தலை அசைத்து அவர் அருகே கூப்பிட்டார். 'அவன் கூடவே போ; அவனைத் தனியே விட்டுராதே' என்று வேகமாகவும் மெதுவாகவும் சொன்னார்.

அங்கு ஒரேசீராய் நடந்து போய்க்கொண்டிருந்தான். தரையில் அவன் எடுத்து வைத்த காலடி வழக்கமாக இல்லாமல், பதித்து நடந்த மாதிரி இருந்தது.

அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் அங்கு ஒரு பெரிய தடியான விறகுக்கட்டையை எடுத்துக்கொண்டு சமையல்ப் பிறை சட்டி பானைகளையெல்லாம் அடித்து நொறுக்க ஆரம்பித்தான். பெண்டுகள் பயந்து கூப்பாடு போட்டுக்கொண்டு வெளியே ஓடினார்கள்.

அங்குவின் தகப்பனார் பெரிய பிள்ளை ஓடிவந்தார். 'கிட்டே வந்தாயோ ஒரே போடுதான்' என்று அவரிடம் விறகுக்கட்டையைக் காண்பித்தான் அவன்.

நான் போய் அவனைப் பிடித்தேன். ஒரே தள்ளு, தூரப் போய் விழுந்தேன், 'அடே பாவி; எவ்வளவு பலம் இருக்கிறது இவன் உடம்பில்!'

கல்யாண வீடு கலக வீடாகிவிட்டது ஒரு நிமிட்டில். கிராமத்து இளவட்டங்களில் சிலபேர் வந்து அங்குவை லாவகமாகப் பிடித்து தூக்கிக்கொண்டு வந்தார்கள். அவன் கையிலுள்ள விறகுக்கட்டையைத் திருக்கிப் பிடுங்கக் கொஞ்சம் சிரமப்பட்டார்கள். அப்படியே அவனை ஒரு அறைக்குள் தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டார்கள்.

கல்யாணம் சுபமாக முடிந்தது. முகூர்த்தத்துக்கு வந்திருந்த அப்பாவிடம்

தனியாக நான் நடந்த இதையெல்லாம் சொன்னேன். அப்பா திடுக்கிட்டுப்போனார். 'இப்போ அவன் எங்கே?' என்று அவசரமாய்க் கேட்டார். ரூமுக்குள் அடைப்பட்டிருப்பதைக் காட்டினேன். அப்பாவின் முகம் வாடிவிட்டது. பெரிய பிள்ளையைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொன்னார். அங்கு அலங்கோலமாகத் தரையில் விழுந்துகிடந்தான். அவன் இறந்து போய்விட்டானா, மயங்கிக்கிடக்கிறானா என்று தெரியவில்லை. வேட்டி பூராவும் முன்பக்கத்தில் ரத்தத்தால் நனைந்து இருந்தது. உடம்பில் எங்கும் காயம் தட்டுப்படவில்லை எங்களுக்கு.

கொஞ்சம் விலகியிருந்த நனைந்த வேட்டியை நீக்கிப் பார்த்தபோது தான் தெரிந்தது. ஏதோ ஒரு கழிப்பட்ட இரும்புத் தகட்டினால் அங்கு தன்னுடைய 'உயிர்த் தலத்'தை அறுத்து விட்டான்.

'பாவீ, கெடுத்திட்டியேடா காரியத்தை' என்று பதறினார் அப்பா.

அவர் அப்படிச் சொன்னது அங்குவைப் பார்த்தா, பெரிய பிள்ளையைப் பார்த்தா?

பெரியபிள்ளையைப் பார்த்துச் சொன்னதாகத்தான் பட்டது எனக்கு.

அக்-ஜூன், 1972

***

# சந்தோஷம்

முன்னையனுக்கு எட்டு ஒம்பது வயசிருக்கும். தன் தகப்பனாருடைய சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டிருந்தான். அது அவனுக்கு, வேதக்கோயில் சாமியாரின் அங்கிமாதிரிப் பெரிசாய் இருந்தது. எண்ணெய் அறியாத செம்பட்டை ரோமம் கொண்ட பரட்டைத் தலை. அந்த தலையின் மேல் ஒரு கோழிக்குஞ்சுவை வைத்துக்கொண்டு அந்தக் கிராமத்தின் இடுக்காட்டமுள்ள ஒரு தெருவில் அந்தக் கடேசிக்கும் இந்தக் கடேசிக்குமாக

'லக்கோ லக்கோ'

'லக்கோ லக்கோ' என்று சொல்லிக்கொண்டே ஓடி ஓடி வந்துகொண்டிருந்தான்.

'லக்கோ' என்ற சொல்லுக்குத் தமிழில் என்ன அர்த்தம் என்று அவனுக்கும் தெரியாது; யாருக்கும் தெரியாது! அது, அவனால் சந்தோஷம் தாளமுடியாததினால் அவனை அறியாமல் அவன் வாயிலிருந்து வந்த ஒரு வார்த்தை. அந்தமாதிரியான வார்த்தைகளுக்குத் 'தாங்க முடியாத சந்தோஷம்' என்பதைத் தவிர வேறு அர்த்தம் கிடையாது.

அவன் தலையில் வைத்துக்கொண்டிருந்த அந்தக் கோழிக்குஞ்சு ரொம்ப அழகாக இருந்தது. பிரமாசமான ஒரு அரக்குக் கலரில் கருப்புக் கோடுகளும் வெள்ளைப்புள்ளிகளுமாகப் பார்க்கப் பிரியமாக இருந்தது. அதனுடைய கண்களின் பின்பக்கத்தில் மிளகு அளவில் ஒரு சின்ன வட்டவடிவக் கோடு அதன் அழகை இன்னும் அதிகப்படுத்தியது.

முன்னையனுடைய தகப்பன் அந்தச் 'சாதிக்கோழி'க் குஞ்சுவுக்காகத் 'தபஸ்' இருந்து, மேகாட்டில் தனக்குத் தெரிந்த்வர்களிடமெல்லாம் சொல்லி வைத்து, இரண்டு 'சாதிக்கோழி' முட்டைகளுக்கு நடையாய் நடந்து,

எத்தனையோ நாட்கள் காத்திருந்து, கொண்டுவந்து தனது அடைக்கோழியில் வைத்துப் பொரிக்கப்பட்ட குஞ்சு அது.

வீட்டில் யாரும் இல்லை. எல்லோரும் பருத்திக்காட்டுக்குப் பருத்தி எடுக்கப்போயிருந்தார்கள். தெருவில் ஆள் நடமாட்டமே இல்லை. தூளியில் தூங்கும் சிறுகுழந்தையைப் பார்த்துக்கொள்ள அவன் மட்டும் இருந்தான். கோழிக்குஞ்சுவை வைத்துக்கொண்டு இப்படி விளையாடிக் கொண்டிருக்கிறான்.

முன்னையனுக்குக் குஷி பிடிபடவில்லை. கோழிக்குஞ்சுவுக்கு பயம். அது அவனது தலைமயிற்றைக் கால் விரல்களால் பற்றிக் கொண்டது. அவனும் அதனுடைய கால்விரல்களைத் தலையில் அழுத்திப் பிடித்துக்கொண்டு 'லக்கோ லக்கோ' என்று சொல்லிக் கொண்டு, மறுக்கி மறுக்கி ஓடிவந்தான்.

அந்தவேளையில்அங்கே வந்த மூக்கன் இந்தக் காட்சியைப் பார்த்தான். அவன் மனசையும் அது தொட்டது. சிரித்துக் கொண்டே பார்த்தபடி நின்றான்.

மூக்கனுடைய சொந்தப் பெயர் யாருக்கும் தெரியாது. கடவுள் அவனை அவன் அம்மாவின் வயிற்றுக்குள் அனுப்புமுன் அப்பொழுதுதான் அவன் செய்து முடிக்கப்பட்டிருந்தான். இன்னும் சரியாகக்கூடக் காயவில்லை. பச்சை மண்ணாக இருந்தான். அப்பொழுது அவன் மரியாதையில்லாமல் கடவுளைப பார்த்துச் சிரித்தானாம். அவருக்குக் கோவம் வந்து விட்டது. லேசாக மூக்காந் தண்டில் ஒரு இடி வைத்தாராம். உடனே மூக்கின்மேல் மத்தியில் பள்ளம் விழுந்துவிட்டதாம். மூக்கன் அப்படியே பிறந்தான். பிறந்த உடனேயே அவனுக்கு அந்தப் பெயர் நிலைத்துவிட்டது. இப்பொழுதுகூட அவன் யாரையாவது பார்த்துச் சிரித்தாலும் மூக்காந்தண்டில் ஒரு குத்துவிடணும்போலத்தான் இருக்கும்; இந்த அழகில் அவனுக்கு முகம் நிறையச் செம்பட்டை மயிர் கிருதா மீசைவேறு.

மூக்கன் மீசைக்குள்ளேயே சிரித்துக்கொண்டு முன்னையனைத் தன்

அருகே இழுத்து நிறுத்திப் பிரியத்தோடும் அதிசயத்தோடும், 'ஏது இந்தக் கோழிக்குஞ்சு? ரொம்ப நல்லா இருக்கு!', என்று கேட்டான்.

முன்னையன் சந்தோஷ மிகுதியால் இப்படிக்கூடி இந்தக் கோழிக் குஞ்சை ஒரு பெரிய்ய பிறாந்து தூக்கிட்டு போச்சி நான் அதைத் துரத்திக்கிட்டே ஓடுனேன். அது கீழே போட்டுட்டுப் போயிருச்சி, என்று சொன்னான்.

'ஐய்யோ இது என் குஞ்சுமாதிரி இருக்கே; இந்தக் குஞ்சைத் தேடித்தான் அலையுதேன் பிறாந்தா தூக்கிட்டு போனது; நீ நல்லாப் பாத்தியா?' என்று அவனுக்கு அந்தக் கோழிக்குஞ்சைப் பார்த்த மகிழ்ச்சியில் ஒரு பொய் சொன்னான்.

' . . . கண்ணாணை சொல்லுதேன். செத்த மிந்திதான் தூக்கீட்டுப் போனது. எம்புட்டு ஒசரம் அந்தப் பிறாந்து பறந்ததுண்ணு நினைக்கே! கல்லைக் கொண்டியும் கட்டியைக் கொண்டியும் எறிஞ்சேன். ஒரு கல்லு அதந்தலையில் உரசிக்கிட்டுப்போனது. 'சரி, இவன் இனி விடமாட்டா'ண்ணு கீழே போட்டுட்டது. அப்படியே பிடிச்சிக்கிட்டேன்', என்று நோட்டப்பார்வை பார்த்தான்.

முன்னையனும், யாராவது வருவதற்கு முன்னால் அதை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று நினைத்து, 'இது ஒங்குஞ்சா. சரி; கொண்டுபோ' என்று சொல்லி மூக்கனுடைய கைகளைக் குஞ்சோடு சேர்த்துத் தள்ளினான். அது, 'சீக்கிரம் கொண்டு போய்விடு' என்று சொல்லுவதுபோலிருந்தது.

மூக்கன் மடியில் குஞ்சைப் பதனமாகக் கட்டிக்கொண்டு புறப்பட்டான்.

முன்னையனுக்கு இப்பொழுதுதான், தன்னுடைய சந்தோஷம் நிறைவுபெற்றதாகப்பட்டது.

மூக்கனுக்குத் தொழிலே கோழி பிடிப்பதுதான். இதைத் தெரிந்து முன்னையன் அவனுக்குக் கொடுக்கவில்லை. யார் வந்து அந்த சமயத்தில்

கேட்டிருந்தாலும் அவன் கொடுத்திருப்பான்.

*

மூக்கன் வேலைக்கே போகமாட்டான். பேருக்கு ஒன்றிரண்டு கோழிகளை விலைக்கு வாங்குகிறதுமாதிரி வாங்கிக் கோழிக் கூடையில் போட்டு மூடிக் கோவில்பட்டிக்குக் கொண்டுபோய் விற்பான். ஆனால் அவன் அதைச் சாக்காக வைத்துக்கொண்டு கள்ளத்தனமாகத் திருட்டுக்கோழிகளைப் பிடித்து விற்றுச் சம்பாதிப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான்.

கிராமத்தில் மக்கள் காட்டுவேலைக்குப் போனபின்தான் மூக்கன் எழுந்திருந்து தன் குடிசையைவிட்டே வெளியே வருவான். ஆள் நடமாட்டம் இல்லாத இடமாகவும் கோழிகள் குப்பையைக் கிளறிக்கொண்டு மேயும் இடமாகவும் பார்த்துத் தன்னுடைய வேட்டையைத் தொடங்குவான்.

ஒரு வெங்காயத்தில் முள்ளைக் குத்திப் போடுவான். அதற்கு முன்பாக முள்ளைக் குத்தாத ஒன்றிரண்டு வெங்காயத்தையும் போடுகிறதுண்டு. முள்ளைக் குத்திய வெங்காயத்தை எறிகிறதிலும் ஒரு சாமர்த்யம் வேணும். முள் ஒருச்சாய்ந்து அது ஓடிவந்து ஆவலோடு கொத்தும்போது அதன் உள்மேல் அண்ணத்தில் குத்துகிறாப்போல் அமையவேண்டும். மூக்கனுக்கு இதெல்லாம் சாதாரணம்.

வாய்க்குள் நிரம்பிய வெங்காயமும் குத்திய முள்ளுமாக இருக்கும்போது கோழி, அதிர்ச்சியாலோ அபாயக்குரல் எழுப்ப முடியாமலோ போய்விடுகிறது. கோழி செயலற்றுப்போய் அப்படியே இருக்கும். ஒரு சிரமமும் இல்லாமல் எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு மறைத்துக்கொண்டு வந்துவிட வேண்டியதுதான்.

இது பகல் வேட்டை. மூக்கன் ராவேட்டைக்கும் போவான். ராவேட்டைக்கு முள்ளும் வெங்காயமும் வேண்டியதில்லை. ஒரு ஈரத்துணியே போதும். அதில் கவனிக்க வேண்டிய விஷயம், கோழிகள் நெருக்கமாக ஒன்றோடு

ஒன்று ஒட்டாமல் தனித்து நிற்கவேண்டும். திடீரென்று அதன்மேல் ஈரத்துணியைப் போட்டதும் அது சப்தம் எழுப்புவதில்லை, அப்படியே சுருட்டிக் கொண்டு வந்துவிடவேண்டியதுதான்.

மூக்கன் அந்தக் குஞ்சைத் தன் குடிசைக்குக் கொண்டுவந்து தண்ணீரும் உணவும் வைத்தான். தாயைக் காங்காத குஞ்சு 'கிய்யா, கிய்யா' என்று கத்திக்கொண்டே இருந்தது.

மூக்கனின் பெஞ்சாதி மாடத்தி பருத்திக்குப் போய்விட்டு வந்தாள். குடிசைக்கு முன்னாலுள ள்ள பானையடிக்குப் போய், மாராப்பை நீக்கிவிட்டு ஒரு அரைக்குளிப்புக் குளித்துவிட்டு வந்தாள். அன்று அவள் ஏழுதரத்துக்கு பருத்தி எடுத்திருந்தாள். அதுவும் தண்ணீரின் குளுமையும் சேர்ந்து ஒரு கெந்தளிப்பான மனநிலையில் குடிசைக்குள் வந்தாள்.

பொங்கிப்போயிருந்த புருஷனையும் தீனி வைத்துக் கொண்டிருந்த கோழிக்குஞ்சுவையும் பார்த்தாள். அவனை இடித்துத் தள்ளிவிட்டு அந்த அழகான குஞ்சை ஆச்சரியமும் ஆனந்தமும் பொங்க எடுத்து மடியில் வைத்துக்கொண்டாள். மனித வெதுவெதுப்பை அனுபவித்த குஞ்சு தன் அனாதரவான நிலைமாறி இனிமைக் குரல் கொடுத்து அவளோடு ஒட்டிக் கொண்டது.

'ஏது இது?' என்று தலையை மட்டும் அசைத்து மூக்கைச் சுரித்துப் புருவத்தை வளைத்துத் தலையாலேயே கேட்டாள்.

'மேலூர் சின்னக்கருப்பன், இது பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து மண் எடுத்துக் கொண்டாந்து அடைகாக்க வச்ச குஞ்சு; கட்டாயம் நீ இதை வச்சிக்கிடனும்ண்ணு குடுத்தான்' என்றான்.

அவள், தான் அவனிடம் சொல்லப்போகும் வார்த்தைகளுக்காக வேண்டி அவன் சொன்ன அந்த வார்த்தைகளை அங்கீகரித்தாள்! பிறகு அவள் சொல்லுவாள், 'என் உடன்பிறந்தான் ஒரு சாவல் வச்சிருந்தான், நல்ல பச்சை நிறம். இந்தச் சில்லாவிலேயே அதுக்குச் சோடி கெடையாது. அது

பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை மண்ணை எடுத்துகிட்டு வந்து, நல்ல அக்கினி நட்சத்திரத்திலே அடைகாக்க வச்சிப் பொரிச்ச குஞ்சாக்கும் அது. அதோடகூட வச்ச அம்புட்டு முட்டைகளும் கூ முட்டையாப் போச்சு. அது ஒண்ணுதான் குஞ்சானது. சீமைச்சஜ்ஜூ பொஞ்சாதி வந்து ஆயிரம் ரூவாய்க்கு அந்தச் சாவலை ஆசைப்பட்டுக் கேட்டா. தலை ஒசரம் பவுனாக் குவிச்சாலும் நாந் தர முடியாதுண்ணு சொல்லீட்டான்,' என்று பொங்குதலாகச் சொன்னாள்.

அவள், சொல்லுகிறது பொய் என்று மூக்கனுக்கும் தெரியும். அவளுக்கும் தெரியும். ஆனால் அதை நிஜம்மாதிரியே நினைத்து இருவரும் ஏற்றுக்கொண்டார்கள்! இரண்டு மனித வெதுவெதுப்பில் மூழ்கி, தனது அடைக்கலக்குரல் முனகலைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பைய்ய நிறுத்தி, கண்களை மூடி அந்த இதமான வெப்பத்தில் ஓய்வு எடுக்க ஆரம்பித்தது அந்த அழகிய சின்னக் கோழிக்குஞ்சு.

கணையாழி, ஜூலை, 1972

***

# கறிவேப்பிலைகள்

அந்த வங்கிழடு தம்பதியருடைய சொந்தப் பெயர்களை மறந்தே போய்விட்டது கிராமம். பப்பு தாத்தா தம்பதியர் என்று சொன்னால்தான் தெரியும். தனித்தனியாகச் சொல்வதென்றால், அந்தத் தொண்டுக்கிழவரைப் பப்பு தாத்தா என்றும், அந்தத் தொண்டு கிழவியைப் பப்புப் பாட்டி என்றும் வயசானவர்களிலிருந்து குழந்தைகள் வரை அழைத்தார்கள்.

அவர்களைப் பார்க்கும்போது உலர்ந்த பழங்களின் ஞாபகம் வரும்.

பேரீச்சம்பழ நிறத்திலுள்ள அவர்களுடைய உடம்பின் தோல்களில் கணக்கில்லாத மச்சங்கள்; கருப்பு, சிகப்பு நிறத்திலும் கருநீல நிறத்திலும் உடம்பின் சில பகுதிகளில் வறண்ட பாலுண்ணிகள் நிறைந்திருந்தன. முகத்தில் சில இடங்களில் சிலந்தி வலையின் நிழலை ஞாபகப்படுத்தும் கோடுகள். தென்னம்பாளையின் காய்ந்த ஓட்டின் மேலுள்ளதைப் போன்ற நெருக்கமான நேர்கோடுகள்; பனைமரத்தின் சில்லாடையிலுள்ளதைப்போல் சதுரக்கட்டங்கள்; இப்படி உடம்பெங்கிலும் வயோதிகத்தினால் விழுந்த கோடுகள் நிறைந்திருந்தன.

பப்பு தாத்தா, இழவு, கல்யாண வீடுகளில் சாப்பிடும்போது பல தடவைகள் பருப்புக் கறியையே மாறி மாறி வாங்கி விரும்பிச் சாப்பிடுவார். அதிலிருந்து அவருக்கு பருப்புத்தாத்தா என்று ஏற்பட்ட பெயர் நாளடைவில் குழந்தைகளின் மழலை உச்சரிப்பில் அந்தப் பெயர் பப்புதாத்தா என்று ஆகிவிட்டது.

விடாமல் ஒரு குழந்தை அழுதுகொண்டே இருந்தால் அதனுடைய தாய் கடைசியில் 'பப்பு தாத்தாவைக் கூப்பிடட்டுமா? என்று கேட்பாள்.

*

அந்தத் தம்பதியர் பஞ்சம் பிழைப்பதற்காகக் கீகாட்டிலிருந்து இந்த ஊருக்கு வந்தவர்கள். அப்படியே இங்கேயே இருந்துவிட்டார்கள்.

அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் எங்கிருந்தாலும் ஒண்ணுதான். அவர்கள் கூலி வேலை செய்யும் விவசாயக்கூலிகள். எந்த உடமையும் அவர்களுக்குக் கிடையாது. கைகள் ஒன்றுதான் அவர்களுடைய உடமை. அவைகள்தான் அவர்களுடைய மூலதனம்.

தலைக்கோழி கூப்பிட எழுந்திருக்கணும். எதாவது ஒரு 'மகராஜன்' விட்டில்போய், பருத்திமாரால் தொழுவத்தைத் தூத்துப் பெரிய கூடைக்கு ஒரு நாலைந்து கூடை குப்பையைக் கொண்டுபோய்க் குப்பைப்குழியில் தட்டணும். கடேசிக் கூடையைக் குப்பைக்குழியில் அப்படியே தட்டியமானைக்குக் கூடையை வைத்துவிட்டு, கோமணத்தை அவிழ்த்து அங்கேயே வெளிக்கு இருந்துவிட்டு, முதல் துப்புரவாக ஒரு கல்லை எடுத்துத் துடைத்துக் கோமணத்தைக் கொஞ்சம் தொய்வாகப் பாய்ச்சிக் கொள்ளவேண்டியது. கூடையை எடுத்துக்கொண்டு நேரே கம்மாய்க்கரைக்குப் போய், போகும்போதே பல் குச்சி நீளத்துக்கு ஒரு கம்மந்தட்டையை எடுத்து அதன் கணுவுக்கு மேலாக ஒரு விரல்லிட்டு ஒடித்து அதை மென்று பல்லைத் தேய்த்துக் கொண்டேபோய், கம்மாய்க்கரைக்குப்போய், கம்மாய்க்குள் அரை முழங்கால் அளவு தண்ணீரில் நின்றுகொண்டு முதல் காரியமாய் 'கால்' கழுவிவிட்டு; பிறகு வாய், மூஞ்சி, கைகால் கழுவிக்கொண்டு கூடையையும் சும்மாட்டுக்குப் பதிலாக மடித்துப் போட்டுக்கொண்ட சாக்கையும் எடுத்துக்கொண்டு தொழுவுக்கு வருவார்.

பருத்திக்கொட்டையை ஆட்டி மாடுகளுக்கெல்லாம் தண்ணீர் காட்டிவிட்டு, வீட்டுக்குப்போய் கஞ்சி குடித்துவிட்டு, நிறைய நீத்துத் தண்ணீரும், அதில் மிதக்கும் தேங்காய் பருமனில் போடப்பட் இரண்டு மூன்று கம்மஞ்சோற்று உருண்டைகளும் கலயத்தின் வெளிப்புறத்தில் ஒட்டிவைக்கப்பட்ட துவையலுமாக கஞ்சிக் கலயத்தைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கோட்டேரைப் போட்டுக் கொண்டு போனால் சாயந்திரம் வீடு திரும்புவார்.

*

தங்களுடைய நாளில் அந்தத் தம்பதியர் தங்களுக்காக செய்து கொண்ட ஒரே ஒரு காரியம் தங்களுக்கு என்று அவர்கள் ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டதுதான். அந்த ஊருக்கு மத்தியில் ஒதுக்குப்புறத்தில் ஓர் இடத்தில் கேட்பாரற்று ஒரு சிறிய காலியிடம் இருந்தது. அந்த இடத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தபோது யாரும் ஆட்சேபணை செய்யவில்லை; உதவிகள் செய்தார்கள். இரண்டு நல்ல பாட்டாளிகள் தங்களோடு இருப்பதை யாவருமே விரும்பினர்.

பப்பு தாத்தாவுக்கும் அவருடைய மனைவிக்கும் அப்பொழுது நல்ல பிராயம். நத்தத்து மண்ணை கூடைகளில் இருவருமே தலைச்சுமையாகவே கொண்டு வந்தார்கள். வேலைக்குப் போய்வந்த மிச்சநேரத்தில் இந்த வேலை.

குளத்திலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து குடம் குடமாக கொட்டி மண்ணை ஊறவைத்தார்கள். அப்புறம் மிதி. பப்பு தாத்தா பாடிக்கொண்டே மண்ணை மிதிப்பார். அவருடைய மனைவி மண்ணை உருட்டி உருட்டிக் கொடுக்க அவரே படை வைத்தார். பத்தடி நீளம் எட்டடி அகலம். இப்படியாக தினம் தினம் கொஞ்சமாக மண் ஆற ஆற வைத்துக்கொண்டே வந்து, நெஞ்சு உயரம் வந்தவுடன் நிறுத்திவிட்டார்கள். அப்புறம் கூரை; பனை ஓலைகளால். இடுப்பு உயரமுள்ள வாசல். குனிந்துதான் போய்வரணும். ஜன்னல் கிடையாது. எதுக்காக வேணும் ஜன்னல்? காற்று வசதி இல்லாதவர்களுக்கல்லவா அது வேணும்? பதினாறு மணிநேரம் திறந்தவெளியிலும் காற்றிலேயும் லோலாயப்பட்டு வருகிறவர்களுக்குக் காற்றே இல்லாமல் இப்படி ஒரு அமுக்கமாக முடக்கி எழுந்திருக்க ஒரு இடம் மட்டும் இருந்தாலே போதும்தானே?

கதவு மண்ணெண்ணெய்ப் பலகைகளால் ஆனது. அவர்கள் இருவராகவே சேர்ந்து அந்த 'வீட்டை'க் கட்டி முடித்துவிட்டார்கள். இது அவர்களுடைய நீண்டநாளையக் கனவு, நான்கு கைகளின் உழைப்பின் பலன். பப்பு

தாத்தா தன்னுடைய இரண்டு கைகளையும் சந்தனத்தில் முக்கி எடுத்து அப்படியே கதவில் பதித்தார். அதில் இரண்டு மனிதக்கைகளின் முத்திரை பத்து விரல்களோடு விழுந்தது. சந்தணம் காயக்காய அந்தக் கைகளின் பதிவு, ரேகைகள் முதல்கொண்டு மிகவும் தெளிவாகத் தெரிந்தன. அவைகள் இந்த உலகத்துக்கு ஒரு செய்தியை வற்புறுத்திக் கூற விரும்புவதுபோல் தோன்றிக்கொண்டே இருந்தது.

வீட்டில் குடிபுகும் அன்று பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் விதைப்பெட்டி நிறைய உப்பும் மஞ்சளும் தேங்காயும் வாழைப்பழங்களும் கொண்டுவந்து வைத்தார்கள். மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள் உப்பும் மஞ்சள் துணுக்கும் மாத்திரம் கொண்டுவந்து வைத்தார்கள்.

அன்று ராத்திரி பப்புப் பாட்டி - தன் கணவனுக்கு மாத்திரம் கேட்கும்படியாக - கல்யாணப்பாட்டுப் பாடினாள். சந்தோஷம் வரும்போதெல்லாம் அவள் கல்யாணப்பாட்டுப் பாடுவாள்.

*

அந்த வருஷம் ஊரில் நல்ல மாசூல், விவசாயக்கூலிகள்பாடு கொண்டாட்டம்தான். பப்புப்பாட்டி ஒரு இருபது கையாட்களைத் திரட்டினாள். வேலைகளை மதிப்புப் பிடித்துச் செய்தார்கள். கைக் களைக்கே அவர்களுக்கு ஆளுக்கு மூன்றுபடி வீதம் கூலி விழுந்தது.

கம்மம் பயிரில் ராமப்பயிர்1 தட்டுப்பட்டவுடன், புஞ்சையின் சொந்தக்காரரை அந்த ராமப்பயிருக்குப் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தி, காலில் விழுந்து மூன்றுதரம் குலவையிடுவார்கன். இப்படி அவர்கள் செய்யும் இந்தப் காரியத்துக்கு, தனியாக ஒரு ஆள் கூலியைப் புஞ்சைக்காரரிடமிருந்து வாங்கிவிடுவார்கள். (பருத்தியில் களையெடுக்கும் போது பட்டரைச் செடி தட்டுப்பட்டாலும் இதே மாதிரிதான்.)

கோடைப் பருத்தியின் கடேசி நெருங்க ஆரம்பித்தது. ஆடிமாச முடிவில்

ஒரு நாள் கூலிக்காரர்கள் பறவைப் பருத்தி 2எடுக்க ஆரம்பித்தார்கள்.

பப்புப்பாட்டி அன்று கோழிகூப்பிட எழுந்திருந்து போனவள். மதியம் அடித்திரும்புகிறவரை ஓடி ஓடி பறவைப் பருத்தி எடுத்தாள்.

அன்று அவள் இரண்டுகிலோவரை எடுத்துவிட்டாள். தான் ஏற்கனவே நிதமும் பருத்திக்குப் போய்ப் பகிர்ந்து கொண்டுவந்து வைத்திருக்கும் பருத்தியோடு இதையும் சேர்த்துக் கடையில் கொண்டுபோய்ப் போட்டுக் தனக்கு ஒரு சேலையும் அவருக்கு ஒரு வேட்டியும் வாங்கினாள்.

ஐப்பசி மாசம் வந்தது; அடைமழையும் வந்தது. நாப்பது நாட்கள் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாமல் பெய்தது. அடைமழைக்காகச் சேகரித்து வைத்திருந்த தானியம் தீர்ந்தது. வழக்கமாக வேலைசெய்யும் பெரிய சமுசாரி வீடுகளில் அதிகப்படி தானியமும் வாங்கியாகி விட்டது. பட்டினி கிடந்தார்கள். ஈரத்துணியை வயிற்றில் மடித்துப் போட்டுக்கொண்டால் பசிக்கிறது தெரியாது. பசியினால் ஏற்படும் வயிற்று வலியும் குறையும். இந்த நல்ல முறையை விவசாயக் கூலிகள் அனைவருமே அறிவார்கள். பப்பு தாத்தா தம்பதியரும் இந்த முறையைப் பின்பற்றினார்கள்.

தாத்தா சொன்னார் 'சன்னகுட்டி (தன்னுடைய மனைவியை அவர் பிரியமாகக் கூப்பிடும்போது இப்படிப் பெயர் சூட்டித்தான் அழைப்பார்!) இந்த ஈரத்துணிதான் வயித்துக்கு எம்புட்டு இதமா இருக்கு. இதைக் கண்டுபுடிச்ச அந்தப் புண்ணியவாளன் நல்லா இருக்கணும்.'

குளிர் தாங்கமுடியாமல் இருந்தது. ராத்திரியில் விரித்துக் கொள்ள ஒன்றுமில்லை. தாத்தா தன்னுடைய வேட்டியை அவிழ்த்து விரிப்பார், அதில் இருவரும் படுத்துக்கொள்வார்கள். பாட்டியின் சேலையை அவிழ்த்து இருவரும் மூடிக்கொள்வார்கள். ஒருவருடைய உடம்பின் சூட்டில் மற்றவர் குளிர்காய்ந்துகொண்டு அயர்ந்து தூங்குவார்கள்.

தைமாசத்தில் மழை தெளிந்து விவசாய வேலைகள் ஆரம்பமாகும்.

பட்டினி கிடந்த உடம்பு கொஞ்சம் மக்கர் பண்ணும். அதையெல்லாம் பார்த்தால் நடக்குமா? அடைமழைக்காலம் தவிர விவசாயக்கூலிகளுக்கு தகிப்பாறும் நாட்கள் (லீவு நாட்கள்) வேறு ஏது? காலில் நகம் முளைத்த நாள்முதல் அவர்கள் தினம் தவறாமல் வேலை செய்தேதான் பிழைத்து ஆகணும்.

பப்பு தாத்தா பிறந்ததிலிருந்து நாலு வயசுவரை பிறந்தமேனியாகத் திரிந்தார். ஐந்து வயசிலிருந்து எட்டு வயசுவரை ஒரு கோமணத்தை மட்டும் வைத்துக்கொண்டு கம்மம் பிஞ்சைகளுக்குக் காவல் காத்தார். ஒன்பது வயசிலிருந்து பன்னிரெண்டு வயசு வரை ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு மாடு மேய்த்தார். பதிமூணு வயசுவரை ரெட்டைக் கலப்பை பிடிக்கிறது முதலிய வேலைகளைச் செய்தார். பதினாறாம் வயசிலிருந்து அவர் தனிக் கலப்பை பிடித்து உழ ஆரம்பித்தார்.

ஏரைக் கட்டி, உழ ஆரம்பிப்பதற்கு முன்னால் மேழியைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத்தான் உழ ஆரம்பிப்பார். பரம நாஸ்திகன் ஒருவன் அந்தக் காட்சியைப் பார்த்தாலுங்கூட அதற்கு ஒரு நல்ல அர்த்தம் தெரியும். உண்மையிலேயே அது ஒரு மனசைத் தொடும் நிகழ்ச்சிதான்.

எப்பொழுதாவது அவர் தன் கூலியைத் தானியத்துக்குப் பதிலாகப் பணமாக வாங்கிக்கொள்ளுவார். அப்படிப் பெற்றுக் கொண்ட அந்தப் பணத்தை முதல்காரியமாகத் தலைபணிந்து இரண்டு கண்களிலும் ஒற்றிக்கொண்ட பின்னரே, வேஷ்டியின் சொறுகுமுனையில் பவ்யமாக முடிய ஆரம்பிப்பார். ஆம், அது அவ்வளவு உயர்ந்த காசுதான்; அதற்கு அந்த மதிப்பு தகும்.

*

பதினாறு வயசில் மேழி பிடிக்க ஆரம்பித்த அந்தக்கை அறுபத்தி ஓராவது வயசுவரையிலும் மேழியை இடறவிடாமல் அழுத்திப் பிடித்தது. போஷாக்கு இல்லாததாலும் அரைப்பட்டினியாலும் தரத்துக்கு மிஞ்சிய வேலையாலும்

அவருடைய உடம்பு, வேகமாகச் சக்தியை இழந்து மங்கலாக ஒளிவிடும் ஒரு 'பாட்டரி'யின் நிலைக்கு வந்துவிட்டது.

விளக்குப் பொருத்துகிற நேரத்துக்குமேல் மாலைக்கண் வந்துவிடும். ஒரு குருடனைப்போல் தெருவழியே தடுமாறிக் கொண்டு செல்வார். கிராமங்களில் இது ஒரு சோகம்.

எழுபது வயசுக்குப் பிறகு அவரால் மேழி பிடிக்கமுடியவில்லை. ஆகவே அவர் தன்னுடைய ஒன்பது வயசில் செய்த மாடு மேய்க்கும் வேலைக்குப் போனார். மாடு மேய்க்கும் வீட்டிலேயே அங்கே கஞ்சி குடித்துக்கொள்வார். மாசம் நாலு ரூபாய் சம்பளம். மாதமுடிவில் இந்த நான்கு ரூபாய்களை வாங்கிக்கொண்டுபோய்ப் பாட்டியிடம் கொடுப்பார். அவள் அதை வாங்கி வெகுநேரம் பார்த்துக்கொண்டே இருப்பாள். இந்தப் பணத்தில்தான் அவள் ஒரு மாசத்தை ஓட்ட வேண்டும். இதுவரை அவர்களுக்கு எந்தவிதமான வெத்திலை பாக்குப் போயிலை பொடி முதலிய துர்ப்பழக்கங்கள் இல்லையாயினும் பாட்டிக்கு மாத்திரம் சமீபத்தில் ஒரு பழக்கம் ஏற்பட்டிருந்தது; எல்லோரும் பொடியை மூக்கிலும் பற்களிலும், உபயோகப் படுத்துவார்கள். ஆனால் பப்புப் பாட்டி அப்படியில்லை.

அவளுக்கு கிருமித்தொல்லை அதிகம்; ராத்திரிகளில் தூங்க முடியாது. ஆகவே அந்த இடத்தில் ஒரு சிட்டிகை பொடியை வைத்தால்தான் அவளால் நிம்மதியாகத் தூங்கமுடியும். பக்கத்து வீடுகளில் பெண்களுக்கு அவள் தன்னால் இயன்ற எடுபிடி ஒத்தாசனை வேலைகளைச் செய்து ஒரு வேளைக்கு நீத்துப்பாகம், வடிதண்ணீர் முதலியவற்றை வாங்கிக் குடித்துக்கொள்வாள். சிலநாளைக்குக் கேப்பைக்கூழோ கம்மங்கஞ்சியோகூடக் கிடைப்பதும் உண்டு.

பாட்டியிடமிருந்து அவர் புறப்படும்போது அவள் அவருடைய உடம்பைத் தடவிவிட்டுக்கொண்டே சொல்லுவாள், 'பெரியவரே, நீர் என்னைக் கட்டிக்கொண்டு ஒரு சொகத்தையும் அடையலை . . .' என்பாள். அவளுடைய வயோதிக முகத்தில் சோகம் நிழலிடும். பார்வை எங்கேயோ நிலைக்கும்.

'கோட்டிப் பொம்பளை! அப்படியெல்லாம் பேசாதே; . . . உனக்குத்தான் நான் ஒரு சவுரியமும் செய்யலை' இப்படிச் சொல்லிவிட்டு, அவர் அடக்கமுடியாமல் 'நமக்கு ஒரு பிள்ளை இல்லை. இருந்திருந்தால், இந்தத் தள்ளாத வயசில் இப்படி நாம அல்லாடவேண்டாம்.'

அவர் இப்படிச் சொல்லும்போதுமட்டுமே பாட்டியால் தாங்கிக்கொள்ள இயலாது. கொஞ்சநேரம் உட்கார்ந்து அழுவாள். அப்புறம் மூக்கைச் சிந்தி எறிந்துவிட்டு வயத்துப்பாட்டைக் கவனிக்க ஆரம்பித்து விடுவாள்.

பப்பு தாத்தாவின் வாழ்க்கையில் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக ஏதேனும் சம்பவங்கள் நடக்கவில்லையா என்று கேட்டால் . . . கொஞ்சம் நடந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

ஒருநாள் அந்தக் கிராமத்தின் முதலாளியின் பேரன் கம்மாய்க் கரையிலிருக்கும் பெரிய நவ்வாமரத்தில் ஏறி நவ்வாப் பழம் பறித்துக்கொண்டிருந்தான். ஒரு கிளையில் நுனியிலுள்ள பழத்தை எட்டிப் பறிக்க அவன் முயற்சி செய்யும்போது அந்தக் கிளையே ஒடிந்துவிட்டது. தற்செயலாக அந்தச் சமயத்தில் அங்கே 'கால்' கழுவவந்த பப்புதாத்தா, தலைக்குமேலே கிளை ஒடிந்த சத்தம் கேட்டு மேலே பார்த்தவர், கீழே விழத் தரையை நோக்கி வந்துகொண்டிருக்கும் பையனை அப்படியே தன்னுடைய வலுவான கரங்களில் ஏந்தி அணைத்துக்கொண்டார். அந்தப் பையன் உயிர் பிழைத்தது. அல்லது கால் கை எதுவும் முடமாகாமல் காப்பாற்றியது பப்பு தாத்தாதான் என்று அப்பையனின் குடும்பமும் ஊரும் சொன்னது.

ஊரில், மேல்காற்று சமயத்தில் தீவனப் படப்புகள் விரோதத்தின் காரணமாக - தீப்பற்றி எரியும் சமயங்களில், தனது உயிரைத் திரணமாக மதித்து எத்தனையோ தடவைகள் பெரு நெருப்பை அணைக்கப் பப்பு தாத்தா உதவியிருக்கிறார். 'பாவிப்பயல்களா, உங்களுக்குள் விரோதம் இருந்தால் மாடுகள்- வாயில்லாச் சீவன்கள் - என்ன செய்யும், அதனுடைய பாவத்தில் கொண்டுபோய் இப்படிக்கை வைக்கீறீர்களேடா; நீங்கள்

விளங்குவீகளா?' என்று முணுமுணுப்பார்.

ஒரு பெருந்தனக்காரரின் மகள் - கன்னி கழியாதவள் - சொல்ல முடியாத காரணத்துக்காகக் கிணற்றில் விழுந்து இறந்து போனாள். அர்த்தராத்திரியில் கிணற்றினுள் மிதந்த உடம்பை எடுக்க யாருமே முன்வரவில்லை. இவர்தான் இறங்கி எடுத்து மேலே கொண்டுவந்தார். கிராமத்தின் வழக்கப்படி உடம்பை உடனே மயானத்தக்குக்கொண்டு போய் எரித்துவிடவும் உதவினார் இவர்.

கோடையில் அருகு எடுக்கும்போது ஒருநாள். அவருடைய மனசில் வடு ஏற்படுத்திய ஒரு சம்பவம். அவரோடு பலரும் அருகு எடுத்துக்கொண்டிருந்தார்கள். இவர் பல்க்கம்பி போட்டுக்கொண்டிருந்தார். இவருக்கு ஜோடியாக ஒரு இளவட்டம் மண்வெட்டி பிடித்தான். அவன் சில இடங்களில் தப்பருகு விட்டான். அப்பொழுது அவனை அவர், 'தம்பி, பார்த்து வேலைசெய். பிஞ்சைக்குச் சொந்தக்காரன் அறுபது நாழியப்பொழுதும் நம்ம கூடவே இருக்கமாட்டான். நாம வாங்குகிற கூலி நமக்கே வத்திக்கணுமில்லே!' என்றார்.

'சரிதான்; உம்ம பேச்சைக் கேட்டு அருகை வள்ளிசா எடுத்துட்டா அடுத்த வருஷம் கோடையிலே நாம கஞ்சிக்குத் ததிகிணத்தோம் போட வேண்டியதுதான்' என்றான்.

இந்த பதில் அவரை அதிர வைத்தது.

அங்கே வேலை செய்துகொண்டிருந்தவர்கள் பல அபிப்ராயங்களைச் சொன்னார்கள் அந்த இளவட்டத்தினுடைய பதிலை ஒட்டியே.

அருகை பூசை பண்ணுகிறது விளையாட்டுக்கில்லை! அது நமக்கு அருங்கோடையிலும் சாப்பாட்டு போடுகிறது.

'கைநாழிக்கு மூணுபடி கூலி வாங்கினா திரும்ப அளந்து பாக்கிறபோது ரெண்டரைப் படி இருக்கு; அதுக்கு இந்த வேலை காணாதாக்கும்.'

'அண்ணாச்சி பயப்படாதிங்க; நாளைக்கு நிலமெல்லாம் நமக்குச் சொந்தமாயிடும்; அப்போ அருகைச் சுத்தமா எடுத்திருவோம்.'

அவர் முணுமுணுத்துக்கொண்டார், 'சாவஞ் செத்த பயல்களா, நாளைக்கு நிலமெல்லாம் நமக்கே சொந்தமானாலும் நீங்க அன்னைக்கும் இப்படிதானிருப்பீங்க.'

அவரை அவர்கள் சர்வ கேலி செய்தார்கள்.

ஊரின் முதலாளியின் மருமகன் - (அவன் சின்னப்பிள்ளையாக இருந்தபோது இவர் பிரியமாக எடுத்துவைத்துச் சுமந்துகொண்டு திரிவார்) பெரியவனாகிவிட்ட அவனைப் பார்த்து ஒருநாள்,

'மாப்பிளேய், சௌகரியமா இருக்கியா?' என்று அன்பாக விசாரித்தார். முதலாளி என்று கூப்பிடாமல் இந்தக் கூலிக்காரன் தன்னை முறைகொண்டாடி மாப்பிள்ளை என்று கூப்பிடலாச்சா என்று ரெம்பக் கேவலமாக - எழுதவே கைகூசும் கெட்டவார்த்தைகளால் - திட்டி அவரைத் தலைகுனிந்து செல்லும்படி வைத்தான்.

இப்படியெல்லாம் ஒரு சாதராணமானவன் வாழ்க்கையில் நடக்கும் இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் தான் அவருடைய வாழ்க்கையிலும் நடந்ததேயன்றி வேறு வீரதீரமான நிகழ்ச்சிகள் எதுவும் அவருடைய வாழ்க்கையில் நடந்துவிடவில்லை.

பப்பு தாத்தா தம்பதியருக்கு இப்பொழுதெல்லாம் ஒரு வேலையும் செய்யமுடிகிறதில்லை. மிகவும் வயோதிகத்தினால் தவங்கிப்போய் விட்டார்கள். ஒருநாள் பெய்த தாங்கமுடியாத கனமழையினாலும் காற்றாலும் அவர்களுடைய வீடு இடிந்து தரைமட்டமாகிவிட்டது. ஊருக்கு மேற்கே உள்ள கண்மாயை ஒட்டி ஒரு கல்மண்டபம். அவர்கள் இப்பொழுது அங்கேதான் இருக்கிறார்கள். வயிற்றுக்கு மாத்திரம் ஊருக்குள்ளே வருவார்கள். பாட்டியின் சேலை கந்தல் கந்தாலாகிக் கிழிந்து கந்துகந்தாகி உடுத்த முடியாமலாகிவிட்டது. அதனால், அவள்

ஊருக்குள் வருவதில்லை; என்னயிருந்தாலும் பொம்பிளை அல்லவா?

சாவுக்காகத்தான் இப்பொழுது அவர்கள் காத்திருக்கிறார்கள். ஆனால் சாவு வரமாட்டேன் என்கிறதே லேசில். சித்திரபுத்ரனுடைய கணக்கில் ஏதோ கோளாறாகிவிட்டதோ என்னமோ! எப்பவாவது ஊருக்குள் சாகக்கூடாதவர்கள் திடீரென்று செத்துப்போவார்கள். அந்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்களெல்லாம் பேசி வைத்தமாதிரி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வார்கள்; 'இந்தச் சாவு அந்தப் பப்புப் பாட்டி கிழடுகளுக்கு வரக்கூடாதா.'

'ஆமாம், அதுதானே.'

அந்த வங்கிழடு தம்பதியருக்கு இப்பொழுதெல்லாம் ஒரே ஒரு ஆசைதான். இழவு வீடுகளில் போய் உட்கார்ந்து, இலைபோட்டு, அதில் நிறைய்ய நெல்லுச்சோறு போட்டு காரமும் புளிப்புமாயுள்ள பூஷணிக்காய்க் குழம்பை தாராளமாய் விட்டு- மூக்கில் நீர் சொட்டச் சொட்ட - பெரிய பெரிய கவளமாகச் செய்து ஆசைதீரச் சாப்பிட வேண்டும் என்பதுதான்.

*

கொஞ்சநேரத்துக்கெல்லாம், ஒருவர் முகம் ஒருவருக்கும் தெரியாத மாலை நேரம் வரப்போகிறது. எல்லா ரகப் பறவைகளும் தங்கள் பந்து இனங்களுடன் இரை தேடிவிட்டுக் கூடுகளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. அந்தக் கல்மண்டபத்தைத் தவிர வீடுகள் யாவற்றிலும் தீபம் பொருத்தியாகிவிட்டது. அங்கிருந்து ஒரு உருவம் குனிந்து ஒருகையால் கம்பை ஊன்றித் தலை கிடுகிடு என்று நடுங்கத் தட்டுண்டு தடுமாற ஊருக்குள் நுழைகிறதே, அது யார் தெரிகிறதா? அதுதான் பப்பு தாத்தா. அவர் கையில் இருப்பது என்ன என்று தெரிகிறதா? அது ஒரு மண்சட்டி.

தாமரை, ஜூலை-1969

--------------------------------

1.ராமப் பயிர்: கம்மம் பயிரில், ஒரு பயிரின் சோகையில் வெண்ணிறமான கோடு ஒன்று அபூர்வமாக விழுந்திருக்கும். அந்தப் பயிரை சமுசாரிகள், ராமப்பயிர் (நாமப்பயிர்) என்று அழைப்பார்கள். ராமப்பயிர் விழுந்திருந்தால் அந்த வருஷம் நல்ல மாசூல் காணும் என்று ஒரு நம்பிக்கை.

2. பறவைப் பருத்தி: பருத்தி வெடிப்பு இனி ஓய்ந்துவிடும் என்று தெரிந்தவுடன் கூலிக்காரர்கள் நிலங்களில் புகுந்து தங்கள் தங்கள் இஷ்டப்படி(சொந்தத்துக்கு) எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அவர்களை யாரும் அந்தச்சமயத்தில் ஒன்றுஞ் சொல்லக்கூடாது. அந்த நாள் அவர்களுடையது. கூலிகளுக்கு அன்று ஒரு கொண்டாட்டமான நாள்.

***

## விளைவு

பாவய்யாவின் பூர்விகம் சரியாகத் தெரிய வில்லை. அவனைக் கீகாட்டுக்காரன் என்று சொல்லுவார்கள். கிழக்கே விளாத்திக்குளம் பக்கத்தில் ஏதோ ஒரு ஊர். இந்தக் கிராமத்துக்குப் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள போகும்போது இவனை, இங்கேயே கிட என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்களாம்.

பயலுக்கு அப்பொழுது நாலைஞ்சி வயசிருக்கும். இடுப்பில் அரணாக்கயிறு ஒன்றுதான்; உருட்டைக் கட்டைப்போல இருப்பான். நல்ல கரிசல் நிறம். பிரகாசமான பெரிய்ய கண்கள். யாருக்கும் அவனைப் பார்த்தவுடனேயே பிடித்துவிடும். முகராசியான பயல். என்ன கஞ்சி ஊத்தினாலும் கழிக்காமல் சாப்பிடுவான். பச்சை மிளகாய், வெங்காயம் எது கொடுத்தாலும் வாயில்ப்போட்டு ஆற அமர மென்று கஞ்சியை எடுத்துக் கும்பாவிலிருந்து உறுட் உறுட் என்று உருஞ்சிச் சாப்பிடும்போது, பார்க்கிறவர்களுக்கு நாக்கில் நீர் ஊறும்; நாமும் அப்படிச் சாப்பிட்டால் என்ன என்று தோணும்.

கிராமத்தில், சதா நச்சு நச்சு என்று அழும் குழந்தைகள், சாப்பிடாமல் முரண்டுபண்ணும் குழந்தைகளின் பெற்றோ£ர்கள் தங்களின் குழந்தைகளிடம் 'பாவய்யாவைப் பார், எப்படிச் சமத்தா அழாமல் நன்றாகச் சாப்பிடுகிறான்!' என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த அசட்டுக்குழந்தைகளோ, தங்களுக்குக் கிடைக்கும் திண்பண்டங்களைக்கூட ஒருத்தருக்கும் தெரியாமல் பாவய்யாவிடம் கொண்டுபோய்க் கொடுத்து, எப்படி அவன் அதை ஆவலோடு சாப்பிடுகிறான் என்று பார்த்து அதிசயமும் ஆனந்தமும் படுவார்கள்!

அவனிடம் ஒரு குணம்; எது கொடுத்தலும் வேண்டாம் என்று சொல்லாமல் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே இருப்பான். கொடுக்கிறவர்கள் பார்த்து நிறுத்தினால்தான் உண்டு.

*

எட்டாவது வயசில், பாவய்யாவின் அரணாக்கயிற்றில் ஒரு கோவணம் - நாலுவிரல் அகலத்தில் ஒருமுழ நீளத்தில் - தென்பட ஆரம்பித்தது. அப்போது அவன் மணியம் நாயக்கர் வீட்டில் மாடு மேய்க்க ஆரம்பித்திருந்தான். வீட்டில் பொம்பிளைகள் சண்டைக்கு வருவார்களே என்றுதான் அவன் அந்தக் கோவணத்தை வைத்துக் கொண்டான். மாடுகளைப் பத்திக்கொண்டு, ஊருக்குக் கொஞ்ச தூரம் வெளியே வருவதற்குள் கோவணத்தை உருவித் தலையில் கட்டிக்கொண்டு விடுவான்.

'என்னலே பாவய்யா, கோமணம் தலைக்குப் போய்விட்டது!' என்று அவனோடு மாடு மேய்க்கும் பையன்கள் கேட்டால்,

'எளவு' 'சீய்' யிண்ணு இருக்கு, என்பான். அரணாக்கயிற்றுக்கு மட்டும் பழகிப்போன அவனது 'அரை', கோவணத்திற்குப் பழகவில்லை இன்னும்.

சாயந்திரம் ஊருக்குள் நுழையும்போதுதான் தலையிலிருந்த கோவணம் திரும்பவும் 'அரை'க்கு வரும்.

*

பாவய்யாவிடம் சில, 'கிறுக்குத் தாளங்கள்' உண்டு. வருஷத்தில் சில நாட்கள் ஊர் மடத்தில் வந்து பேசாமல் குப்புற அடித்துப் படுத்துக்கொள்வான். சாப்பிடாமலும் யாருடனும் பேசாமலும் நாள் கணக்கில் படுத்துக்கொண்டே கிடப்பான்.

ராத்திரிக்கு ஊர் மடத்தில் படுத்துக்கொள்ள வருபவர்களில் இளவட்டங்களும் உண்டு. அவர்களில் சிலர் பாவய்யாவைச் சீண்டுவார்கள். இப்படிப்பட்ட சமயங்களில் அவனைப் பேசவைக்கிறதே பெரும்பாடாக இருக்கும். யாராவது அகதிகள் அகாலநேரத்தில் வந்து

ஊர்மடத்தில் படுத்திருப்பார்கள். அவர்களை இளவட்டங்கள் 'யாரு எந்த ஊரு' என்ற கேட்டுச் 'சாப்பிட்டாச்சா' என்று விசாரிப்பார்கள். 'இல்லை' என்று அவர்கள் சொன்னால் இளவட்டங்களே நாலு வீடுகள் போய் 'தருமச்சோறு' கேட்டு வாங்கிக்கொண்டு வந்து அவர்களுக்குப் படைத்துச் சாப்பிடச் சொல்லுவார்கள். சிலசமயம் எடுத்துக்கொண்டு வந்த சோறு மிஞ்சிப்போகும். பாவய்யாவை எழுப்புவார்கள் சாப்பிடச் சொல்ல; ஆனால் பாவய்யா விழித்துக் கொண்டுதான் கிடப்பான். அவனை எழுப்பி உட்கார வைப்பதற்குள் அவர்கள் படும்பாடு!

அவனைச் சாப்பாட்டில் கைவைக்கச் செய்ய இவர்கள் ரொம்பப் பிரயாசைப்படுவார்கள். ஒரு இளவட்டம் அவனை சிரிக்கவைக்க ஒரு நகைச்சுவை மிகுந்த கெட்டவார்த்தைக் கதையைச் சொல்ல ஆரம்பிப்பான். அப்போது பாவய்யா சிரிப்பை மறைப்பதற்கு உதடுகளால் பற்கள் தெரியாமல் இருக்க இறுக்கி மூடுவான். 'ஓ . . . பாவய்யா சிரிச்சிட்டான்; சிரிச்சிட்டான்டோய்' என்று கூப்பாடு போட்டு அதில் ஒருத்தன் தரையில் படுத்து உருளுவான். அவ்வளவுதான்; பாவய்யா சமாதானமாகி மனம்விட்டு நிஜமாகவே - கொஞ்சம் பொய்க் கோபத்துடன் பிகுபண்ணி - சிரித்துச் சாப்பாட்டில் கைவைத்துச் சாப்பிடத் தொடங்கிவிடுவான்.

அப்படி அவன் சமாதானமாகிச் சாப்பிடும்போது இளவட்டங்கள் பாவய்யாவின் முதுகில், பதிலுக்குப் பழி வாங்குவதுபோலக் கையைப் பொத்திக்கொண்டு ஓசை வரும்படியாகப் 'பொய் அடி' கொடுப்பார்கள். மத்தியில் நிஜமான அடிகளும் ரெண்டு விழும். பாவய்யாவின் அகலமான முதுகுக்கு இந்த அடிகளெல்லாம் கொசுக்கடி மாதிரி.

பாவய்யா குணத்துக்கு வந்துவிட்டான் என்று கேள்விப் பட்டதும் மறுநாள் காலையில் ஊர்க்காவல் நாயக்கர் மடத்துக்கு வந்து 'பாவய்யா . . .' என்று கூப்பிடுவார். விசுவாசமுள்ள நாய்க்குட்டி மாதிரி அவன் மறுபேச்சு சொல்லாமல் அவருக்குப் பின்னால் போவாள். பிறகு அவர் சொல்லுகிற ஏதாவது ஒரு வீட்டில் அவன் பழையபடியும் மாடு மேய்க்கத் தொடங்கிவிடுவான்.

பாவய்யா இப்பொழுது வளர்ந்துவிட்டான். கொண்டிக்காவல்கார நாயக்கர் சொன்னமாதிரி, பயலுக்கு கக்கத்தில் ரோமம் முளைத்துவிட்டது. ஆனால் அவன், அதே கோவணந்தான். வேட்டியை இடுப்பில் கட்டிக்கொள்வதற்குப் பதில் போர்த்திக்கொள்வான். உச்சந்தலையில் அப்பளம் அகலத்துக்கு வட்டமாக ஒரு விரல் கடை உயரத்துக்கு விட்டு தலைமுடியை, சுற்றிலும் நன்றாக மழிக்கப் பட்டிருக்கும்.

வேலை செய்யும் நேரங்களில்மட்டும் போர்த்திக்கொள்ளும் வேட்டியை எடுத்துத் தலையில் கட்டிக்கொள்வான். யாராவது 'பாவய்யா, கொஞ்சம் கோமணத்தை சரியாக - இறுக்கலாக - வச்சிக்கோ' என்று சொல்வார்கள். அதுக்குக் கொண்டிக்காவல் நாயக்கர் சொல்லும் பதில்.

'சர்த்தாங்செ; வேலைக்காரன் இது வெளியிலெ'ங்கிற பளமொளி தெரியாதா உனக்கு? அதுபாட்டுக்குக் கிடந்துட்டு போகுது, நீ அதை கண்டுக்காதே'.

*

ஒரு நாள் காட்டில் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது பாவய்யா, கொண்டிக்காவல்காரரிடம் தன்னுடைய உடம்பில் ஊருகிற ஒரு பேன் ஒன்றை எடுத்துக் காட்டினான். அந்தப் பேன், தலையிலுள்ள மாதிரி இல்லாமல் வட்டமாக இருந்தது!

'அடப் பாவிப்பயலே!' என்று சொல்லிச் சிரித்துவிட்டு 'சரி சரி; இண்ணைக்கு கம்மாயிலே மாட்டைப் போட கரைக்கு வருவெயில்லே? அப்போ, குடி மகன்ட்டெ சொல்லி உடம்பு பூராவும் நல்லா வளிச்சி விட்டுரச் சொல்வோம்' என்று சொன்னார்.

அன்று திங்கட்கிழமை கண்மாய்க் கரையில் குடிமகனைச் சுற்றிக் கூட்டம் இருந்தது. கொண்டிக்காவல் நாயக்கர் பாவய்யாவைக் குடிமகனிடம் 'தள்ளிக்கொண்டு போய்' விசயத்தைச் சொன்னார். அவன், 'அதுக்குத்

தேங்காய் பழம் கால் ரூவாய் தட்சணை எல்லாம் வேணுமே?' என்று சொல்லி எகத்தாளமாய்ச் சிரித்தான். அப்பொழுது அவன் ஒரு பெரியவருக்கு மழித்துவிட்டுக் கொண்டிருந்தான். அவர் பின்பக்கம் இரண்டு கைகளையும் தரையில் ஊன்றச் சாய்ந்துகொண்டு கால்களை அகட்டிச் கொடுத்துக்கொண்டிருந்தார். குடிமகனின் பேச்சைக் கேட்டு அந்தப் பெரியவர் உள்பட எல்லாரும் சிரித்தார்கள். பாவய்யா கொஞ்சம் பின்வாங்கினான்! 'அட, அவன் அப்படித்தான் சொல்லுவான் நீ ஓம் பாட்டுக்கு இரு!' என்று இளவட்டங்கள் சொன்னார்கள்.

பெரியவர் எழுந்து வேட்டியை உதறிக் கட்டிக்கொண்டார். எல்லோரும் ஒருமனதாக பாவய்யாவை அந்த இடத்தில் அமர்த்தினார்கள். இப்பொழுது கூட்டத்தில் ஒரு சின்னக் குஷி பரவியது,

முதலில் தலை; அப்புறம் கக்கம், முடிந்தது. குடிமகன் இடது கையை, நனைப்பதற்காகத் தண்ணீர் கிண்ணத்தில் முக்கினான். பாவய்யாவினால் சிரிப்பை அடக்கமுடியவில்லை; உடம்பெல்லாம் கூச்சத்திநால் நெளிந்தது. குடிமகன் தன்னுடைய சிரிப்பை மறைக்கக் கூடி நின்றவர்களிடம் கோபப்படுவதுபோல் பேசினான்! 'போங்களே அந்தப் பக்கம்; பார்த்ததே இல்லையாக்கும்!'

பேசிக்கொண்டே குடிமகன் தொழிலைச் செய்தான், பேச்சு அவன் தொழிலுக்கு வெஞ்சனம்! 'பாவய்யா, உமக்கு உம்ம பொண்டாட்டி அடங்கி இருப்பா. எப்படி வாய்ச்சி இருக்கிண்ணு பாரும்! சரியான ஆளுதான் நீரு!' என்று சொல்லிவிட்டு, சிரிக்கும் கூட்டத்தைப் பார்த்து ஒரு பொய்ச்சீறல் சீறினான்.

பாவய்யாவினால் சரியாக 'இருக்க' முடியவில்லை. கூச்சத்தினால் உளத்தினான். 'இந்தா, உளத்தாதீரும் சொல்லிட்டேன்; கத்தி விழுந்துரும். பிறகு அவ்வளவுதான் கல்யாணம் செய்யமுடியாது!' என்று அதட்டினான். கூச்சத்தை அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சிரிப்பதன்மூலம் அதைக் குறைத்துக்கொள்ளப் பார்த்தான். அப்படி இடைவிடாமல் சிரிப்பதனால் அவன் வாயிலிருந்து ஜொள்ளு வடிந்தது.

இப்படிச் சமயங்களில், சவரம் செய்து கொள்பவர்களைக் குடிமகன் தன் கத்தியை மாற்றிப் பிடித்துக்கொண்டு அவர்களுடைய கணுக்கால் எலும்பில் கணார் என்று ஒரு குடுப்புக் கொடுப்பான்! அந்தத் தாங்கமுடியாத வலி அவர்களை ஒரு நிதானத்துக்குக் கொண்டுவரும்!

இப்படியாகப் பாவய்யாவுக்கு, கொண்டிக்காவல்காரர் சொன்ன மாதிரி பயலுக்கு 'பிறந்தமுடி' இறக்கப்பட்டது. கம்மாய்க்கரையில் எப்பவாவது நிகழும் இந்த 'முதல் பகல்' நிகழ்ச்சி ஒரே கலகலப்பாய் அமையும்.

கம்மாய்க்கரை நிகழ்ச்சிக்கு அப்புறம் பாவய்யா கொஞ்சம் 'ஒரு மாதிரியாக' இருந்தான்.

*

வழக்கம்போல இவனிடம் வயசுவந்த பெண்கள் விளையாட்டுக்கு வாயாடுவார்கள். இவனால் அவள்களுக்குப் பதிலடி கொடுக்க இயலாது. அதோடு ரகர தகர உச்சரிப்புகள் இவனுக்கு சரியாக வராது. உணர்ச்சிவசப்படும்போது வாய்வேறு திக்கும். ஆகவே உதட்டை இழுத்து இறுக்கி மூடிச் சிரித்துக்கொண்டே நழுவி விடுவான். அன்று மறுநாள். அதிகாலையில் நல்ல தண்ணீர் எடுக்க ஊர்கிணற்றில் சுற்றிலும் பெண்களும் ஆண்களுமாக நல்ல கூட்டம். பாவய்யாவுக்குப் பக்கத்தில் சுப்பாலு. அவளுடைய தோழிகள் தண்ணி இறைத்துக்கொண்டு இருந்தார்கள்.

சுப்பாலு ஒரு வாயாடிப் பெண். அந்தக் கிராமத்தின் பெருந்தனக்காரரின் செல்லமகள். தான் பெரிய்ய பணக்காரி என்கிற அகம்பாவம் அவளுக்கு உண்டு. அதனால் அவள் யாரையுமே மதிக்கிறதில்லை. எப்பப் பார்த்தாலும் பாவய்யாவை விரட்டிக்கொண்டே திரிவாள். இதில் அவளுடைய தோழிகளின் சிரிப்பு அவளை மேலும் உற்சாகமடையச் செய்யும்.

அவள் அன்றும் தனது தோழியரின் ஆதரவுடன் அங்கே பாவய்யாவைச் சீண்ட ஆரம்பித்தாள். அவனோ ஒதுங்கி ஒதுங்கிப் போனான். அவளை ஏதோ ஒன்று குறுகுறுக்கச் செய்தது. அவன் விலகிப் போகப்போக இவளை மேலும் அதிகப்படியாக அவனை விரட்டச் செய்தது. 'ஓடுகிற நாயைக் கண்டால் விரட்டுகிற நாய்க்குத் தொக்கு' என்பதுபோல.

பாவய்யா குடத்தை வேகமாக நிரப்பினான். தலையில் கட்டியிருந்த வேட்டியைத் திரும்பவும் ஒருதரம் இறுக்கிக் கட்டினான். குடத்தை எடுத்துத் தலைக்குக் கொண்டுபோகக் குனிந்தான்; அவ்வளவுதான் இமை தட்டுவதற்குள் அந்தச் செயல் நடந்துவிட்டது!

அவனுடைய மௌனம், அவளின் வாயாடித்தனத்தை அவமானப்படுத்துவதுபோல் அவளுக்குப் பட்டதோ என்னவோ. அவளால் அதைத் தாளமுடியவில்லையோ என்னமோ அவன் குடத்தை எடுக்கக் குனிந்தபோது அவனுக்குப் பின்பக்கம் அரணாக்கயிற்றில் சொருகி இருந்த கோவணத்தின் நுனியை மட்டும் லேசாக உருவினாள். ஆனால் இப்படி ஆகும் என்று அவள் எதிர்பார்ககவில்லை; கோவணம் பூராவுமே கையோடு வந்து தரையில் விழுந்துவிட்டது.

அவ்வளவுதான்; கிணறே வாய்விட்டுச் சிரித்தது. திடுக்கிட்டவர்கள் சுப்பாலுவும் பாவய்யாவும்தான்.

அவன் அப்படியே நின்றது பெண்களுக்குமுன் ஆண்களுக்கு நாணமாகவும், ஆண்களுக்குமுன் பெண்களுக்கு நாணமாகவும் இருந்தது.

இளவட்டங்கள் 'டேய் தலைவேட்டியை எடுத்து இடுப்பில் கட்டிக்கோ' என்று குரல் கொடுத்தார்கள். பாவய்யாவுக்கு அது 'கேட்க'வில்லை. அவனுடைய கண்கள்தான் சிவப்பாகின.

பெண்கள் சிரித்துக்கொண்டே அந்த இடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். ஆண்களுக்கு சிரித்து வயிற்றை வலித்தது; பாவய்யா அப்படியே அதே மேனியில் நின்றுகொண்டிருந்தான். ஒரு பெரியவர் அவன்கிட்டை வந்து,

கீழே விழுந்து நனைந்து கிடந்த கோவணத்துணியை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன் அவரையும் அந்தத் துணியையும் மேலும் கீழும் பார்த்தானே தவிர வாங்கி அணிந்துகொள்ளவில்லை.

'டேய், இந்தா வாங்கி வச்சிக்கோ' அந்தக் குரலில் கொஞ்சம் அதட்டல் அதிகமாகவே இருந்தது.

பாவய்யா அதற்கு தீர்க்கமாக பதில் சொன்னான். 'ம்மு..மு. முடியாடு!' அவர் அவனை அதிசயத்தோடு பார்த்து 'ஏண்டா?'

'அ . . . அ . . . அப்படிட்டாண்; முடியாடு.'

எனக்கென்ன போ என்று சொல்லி அவர் அதை எறிந்து விட்டுப் போய்விட்டார்.

திரும்பவும் கொஞ்சநேரத்தில் ஒரு பெரியவர் வந்தார் பாவய்யாவிடம். இது நல்லாயில்லை என்றும், அவனுடைய தலைவேட்டியை எடுத்து அவரே அவனுடைய இடுப்பில் சுற்றிக் 'கட்டிக்கோப்பா' என்றும் சொன்னார். ஆனால் அவனோ வேட்டியை உருவிப் பந்துபோல் சுருட்டி எறிந்துவிட்டான்.

'என்னடா இது; வம்பா பண்ரே! . . . பொம்பளைகள் பிள்ளைகள் வந்து தண்ணி எடுக்கிற இடத்தில் இப்படி நிண்ணா என்னடா அர்த்தம்!'

பாவய்யா இப்போது நிதானமாக அவருக்குப் பதில் சொன்னான். 'ம் . . . மாமா, என்பேடில் ஒரு டப்பும் இள்ளை, இண்டா இவுகட்டே வேணும்ணாளும் கெ.. கேட்டுப்பாடுங்கெ . . . நாணா கொ . . . கோமணட்டுணியெ எடுட்டு எடுஞ்சிடளே.'

'சரி, சரி; இப்பொ அதுக்கு என்னடா செய்யணும்னு சொல்ரே?'

'கொ . . . கோமணட்டை எடுட்டு நா வச்சிக்கிடமாட்டேண். அவடாணே அவடாணே அவுட்டா; அவடாண் வண்டு வச்சி விடணும்!'

இதைக் கேட்ட இளவட்டங்கள் 'ஓஹோ ஹோ' என்று ஆர்ப்பரித்தார்கள்.

'இது நல்ல வழக்குடா அப்பா!' என்று அந்தப் பெரியவர் நடந்து விட்டார். கொஞ்சநேரத்தில் ஊருக்குள் ஒரு பெரிய்ய பரபரப்பே உண்டாகிவிட்டது.

பெரும்பாலானவர்கள் பாவய்யாவைத்தான் தப்பு சொன்னார்கள். 'அவன் என்ன கோமணமா வச்சிருந்தான்! அதைவிட பேசாமல் இருக்கிறது எவ்வளவோ மேல்!!' 'அது சரி. அவன் எப்படி வச்சிருந்தா இவளுக்கு என்ன? இந்தக் கோட்டிக் கழுதை அதைப்போயி என்ன மயித்துக்கு நோண்டனும்?'

'சரி: நோண்டீட்டாய்யா: வச்சிக்கிடுவோம். அவ வந்துதான் எனக்குக் கோமணத்தை வச்சிவடணும்னு இவன் சொல்றது மப்புதானே?'

இப்படிப் பலமாதிரியாக ஜனங்கள் தர்க்கித்துக்கொண்டு இருக்கையில், சுப்பாலுவின் சித்தப்பா ஒரே கோபாவேசமாக பாவய்யாவைப் பார்த்து வந்தார்.

வந்தவர் அவனைப் பார்த்து, கெட்டவார்த்தைகள் கலந்து அனாதைப்பயலே, வந்தட்டிப்பயலே அது இது என்று தாறுமாறாக ஏசினார். அவருடைய ஏச்சும் ஆத்திரமும் பாவ்வயாமீதுகூட அவ்வளவு காரம் இருப்பதாகத் தோன்றவில்லை. அவன் இப்படி நடந்துகொள்ளப் பின்தூண்டுதலாக யாரோ இருப்பதாகக் குற்றம்சாட்டினார். 'ஒன்னை இப்போ செருப்பைக் களத்தி அடிக்கேன்; தூண்டிவிட்ட ஊர்ப்பய புள்ளைகள்ளெ எவன் வந்து இப்பொ ஒனக்கு உதவுதாண்ணு பார்ப்போம்' என்று ஓங்கினார்.

ஓங்கிய அந்தக் கையை வந்து ஒருகை பிடித்துக்கொண்டது. இப்படிப் பிடித்துக்கொண்ட அந்தக் கைக்கு உடையவர் கேட்டார் 'நீரு செய்யிறது இது ஒமக்கே நல்லாயிருக்கா? நீரு பெரிய்ய பணக்காரருண்ணா அது ஒம்மோட இருக்கட்டும். அதை விட்டுவிட்டு ஊர்க்காரன்தான் இதுக்கு காரணம்ண்ணு சொன்னா அதை உம்மாலே புரூ பண்ணமுடியுமா? முந்தி

இப்படித்தான், பாவம் அனந்தப்ப நாயக்கரைக் கோழி பிடிச்சான்னு சொல்லி அநியாயமா உம்ம மகளும் நீரும் அவரு குடும்பத்தையே ஊரைவிட்டு துரத்தீட்டீஹ; இப்பொ என்னடாண்ணா ஊர்க்காரங்கதான் இப்படித் தூண்டிவிட்டாங்கண்ணு சொல்ரீரு. சும்மா இப்படி வாய்புளிச்சதோ மாங்காய் புளிச்சதோண்ணு பேசாதீரும். இப்பொ உம்ம மகள் செய்த ஏழைக் குறும்புமட்டும் ஞாயமா?'

இதைக்கேட்ட சுப்பாலுவின் சித்தப்பாவுக்கு உடம்பெல்லாம் வெடவெட என்று ஆடியது. 'டேய் வெங்கம்பய புள்ளைகளா, இருங்க உங்களைப் பார்த்துக்கிறோம்' என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து கிளம்பினார். உடனே அங்கிருந்த விடலைகளின் எக்காள ஒலி அவரைத் திரும்பப் பார்க்காதபடி வழியனுப்பி வைத்தது!

ஊர்க்காரர்களின் தூண்டுதலால்தான் பாவய்யா இப்படி நடந்துகொண்டான் என்ற சுப்பாலு சித்தப்பாவின் பேச்சு, இப்பொழுது ஊருக்குள் பாவய்யாவுக்கு ஆதரவாகத் திரும்பியது. இளவட்டங்கள் பாவய்யாவின் நிலையை பலமாக ஆதரித்துப் பேசி ஒரு மின்னல்வேகப் பிரச்சாரத்தையே முடுக்கிவிட்டா£கள்.' சுப்பாலு வந்துதான் பாவய்யாவுக்குக் கோவணத்தை வைத்துவிடணும்' என்று அவர்கள் கோஷம்தான் போடவில்லை! நேரம் ஆகிக்கொண்டே போனது.

சம்சாரிகளுக்கு இதுவா வேலை? அவர்கள் சீக்கிரம் தண்ணீர் எடுக்கணும்; கஞ்சி குடிக்கணும்; காட்டுக்குப் போகணும்; இப்படி எத்தனையோ வேலைகள் காத்துக்கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் இடைஞ்சலாக 'இந்த சனியம் பிடிச்ச சங்கதி வந்து சேர்ந்திட்டதே' என்ற முகச்சுளிப்பு ஒரு பக்கம்.

இந்தமாதிரிப் பாவய்யா சொல்லிக்கொண்டு கிணற்றடியில் இன்னும் அதேபடியாக நின்றுகொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டதிலிருந்து சுப்பாலுவேறு அழுகையாய் அழுது கொண்டிருந்தாள்.

*

விஷயம் மணியம் நாயக்கர் காதுவரைக்கும் போய் எட்டிவிட்டது. அவருக்குச் சத்தம் போட்டுத்தான் எதையும் சொல்லணும்; காது அப்படி! நடந்ததைக் கேட்டு அறிந்துகொண்ட அவர் 'நல்லகூத்துதான் போ!' என்று சொல்லிச் சிரித்தார். அப்புறம் சுப்பாலுவின் சித்தப்பா வந்து சொன்னதைக் கேள்விப்பட்டதும் அவர் சிரிப்பதை நிறுத்திக்கொண்டார். நிறுத்திக்கொண்டதோடு மட்டுமில்லாமல் தலையை ஆட்டினார். கிழவர் ஓணான்மாதிரி தலையை ஆட்டினார் என்றால் பழிவாங்காமல் விடமாட்டார் என்று அர்த்தம். ஒரு காலத்தில் இவர் ஊரிலேயே செழிப்பான புள்ளியாக வாழ்ந்து இப்போது பொருளாதாரத்தில் மிகவும் நொடித்துப் போனவர் என்றாலும் இன்னும் அவருக்கு கிராமத்தில் சொல்சக்தி குறைந்துவிடவில்லை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று மணியம் நாயக்கர், இன்னும் சில ஊர்ப்பெரியவர்களுடன் கிணற்றடிக்குப் போனார். அங்கே உள்ளவர்களிடம் நடந்தது என்ன என்பதைப்பற்றித் தீர விசாரித்தார்கள். பிறகு அந்தப் பெண்ணையும் அவளுடைய தகப்பனாரையும் கூட்டத்துக்கு வரவழைத்தார்கள்.

தப்பிதம் பூராவும் சுப்பாலுவின் பேரில்தான் இருக்கிறது என்றும், அவள் ஒரு ஆணை, ஒரு தண்ணீர்த்துறையில் பலபேருக்கு முன்னால் பகிரங்கமாக வைத்து இப்படி பெரும் அவமானப்படுத்திய தப்பிதத்துக்காக அவளேதான் அவனுக்குக் கோவணம் வைத்துவிடவேண்டும் என்று மணியம் நாயக்கர் உள்பட பெரியாட்கள் தீர்ப்புச் சொன்னார்கள். இதைக் கேட்டதும் பெண்டுகள் திடுக்கிட்டார்கள். கூட்டத்தில் சலசலப்பு உண்டானது. சுப்பாலு ஓவென்று அழுதாள். மீசைக்கார சிங்கப்பூர் நாயக்கர், அவள் அழுவதைப் பார்த்து அவள் மாதிரியே உதடு கோணலாக வைத்துக்கொண்டு அழகு காட்டிவிட்டு 'சீ! அழுகை வேறையா உனக்கு? இது முதல்லெயில்லெ தெரிஞ்சிருக்கணும் பொம்பளெ; அழுறா . . . போ; போ,'

சுப்பாலு தயங்கினாள். என்ன செய்வதென்று தெரியலை. தனது

கண்ணீரால் மன்றாடினாள் அங்குள்ளவர்களை. அந்தக் கொடுமையான 'வாயாடிக்'காரிக்கு இதுதான் சரி என்று அங்கிருந்த விடலைப் பிள்ளைகள் மனசுக்குள் கறுவிக்கொண்டார்கள்.

சுப்பாலு அழுதுகொண்டேகிணற்றடிக்குப் போனாள். கூட்டம் அவளைப் பின்தொடராமல் இருக்க கொண்டிக்காவல்காரரும் தலையாரியும் தடுத்து நிறுத்தியும்கூடப் பலர்அங்கே கூடிவிட்டார்கள்.

முகத்தில் கண்ணீர் வடிய அவள் கிணற்றடிக்குப் படி ஏறி நடந்து போவதையே ஊர் கவனித்துக்கொண்டிருந்தது. அவள் குனிந்து கீழே நனைந்து கிடந்த அந்தக் கோவணத்துணியை இடது கையின் இரண்டு விரல்களால் பிடித்து எடுத்துத் தன் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு பாவய்யாவிடம் நீட்டினாள்.

பாவய்யா அசையாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தான். அவளும் முகத்தை மறுபக்கம் திருப்பியபடி கோவணத் துணியை நீட்டிக்கொண்டிருந்தாள். திடீரென்று அசரீரிமாதிரி எங்கிருந்தோ ஒரு இளவட்டத்தின் வாயிலிருந்து அந்தச் சொல் வந்தது. 'பாவய்யா வாங்கிக்கோ'. உடனே சொல்லி வைத்தமாதிரி அங்கிருந்த பலர் அதை வாங்கி எதிரொலித்தனர் 'வாங்கிக்கோ; வாங்கிக்கோ பாவய்யா' என்று எதிரொலித்தனர்.

முதலில் கூட்டத்தில் ஒரு குறுஞ்சிரிப்புப் படர்ந்து, அது வளர்ந்து பெரிசாகிக்கொண்டே வந்தது. பாவய்யா பற்களை உதடுகளால் இழுத்து மூடிக்கொண்டு தன் கோவணத்தை வாங்கக்கொள்ள சுப்பாலுவிடம் கையை நீட்டினான், கூட்டம் இப்பொழுது சந்தோஷ ஆரவாரமே செய்தது. மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்த சுப்பாலுவும் சிரித்தாள். அவள் உடம்பை நாணத்தோடு ஆட்டிச் சிரித்தது அழகாகவே இருந்தது.

அப்பாடா; ஒரு மட்டுக்கும் முடிந்ததே, என்று நினைத்தார்கள். அது முடிவு இல்லை; ஒன்றின் ஆரம்பம் என்பது பலருக்குத் தெரியாது!

வேள்வி, ஏப்ரல்1974

***

# வேட்டி

தூங்கா நாயக்கருக்குப் பல யோசனை ஓடியது, கேவலம் ஒரு 'குண்டி வேட்டிக்கு' இப்படியொரு 'தரித்திரியம்' வந்திருக்க வேண்டாம்.

ரொம்ம்ப வருத்தமாகிவிட்டது மனசுக்குள் அவருக்கு. இருக்கிறதெல்லாம் இந்த ஒரு வேட்டிதான்.

அன்றைக்கு வேலை இல்லை - அதாவது கிடைக்கலை.

அது நல்ல கோடைக்காலம். உடம்பில் வேர்வை நசநசத்தது. மனப்புழுக்கம்வேறு. அப்படியே கொஞ்சம் லாத்தலாய் கம்மாக்கரைப் பக்கம் போய்க் காத்தாட ஒர மரத்தடியில் உட்காரலாமே என்று வேட்டியை மடித்தக் கட்டிக் கொண்டு நடந்தார். சனியன்போல எதிரே ஒரு புளியம்பழம் கீழே கிடந்தது. எடுப்பதற்காகக் குனிந்தார். அவ்வளவுதான்; வேட்டி ரெண்டாக ஒருச்சாண் நீளத்துக்குப் பிய்ந்து போய்விட்டது. கிழிந்தாலும் தைத்துக்கொள்ளலாமே; பிய்ந்தல்லவா போய்விட்டது.

'தெரியாமலா நாணப்ப நாயக்கர் அப்படிச் செய்யிறார்! அவர் ஒண்ணும் பைத்தார மனுசன் இல்லை; நல்ல வசதியானவர். உக்காரும்போது - அது எந்த இடமானாலுஞ் சரி - கலியாணவீடோ விசேச வீடோ ஊர்ப் பொதுக்கூட்டமோ கம்மாய்க்கரையோ எங்கானாலும் சரி, உடம்பு தரையில் படுமேதவிர உக்காரும் தரைக்கும் உடம்புக்கும் மத்தியில் வேட்டி இருக்காது! வேட்டியை மேலே சுருட்டிக்கிடுவார். தரையில் வேட்டி பட்டால் புழுதியும் அழுக்கும் ஆயிரும்; வேட்டி நைஞ்சும் போகுமாம்'. கஞ்சம்பத்தி, ஈயாப்பத்தி என்று யார் எவர் கேலி செய்தாலும் சரிதான்; 'போங்கடா பேப்பய புள்ளைகளா' என்று சொல்லிவிடுவார். அவர் குனியும்போது வெட்கப்படாமல் வேட்டியை - மடித்துக் கட்டியிருந்தால் - மேலே தூக்கி விட்டுக்கொள்வார்!

அவர் செய்ததெல்லாவற்றின் ரகசியமும் தூங்கா நாயக்கருக்கு

இப்பொத்தான் விளங்குகிறது.

விளங்கி என்ன செய்ய இப்பொ!

*

தூங்காநாயக்கர் ஒரு அரசியல்வாதி இல்லை. ஆனால் அப்படி ஆவதற்கு அவருக்கு ஒரு சந்தர்ப்பம் இருந்தது.

1942ல் ஆகஸ்டு மாதத்தில் ஜனங்கள் வெள்ளை ஆட்சிக்கு எதிராகப் பொங்கி எழுந்தார்கள். அந்த எழுச்சியை அடக்க வெள்ளை அரசு ஜனங்கள்மேல் கூட்டு அபராதம் போட்டது; தலைகால் புரியாத பேத்தனமான அடக்குமுறை; போராட்டத்தில் ஈடுபட்டுத் தலைமறைவாக இருப்பவர்களுக்குப் புகலிடமோ சாப்பாடோ கொடுக்கக்கூடாது என்ற உத்தரவிட்டிருந்தது.

நாயக்கர் ஒரு தரைமறைவு அரசியல்வாதிக்குத் தன் குடிசையில் அடைக்கலம் கொடுத்தார். சர்க்காரின் உத்தரவைப் பற்றித் தெரிந்தேதான் கொடுத்தார். காரணம், அவருக்கும் அடிநாளிலிருந்தே தேசீயப் போராட்டம் சுதந்திரம் முதலியவற்றில் கொஞ்சம் 'கிறுக்கு' உண்டு. பத்திரிகைகளை விடாமல் இன்றும்கூட படித்துக்கொண்டுதான் வருகிறார்.

தரைமறைவாக இருந்த அரசியல்வாதி இவருடைய வீட்டை விட்டுப் போனபிறகுதான் போலீஸுக்கு இதுபற்றித் தகவல் தெரிய வந்தது. அதற்காகத் தூங்கா நாயக்கரைப் பிடித்து அவர்கள் அடித்தார்கள். அடியென்றால், அது உங்கவீட்டு அடி எங்கவீட்டு அடி அல்ல. பழைய பித்தளைப் பாத்திரக்கடைக்காரன் அருமையான பாத்திரங்களையெல்லாம் தெருவிலே போட்டு அடித்து நைப்பானே அந்தமாதிரி அவரைப்போட்டு அடி 'நச்சி' எடுத்தார்கள். உட்கார்ந்தால் மிதி; எழுந்தால் அடி.

தவளைகளையும் வண்டுகளையும் கல்லால் நைந்து சித்திரவதை செய்யும் பருவம் சிறு குழந்தையாக மனிதன் இருந்தபோது இருந்து பிறகு

மறைந்துவிடுகிறது என்று மனக்கூறு வல்லுநர்கள் சொல்வார்கள். ஆனால் இந்த போலீஸ் 'மனிதர்கள்' காக்கிச் சட்டை போட்டதும் அந்தச் சிறுபருவம் திரும்பிவிடுகிறதுபோலும். வண்டுகளையும் தவளைகளையும் விட்டுவிட்டு சக மனிதனிடமே அந்த விளையாட்டை விளையாடுகிறார்கள்.

அதுகளுடைய கால்களின் கீழே அந்த தேசபக்தன் மிதிபடும்போது அந்தக் காலத்தில் போலீஸூக்கு பூட்ஸ்கள் கிடையாது. 'இது உஷ்ணமான நாடு; என்னத்துக்கு பூட்ஸ்' என்று 'மூளையுள்ள' வெள்ளைக்காரன் கொடுக்கவில்லை. ஆகவே நாயக்கர் செருப்புக்காலால் உதைபட்டார்.

எவ்வளவு நேரந்தான் ஒரு மனுசனைப் போட்டு கம்மங்கதிரை சமட்டுகிறமாதிரி சமட்டிக்கொண்டிருக்கமுடியும்? கையும் காலும் போலீஸுக்கு வலித்ததால் பிழைத்துப்போ என்று நாயக்கரை எச்சரித்து விட்டுவிட்டார்கள். எனவே அவர் 'ஆகஸ்டு தியாகி' ஆகாமல் ஒரு நூல் இழையில் தப்பினார்.

நாயக்கர் கையிலிருந்த புளியங்கொறடாவைப் பார்த்தார். அதன் கீழ் நுனியின் ஓடு ஒரு அங்குலத்துக்கு உடைந்து அதுவழியாகப் பழம் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவருக்குப் புளியம்பழத்தைப்பற்றிய ஒரு நாடோடி சொலவடை ஞாபகத்துக்கு வரவும் சிரித்துக்கொண்டார் !

அந்நேரம் கம்மாயில் 'கால்' கழுவ ராமராஜு வந்தார். வந்தவர் ஊர்க்கிணற்றில் பொம்பிளைப் பிள்ளைகள் யாராவது தண்ணீர் இறைக்கிறார்களா என்று ஒரு பார்வை பார்த்துவிட்டு, தண்ணீரில் உட்கார்ந்து 'கால்' கழுவிக்கொண்டு எழுந்தார்.

தூங்காநாயக்கர் ராஜுவின் வேட்டியைக் கவனித்தார். தனக்குத் தெரிந்த நாளிலிருந்து அந்த மனுசன் அந்த ஒரே மாதரியான வேட்டியைத்தான் எடுத்து உடுத்திக்கொண்டு வருகிறார். அந்த வேட்டியை விரித்துப் பிடித்தால் நடுமையம் ஒரு ஒண்ணர முழ அகலத்துக்கு நீண்ட வட்ட வடிவில் தூய வெண்மை நிறமாகவும், அது வேட்டியின் கரையை நெருங்க

நெருங்க வெண் சிகப்பு அதிகரித்துக்கொண்டே போகும். இந்தமாதரி

வேட்டி அவருக்கு என்று எங்கிருந்துதான் கிடைக்கிறதோ தெரியவில்லை.

ராமராஜுவின் வீட்டில் வேலைசெய்யும் சின்னக்கனி "அல்வாந்துணி" என்ற செஞ்சிகப்பு "சாய வேட்டி" தான் உடுத்துவான் எப்பவும். "சாயவேட்டி"யில் எம்புட்டு அழுக்கு ஏறினாலும் தெரியாதாமே!.

நாணப்ப நாயக்கரின் பேரன் ராகவலு இந்தக்காலத்துப் பையன். அவன் உடுத்தும் கைலி - வேட்டிகளின் நிறம் பொம்பளைகளின் கலர்ச்சேலையெல்லாம் கெட்டது போ!

மைனர் நாயக்கர் ஒரு வேட்டி உடுத்திக்கொண்டிருக்கார். அசல் முட்டைத்தோடுமாதிரி. கோழிமுட்டையின் ஓட்டுக்கும் கருவுக்கும் மத்தியில் இருக்குமே முட்டைத்தோடு, அது மாதிரி! என்ன மெதுவு; என்ன மெதுவு. எப்படித்தான் நெசவு பண்ணினானோ; அடேயப்பா.

முதலாளி நல்லாநாயக்கர் வீட்டுக்கு ஒருநாள் தூங்கா நாயக்கர் ஒரு வேலையாகப் போயிருந்த சமயம் ஏகாலி சலவைத்துணிகள் கொண்டு வந்திருந்தான். சுமக்கமுடியாத அவ்வளவு பெரிய பொட்டணம். அம்புட்டும் வேட்டிகள்! எத்தனை வகையான வேட்டிகள்; மயில்க்கண் வேட்டி, ஜரிகை வேட்டி, பட்டுக்கரை வேட்டி, பட்டுவேட்டி, நாலுமுழ வேட்டி, எட்டு முழ வேட்டி. கரைகளில்தான் எத்தனை வகை! டெரிக்காட்டனில்கூட வேட்டி வந்திருக்காமே. அவர் வைத்திருக்கும் வாயில் வேட்டிகள் ரொம்ப உயர்ந்த தரமானவை, குடிமகன் சொன்ன மாதரி நாக்கிலே பட்டால் நனைந்துபோயிரும்!

இந்த நல்லாநாயக்கருடைய அய்யா பெரிய முதலாளி இருந்தாரே அவரு 'குழாய்மல்'தான் உடுத்துவார். 'குழாய்மல்'ங்கிறது லங்காஷியர்மில்லில் - இங்கிலாண்டில் - நெசவானது. ரூல்த்தடி கனமுள்ள நீளமான குழாய்களுக்கு உள்ளே, சுருட்டி அடைத்து வர்ரதினால் அதுக்குக் 'குழாய்மல்' என்று பேர்.

*

தூங்கா நாயக்கர் தன்னுடைய வேட்டியை ஏகாலியிடம் போட்டால் சீக்கிரம் கிழிந்துபோகும் என்று அவரே கிணற்றில் இறங்கி பதனமாகத் துவைத்து, பூப்போல உதறி, கமலையின் சிறகுப்பலகையின்மேல் காயப்போடுவார். பிறகு கிணற்றுக்குள் இறங்கி இரண்டு மூன்று வட்டம் கிணற்றின் சுவரை ஒட்டி நீச்சல் அடித்துவிட்டு வந்து கிணற்றுப்படிகளில் இடுப்பளவு உயரம் தண்ணீரில் நின்றுகொண்டு தேய்த்துக் குளிப்பார். குளிக்கும்போதே அண்ணாந்து மேலே வேட்டியை ஒரு பார்வை, (காலம் கெட்டுக் கிடக்கிறதல்லவா; எவனும் வேட்டியை ஆத்திக்கொண்டு போய்விட்டால்!)

மெல்ல இடுப்புத்துண்டை அவிழ்த்து (திரும்பவும் மேலே ஒரு பார்வை; இது வேட்டிக்காக அல்ல!) அவிழ்ந்த துண்டை நீளவசத்தில் சுங்குல் பிடித்து தண்ணீர் வட்டமாகச் சுற்றுவார் வேகமாக. துண்டு முறுக்கேறி பாம்புபோல் சுற்றும். மறுகோடியை அப்படியே பிடித்து முதுகில் போட்டு இழுத்து, இழுத்து துண்டின் இழுப்புக்கு வசதியாக முதுகை நெளித்து நெளித்து அழுக்குத் தேய்ப்பார். தேய்த்துக்கொண்டே கிணற்றுக்குமேலே ஒரு பார்வை வீச்சு!

குளிர்ந்த தண்ணீரில் குளிக்கக் குளிக்கச் சொகம்தான். ஆனாலும் நாம் என்ன சுப்புசெட்டியார்மாதிரி திளைத்துக் குளிக்கமுடியுமா?

குளிப்புக்கு மன்னன் சுப்பு செட்டியார்தான். நாள் முச்சூடும் குளித்துக்கொண்டே இருப்பார். போன ஜென்மத்தில் மனுசன் நீர்யானையாகப் பிறந்திருந்தாரோ என்னவோ! அடைமழை மூடுபனி எந்தக் காலமாய் இருந்தால்தான் அவருக்கென்ன. விதைப்புக்காலத்தில் ஊரே பரபரப்படைந்திருக்கும் நாட்களானாலும் அவருக்கென்ன. ஆனந்தமாய்க் குடைந்து குடைந்து நீராடிவிட்டு தண்ணி போட்டவன் மாதிரி கண்களைச் சிவப்பாக வைத்துக்கொண்டு கையில் "துவை வேட்டி"யுடன் கிணற்றிலிருந்து தண்ணீரைப் பிரிய மனசில்லாமல் வெளியே வருவார்.

சுத்தம் என்றால் அப்படி ஒரு சுத்தம். அவருடைய வீட்டு வாசல் படியில் பளபளவென்று தேய்த்து மின்னும் ஒரு கொப்பறை நிறையத் தண்ணீரும் ஒரு செம்பும் எப்பவும் இருக்கும். வீட்டுக்குள் யார் வந்தாலும் பாதங்களைக் கழுவிக்கொண்டுதான் உள்ளே வரவேண்டும். இது செட்டியாரின் கராலான உத்தரவு.

செட்டியார் காலில் செருப்புப் போடமாட்டார். தோல்மீது அப்படி ஒரு வெறுப்பு. (மாமிச உணவு தின்பவனே தோல் செருப்பு போட்டுக்கொண்டு அலையவேண்டும் என்பார் அவர்). மழைக் காலத்தில் மட்டும் சகதி காலில் ஒட்டாமல் இருக்க மஞ்சனத்தி மரக்கட்டையில் செய்யப்பட்ட பாதுகை அணிந்து கொண்டு நடப்பார்.

வாரத்தில் ஒரு நாள், 'மதியும் புதனும் மயிர் களை' என்ற முதுமொழிக்கு ஏற்ப திங்கள் அல்லது புதன்கிழமையில் குடிமகனைக் கூப்பிட்டனுப்பி தலை மார்பு முதலிய உடம்பில் ரோமம் முளைத்துள்ள சகல பகுதிகளிலும் மழுங்கச் சிரைத்துத் தள்ளிவிடுவார். உடம்பில் எங்காவது ஒரு சிறிய ரோமம் தட்டுப் பட்டாலும் சகித்துக்கொள்ளமாட்டார். கால் கைகளெல்லாம் மழித்து சுரைக்காய் மாதிரி சுத்தமாய் இருக்கவேண்டும் அவருக்கு.

(ஆனால் எல்லாவற்றிலும் சுத்தம் பார்க்கிற செட்டியார், அந்தக் கிராமத்து ஏழைகள் இவரிடம் கொண்டுவந்து கொடுக்கிற அழுக்கடைந்த ரூபாய் நோட்டுக்களையும் நாணயங்களையும் சந்தோஷமாக வாங்கிக்கொள்வார். அடகுக்காக அவர் எதிரிலேயே வேர்வையும் அழுக்கும் நாற்றமும் கொண்ட நகைகளை அவர்கள் கழற்றிக் கொடுக்கும்போது முகம் சுளிக்காமல் பெற்றுக்கொள்வார் !)

அந்த ஊரிலேயே அவர் ஒருத்தர்தான் 'துவைவேட்டி' போடுகிறவர். துவைவேட்டி போடுவதற்கு மூன்று 'செட்' ஆடைகள் வேண்டும். ஒரு செட் என்பது அவருக்கு, அரைஞாண் கயிற்றுக்குப் பதிலாக நாடா இணைத்துத் தைக்கப்பட்ட ஒரு கோவணம், கரையில்லாத ஒரு நாலரை முழம் மல் பீஸ் வேட்டி, ஒரு வடசேரி ஈரிழை சிட்டித்துண்டு இவை கொண்டது.

முதல்நாள் துவைத்துக் கொண்டுவந்த 'செட்'டை உலைக்காமல் அப்படியே ஈரத்தோடு கொடியில் முறுக்கி வைத்துவிடவேண்டும்.

இரண்டாவது நாள் துவைத்துக் கொண்டு வரும் 'செட்'டை முதல் நாள் செய்ததுபோலவே அதையும் ஈரத்தோடு முறுக்கி வைத்துவிட்டு, முதல்நாள் முறுக்கி வைத்திருந்த துணிகளை நிழலில் - வெயில் படாமல் - விரித்து ஆறப்போட வேண்டும்.

மூன்றாம்நாள் துவைத்துக் கொண்டுவரும் துணிகயையும் முதல் நாள் செய்ததுபோலவே முறுக்கி வைத்துவிட்டு இரண்டாம் நாள் முறுக்கி வைத்திருந்தவைகளை நிழலில் விரித்து ஆறப்போட வேண்டும்.

முதல்நாள் துவைத்த துணிகள் இப்போது உலர்ந்து ஆறி இருக்கும்; அதை எடுத்து உடுத்திக்கொள்ளலாம். இந்த மாதிரி சங்கிலித் தொடராக தினமும் மாறி மாறிச் செய்துகொண்டே வரவேண்டும்.

இந்தத் துவை வேட்டி - அல்லது நீர்க்காவி-யில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் இந்தத் துணிகள் வெயிலிலேயே படக்கூடாது என்பதுதான். வெயில் பட்டால் துணிகள் வெண்மை நிறமாகிவிடும். இதை அணிந்துகொள்கிறவனும் நிழலில் உட்கார்ந்து சம்பாதிக்கிறவனாக இருக்கவேண்டும்.

நாட்கள் ஆக ஆக இந்தத் துணிகளின் நிறம் ஒரு அற்புதமான இளம் ரோஜாவின் நிறமாகக் கனிந்துவிடும். இந்த நிறத்தைப் பார்த்து பழகியபிறகு தூய வெண்ணிறமான துணிகளைக் கண்டாலே பிடிக்காது! இந்த ஆடைகளிலிருந்து மணக்கும் ஒருவித புழுக்கமான மணத்தை பழகிக்கொண்டால் அப்புறம் 'வண்ணான் சலவை'யின் வாடை முகம் சுளிக்க வைக்கும்!!

செட்டியார் எப்பவும் மல் வேட்டிகளைத்தவிர வேறு வேட்டிகளைத் தொடமாட்டார். அவருக்கு என்று அந்த மல் வேட்டிகள் எங்கிருந்துதான் கிடைக்குமோ; அவ்வளவு நைஸாகவும் அடர்த்தியாவும் நேர்த்தியாவும்

இருக்கும். வேட்டியிலிருந்தோ துண்டிலிருந்தோ 'அவலெச்சணம்'போல ஒரு நூல்கூட 'மருந்துக்கு'த் தொங்கக்கூடாது. புதுத்துணிகளை வீட்டுக்குக் கொண்டுவந்ததும் முதல்காரியமாக மேஸ்திரியைக் கூப்பிட்டு அனுப்பி, வேட்டி துண்டுகளின் விளிம்புகளை ஜோராக மடித்துத் தைக்கச் சொல்லிவிடுவார்.

ஆடைகள் விஷயத்தில் சுப்புசெட்டியாரின் நேர்த்தியும் கராலும் பின்பற்றக்கூடியதுதான் என்றாலும் பின்பற்றவும் முடியாததுதான்.

மேலத்தெரு வெங்கடசுப்பையா, வீட்டில் ஒரு ஜவுளிக்கடையே - விற்பதற்கு அல்ல - வைத்துக்கொண்டிருக்கிறார். அடேயப்பா! ஒரு சமயம் பீரோவை அவர் திறக்கும்போது தூங்கா நாயக்கர் பார்த்திருக்கிறார். அம்புட்டும் வேட்டிகள்; பூராவும் வேட்டிகள்.

*

யாருக்கு வேட்டிகள் எத்தனை இருந்து நமக்கென்ன; நம்ம வேட்டி போச்சு! இதுதான் நெசம்.

நாயக்கருக்கு துக்கம் கலந்த சிரிப்பு வந்தது.

அப்படியே ஒரு கல்லில் உட்கார்ந்தார். பின்னால் திரும்பி ஒருதரம் வேட்டியைப் பார்த்துக்கொண்டார். அடடா, வேட்டி போச்சே என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டார்.

வேட்டியை ஒதுக்கிக்கொண்டு நாணப்பநாயக்கர் பாணியில் வெறும்கல்லில் உடகார்ந்து பார்த்தார்! சில்லென்று இருந்தது கல். வேனலுக்கு எதவாக இருந்தது.

'காலம் இப்போ ரொம்ப நாகரிகமாகிவிட்டது. முந்திய தலைமுறை ஆட்கள் மாதிரி இருந்தால் வேட்டியே வேண்டிய தில்லை! ஒரு அரணாக்கயிறும் ஒரு பழைய துணி தலையில் லேஞ்சியாக மட்டும் கட்டி

முதுகெலும்புத்தண்டில் வெயிலின் சுள்ளாப்புத் தெரியாமல் இருக்க அந்தத் துணியில் ஒரு முழம் சுங்கு விட்டுக்கொண்டால் போதும். தூங்கா நாயக்கருடைய அய்யா அய்யலுசாமி நாயக்கர் மட்டுமென்ன, அந்தக் கிராமத்துப் பாட்டாளிகளே அப்படித்தான் அரணாக்கயிற்றில் கோவணத்தைச் சொருகிக்கொண்டு சந்தோஷமாய் வாழ்ந்தார்கள்.

எட்டு வயசுவரை ஆண் குழந்தைகள் பிறந்தமேனியாகவே அலைவார்கள். காற்றும் வெயிலும் ஆடைகள். அரையில் அரணாக் கயிறுமட்டுமே இருக்கணும்; அது இல்லையென்றால்தான் பார்த்தவர்கள் சிரிப்பார்கள்!

தூங்காநாயக்கரின் மனைவி வேப்பமுத்து பொறுக்கிச் சேர்த்து அதை அளந்து எப்படியாவது தனக்கு ஒரு சேலை எடுத்துக் கொண்டு விடுவாள். ஊரைச் சுற்றிலும் வேப்பமரங்கள். கோடைக் காலத்தில் பறவைகள் வேப்பமரத்தில் பழங்களைத் தின்று கொட்டைகள் போடும். ஜனங்கள் ஓடிஓடிப் பொறுக்குவார்கள். கூலிப் பருத்திக்கும் சென்று அதைச் சேர்த்து வைத்துவிடுவார்கள். இதனால் குழந்தைகளுக்கு நாக்குக்கு ருசியாக கடைகளில் வாங்கித் திங்கக்கூட பருத்தி கொடுத்தனுப்ப முடியாது. அதுகள் புளியங்கொட்டைகளை பொறுக்கிக்கொண்டு வந்து வரையோட்டில்ப் போட்டு வறுத்து, அதை உரலில் போட்டு இடித்து தோலை நீக்கிவிட்டு கொட்டையின் பருப்பை மட்டிலும் உப்புப் போட்ட தண்ணீரில் ஊறவைத்துத் தின்பார்கள். இதுதான் இந்தப் பாவிமக்களுக்குக் கிடைக்கும் பலகாரம்; பட்சணம்.

*

சற்றுதூரத்தில் பல மனிதர்களின் சளசளப்புக் குரல்கள் கேட்டு தூங்காநாயக்கர் திரும்பிப் பார்த்தார். அது கிராமத்தின் முக்கியஸ்தர்கள் பெரியவர்களின் கூட்டம். அவர்கள் பாரதநாட்டின் சுதந்திர தின வெள்ளிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஊருக்குள் பண வசூல் செய்கிறார்கள். நமக்குச் சுதந்திரம் கிடைத்துக் கால் நூற்றாண்டு ஆகிவிட்டதே!

அந்தக் கூட்டத்தில் முதலாளி நல்லாநாயக்கர், மைனர் நாயக்கர், ராமராஜூ, முதலாளி வெங்கிடசுப்பையா, சுப்பு செட்டியார் முதலிய அனைவரும் இருந்தார்கள். ரொம்ப உத்ஸாகமாக நடக்கிறது வசூல்.

25 வருசங்களுக்கு முன்னால் . . . இந்தக் காசி கன்னியாகுமரி பெருவழிச்சாலை, மங்கம்மா சாலையாக இருந்து, அது பிறகு மதுரை ரோடு ஆகியது. இப்பொழுது ஒரு நிமிஷத்துக்கு ஒன்று அல்லது இரண்டு நிமிஷங்களுக்கு மூன்று என்ற விகிதத்தில் எந்திர வாகனங்கள், சாலை மேலுள்ள இந்தக் கிராமத்தைக் கடந்து செல்கிறது. 25 வருசங்களுக்கு முன்போ, எப்பவாவது அபூர்வமாக ஒரு பிளஷர்க் காரைப் பார்க்கலாம். எறும்புச் சாரையைப்போல் விட்டுவிட்டு கூண்டு வண்டிகள் செங்கோட்டை, இலஞ்சி, தென்காசி முதலிய ஊர்களிலிருந்து மாம்பழங்கள், சம்பை (கருவாடு) முதலிய பாரங்களை ஏற்றிக்கொண்டு கோவில்பட்டிக்கு மெதுவாகப் பாடிக்கொண்டே நகர்ந்துசெல்லும். இப்போது கூண்டு வண்டியே கிடையாது. அவ்வளவும் லாரிகள். எங்கே பார்த்தாலும் லாரிகள். எத்தனை வகை லாரிகள்! எல்லாமே இந்தியாவில் செய்தவை.

புழுதிபறக்கும் கப்பிக்கல் ரோடு இப்பொழுது தார் ரோடு ஆகி நாலு லாரிகள் விலகும்படியான அகலமாகிவிட்டது. இதில்ப் போகும் வாகனங்களையே பார்த்துக்கொண்டிருக்கலாம். கார்கள், பஸ்கள், ஜீப்கள், வேன்கள், டாக்ஸிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் எத்தனை எத்தனை!

கொழுத்த தடியான அழகான பணக்காரப் பெண்ணைப் போல் எப்பாவது ஒரு வெளிநாட்டுக் கார் போகும்! நம்முடைய இந்திய ஜனாதிபதிகூட ஆறு கதவுகள் கொண்ட பெரிய்ய வெளிநாட்டுக் கார் வாங்கி இருக்காராமே.

பணம் வசூலிக்கும் கூட்டம் இப்பொழுது இவரை நோக்கித்தான் வந்துகொண்டிருக்கிறது. ஏதோ இவர் நிறைய அள்ளிக்கொடுத்து விடுவார் என்று நினைத்து அவர்கள் வரவில்லை. சுதந்திரத்துக்காக இவர் ஜெயிலுக்குப் போகா விட்டாலும் உதைபட்டவர் அல்லவா. எல்லோரும் இவரை மலர்ந்த முகத்துடன் பார்த்துக்கொண்டே வருகிறார்கள்.

தூங்காநாயக்கருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. பரபரப்போடு எழுந்து நின்று இடது கையால் வேட்டியின் பிய்ந்த கிழிசலை மறைத்துக்கொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானார்.

தாமரை, ஏப்ரல்1972

***

# கனிவு

மல்லம்மாவுக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதரி இருந்தது. தன் புருஷனை அவள் அதற்கு முன்பு பார்த்ததே இல்லை; அவன் குரலைக்கூடக் கேட்டதும் இல்லை. அவள் பிறந்த வீடு, வளர்ந்த ஊர், பழகிய சூழல் எல்லோமே வேறு.

கழுகுமலைச் சந்தையிலிருந்து அவர்கள் தொழுவுக்கு மாடு பிடித்துக்கொண்டு வந்தமாதரி, கழுகாசலப் பெருமான் சன்னதியில் வைத்துக் கழுத்தில் மாலை போட்டு இவளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

மல்லம்மாவின் தகப்பனார் நாலும் படித்தவர், மகளை அந்த வீட்டில் விட்டுவிட்டுப் புறப்படும்போது அவளைப் பார்த்து, "அம்மா, பொயிட்டு வாரேன்" என்று சொல்லும்போது தொண்டை கட்டிக்கொண்டது. இந்த நாக்கு இருக்கே . . . சமயத்தில் வம்பு பண்ணி விடும். மல்லம்மாவாலும் பேசமுடியவில்லை. தான் பிறந்ததிலிருந்து தன்னோடு கொண்ட அனைத்தும் இப்பொழுது தகப்பனாரோடு போய்விடப்போகிறது என்பதுபோல் விசும்பினாள். அவருக்கு மகரிஷி கண்வரின் வாக்கியம் ஞாபகத்துக்கு வந்தது.

மல்லம்மா தனியள் ஆனாள்.

*

தனது துக்கத்தைக் கொஞ்சம் ஆற்றிக்கொள்ளட்டும் என்று அந்தக் குடும்பத்தார் சிறிது விலகியிருந்தார்கள். ஆனால் தனிமை அவளை மேலும் அழுத்தவே செய்தது.

மூக்கைச் சிந்தி உதறிவிட்டுக் கண்ணையும் மூக்கையும் முந்தானையால்

துடைத்துக்கொண்டபோது அந்த வீட்டுப் பூனை அவளது கால்களில் வந்து முதுகை உயர்த்தி உராய்ந்து குரல் கொடுத்தது. அந்தப் பூனை அவளுக்குச் சொன்ன செய்தி என்ன?

அது மீண்டும் மீண்டும் குரல் கொடுத்துத் தன்மீது பிரியத்தோடு ஒட்டி உராய்ந்தது. அவளது முகத்தில் உடனே ஒரு மலர்ச்சியை உண்டாக்கியது. துக்கத்தின் ஒரு கோடியிலிருந்து குதூகலத்தின் மறு கோடியை உடனே எட்டித் தொடமுடிவது பெண்மைக்கே உரிய பாங்கு.

அந்தச் சிரிப்பில் அனைவருமே பங்குகொண்டு அவளிடமிருந்து அந்தப் பூனையை அழைத்தார்கள்.

"பாஸ் பாஸ் சங்கு பாஸ்"

அந்தப் பூனையின் பெயர் பாஸு:

அது அவளைவிட்டு நகராமல் மேலும்மேலும் அவளை உராய்ந்து மியாவ் மியாவ் என்றுகொண்டேயிருந்தது. புன்னகைகள் இப்போது உரத்த சிரிப்பாணிகளாக ஒலித்தன. இப்படியாக மல்லம்மா அந்தக் குடும்பத்தோடு முதல் ஒட்டுதலுக்கு அந்தப் பூனை துணை செய்தது.

அவள் புருஷனுக்குக் குளிக்க வென்னீர் எடுத்து வைத்தாள். அவன் குளிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தமாதரி கிராமங்களில் குளிப்பதற்குத் திறந்தவெளி அங்கணம் என்று உண்டே தவிர, குளியல் அறை என்று கிடையாது. புருஷனுக்கு முதுகு தேய்த்துவிட வேண்டும். அதைச் செய்ய அவளுக்குத் தயக்கமாகவும் நாணமாகவும் இருந்தது. முகூர்த்தத்தின்போது அவர்கள் இருவரின் கைகளையும் சேர்த்து வைத்தார்கள். உழைத்துக் காய்ப்பேறிய முரட்டுக்கை பற்றிய ஸ்பரிசம் ஒன்றைத்தான் அறிந்திருந்தாள். அவனுடைய ஒவ்வொரு வினாடி எதிர்பார்ப்பும் அவளுக்குக் கூச்சத்தை அதிகப்படுத்தியது. அந்தப் புதுமணப்பெண்ணின் காதுமடல்களில் ஜிவ்வென்று சூடான இரத்தம் பரவ, நாணத்தோடு அவனுடைய பரந்த முதுகைத் தொட்டு அழுக்குத்

தேய்த்தாள்.

தேய்ப்புக்குத் தக்கபடி கொண்டையாவின் முதுகு அவனையறியாமலேயே வளைந்து இணைத்து கொடுத்தது. பிடரியின் பக்கங்களில் காதுகளின் கீழே அவள் சொறிந்து தேய்க்கும்போது அவன் கூச்சமும் புளகிதமும் அடைந்தான்; அப்படி அடைவதை அவளும் உணர்வது மாதரிப் பட்டது.

ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொருமாதரியான பழக்க வழக்கங்கள் நிலவி வருகிறது. இவர்களுடைய சமூக முறைப்படி கல்யாணம் முடிந்தவுடன் ஒரு நாள் பார்த்து முதல்இரவு என்ற ஏற்பாட்டைப் பெரியவர்கள் செய்விப்பது இல்லை. இங்குள்ள பெரியவர்களிடம் அதைப்பற்றிக் கேட்டால், "சை! அது என்னங்ஙே அசிங்கம்; பசு மாட்டைக் கொண்டுவந்து நிறுத்தி காளையை அவுத்துவிடுகிற மாதரி . . . நாம்பள்ளாம் மனுசனில்லையா" என்று கேட்பார்கள்!

கனிந்தவுடன் மணமக்கள் தாங்களாகவே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியதுதான்! ஆனால் இப்படி உண்டாக அவர்களவர்கள் மனப்பக்குவத்தின்படி வாரக்கணக்கு மாசக்கணக்கு என்று நாட்களாகி விடும். அதோடு, சீக்கிரம் இணங்கிவிடுகிற பெண்ணுக்கு சமூகத்தில் மதிப்பில்லை. பெண்ணுக்கு ஆணும் இளைத்தவனில்லைதானே?

இந்த 'விளையாட்டை'க் குடும்பத்தின் 'நடுவர்கள்' பார்க்காதது போல் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்பதை இவர்கள் அறிவார்கள்.

*

அது பெரிய குடும்பம்; சிறிய வீடு.

மாடுகள்; எருமை, பசுக்கள் என்று. ஆடுகள்; செம்மறி, வெள்ளாடு என்று. கோழிகள் பலவகை. இதுதவிர, நாய், புனுகுப்பூனை, வாத்து, புறா, புள்ளிமான், வெள்ளை முயல்கள் இப்படியாகக் குடும்பத்தை ஒட்டிய ஜீவன்கள் நிறைய.

கலகலப்பான அதிகாலை நேரம். மல்லம்மா இடுப்புயர மடாவில் ஆள் உயர மத்தினால், நின்றுகொண்டு தயிர் கடைந்துகொண்டிருக்கிறாள். இரண்டு கைகளிலும் கயிற்றைப் பிடித்து இழுத்துக் கடையும் பொழுது அவளுடைய இடுப்பு அசையும் அழகைக் கொண்டையா பார்த்து அனுபவிக்கிறான். குடும்பத்தைச் சேர்ந்த மற்ற குழந்தைகள் வெண்ணெய் வாங்கித் தின்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கடையும்போது மேலே தெறிந்து விழும் துமி அவர்களிடையே ஒரு குதூகலச் சிரிப்பை உண்டாக்குகிறது.

கிடாரங்காய் அளவுள்ள பெரிய வெண்ணெய் உருண்டை அவளது உள்ளங்கையில் குதித்துக் குதித்து உருள்கிறது. அதைத் தண்ணீரில் மிதக்க விட்டுவிட்டு மத்திலிருந்து வழித்த வெண்ணெய் உருண்டைகளை, நீட்டிக்கொண்டிருக்கும் கைகளில் வரிசையாக வைத்துக்கொண்டு வருகிறாள். குழந்தைகளின் கைகளுக்கு மத்தியில் ஒரு பெரிய கனமான கை வெண்ணெய்க்காக நீளுகிறது. நீட்டிய அந்தக் கைக்கு மல்லம்மா வெண்ணெய் தராமல் அதன் கருஞ்சதையில் நறுக்கென்று பலமாக ஒரு கிள்ளு தருகிறாள். குழந்தைகள் குதித்து ஆரவாரமாகச் சிரிக்கின்றன. பெரியவர்கள் ஏதும் அறியாதவர்கள் மாதரி முகத்தை வைத்துக்கொண்டு அவர்கள் பாடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!

உணவு படைக்கும்போது மல்லம்மாவிடம் மௌனமாகத் தன் கையை நீட்டிக் காண்பிக்கிறான் கொண்டையா. கையில் இரத்த விளாறுகளாக நகங்களினால் சீய்ச்சப்பட்ட காயங்கள். இரவில் அவள் படுத்திருந்த திசையில் அவனுடைய கை நீண்டதற்கு அவள் கொடுத்த பதில்கள் அவை. அதைப் பார்த்தும் பார்க்காததுபோல அவனுக்கு நெய் வட்டிக்கிறாள். வேண்டாம் போதும் போதும் என்று அவன் கை தடுக்கிறது; அப்போது அந்தக் காயங்களின்மேல் சொட்டுகிறது நெய்!

தாங்கமுடியாத வேலைப் பளுவின்போது அவளுக்குக் கொண்டையா வந்து உதவுவான். அவள் அதை வேண்டாம் என்று தடுப்பதில்லை; விரும்பி ஏற்றுக்கொள்வதும் இல்லை. அவனுடைய சரசமும் அவளது ஊடலும் பல

வண்ணங்களில் தொடராக நீளுகின்றன. பல கோணங்களிலும் பல விதங்களிலும் அவர்கள் ஒருவரை மற்றவர் அறிந்துகொள்ள இந்தக் கெடு உதவியது.

இப்போது அவர்கள் முன்புபோல் பேசக் கூச்சப்படுவதில்லை. சொந்த நிலத்தில் நிறை பிடித்துப் போட்டி போட்டுக்கொண்டு களை செதுக்கினார்கள். வியர்வையால் குளித்ததுபோல் தெப்பமாக நனைந்தார்கள்.

மதிய உணவுக்காகக் கருவ மரத்தடிக்கு வந்தார்கள். அந்த முள் மரத்தைக் கடந்து காற்று செல்லும்போதெல்லாம் அது தனது மொழியில் கிசுகிசுக்கும். பலமாகக் காற்றடிக்கும்போது எதையோ ஒன்றைத் தெரிவித்துவிட்டுக் குனிந்து சிரித்துவிட்டு நிமிரும். அந்த மண்ணைப் போலவே அந்த மரம் கறுப்பு நிறம் கொண்டது; அந்த மரத்தைப் போலவே அந்த மக்கள் கரிய நிறம் கொண்டவர்கள்.

நிழலில் உட்கார்ந்து, தலையில் கட்டியிருந்த துணியை உதறி முகத்தையும் உடம்பையும் துடைத்து வியர்வையை ஆற்றித் தகிப்பாறினார்கள். சுகமாக வீசிய உப்பங்காற்று ஆனந்தத்தைக் கொடுத்தது. தனது அருகே அமர்ந்திருக்கும் மல்லம்மாவின் வியர்வை வாடை அவனுக்கு அவள்மீது மோகம் உண்டுபண்ணியது. அவள் அந்த மரத்தடியில் இருந்த தொட்டாமடக்கியைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். அந்தச் செடி, தொட்டவுடன் தனது விரிந்த இலைகளை நாணத்தோடு மடக்கிக்கொள்ளும்.

சோற்றுக் கலயத்தை அவள் அவனுக்கு முன்னால் கொண்டு வந்து வைத்து நெருங்கி அமர்ந்தாள்.

பெண்மை ரொம்பவும் வினோதமானதுதான். கலயத்தை வைத்தவள் அவனை அப்படி ஒரு பார்வை பார்த்திருக்க வேண்டியது இல்லைதான்!

சில பெண்கள் ஒரு அசைப்பில் அழகாகத் தெரியும். சிலரைப்

பார்த்ததுமே பிரமாத அழகாய்த் தெரிவார்கள். ஆனால் பார்க்கப் பார்க்க அழகு விட்டுக்கொண்டே வரும். மல்லம்மாவின் அழகு அப்படிப்பட்டதல்ல. முதல் பார்வையில் அவள் அழகாகத் தெரியமாட்டாள். கவனித்துக்கொண்டே இருந்தால், பார்க்கப் பார்க்கப் அவளுடைய ஒவ்வொரு அழகும் தனித்தனியாக அதிகமாகிக்கொண்டே வரும். கொண்டையாவுக்கு ரொம்பவும் பிடித்தது அவளுடைய பவழநிற உதடுகள்தான். கீழுதட்டில் அழகான கரும்பச்சை நிறத்தில் ஒரு சிறிய மச்சம் விழுந்திருந்தது. பார்த்துக்கொண்டே இருந்தவன் அதைத் தொடப்போனான். தொடவந்த கையை அவள் தட்டிவிட்டு விலகிக்கொண்டாள்.

அவன் உண்ணப்போகும் முதல் கவளத்தை அவளுக்கு நீட்டினான். அவள் மறுக்காமல் மௌனமாக இருக்கவே அவளுடைய வாயருகே கொண்டுபோனான். முகத்தைத் திருப்பி அவள் எழுந்துவிடவே அவனும் கவளத்தைக் கலயத்தில் இட்டுவிட்டு எழுந்து விட்டான். திகிலுடனும் ஆச்சரியத்துடனும் அவள் பார்த்ததை அவன் லட்சியம் செய்யாமல் நேரே போய் களை சுரண்டியை எடுத்து பாக்கி நிறையைச் செதுக்கத் தொடங்கி விட்டான். மல்லம்மாவுக்கு மனம் கூம்பிவிட்டது. தன்னைப் பேதை என நொந்துகொண்டாள்.

அவன் திரும்பவும் வருவான் என்று கலயத்தின் அருகே காத்திருந்தாள். அதை அறிந்து அவன் வர நினைத்தும் அவனுடைய 'தான்' அதற்கு இடம் கொடுக்கவில்லை. குறிப்பிட்ட அளவு நேரம் கடந்தபிறகு, இனி வரமாட்டான் என அறிந்து அவளும் பசியோடு, அவனுக்குச் சமமாக முன்னிலும் வேகமாகக் களை செதுக்கலானாள். இருவரும் பேசிக்கொள்ளாமல் போட்டியில் களை செதுக்கினார்கள்.

அவள் நெருங்கும்போது அவன் ஊடி விலகுவதும் அவன் நெருங்கும்போது அவள் ஊடி விலகுவதுமாக சென்றது காலம்.

*

பறவைகள் கூடு திரும்புகிற நேரம்.

பொழுது வேகமாக இருட்டிக்கொண்டு வந்தது. அது சிறிய பகல்களைக் கொண்ட உழைப்பாளிகளின் பொழுது. இயற்கை அன்னை பருவ காலங்களை அந்தமாதரி அமைத்திருக்கிறாள்; உழைத்துக் களைத்தவர்கள் சீக்கிரம் உறங்கச் செல்லட்டுமே என்று.

கொண்டையாவின் களைசுரண்டியையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, மரத்தடியிலுள்ள கலயத்தை எடுத்துவரப் போனாள் மல்லம்மா. அவளது காலடி விரிவுக்குழிக்குள் பதிந்தது. பதிந்த இடதுபாதத்தைத் துள்ளி விழுந்து பதறிப்போய் வேகமாய் உதறினாள். உதறிய வேகத்தில் அவளுடைய காலணி தொலைவில் போய் விழுந்தது. என்ன என்ன என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தான் கொண்டையா. விரிவுக்குழிக்குள் பார்த்தவளுக்கு ஏதோ நெளிந்து மறைகிறமாதிரி தெரிந்தது.

அந்த ஒரு கணத்தில் அவள் தன் முடிவை உணர்ந்தாள். அந்த மௌன வினாடிக்கு முன்னால் அவளுடைய அத்தனை பிகுத்தன்மைகளும் கழன்று வழுந்தன. தனது புருஷனை இதுவரை அத்தனை வாஞ்சையோடு பார்த்ததில்லை. கைகளால் அந்தக் காலை இறுகப் பிடித்துக்கொண்டு அவள் பார்த்த அந்தப் பார்வையை அவனால் செரிக்கமுடியவில்லை.

மரணத்துக்குமுன் மனிதன் துரும்பிலும் கேவலம். தாங்கள் இதுவரை நடந்துகொண்ட விதமெல்லாம் எவ்வளவு பைத்தியமான போலித்தனம் என்று பட்டது. இந்த எண்ணம் தோன்றிய உடனே அவர்கள் ஆன்மா நெருங்கி ஒட்டிக்கொண்டது.

கடிவாயில் அவன் வாயை வைத்துக் கடித்து உறிஞ்சி விஷத்தைத் துப்பினான். தன்னை அவன் காப்பாற்றத் துடிக்கும் வேகமும் ஆர்வமும் அவள் இதயத்தைத் தொட்டன, தன்னைக் காக்கும் ரட்சகன் அருகே மரணம் அவளுக்குத் துச்சம் என்று பட்டது.

அவளை அப்படியே வாரி எடுத்துக்கொண்டு வைத்தியனின் வீட்டைப்

பார்க்க ஓடினான். அவன் கழுத்தைச் சுற்றிக்கொண்ட அவளுடைய கைகள் இறுகின. அந்த இறுக்கத்தில் அவளுடைய 'தானு'ம் அழிந்தது.

*

வைத்தியர் கொஞ்சம் மிளகு எடுத்துக்கொடுத்து மல்லம்மாவை வாயில்போட்டு மெல்லச் சொன்னார். 'மிளகின் காரம் தெரியிதா?' என்று கேட்டார். 'தெரியிது", என்றாள். கொஞ்சம் அரப்பு எடுத்துக் கொடுத்து மெல்லச் சொன்னார். கசப்பதாகச் சொன்னாள். வைத்தியர் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. பயப்படவேண்டாம் என்றார்.

கடிவாயிலிருந்த காந்தல் பாதம் பூராவும் பரவிப் பற்றி எரிந்தது. எரியும் அடுப்புக்குள் கால் இருப்பதுபோல் தீயாகப் பற்றி எரிவதாக அவள் சொன்னதை வைத்துச் சேடா கடித்திருக்கிறது என்று தீர்மானத்துக்கு வந்தார் வைத்தியர்; புகையிலைச் செடியின் பச்சை இலையைக் கொண்டுவந்து அரைத்துப் பூசினார். வேப்பங்குலையை அடித்து மந்திரித்தார். ஒரு சிறிய உருண்டை மை கொடுத்துச் சாப்பிடச்சொல்லி உப்பில்லாப் பத்தியம் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, விஷமை சாப்பிட்டிருப்பதால் அகப் பத்தியம் காக்கவேண்டும் என்று கொண்டையாவைப் பார்த்துச் சொன்னார்.

அகப்பத்தியம் என்று அவர் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

"இவளைப் பிறந்த வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு இருபது நாள் கழித்துத்தான் கூட்டிக்கிட்டு வரணும். சொல்றது புரியுதா?" என்று அவர் சொல்லிச் சிரித்தபிறகுதான் அவன் தெரிந்துகொண்டான்.

மல்லம்மாவின் தகப்பனார் வந்து அவளை கூட்டிக்கொண்டு போனார்.

*

குணமாகி உடம்பு தேறிக்கொண்டு வந்தாலும் மனசில் சதா கொண்டையாவின் முகம் வந்து நிற்கும். நெஞ்சில் பாரம்போல் அழுத்தும் ஒரு வேதனை. தொண்டையில் வலியோடு கூடிய ஒரு வறட்சி, பிரிவால் மெலிந்து தனிமையில் வாடி அவனை நினைத்து ஏங்கி யாருக்கும் தெரியாமல் மௌனமாகக் கண்ணீர் வடிப்பாள். திங்களோடு திங்கள் எட்டு, செவ்வாய் ஒன்பது, புதன் பத்து என்று நாட்களை அடிக்கடி எண்ணுவாள். ராத்திரிகளில் கனவுகளோடு குழப்பமான அரைகுறைத் தூக்கம், ஏக்கமும் தவிப்பும் அவளைப் பேயாக அலைத்தன. இருபது யுகங்களைப் போல் இருபது நாட்கள் ஊர்ந்தன.

அவள் எதிர்பார்த்தபடியே கொண்டையா திடீரென்று வந்தான். அப்போதுதான் அவள் குளித்து தலையாற்றிக் கொண்டிருந்தாள். கறுப்பு அருவி தலையிலிருந்து பொங்கி வழிவதுபோல் ரோமக் கற்றைகள் உடம்பை உராய்ந்து தரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. கண்டதும் எழுந்து நின்று இரு கைகளையும் அவனை நோக்கி நீட்டத்தான் முடிந்தது. கண்கள் பளபளத்தன. பேசமுடியாமல் உதடுகளில் மட்டும் ஒரு துடிப்பு.

"மல்லம்மா . . ." என்று வாய் நிறைய அழைத்துக்கொண்டே ஓடிவந்து அவன் அவளைக் கட்டிக்கொண்டான். வாழ்க்கையில் இப்படிக் கணங்கள் ஒப்பற்றவை; உயிரோடு உயிர் ஒட்டும் நேரம் மிகவும் கொஞ்சம்.

அவ்வளவு ஈடுபாட்டிலும்கூடப் பெண்மை உஷாராய் இருக்கிறது! திடீரென்று அவனிலிருந்து பின்வாங்கி விலகிக் கொண்டாள். அவனுடைய ஆச்சரியம் விரிவதற்குள் முற்றத்தைக் கடந்து மல்லம்மாவின் தகப்பனார் வீட்டுக்குள் நுழைவது அவனுக்குத் தெரிந்தது. 'பாம்புக் காதுகள்தான் உனக்கு' என்பதைப்போல பார்த்தான் அவளை.

மாமனார் அவனை வரவேற்று முகமன் கூறினார். சுற்றுமுற்றும் பார்த்து அவன் மட்டுமே வந்திருப்பதை நினைத்து முகம் ஆச்சரியப்பட்டாலும் மனம் சிரித்துக் கொண்டது. தனியாக வந்ததுக்கு அவன் ஒரு காரணம் சொன்னான். பூரணமாக அது உண்மை இல்லை என்பது. அந்த

நரைத்தலைக்குத் தெரியும்! அதுவும் ஒரு காலத்தில் அவர்களைப் போல 'சிறுசு' ஆக இருந்ததுதானே? வருடத்துக்கு ஒருதரம் வசந்தம் வந்தாலும் வாழ்க்கையில் மட்டும் ஒரே தரம்தான் என்பதை அது அறியும்.

ஆனாலும் மல்லம்மாவையும் கொண்டையாவையும் பிரித்து வைப்பதற்குக் காரணங்களா கிடைக்காது இந்த உலகத்துக்கு. சில்லுண்டிக் காரணங்கள் போக, மலைபோல் ஆடிமாசம் குறுக்கிட்டது. இளம் தம்பதிகளுக்கு இது ஒரு கொடுமையான மாசம். என்ன காரணத்துக்காக ஆணும் பெண்ணும் இந்த மாசத்தில் மட்டும் பிரிந்திருக்கவேணும் என்று அவளுக்குத் தெரியவில்லை.

பாவம், அவர்கள் இதைக் கேட்டதும் ரொம்பவும் சோர்ந்து போனார்கள். ஆடிமாதம் தனது இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஊடே புகுத்தி அகலப்படுத்தி அவளை அந்தப்பக்கமும் அவனை இந்தப்பக்கமும் தள்ளிவிட்டது. அந்தச் சிறிசுகள் திரும்பவும் நாட்களை எண்ண ஆரம்பித்தார்கள்.

ஆண்டு பாதி ஆடி பாதியாகத் தெரிந்தது அவர்களுக்கு.

வந்தது ஆவணி மாசம். வானத்தில் சூல் கொண்ட மேகங்கள் படைபடையாக நகர்ந்து வர ஆரம்பித்தன. தோட்டக்காரன் குடத்தை ஏந்திச் செடிகளுக்கு நீர் வார்ப்பதுபோல் வேண்டிய இடங்களுக்கெல்லாம் பெய்தது மழை. தேன் கூட்டைப்போல் கரிசல் காடு சுறுசுறுப்படைய ஆரம்பித்தது.

மல்லம்மாவின் தகப்பனார் பலகாரப் பெட்டிகளுடன் ஒருநாள் அவளைக் காடிவண்டியில் ஏற்றிக்கொண்டு காலைப்பொழுதில் வந்தார். விளைந்த மக்காச்சோளக் கதிரின் மணிகளைப்போல் நிறைந்த சிரிப்புடன் பற்களைக் காட்டிக் கொண்டையாவைப் பார்த்து பரவசத்துடன் சிரித்தாள் மல்லம்மா.

*

'பத்துக்குறுக்கம்' என்று அவர்களுக்கு ஒர பெரிய விஸ்தாரமான புஞ்சை. மல்லம்மா தவிர, குழந்தை குட்டிகள் உட்பட எல்லோருமே அங்கே போயிருந்தார்கள். வீட்டில் அவள் சமையல் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

கற்களைப் பொறுக்குகிறது, முட்களைப் பொறுக்கிக் குவித்துத் தீயிட்டுப் பொசுக்குகிறது, செடிகளை வெட்டுகிறது, கரடுகளைத் தோண்டி கட்டாப்புகளைச் சரி பண்ணுகிறது, அரளைக் கற்களை ஒழுங்குபடுத்தித் தத்துக்களை பலப்படுத்துகிறது, இப்படியாக அங்கே வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. உழுதுகொண்டிருந்த கொண்டையா மேழியைத் தகப்பனாரிடம் கொடுத்து ஏதோ ஒரு சாக்குச் சொல்லிவிட்டுத் தப்பி வீட்டுக்கு வந்துவிட்டான்.

திடீரென்று முன்னால் போய்நின்று அவளை ஆச்சரியப்பட வைக்க வேண்டுமென்று நினைத்து வந்தான். வீட்டுக்குள் நுழையும் போதே புத்துருக்கு நெய்யின் மணம் வந்தது. பூனைமாதரி அடிமேல் அடிவைத்து மெல்ல நுழைந்து எட்டிப்பார்த்தான். அவள் அடுப்புக்கு முன்னால் உட்கார்ந்து பானையின் வாய்க்குள் வடிமாரைச் செருகிச் சோற்றை வடித்துக் கொண்டிருந்தாள் கவனமாக. இவனைக் கண்டும் ஆச்சரியப்படவில்லை அவள்; இவன் இப்படி வரவில்லையென்றால்தான் ஆச்சரியப் பட்டிருப்பாள்!

அவள் பக்கத்தில்போய் இவன் நின்றவிதமும் பரபரத்ததையும் குறுஞ்சிரிப்புடன் கவனித்துக்கொண்டிருந்தாள். அவளது நாடியைக் கைகளால் தாங்கி முகத்தை நிமிர்த்தினான். அவளது மூக்கிலும் மேலுதட்டிலும் வியர்வை முத்துக்கள் பூத்திருந்தன. அவள் பானையை நிமிர்த்தி வைத்துவிட்டு திடீரென்று எழுந்து அவனை அப்படியே ஆவிசேர்த்துக் கட்டிக்கொண்டாள். அவன் வாயில் தன் வியர்வை நனைந்த உதடுகளைப் பதித்து மிருதுவாக இடமும் வலமுமாகத் தேய்த்தாள். மூக்கினால் மூச்சை பலமாக முகர்ந்து அழுத்தி ஓசை எழ முதல்முதலில் அவனுக்கு ஒரு உப்பு முத்தம் கொடுத்தாள்.

கொண்டையா தம்பதியின் 'முதல்பகல்' இப்படியாகத்தான் ஆரம்பித்தது.

*

வட்டிலில் நெய்விட்டுப் பிசைந்த முதல் கவள அன்னத்தை, துவண்ட அவள் அவனுடைய தோளில் சாய்ந்துகொண்டு திருப்தியோடு பெற்றுக்கொண்டாள்.

குமுதம்- 25.2.70

***

# குருபூசை

எல்லோரும் குருபூசை கொடுக்கிறார்கள்! நாமும் அந்தமாதிரி கொடுக்கமுடியுமா என்று மலைத்தாள் சிவாமி ஆச்சி. சின்னப் பிள்ளையில் அவளும்போய் குருபூசையில் சாப்பிட்டவள்தான். அந்தச் சாப்பாடே தனி ருசி.

திருவிழாச் சமயத்தில் மலைச்சாமி முருகன் கோயிலைச் சுற்றியும் குருபூசைச் சாப்பாடு சாப்பிட்டு முடியாது. 'இப்பந்தான் அங்கனெ உட்கார்ந்து சாப்பிட்டு வரேன்' என்று சொன்னாலும் விடமாட்டார்கள். 'ஒரு வாய் சாப்பிட்டுப்போ, ஒருவாய்' என்று வற்புறுத்துவார்கன். குருபூசையில் முதல்ச்சலுகை பரதேசிகளுக்குத்தான். இத்தனை பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுகிறேன் என்று குருபூசை கொடுப்பதற்கு முன்னால் நேர்ந்து கொள்ளுகிறது.

குருபூசை சமயத்தில் இந்தப் பண்டாரம் பரதேசிகளுக்கு ரொம்பத்தான் கிராக்கி! சிவாமியின் தாத்தா இப்படித்தான் ஒரு திருவிழாவின் போது குருபூசை கொடுத்தார். நூத்திளட்டு பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுகிறதாக வேண்டுதல். என்றாலும் அவருடைய வசதிக்குத் தக்கபடி ஒரு முன்னூறு பேருக்கு மொத்தம் சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு ஆகியிருந்தது. இந்தமாதிரி ஊரு உலகத்திலே இருக்கிறவர்களெல்லாம் முன்னூறு ஐநூறு என்று பொங்கிப்பொரித்துத் தட்டிக் கொண்டு திருவிழாவுக்கு வந்து ஆண்டிப்பண்டாரம் பரதேசி ஏழை எளியது என்று சோறுபோட்டால் எவ்வளவு என்றுதான் தின்று தொலைக்கிறது? பண்டாரம் பரதேசிகளெல்லாம் ஓடி ஒளிந்துகொள்ள ஆரம்பித்துவிடுவார்கள், "வாங்க சாமி; சாமீ வாங்க" என்று அவர்களைக் காலில் விழுந்து கெஞ்சணும். அவர்களோ உண்ட மயக்கத்தில் சிவனே என்று மல்லாந்து கிடப்பார்கள்.

*

தாத்தா குருபூசை கொடுத்த அன்று நடந்ததை இப்போது நினைத்தாலும் அவளுக்கு விநோதமாய் இருக்கும். இவளுக்கு அப்போ பத்து ஒம்பது வயசிருக்குமா; இருக்கும். வழுவழுப்பான கல்மண்டபத் தூண்களைப் பிடித்து ஒவ்வொரு தூணாகச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தாள். வயசான ஒரு பாட்டி, காவி உடுத்தி மல்லாந்து கிடந்த ஒரு பரதேசியின் காலடியில் வந்து குனிந்து "சாமி எந்திங்க, இந்த ஏளை கொடுக்கிற குரு பூசைக்கு வந்து அன்னம் சாப்பிடுங்க; சாமி எந்திங்க" என்று இதையே திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டே இருந்தாள்! சாமி அசையவேயில்லை. சிவாமிக்கு இது வேடிக்கை பார்க்கத் தகுந்த விஷயமாகப் பட்டது.

படுத்துக் கிடந்த பரதேசிக்குப் பக்கத்துலேயும் சில பரதேசிகள் சாய்ந்துகொண்டும் வேட்டியை நெகிழ்த்தி விட்டுக்கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு மொட்டைப் பரதேசி ஒருத்தன் - சின்ன வயசுதான் - வாயைக் கோணலாக வைத்துக்கொண்டு உள்ளங்கையில் எதையோ வைத்து அதன்மீது சொட்டுத் தண்ணீர் விட்டு அழுத்தி அழுத்தி உருட்டிக்கொண்டிருந்தான்.

பரதேசிகள் யாரும் தனது வேண்டுதலுக்கு அசையாததால் கிழவி அம்மாளுக்கு அழுகை வரும்போல் இருந்தது. மவுனமாக கைகளைக் கட்டிக்கொண்டே நின்றாள். திடீரென்று அவள் கண்களில் திரண்ட கண்ணீர் பரதேசியின் கால்மாட்டிலோ காலிலோ விழுந்தது போலிருக்கு. படுத்துக்கிடந்த பரதேசி எழுந்தான். "எந்த எடம்; எந்த எடம்?" என்று அவளிடம் கேட்டான். இப்போது அந்தக் கிழவி அம்மாள் முகம் மலர "அந்தோ . . . வேப்பமரம் நிக்கே அங்கனெ" கைநீட்டிக் காண்பித்தாள். "நீங்க போங்க நா வாரேன்" என்றான். 'சரி' என்று அந்த அம்மாள் கொஞ்சதூரம் போயிருப்பாள். பரதேசி தன் வாயினுள் விரலைவிட்டுக் கொடகொடவென்று - ஒரு குடம் இருக்கும் - வாந்தி எடுத்தான்! பரதேசிகளுக்கு மத்தியில் சலசலப்பும் கலகலப்பும் ஏற்பட்டது.

வாந்தியெடுத்த பரதேசி ஒன்றுமே நடக்காததுபோல் தெப்பத்துக்குள்

இறங்கி வாயைக் கொப்பளித்துவிட்டு அந்தக் கிழவி அம்மாள் காட்டிய வேம்படியைப் பார்த்துப் போனான்.

இந்தக் காட்சியை சிவகாமியாய் இருந்த சிறுமி எத்தனையோ பேரிடம் சொல்லி அதிசயப்பட்டுச் சிரித்திருக்கிறாள்.

## 2

இப்போது சிவாமி ஆச்சிக்கு வயசு அறுபதுக்குக்கிட்டே இருக்கும். தனது மகள் வயிற்றுப் பேரன் பரமுவுக்காக இப்போது நேர்ந்துகொண்டிக்கிறாள். நோயிலிருந்து அவன் பிழைத்ததே மறுபிழைப்பு. குறிப்பை விரித்துப் பார்த்த சோதிடன்தான் சொன்னான்; "மலைக்கோயில் திருவிழாவுக்குப் போயி ஒரு அஞ்சி பரதேசிகளுக்காவது அன்னதானம் கொடுங்க"

ஆச்சியின் இப்போதைய பொருளாதார நிலவரம் சோதிடனுக்கும் தெரியும்; உள்ளூர்க்காரன்தானே அவனும்! பெருங்கொண்ட குடும்பத்தில் பிறந்து வந்த ஆச்சியின் நிலை இப்படி ஆகிவிட்டது இப்போ.

அஞ்சி பேருக்காக அரிசி, பருப்பு, விறகைச் சுமந்துகொண்டு போக முடியாது. 'முந்திமாதிரி நிலைமை இருந்தா எல்லாரும் சிவாமி ஆச்சி சிவாமி ஆச்சி'ண்ணு சுத்திச் சுத்தி வருவானுக, 'ஏம்பாடும் இப்படி ஆயிட்டதே முருகய்யா' என்று மூக்கைச் சிந்தி வீசினாள். நேர்த்திக் கடனை ஒப்புக்கொண்டபோது இருந்ததைவிட இப்பொ ரொம்ப பாரமாகத் தெரிந்தது.

எப்படியோ அரிசி பருப்பைச் சமாளித்துவிட்டாள். இந்த மலைப்பிலும் ஆச்சிக்கு ஒரு 'ரோசனை' பளிச்சிட்டது. 'இங்கிருந்தே சாப்பாட்டை சமைச்சி எடுத்துக்கொண்டு போயிட்டா என்ன?'

ஒரு அஞ்சி சாப்பாட்டைச் சுமந்துகொண்டு போகமுடியாமல் தளர்ந்து போய்விடவில்லை இன்னும். 'பரமுவுக்கு றக்கை முளைச்சிட்டா ஒரு கவலையும் இல்லெ; பெறவு அவன் பறந்துக்கிடுவான். மலைச்சாமி

முருகரோட மனசிலெ இருக்கறது யாருக்குத் தெரியும்?'

பங்குனித் திருவிழா மலைக்கோயில்லெ ரொம்ப விசேசம். குருபூசை கொடுக்கிறவர்கள் முந்தியெல்லாம் வண்டியிலெதான் வர்றது; இப்பொ லாரி! லாரி லாரியா வந்து சாமான்கள் இறங்கும். மாட்டு வண்டியெல்லாம் இந்தப் பட்டிகளிலிருந்துதான். சனப்பெருக்கம் பணப்பெருக்கம் பக்திப்பெருக்கம் எல்லாமே சாஸ்தியாயிட்டது என்று அவள் சொல்லிக்கொண்டாள்.

அவளுக்கு வருசாவருசம் திருவிழாவுக்குக்கூட போக முடிகிறதில்லை. முதல்லெ அஞ்சி கல் தொலைவு நடக்கணும். அதோட தீராத வேலை; தினோமும் காட்டுவேலைக்குப் போனால்தான் கஞ்சி குடிக்கலாம்.

## 3

'அன்றைக்கு ஆச்சி வெள்ளன எழுந்து குளிச்சி முழுகி சமையல் முடித்து, பேரப்பிள்ளைக்குக் கஞ்சி வச்சிக் கொடுத்து, வேண்டியது சொல்லிவிட்டு, பெரிய பனை நார்க்கடகத்தில் சாப்பாட்டையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு மலைச்சாமி கோயிலுக்கு புறப்பட்டாள்.

இந்தக் கோயிலுக்கு என்று புறப்பட்டுவிட்டால் எங்கிருந்து தான் பலமும் தெம்பும் வருமோ தெரியலை. அவளுக்கு முந்திய நினைவுகளெல்லாம் வரிசையாய் வந்தன.

நடந்து போய்க்கொண்டிருக்கும்போதே தெருவிலும், காடுகளில் வேலைசெய்து கொண்டிருப்பவர்களும் விசாரித்தார்கள்! தொலைவில் இருந்தவர்கள்கூடக் கேட்டார்கள்.

"ஏ ஆச்சி கோயிலுக்கா . . ?"

"ஆமோவ் . . ."

கண்களுக்கு மலை தட்டுப்பட்டதுமே "முருகைய்யா" என்று சத்தம் போட்டுச் சொன்னாள்.

திருவிழா பார்க்கும் ஜனங்கள்ளாம் வேலைவெட்டி முடிந்து சாய்ந்திரம்தான் புறப்பட்டு வருவார்கள். இப்பொ ஆச்சி தனீயாத்தான் போகணும்.

மூணுகல்த் தொலைவு நடந்து சிவாமி ஆச்சி மயில் மேட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாள். ஊர்வாசிகள் மலைச்சாமி கோயிலுக்குப் போகும்போதும் வரும்போதும் அவர்களுக்கு இந்த மயில்மேடும் ஒரு தாப்பு. சிவாமி சின்னப்பிள்ளையாக இருக்கும்போது இந்த மயில்மேடும் இதைச் சுற்றிலும் ரண்டுகல் சுற்றளவுக்கும் ஒரு ரம்மியமான சிறைக்காடும் இருந்தது. 'மயில் மேட்டுச் சிறைக்காடு' என்று பெயர். எங்கே பார்த்தாலும் மயில் இறகுகள் சிதறிக்கிடக்கும். கூட்டம் கூட்டமாய்க் கணக்கிலாத மயில்கள் திரிந்துகொண்டிருக்கும். இந்த சிறைக்காடு பூராவும் மலைச்சாமி கோயில் தேவஸ்தானத்துக்குச் சொந்தமாக இருந்தது.

*

ஒரு சமயம் இந்தக் கரிசல்க்காட்டில் வந்த "பிண்ணாக்குப் பஞ்சம்" அந்த சிறைக்காடு பூராத்தையும் 'சாப்பிட்டுவிட்டது!'

இந்தச் சிறைக் காட்டில்தான் முருகர், வள்ளி தெய்வானையோடு வந்து உலாவுகிறதாம். அதனால் காய்ந்து உதிர்ந்த ஒரு சுள்ளியைக்கூட தொடாமல் இருந்த இந்த வனத்தில் கிராம மக்கள் பசிக்கொடுமையினால் முதலில் காய்ந்த சுள்ளிகளைமட்டுமே சேகரித்து அதைக் கட்டாக்கட்டி பக்கத்திலுள்ள டவுனில்க் கொண்டுபோய் முக்கால் ரூபாய்க்குப் போட்டுவிட்டு அந்தப் பணத்துக்குப் பிண்ணாக்கை வாங்கிக்கொண்டு வருவார்கள். குடும்பத்தோடு அந்தப் பிண்ணாக்கைத் தின்று தண்ணீர் குடித்துவிட்டு படுத்துக்கொள்வார்கள்: "அப்பாடி; ஒருநாப் பொழுதுபோச்சி. முருகர் இண்ணைக்குப் படியெ அளந்துட்டார். நாளைக்கு எப்படியோ பாப்பம்."

இந்தக் கரிசல்காட்டுக்குப் பஞ்சம் வந்தால் ஒரு வருசத்தோடு அது போகாது. இந்த மண்ணின்மேல் அதுக்கு ரொம்பப் பிரியம். மேகங்கள் மட்டும் இந்த மண்ணை மறந்துவிட்டுக் கடந்து போய்க்கொண்டே இருக்கும்; அதுகளுக்கு அவ்வளவு வெறுப்பு.

அடுப்பு எரிக்க பருத்திமார் கிடையாது. மழை பெய்தால் பருத்தி விளையும்; பருத்திமாரும் எரிக்கக் கிடைக்கும். எத்தனை நாட்களுக்குத்தான் சுள்ளிகள் கிடைத்துக்கொண்டிருக்கும். சிறைக்காட்டில் சுள்ளிகள் தீர்ந்து பச்சை மரங்களை வெட்ட ஆரம்பித்தார்கள் கூலிசனங்கள்.

இந்த விறகை வாங்கி எரிக்க முதலில் யோசனையாகத் தானிருந்தது. முருகரோட வனத்திலிருந்து வெட்டிக்கொண்டு வந்ததில்லையா? அதனால்த்தான் யோசனை.

*

முதலில் பக்கத்து ஊர் அணாவட்டி சுப்பா நாயக்கர்தான் துணிந்து வாங்கினார். "நாமா வெட்டினோம்? வெட்டினவனைப் போய்ச் சேரட்டும் அந்தப் பாவம்" என்றார் அவர். வெட்டிக்கொண்டு வந்த விறகுக் கட்டைகளையெல்லாம் வாங்கி வாங்கி அடுக்கினார். 'மலைபோல' லாரி லாரியாகப் பாரம் ஏற்றிப் பக்கத்து நகரங்களுக்குக் கொண்டுபோய் நல்ல லாபத்துக்கு அவைகளை விற்று நோட்டுக் கட்டுகளாகச் சேர்த்து பாங்கில் கொண்டுபோய் போட்டார்.

ரொம்பநாள்க் கழித்துத்தான் மற்ற பெருந்தனக்காரர்கள் "அணாவட்டி"யைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள்; அதுக்குள் சிறைக்காடு முக்கால்வாசிக்குமேல் தீர்ந்து போய்விட்டது.

மயில்மேட்டுச் சிறைக்காட்டில் இத்தனை நாள் சொகமாய் வாழ்ந்துகொண்டிருந்த 'முருகரோட மயில்'களெல்லாம் போக்கிடம்

தெரியாமல் இப்போது தத்தளிக்க ஆரம்பித்தன.

சனங்களும்தான் எத்தனை நாட்களுக்குப் பிண்ணாக்கை மாத்திரம் தின்றுகொண்டிருப்பார்கள். மயில் முட்டையும் நல்ல ருசிதான் என்று அவர்களுக்குத் தெரிய ரொம்ப நாட்கள் ஆகவில்லை.

மயில் முட்டைகள் பூராவும் இவர்களுடைய வயிற்றுக்குள்ளே போய்விட்டதால் மயில்கள் கெலிப்பது நின்று போய்விட்டது. ரொம்பப் பேர் மயில்க்கறியும் நல்லாத்தான் இருக்கு என்று சொல்ல ஆரம்பித்ததும் மிஞ்சிய சில மயில்கள் தப்பித்தேன, பிழைத்தேன் என்று வேறு காடுகளைப் பார்த்து ஓடிப் போய்விட்டாலும் மயில்மேடு என்கிற பெயர் மட்டும் நிலைத்துவிட்டது.

அணாவட்டி சுப்பாநாயக்கருக்கு ரொம்பக் கோவம்; இந்த மயில்களையும் மயில் முட்டைகளையும் பொறுக்கித் தின்ற பயல்கள் பேரில். கனத்த முருக பக்தர் அவர். தனது முழங்கால் வீக்கத்தின்மேல் மயில்க்கால்த் தைலத்தை விட்டு அறக்கித் தேய்த்துக்கொண்டிருந்த பண்டிதனிடம், 'இந்தப் பாமர ஜனங்கள் இப்படி முருகரோட வாகனத்தை அழித்தொழித்து விட்டார்களே. இது என்ன கேடுகாலத்துக்கோ' என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.

பண்டிதனுக்கும் மனக்குறைதான்; மயில்களையெல்லாம் இப்படி அழித்தொழித்துவிட்டால் பிறகு மயில்க்கால்த் தைலம் இறக்குகிறது எப்படி என்று.

இப்போது மயில்மேட்டில் ஒரு கசம் மட்டும் இருக்கிறது; அதன் கரையைச் சுற்றிலும் அத்தி ஆல் இத்தி அரசு என்று மரங்கள் அதன் நீராணியினால் வானளாவி நிற்கின்றன.

மயில்மேட்டுக் கசத்திலுள்ள தண்ணீரைக் குடித்தால் ஒருவேளைப் பசி தாங்கும் என்று சொல்லுவார்கள்; அவ்வளவு ருசி.

# 4

சிவாமி ஆச்சி மயில்மேட்டுக்கு வந்து சேருவதற்குள் ஆள் 'தவிடு தாங்கி'ப் போய்விட்டாள். இவ்வளவு அலுப்பும் களைப்பும் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை; ஒருவேளை இன்றைக்கு விரதம் என்று ஒன்றுமே சாப்பிடாமல் சுமைவேறு சுமந்துகொண்டு வந்ததினால் இப்படி ஆச்சோ?

"முருகையா . . . எல்லாம் ஒன் கிருபை" என்று சொல்லிக் கொண்டே மரநிழலில் கொஞ்சநேரம் கால் நீட்டி உட்கார்ந்திருந்து விட்டு, கசத்தினுள் இறங்கி தணணீர் மொண்டு குடித்துவிட்டு " தேங்காய்ப்பால் மாதரி இருக்கு" என்று சொல்லிக்கொண்டாள்.

எட்டி நடந்தாள் சிவாமி ஆச்சி. மலையை நெருங்க நெருங்க திருவிழாவின் களை தெரிந்துகொண்டே வந்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும் மக்கள் குதூகலமாய்த் திரிந்துகொண்டிருந்தார்கள். மரத்தடிகளிலெல்லாம் வண்டிகள் அவிழ்த்துப் போடப்பட்டு மாடுகள் கழுத்து மணிகள் ஒலிக்க கூளம் தின்றுகொண்டிருந்தன. கிடைத்த இடங்களிலெல்லாம் அடுப்பைக் கூட்டி சமையல் செய்துகொண்டிருந்தார்கள். எல்லாம் திருவிழாவுக்கு வருகிற ஆண்டிப் பரதேசிகளுக்குப் போட்டு, தாங்களும் உண்டு சந்தோஷப்படத்தான்.

குழந்தைகள் குதியாட்டம் போட்டுக்கொண்டிருந்தன. பெண்டுகள் தெப்பத்தில் குளித்துவிட்டு ஈரத்தலையை ஆற்றிக்கொண்டே சேலையின் ஒரு நுனியை ஏதாவது ஒரு செடியில் கட்டிவிட்டு மறுநுனியை உடம்பில் ஒரு சுற்றுமட்டும் சுற்றிக்கொண்டு நீளமாகச் சேலையைக் காயவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

*

கோயிலை நெருங்கியதும் சிவாமி ஆச்சியின் கண்களில் ஒரு காட்சி தட்டுப்பட்டது. தலையில் சோற்றுக் கடகத்தைச் சுமந்து கொண்டே நின்று

பார்த்தாள். ஒரு பசு மாட்டுக்குப் பூசை நடந்துகொண்டிருந்தது. அப்படி ஒரு அழகு நிறைந்த காராம் பசுவை அவள் இதுவரை பார்த்ததே இல்லை. மாட்டின்மீது பதித்த கண்களை எடுக்க முடியலை! 'என்ன அழகு, என்ன அமரிக்கை' என்று வியந்தாள்.

இப்பொவெல்லாம் இந்த மாட்டின் விலை முவ்வாயிரத்துக்குக் குறையாது என்று நினைத்துக்கொண்டு, பக்கத்திலிருந்தவரிடம் 'என்ன விலை பெறும்' என்று கேட்டபோது "ஐயாயிரம் கொடுத்தாலும் இப்பொ இப்படி சுத்தமான அசல் காராம் பசு கெடைக்காது" என்றார்.

பசுமாடு தானத்துக்கு வந்திருக்கு. பசுவைப் பூஜை முடிந்ததும் அய்யருக்கு தானமாகக் கொடுத்துருவாக என்று சொன்னார்கள்.

'அட! தானங் கொடுக்கது நம்ம விநாயகமில்லா!!' ஆச்சிக்கு ஆச்சரியம் தாளமுடியவில்லை.

விநாயகம் பக்கத்து ஊர்; தனக்கு தூரத்து உறவுங்கூட.

கோதானம் முடிந்து விநாயகம் திரும்பும்போது ஆச்சியைப் பார்த்துவிட்டான். ஆச்சிக்கு சந்தோஷம். இப்படி ஒரு காராம் பசுவை ஐயருக்குத் தானமாகக் கொடுத்த விநாயகத்துக்குப் புண்ணியம் நிறைய்யக் கிடைக்கும்.

"வெநாயகோம்" என்று அவனை பாசத்தோடு கூப்பிட்டு விசாரித்தாள். பிறகுதான் தெரிந்தது, விநாயகம் சொல்லிய தகவல்களிருந்து. "என்ன ஆச்சி நீ சுத்த இதுவா இருக்கெ! இம்புட்டு வெலை கொடுத்து இப்பிடி ஒரு காரம் பசுவெ நம்ம சென்மத்திலேயும் வாங்கி தானமாக் கொடுக்கமுடியுமா?"

"பெறவு?!"

"அம்பது ரூபாக் கொடுத்தாப் போதும் அய்யருக்கு. அதுலெ பத்துரூபா தரகுக்குப் போயிரும். அய்யரு வீட்லெ இருந்துதா இதே மாட்டெ

தரகனாரு பிடிச்சிட்டு வந்து, பூசெ செஞ்சி- பூசெச் செலவெல்லாம் நாமதான்- பூசெ முடிஞ்சதும் பிடிகயித்தெப் பிடிச்சி அய்யருகிட்டே ஒப்படைச்சிற வேண்டியது. அறுவது ரூபா சில்லரை செலவாகும்."

இந்த 'தானம்' ஆச்சிக்கு சரி என்று படவில்லை, ஏதோ இதுல தப்பு இருக்கு என்று பட்டாலும் அதைச் சொல்லத் தெரியவில்லை.

விநாயகத்துக்கு ஏதோ அவசரம் போலிருக்கு; ஆச்சியின் அன்னதான விஷயத்தை அவள் சொல்ல ஆரம்பிப்பதற்குள் கழன்றுகொண்டு, ஓடாத குறையாகப் போய்விட்டான். தான் கோதானம் செய்வதைப் பார்த்தவர்களில் நம்முடைய ஆச்சியும் ஒருத்தி; அவனுக்கு திருப்தியாக இருந்தது.

திருவிழாக் காலமாதலால் கோயில் கூட்டம் அதிகமாக இருந்தது. வசந்த மண்டபத்தில் சுமையை இறக்கி வைத்துவிட்டு தெப்பத்துக்குள் இறங்க முகம் கைகால் அலம்பிக்கொண்டு, தேவஸ்தான ஆபீஸில் தேங்காய் உடைக்க ஒரு சீட்டும், பரமு பெயரில் அர்ச்சனை செய்ய ஒரு சீட்டும், வாங்கிக்கொண்டு கோயிலுக்குள் போய் வந்தாள்.

பூசை முடிந்தது. கோயில் பட்டர் கிழக்கே பார்த்து நின்று கொண்டார்.

திருவிழா சமயத்தில் வந்தால் இப்படித்தான். எதுவுமே சரியா நடக்காது என்று சொல்லிக்கொண்டே வந்தாள். ஆனாலும் முருகரை அலங்காரம் செய்திருந்தது அவளுக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. நன்றாக நின்று கண்குளிர சேவிக்கமுடியலையே என்கிற ஆதங்கத்தோடு வெளியே வந்தாள்.

தெரிந்த இடத்தில் வைத்திருந்த கடகத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது அவர்கள் சொன்னார்கள் 'ஏ, ஆச்சி, வாளையிலை வாங்காமப் போறயே பரதேசிக்கு எதுலே படைப்பெ?'

மடியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். 'ஒரு பூட்டு இலைக்கு துட்டு

காங்குமா' என்று. மலைப் பாறைகளில் கல்த்தச்சர்கள், சோறு வைத்துச் சாப்பிடுவற்கென்றே நூற்றுக்கணக்கில் அழகாகவும் மழுமழுப்பாகவும் "திருவோட்டுப் பள்ளம்" செய்து வைத்திருக்கிறார்கள். அவை கல்த்தச்சர்களின் நேமுங்கள். கொஞ்சம் தண்ணீரை விட்டு சுத்தப்படுத்திவிட்டு அந்தத் திருவோட்டுப் பள்ளத்திலேயே - இலைபோடாமல் - சாதம்போட்டு சாப்பிடலாம், முன்னாடியெல்லாம் அப்படித்தான் எல்லோருமே சாப்பிடுகிறது. 'இப்போ சனங்க ரொம்பப் படிச்சுப் போனாக; நாகரீகம் பெருத்திட்டதில்லா'

கடைக்காரனை நாடியைத் தாங்கி நல்ல வார்த்தைகள் சொல்லி, இருக்கிற துட்டைக் கொடுத்துவிட்டு ஒரு பூட்டு இலைகளை வாங்கிக் கடகத்துக்குள்ளே வைத்துக்கொண்டு புறப்பட்டாள். வரும்போது திரும்பவும் அதே இடத்தில் கூட்டம் கூடி நின்று பார்த்துக்கொண்டிருந்தது. ஆச்சி திரும்பிப் பா£த்தாள். யாரோ ஐயருக்கு அதே காராம் பசுவை அதேபோல தானம் செய்துகொண்டிருந்தார்கள்.

## 5

போகும்போதே ஆச்சி குருபூசைக்கு வந்திருக்கும் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டே போனாள். 'முந்தி வந்ததுகளைவிட இப்பொக்கூட்டம் ரொம்பத்தான். முந்தி இந்தப் பாறைகளை விட்டுக் கூட்டம் இறங்காதே, இப்போ என்னடாண்ணா மலையைச்சுத்தி தரை பூராவும் நாலா பக்கமுமில்லே குருபூசைக் கூட்டம் பெருகிட்டது!'

ஒரு ஓரமாக பாரத்தை இறக்கி வைத்தாள். அங்கேதான் காவி உடுத்திய பரதேசிக் கூட்டம் எக்கச்சக்கமா இருந்தது.

ஒரு ஒழுங்கு இல்லாமல் கண்டமேனிக்கு கண்ட கண்ட இடத்தில் சாப்பாடு நடந்துகொண்டிருந்தது.

சாப்பிடுகிறவர்களுக்கும் சந்தோஷம்; சாப்பாடு படைக்கிறவர்களுக்கும்

சந்தோஷம். ஆச்சியைப் பார்த்து ஒரு இளம் பண்டாரம் மலர்ந்த முகத்துடன் விரைந்து வந்தான். ஆச்சிக்கு ஒரு வினாடி ஒரு புல்லரிப்பு ஏற்பட்டது. "வா முருகய்யா; வந்துட்டாயே" என்று தன்னையறியாமல் சொன்னாள்.

"பாட்டி, கடகத்திலே என்ன கொண்டு வந்திருக்கே?" என்று கேட்டான் அந்தப் பண்டாரமானவன்.

"ஒனக்கு சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் முருகய்யா"

இலையையும் போர்த்தியிருந்த துணியையும் அவன் விலக்கிப் பார்த்துவிட்டு "ஊருலெயிருந்தே சமைச்சிக்கொண்டு வந்துட்டெ போலிருக்கே; நல்ல யோசனைதான்!" என்று பாராட்டிச் சொல்லிவிட்டு "எத்தனை பேருக்கு?" என்று கேட்டான்.

ஒரு கணம் அவளுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது.

'முருகா, இந்த ஏழைக் கிழவியால் அஞ்சிபேருக்குத்தான் சாப்பாடு போடமுடியும்' என்று சொல்லுவதற்கு சங்கடப்பட்டாள்.

"சரி பாட்டி, இப்பொ ஒரு சாப்பாட்டுக்கு அஞ்சி ரூபா வாங்குறோம்; ஐ அஞ்சு இருபத்தி அஞ்சி ரூபா உன்னிடம் இருந்தாச் சொல்லு"

*

பாட்டி சிரித்தாள், இந்த முருகருக்கே ஏழைக் கிழவிகளோட வந்து விளையாடுகிறதுலே ஒரு பிரியம் போலிருக்கு என்று நினைத்துக்கொண்டே இலைகளை எடுத்துப் போட்டு தண்ணீர் தெளித்து தன் கிழிந்த அழுக்கு முந்தானையால்த் துடைத்து விட்டு, சாதம் பரிமாறினாள். அப்போது வேறு சில துணைப் பண்டாரங்களும் வந்தார்கள். பரிமாறி முடித்துவிட்டு "சாமீ, என்ன குத்தம் இருந்தாலும் நீங்கதான் ஏத்துக்கிடணும்" என்று சொல்லி அவர்களை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினாள். எழுந்தாள்!

பண்டாரங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்; 'பொல்லாத கிழவியாய் இருப்பாள் போலிருக்கே' என்பது போலிருந்தது அந்தப் பார்வைகள். அதில் தலைமைக் கொத்தன் போலிருந்த பண்டாரம் ஆச்சியைப் பார்த்து அதட்டிய குரலில் "அஞ்சி அஞ்சி ரூபா கொடுத்தா சாப்பிடுறோம்; இல்லைன்னா சாப்பாட்டை எடுத்துக்கிட்டு போயிச்சேரு" என்றான்.

ஆச்சிக்கு இப்போதுதான் விளங்கியது; முருகர் தன்னோடு வந்து விளையாடலை என்று. "இருபத்தஞ்சி ரூபாய்க்கு நா எங்கே போவேன் . . ." திரும்பவும் அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டாள். தன் பாட்டையெல்லாம் எடுத்துச் சொன்னாள். அழுதாள்; தொழுதாள். கெஞ்சினாள். ஒன்றுமே நடக்கலை.

'முருகா, இது என்ன சோதனை' என்று கண்ணீர்விட்டுக் கரைந்தாள். தான் இருப்பது முருகரோட சன்னதி; இது அவன் மலை; இது அவன் இடம்; நான் அவன் குழந்தை. நான் எதுக்காக அழனும்' என்று அவள் மனசுக்குள் திடீரென்று ஒரு எண்ணம் வந்து தோன்றியது. சரி; அவனே இதுக்கு ஒரு வழி செய்வான் என்று பாரத்தையெல்லாம் அவன்பேரில் போட்டுவிட்டுக் காத்துக்கொண்டிருந்தாள்.

*

திடீரென்று பனங்காட்டில் மழை பெய்யும் ஆரவாரம்போல மனிதச் சலசலப்பு அங்கே தோன்றியது. லாரி லாரியாக உணவு வகைகள் வந்து இறங்கின. எல்லா பண்டாரப் பரதேசிகளும் ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்கள்போல வரிசை வரிசையாக உட்கார்ந்தார்கள். கொஞ்சநேரத்தில் அங்கே ஒரு கல்யாண வீட்டுப் பந்தியின் கலகலப்பு ஏற்பட்டுவிட்டது. பசும்மஞ்சள் நிறத்தில் பெரிய்ய பெரிய தளிர் வாழை இலைகளையும், தான் கொண்டுவந்து போட்டிருக்கும் கல்வாழை இலைபோலுள்ள சிறிய இலைகளையும் ஆச்சி பார்த்தாள். வகை வகையான கறிவகைகள், சன்ன அரிசிச் சாதம்; இங்கேயுள்ளதுபோல

சிகப்புச்சாரல் விழுந்த பரும் அரிசி இல்லை. நெய் முதல்க்கொண்டு எல்லாம் படைத்து முடிந்தது. அனைவரும் சாப்பிடாமல் பொம்மைபோல அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள். படைக்கப்பட்ட மீதி இலைகளும் நிறைய்ய இருந்தது. வேடிக்கை பார்க்க வந்த ஜனங்களையும் அவைகளில் உட்காரும்படி வற்புறுத்தினார்கள். சிலர் உட்கார்ந்தார்கள; சிலர் உட்காரவில்லை.

இந்தச் சமயத்தில் காரிலிருந்து ஒருவரை கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவர் மெலிந்து வயோதிகத்தினால் தளர்ந்துபோயிருந்தாலும் சிவாமி ஆச்சிக்கு அவரை அடையாளம் தெரிந்தது. பக்கத்து ஊர் அணாவட்டி சுப்பா நாயக்கர்தான் அவர்.

ஒரு மடக்கு நாற்காலியைக் கொண்டுவந்து, விரித்து அதை அசையாமல் சரிசெய்து அதில் அவரை உட்கார வைத்தார்கள். உட்கார்ந்ததும் அவர் "தெய்வானை" என்று கூப்பிட்டார். மஞ்சள் மெழுகில் செய்த அழகு பொம்மைபோல தளதள என்று ஒரு பெண் அவர் முன்னால் வந்து நின்றாள். அவள் உடுத்தியிருப்பது பட்டு இல்லை என்று மட்டும் ஆச்சிக்குத் தோன்றியது. என்ன துணி என்றே தெரியவில்லை. இப்படியும் ஒரு நிறமும் துணியும் இருக்குமா என்பதுபோல் அது அங்குள்ள பெண்கள் கூட்டத்தில் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

அணாவட்டி சுப்பாநாயக்கர், அவளிடம் ஒரு கட்டு புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட்டுக்கட்டை தனது மடியிலிருந்து எடுத்துக் கொடுத்தார். அந்தப் பளபளப்பான பிஞ்சு விரல்களுக்கும் அந்தப் புதிய நோட்டுத் தாள்களுக்கும் நிறம் சேர்வை பொருத்தமாக இருந்தது.

அவள் காகிதம் பிரிக்கப்பட்ட அப்பளக்கட்டிலிருந்து ஒவ்வொரு பச்சை - அப்பளத்தை எடுப்பதுபோல எடுத்து ஒவ்வொரு இலையின் அடியிலும் ஒரு ஐந்து ரூபா நோட்டை பாதி வெளியே தெரியும்படி சொருகினாள்.

"நம்பர் பாத்துக்கோ" என்றார் அணாவட்டி. இதன் அர்த்தம் அங்கு உள்ள யாருக்கும் தெரியக் காரணம் இல்லை; பேத்திக்கும் தாத்தாவுக்கும்தான்

தெரியும். 'ரூபாய் நோட்டிலுள்ள வரிசை நம்பரை கவனித்துக்கொண்டே எடு; இல்லையென்றால் நோட்டோடு நோட்டாக இரண்டு நோட்டுகள் ஒட்டிக்கொண்டு வந்துவிடப் போகிறது' என்று அர்த்தம் அதுக்கு. நோட்டுக் கட்டுகள் தீரத்தீர புதுக் கட்டுகள் வந்துகொண்டேயிருந்தன.

படைக்கப்பட்ட எல்லா இலைகளுக்குமே ரூபாய் நோட்டு வைத்தாயிற்று. பார்த்துக்கொண்டு நின்றவர்களையெல்லாம் இலையில் உட்காரும்படி அந்தக் குடும்பத்தினர் மன்றாடினார்கள்.

பட்டுச்சட்டை பட்டுப்பாவாடை அணிந்த ஒரு எட்டு வயசுப் பெண் குழந்தை சிவாமி ஆச்சியின்கிட்டே வந்து அவள் கையைப் பிடித்து "பாட்டி வா; எலையிலே உக்காரு" என்று அழைத்தாள்.

ஆச்சியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அந்தக் குழந்தையின் சிவந்த நாடியைத் தொட்டு விரல்களால் உருவி அப்படித் தடவி உருவிய தனது விரல் நுனிகளை பொக்கை வாய் உதடுகளில் ஒற்றி முத்தமிட்டுக்கொண்டு, அந்தப் பெண்குழந்தையைப் பக்குவமாகத் திருப்பி, வந்த இடத்துக்கே அனுப்பினாள்.

முருகன்பேரில் உரத்த கோஷம் போட்டுவிட்டு கூட்டம் சாப்பிட ஆரம்பித்தது. ஆச்சிக்கு ஏது செய்ய என்று தெரியவில்லை.

யாருமே வந்து உட்காராத தனது இலைகளில் கடகத்திலுள்ள பாக்கிச் சோற்றையும் ஒழுங்காக எடுத்து வைத்துவிட்டு கடகத்தையும் மற்ற ஏனங்களையும் எடுத்துக்கொண்டு வெறும் வயிற்றுடன் அங்கிருந்து புறப்பட்டாள்.

ஓம் சக்தி, மார்ச் 1983

***

# நிலை நிறுத்தல்

"மூதேய் மூதேய் வெறுவாக்கலங்கெட்ட மூதேய் . . ." எப்பேர்க்கொத்த வேலையாளாய் இருந்தாலும் வசவு வாங்காமல் தீராது அவரிடம். இது சாதாரணம்; பெரிய முதலாளிக்கேண்ணு உள்ள கெட்டவார்த்தை வசவுகள் இருக்கு. புழுத்தநாய் குறுக்கே போகாது அதைக் கேட்டால். அதோடு எத்தனையோதபா அவரிட்டெ அடியும் வாங்கி இருக்கான் இந்த மாசாணம் பயல்.

'ஏசுங்க; எம்புட்டு வேணுமானாலும் ஏசுங்க' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டான் அவன்.

இப்பொ அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கிடையாது. "சுண்ணாம்பு எடுத்துட்டுவாலே மாசாணம்"ண்ணாரு. எடுத்துட்டு வந்தான்.

ஒரு பிஞ்சு சுண்டைக்காய் அளவுதான் வெத்திலையில் வைத்துக் கொண்டாரனும்;

மஞ்சாடி கூடரப்படாது, வசவுதான்.

*

சம்மந்தகார முதலாளி வந்திருந்தப்பொ, இவுக முதலாளிகிட்டே சொன்னாரு ஒருநா.

"வே மாப்ளே, மாசாணம் இங்கெனதான் நிக்கான் போலுக்கு! செமத்தியா வாங்கலாம் வேலை. சிறுசுலேர்ந்தே நல் . . .ல பாட்டாளி பாத்துக்கொ. இவங்க சாதியிலேருக்கிற சில்லரைத்தனம் புளுகுணித்தனம் கைநீளுறதெல்லாம் வள்ளிசாக் கிடையாது இவங்கிட்டே; தப்பிப்பிறந்தவன் பாத்துக்கொ."

மாட்டை வச்சி வேலை வாங்கின சம்சாரி மாட்டைப் பார்த்ததும் சொல்லீருவான்; வேலையாட்களை வச்சி வேலை வாங்குறவர்களுக்கு இதுகூடத் தெரியாட்டா எப்படி.

பெரிய முதலாளிக்கும் தெரியும்; ஆனாலும், அவரிட்டெ ஒரு குணம் தன்னுட்டுள்ள வேலைக்காரங்களை பிறத்தியார்ட்டெ பாராட்டிச் சொல்லமாட்டாரு. காரணம், எவனும் களுதைப் பெரட்டிக் கூட்டீட்டிப் போயிருவாண்ணுதான்.

*

மாசாணமும் அவன் குடும்பத்தாரும் இந்த ஊருக்குப் பஞ்சம் பிழைக்க வந்த சமயத்தில், ஊர் மடத்துக்குப் பின்னுள்ள புளிய மரத்தடியில்தான் தங்கி இருந்தார்கள். வெளிக்குப் போக கம்மாக்கரைப் பக்கம் வந்த முதலாளி கண்ணுலெ தட்டுப்பட்டது மாசாணம்தான்.

பயலைக் கூர்ந்து பார்த்தார். அப்பொ, அவனுக்கென்ன பதிமூணு பதினாலு வயசிருக்கும். கருமெழுகு நிறத்தில் நல்...ல எலும்புத் தாக்காய் அந்த அத்தப் பட்டினியிலும் ஆயாசம் தெரியாமல் ஈரம் உலராத கருப்பு உதடுகளுடன் திடமான மாட்டுப்பற்களுடன் மினுங்கிக் கொண்டிருந்தான். பெரிய முதலாளியைப் பார்த்ததும் அவனறியாமலேயே ஒரு மரியாதை பிறந்து எழுந்து ஒடுக்கமாய் நின்றான்.

கிட்டே கூப்பிட்டு நன்றாகப் பார்த்தார். பிறந்த மண் நல்ல செவக்காடு என்று கந்தல் உடுக்கை சொன்னது. அந்த ஆரோக்கிய உடம்பிலிருந்து ஒரு மனித ஊத்தை நெடி.

திரும்பவும் அவனை நன்றாகப் பார்த்தார்; மனசுக்குள் உடனே தேர்ந்தெடுத்துவிட்டார்.

"வாடேய், வா. நம்ம வீட்டுக்கு வந்து ஒருவாய் கஞ்சி சாப்டுட்டுப் போவெ"

விசுவாசமான கருப்பு நாய்க்குட்டிபோல அவருக்குப் பின்னால் மரியாதையோடு நடந்தான்.

சட்டியில் கம்மஞ்சோறு வைத்துக் கொடுத்தார்கள். சாப்பிடுவதையே கவனித்துக்கொண்டிருந்தார்கள். மீண்டும் சோறு வைக்க சாப்பிட்டுக்கொண்டே இருந்தான். உடனே பெரிய முதலாளிக்குச் சந்தோஷம் வந்துவிட்டது! 'இவன் வயித்துக்குச் சாப்பிடுகிறவன். நாக்குக்குச் சாப்பிடுகிறவனில்லை'

வேலை செய்து காய்காய்த்துப் போன கை பருப்புக் கறியை சிக்கனமாக சிந்தாமல் சிதறாமல் உணவின் அருமை தெரிந்து எடுக்கிறது சட்டியிலிருந்து. எடுக்கும் கவளத்திலிருந்தே 'வாய் அடம்' தெரிந்தது. ஒரு பலாட்டியனாகப் பின்னால் விளங்குவான் வேலையில். 'அடடா ஒரு செல்வம் கிடைத்துவிட்டது நமக்கு.'

*

இப்படித்தான்... வேலைக்குப் புதுசாக வந்த ஒருவனுக்கு அம்மா வட்டிலில் சோறு வைத்துக் கொடுத்தாள். முதல்த்தரம் சாப்பிட்டு முடித்த உடனேயே போதும் என்று அவன் சொன்னதைப் பார்த்ததும் கோவம் வந்துவிட்டது. "போடா வெளியே; ஒருப்பணிக்கழுதை நீ இப்படித் தின்னு வேலை செய்யவா? நீ வேலைக்கு இருந்தது போதும் போ" என்று விரட்டிவிட்டாள்.

பிடிக்கப் போகும் மாட்டுக்கு முன்னால் ஒரு தளுக்கு நாத்துக் கூளத்தை எடுத்துப் போடுவார்கள். எப்படி அது வாய் நிறைய்ய அள்ளி எடுத்துத் திங்கிறது என்று கவனிப்பார்கள். "சோத்தை அள்றதிலேந்தும் நாத்தை அள்றதிலேந்தும் தெரிஞ்சிரும் பூளாக்கு" என்பார் பெரிய நைனா.

அன்றிலிருந்து பெரியமுதலாளியின் 'குடும்பத்தில் ஒருவனாக' மாசாணம் ஆனான். வாரத்துக்கு ஒரு தலைமுழுக்கு உண்டு. வருசத்துக்கு ஒரு ஜோடி வேட்டி சாப்பாடு போக. மாசம் மூணு ரூபாய் சம்பளம்.

அவன் வந்தது ஐப்பசி. வருகிற சித்திரையிலிருந்துதான் கணக்கு. அடுத்த சித்திரை வரையிலும் இருந்தால்தான்; பாதியிலேயே அரைகுறையாக போனால் போனதுதான். சம்பளம் கிடையாது.

மாசாணத்தின் குடும்பத்தாரிடம், அவர்களுடைய பூர்வீகம், தொழில், சொந்தவீடு இருக்கா முதலிய எல்லாம் விசாரித்ததில் பூர்வீக வீடு மட்டும் உண்டு என்றும், அது ஒத்தியில் இருக்கிறது என்றும், பரம்பரையாக நல்ல பாட்டாளிகள் என்றும், உடம்புதான் அழுக்கு நாக்குசுத்தம் என்றும் பரம்பரை சாமி கொண்டாடிகளாக இருந்தார்களென்றும் கால வித்தியாசம் இப்படித் தங்களை வலசைக்காரர்களாக ஆக்கிவிட்டது என்றும் சொன்னார்கள்.

அக்கம்பக்கத்தில் ஆட்களைவிட்டு விசாரித்துப் பார்த்ததில் இதெல்லாம் நெசந்தான் என்று தெரிந்தது.

*

"தீனி நல்ல தீனிதான் திறுக்குகதான் பட்டு முடியலை" என்று தனது வீட்டாரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னான் மாசாணம். பல சமயம் அங்கிருந்து ஓடிப் போய்விடுவோமா என்ற நினைப்பு வரும். 'சித்திரையை விட்டுறப்படாது' என்று பல்லைக் கடித்துக்கொண்டிருப்பான்.

வேலையின் சுமையையாவது தாங்கிக்கிடலாம், வசவுகளையும் சமயத்தில் விழும் அடிகளையும் எப்படித் தாங்கிக்கிடறது என்று திகைத்தான்.

ராத்திரி பதினோரு மணிக்கு வந்து படுக்கையில் விழுந்தால் அதிகாலை நாலுமணிக்குக் காலால் எத்தினால்தான் எழுந்திருக்க முடியும்.

*

வேலைக்குச் சேர்ந்த வருசத்தில் நடந்த ஊர் சாத்திரைப் பொங்கல்

விழாவின்போது பகலில் வேலை செய்துவிட்டு ராத்திரியில் நடக்கும் மந்தை நாடகங்களை முன்னால் போய் உட்கார்ந்துகொண்டு பார்த்தான். இப்படி ஏழாம் நாள் நாடகம் முடிந்து தலைக்கோழி கூப்பிட அவன் நடந்து வீட்டுக்கு வரும் போது தன்னுசார் இல்லை! எந்த இடத்தில் போய் விழுந்தால் நிம் . . . மதியாகத் தூங்கலாம் என்று தள்ளாடிக்கொண்டே வந்து, ரெண்டு தானியப் பட்டரைகளுக்கு இடையில் சுவரை ஒட்டியுள்ள தூசி படர்ந்த இடத்தில் துண்டை விரித்ததுதான் அவனுக்குத் தெரியும்.

மாசாணத்துக்கு முழிப்புத்தட்டி எழுந்திருக்கும்போது தொழுக்கூரையின் உச்சியிலிருந்து தலைக்கோழி கூப்பிட்டது. ஒண்ணுக்கு இருந்துவிட்டு வெள்ளியை வானத்தில் தேடினான். ஒன்றும் நிதானப்படவில்லை. கூரை உச்சியில் திரும்பவும் ஒரு "கொக்கரக் கோ . . . கோ" கேட்டது. 'இரு இரு; எண்ணைக்கு உன்னை வந்து வெருகு வேட்டு வைக்கப் போகுதோ தெரியல' சிரிப்போடு நினைத்துக்கொண்டு ஆட்டுரலில் நனையப்போட்ட பருத்திக்கொட்டையைக் கட கட கட என்று சத்தங் கேட்க வேகமாய் ஆட்ட ஆரம்பித்தான்.

வாசக்கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த பெரியமுதலாளி கவனித்துவிட்டார் இது யார் என்று, கோவமான கோவம் அவருக்கு. திண்ணையில்க் கிடந்த சாட்டைக் கம்பை எடுத்து சுளீரென்று ஒரு சுளுப்புச் சுளுப்பினார். "எங்கெலே போயிருந்தெ ஒரு வாரமா?" 'என்னது, ஒரு வாரமாவா!!'

"நா எங்கேயும் போகலையே முதலாளி; இங்கெனெதான் பட்டரைகளுக்கு இடுக்கிலெ படுத்துக்கிடந்தேன்"

"சிறுக்கி பிள்ளெ பொய்யி; பொய்யா சொல்லுதெ . . ." என்று பேவாங்கு வாங்கினார்.

துடித்துப்போனான் மாசாணம். அந்தக் குளிர்ந்த வேளையில் அவனுடைய அலறல் எல்லோரையும் எழுப்பிக் கூட்டம் கூடிவிட்டது.

சாட்டையின் வெடிப்பு நாலு தரத்துக்குத்தான் வலிக்கிறமாதிரி இருந்தது.

இடது முஷ்டியை வானத்தைப் பார்த்து உயர்த்தி சாமி கொண்டாடிகள் தங்கள் உடம்பிலேயே புனித சாட்டையால் அடித்துக் கொள்ளும் பேரோசை அவன் மனக்கண்ணில் மின்னலிட்டது.

உணர்ச்சியால் இரண்டு முஷ்டிகளையும் இறுக்கிக் கொண்டு வானத்தைக் குத்துவதுபோல்த் தூக்கி நிறுத்தி படுமுடிச்சிவிடும் கயிறுபோல் உடம்பை முறுக்கிக்கொண்டு அப்படியே நின்றான்.

சில்லுகளாய் முறிந்த மனஎலும்புகள் உருகி, பின் ஒன்றுகூடி கரடுமுறடான ஒரு எலும்பாய்க் கூடியது அந்த வினாடியில் அவனுள்.

அவன்மேல் விழுந்துகொண்டிருக்கும் அடிகளை அங்கே வந்து கூடியவர்கள் தடுத்து நிறுத்தினார்கள்.

*

என்ன என்று பார்த்தபிறகுதான் தெரிந்தது! தூசி படிந்த தரையில் அவன் கிடந்த தடமும் விரித்த துண்டும் அங்கே கிடந்தது.

பெரிய முதலாளியின் வீட்டில் இப்படி யாரும் பார்க்காமல் வருஷத்துக்கு ஒருதரம் மட்டும் ஒட்டடை அடிச்சி வெள்ளை ஆத்துகிற இடம் பலது இருக்கும். அதுலெ இதும் ஒண்ணு.

"நல்ல கூத்துதாம்போ; அப்பவும் குண்டியிலே போற குசு தொரியாமெ ஒரு ஆம்பளை ஏழுநா ராவா பகலாத் தூங்கியிருக்கானே பாவி மட்டை!" அதிசயித்தாள் ஒரு கிழவி.

"ஹிம்; நீ ஒண்ணு. ஒரு வாரம் முழிச்சிருக்கான்; ஒரு வாரம் தூங்கிருக்கான். கணக்கு சரியாப் போச்சி!" என்று கெத்தோடு சொன்னார் ஒரு கிழவனார்.

ஊரெல்லாம் ஒரே கெக்கோல்; சொல்லிப் பேசிச் சிரிக்க விஷயம் கிடைத்துவிட்டதே.

அடி வாங்கியதுக்குப் பிறகு ரெம்பநேரம் அழுது கொண்டிருக்கும் மாசாணம் அழாமல் அன்று கனத்த மௌனமாய் வேலைகளை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தது பெரிய முதலாளிக்குப் புதிய விஷயம்.

*

சித்திரையை முடித்த மாசாணம் விடுப்புக் கேட்டான் ஊருக்குப் போக. முப்பத்தி ஆறு வெள்ளி ரூபாய்களை எண்ணி அவன் முன் வைத்தார் பெரிய முதலாளி. அவனைப் பார்த்துஅவர் ஒரு பாராட்டுச் சிரிப்புச் சிரித்தார். பிறகு, "இண்ணைக்கு விசாளக்கிழமை. நாளைக்கு ஒரு நா தைப்பாறிக்கொ; நாளண்ணைக்கி சனிக்கிளமை எண்ணை தேச்சித் தலைமுளுகி கோழியடிச்சி சாப்ட்டுட்டுப் போ" என்றார்.

## 2

ஊருக்குப்போன மாசாணம், அந்த வருசம் வரலை; அடுத்த வருசம் வரலை; அதுக்கடுத்த வருசமும் வரலை.

நாலாவது வருசம் வந்த மாசாணம் நெலைச்சட்டமாக ஒரு வீட்டில் நிற்காமல் ஒவ்வொரு சித்திரைக்கும் ஒரு வீட்டில் நின்றான். என்றாலும் கிராமத்தில் இவன்பேரில் 'சுத்தமான ஆளு' என்ற பெயர் நிலைத்தது.

குமருகளும் இளவட்டங்களும் பால் உணர்ச்சிப் பேச்சுக்களால் அவனைச் சாடையாகச் சீண்டுவார்கள்.

"லேய் மாசாணம் மாடு மிதிச்சிட்டதா உனக்கு!" என்றுகூடக் கேட்டிருக்கிறார்கள்.

கேலியைப் பொறுத்துக்கொள்பவரைக் கண்டால் எல்லார்க்குமே குஷிதான்.

சிறுசுலிருந்து பெருசுவரை அவனோடு வாயாட்டம் ஆடாதார் கிடையாது.

சனிக்கிழமைதோறும் ஊர் பஜனை மடத்தில் நடக்கும் பஜனைக்கு மாசாணம் தவறாமல்ப் போய் உட்காருவான். பாடாவிட்டாலும் கேட்டுக்கொண்டே இருப்பான். தெலுங்குப்பாடல்களின் அர்த்தம் அவனுக்கு விளங்காவிட்டாலும் கேட்பதற்கு ரம்மியமாய் இருந்தது.

சில தமிழ்ப்பாடல்கன் வரும்போது மனசுள் ஒரு பிச்சிப் பூ மலரும்.

"ராம நாமமே கல்க்கண்டு;

வாயிலெ பட்டால் இனிப்புண்டு;"

ஒரு நாள், ஸ்ருதிப்பெட்டி போடும் ஆள் வராததாலோ என்னமோ மாசாணத்தைப் போடும்படி சொன்னார்கள். அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டான்.

முதலில் கொஞ்சம் முகச்சுளிப்பு இருந்தாலும், பிறகு சரீயாய் வந்துகொண்டிருந்தது ஸ்ருதி. அப்போதுதான் கவனித்தான்; தன்னை அது ஒரு அமுததாரையால் கரைக்கிறது என்பதை. லயித்துப்போனான் அதன் சொகத்தில்.

அதிலிருந்து சனிக்கிழமை இரவுதோறும் அவனுக்கு அந்தப் 'பதவி' கிடைத்து வந்தது. கண்ணன் பிறப்பு, ஏகாதசி, புரட்டாசியின் கடேசிச் சனி இவைகளில் சப்பரம் எழுந்திருத்தாகி வரும்போது பின்னால் பஜனை கோஷ்டி பாடிக்கொண்டே வரும். அவர்கள் மாரிலே சந்தனமும் பூமாலையும் அணிந்து இருப்பார்கள். அதில் மாசாணமும் இருந்தான். அது அவனுக்கு ஒரு உயர்வாகத் தெரிந்தது. அனைவரோடும் தான் சமதையாகத் தோன்றியது. அங்கே தன்னை இளப்பமாகப் பார்ப்பவர்களோ கேலி செய்பவர்களோ இல்லை.

மாசாணத்துக்கும் கலியாணம் வந்தது. ஊருக்குப் போனான். கொஞ்சநாட்களுக்கெல்லாம் ஒரு பெண்ணோடு வந்தான். அவர்களை பார்த்ததும் "அட! மாசாணம் பயலுக்கு கிடைச்ச யோகத்தைப் பாத்தியா" என்று பேசிக்கொண்டார்கள். கண்ணால் ஒருவருக்கொருவர் ஜாடை செய்துகொண்டார்கள். அவர்களுக்கு இருக்க இடம் கொடுக்க நான் நீ என்று முன்வந்தார்கள்.

மாசாணம் பெண்டாட்டியின் பெயரும் மாசாணம்தான்! இதைக் கேட்டதும் ஊர்க்காரர்களுக்கு ரெட்டைச் சந்தோஷம். கால் கை சுளுக்கிக்கொண்டால் எண்ணெய் இட்டுத் தேய்த்துவிட இனிமேல் ஒரே பெயருடைய தம்பதியர்¢ வீட்டைத்தேடி விசாரிக்கவேண்டாம். 'தேடிப்போகும் மூலிகை வந்து காலில் சிக்கிக்கொண்டதே.'

குடும்பஸ்தனாகிவிட்டதால் இனிமேல் எந்த சம்சாரி வீட்டிலும் சம்பளத்துக்கு நிற்கமுடியாது. அத்தக்கொத்து வேலைக்குப் போய் தினமும் மூணுபடி கம்மம்புல் தானியம் கொண்டுவந்தான்.

ஒருநாள் சாய்ந்திரம் ஏகாலிச்சுப்பன் கால்ச்சுளுக்கைத் தடவிவிட சிரட்டையில் கொஞ்சம் விளக்கெண்ணையுடன் வந்தான். "அப்பச்சி, ஒங்க கையாலெ தடவிவிடுங்க" என்றான். மாசாணத்துக்கு கொஞ்சம் திகைப்புதான்; என்ன செய்ய, பெண்சாதியும் புருஷனும் ஒரே பெயர் உடையவர்கள் தடவிவிட்டால் தேவலையா விடும் என்று இருக்கிறதே கடவுளே என்று தடவிவிட்டான்.

மறுநாள் காலையிலேயே சுப்பனால் கைவீசி நடக்க முடிந்தது. அவனுடைய பெண்சாதி ராக்கி கஞ்சி வாங்கப்போன வீடுகளில், 'ஊர் பூராவும்' மாசாணத்தின் கைராசியைப்பற்றி மெச்சிப் பேசினாள்.

பிடிப்புகளுக்குத் தடவிவிட, திருஷ்டி கோளாறுகளுக்குப் பச்சிலை பூச, பார்வை பார்க்க, தண்ணீர் தெளிக்க, விபூதி போட என்று ஆட்கள் ஆட்களைக் கூட்டிக்கொண்டு மாசாணத்தின் வீட்டைத் தேடிவர ஆரம்பித்தார்கள்.

மாசாணத்துக்கு இதெல்லாம் பெருமையாக இருந்தாலும் மாசாணத்திக்கு ஆரம்பத்தில்தான் பெருமையாக இருந்தது. காசு பெறாத இந்த 'நட்டணை வேலைகள்' அவளுக்கு பிடிக்காததோடு புருஷனையும் பிடிக்காமல் போய்விட்டது. இவன் தனக்கு சமதை இல்லை என்ற நினைப்பு அவளுக்கு உள்மனசுக்குள்; அதோடு தான் வந்தபிறகுதானே இவனை இத்தனை பேர் தேடிவர இருந்தது என்கிற நினைப்பும்.

ஆரம்பத்தில், குளிக்கும்போது அவனுக்கு முதுகு தேய்த்து விட்டாள். சாப்பிட்ட வட்டிலைக் கழுவி வைத்தாள். பிறகு அவனேதான் செய்துகொள்ள வேண்டியதாகிவிட்டது. சில நாளைக்குள் அவள் "ஒரு வடியா வருது; ஊத்திச் சாப்பிடு கஞ்சியெ" என்று திரும்பிப் படுத்துக்கொள்வாள், சுடுசொல் ஒன்றும் சொல்லமாட்டான் அவளை, கோவங்கூட வராத அவனுடைய இந்த மதக்கம் அவனிடமிருந்து ரொம்ப விலகிக்கொள்ளச் செய்தது அவளை.

மற்றவர்களிடம் அவள் பேசிக்கொண்டிருக்கும்போது இவன் காதில் படும்படியாகவே "ஆடுண்ணா ஒருசுறுகுப் பால் கொடுக்கணும். கிடாண்ணா ஒரு மூட்டாவது முட்டணும்" என்று பொரிவாள்.

*

சாய்ந்திரம் பெரியமுதலாளியின் வீட்டம்மா மாசாணத்தைத் தேடி வீட்டுக்குப் போனாள். மாசாணத்தி¢ முழுகிய தலையை படலைக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு சினுக்குவலியால் சிக்கெடுத்து நீவிவிட்டுக் கொண்டிருந்தாள். முதலாளியம்மாவின் கண்ணில் முதலில் பட்டது மாசாணத்தியின் சிறுத்த இடையும் நீண்ட கூந்தலும்தான். பசப்புக்கார முண்டை; 'ஊர்ப் பிளைகளையெல்லாம் கெடுத்திட்டாளே' என்று மனசுக்குள் ஏசிக்கொண்டே "ஏ மாசாணத்தி, மாசாணம் வந்ததும் வீட்டுக்கு வரச்சொல்லு" சின்ன மொதலாளிக்கு திருநாறு போடணும்" என்று சொல்லிவிட்டு 'நாறச் சிறுக்கி, எடுபட்ட முண்டெ' என்று மனசுக்குள் ஏசிக்கொண்டே போனாள்.

காட்டிலிருந்து மாசாணம் வந்தவுடனே முதலாளியம்மா வந்த தகவலையும் சொல்லி, வழக்கம்போல் அவனுக்குக் கொடுக்கிற 'வாழ்த்துமானங்களையும்' கொடுத்தாள்.

வென்னீரை அவனே சோமாரி வைத்துகொண்டு குளித்தான். 'போயி விபூதி போட்டுட்டு வந்து சாப்பிட்டுக்கிறலாம்' என்று கிளம்பிவிட்டான்.

விபூதிபோட வந்தாலோ, பச்சிலை பூச வந்தாலோ, வருகிறவன் யாருடனும் பேசுவதில்லை, அதனால் "வா" என்றும் அவனை வீட்டார் சொல்லமாட்டார்கள்.

பெரிய முதலாளியின் வீட்டுக்குள் மாசாணம் மௌனமாக நுழைந்ததும் ஒரு சின்ன பரபரப்பு; ஒரு சின்ன மரியாதை

பட்டகசாலையில் கன்னி மூலையில் போய் பேசாமல் சப்பணம் போட்டு உக்கார்ந்துகொண்டான். அவன் முன்னால் தாம்பாளத்தில் விபூதி குவித்து அதன் உச்சியில் சூடக்குவியல்.

முதலாளியம்மா ஒன்பது வயசுள்ள "சின்னமொதலாளி"யைக் கூட்டிக்கொண்டு வந்து மாசாணத்துக்கு முன்னால் உட்கார்த்தி வைத்து தானும் உட்கார்ந்துகொண்டாள். குடும்பத்தார் அனைவரும் மாசாணத்தின் எதிரே பவ்யமாக வந்து உட்கார்ந்துகொண்டார்கள். பெரிய முதலாளியுங்கூட எவ்வித அட்டகாசம் இல்லாமல் ஒரு பக்கத்தில் வந்து அமைதியாக உட்கார்ந்துகொண்டார்.

ஆரம்பிப்பதற்கு முன்னால் மாசாணம் அந்த வீட்டையும் அங்குள்ள பொருள்களையும் அந்த மனிதர்களையும் ஒரு பார்வை பார்த்தான், 'இவ்வளவுதானா நீங்கள்ளாம்!' என்று இருந்தது அவன் பார்த்தது.

சூடத்தைக் கொளுத்தினான். அது எரிவதையே அவன் கண்கள் உக்கிரத்துடன் பார்த்துக்கொண்டிருந்தன. எரிதீயின் நாக்குக் குறையக் குறைய பார்வை உக்கிரமும் குறைந்து விழி மௌனம் ஆகி மூடிக்

கொண்டது. நிமிர்ந்த மார்புடன் அப்படியே இருந்தவன் மெல்ல விழித்து அந்தப் பாலகனை அருள் சுரந்த கண்களால் பார்த்தான்.

தாம்பாளத்தை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு அந்த வெதுவெதுப்பான திருநீற்றை சமன்படுத்தி அதில் விரலால் ஏதோ எழுதினான். கொஞ்சம் தலைதூக்கி பெரிய முதலாளி அதைக் கவனித்தார் ஒன்றும் விளங்கவில்லை. மாசாணத்துக்கோ எழுதப் படிக்கத் தெரியாது.

மூடிய கண்களுடன், ஒலி எழாமல் அவன் உதடுகள் வேகமாக எதையோ சொல்லிக்கொண்டே உடம்பை சற்றே முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டே இருந்தவன் யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் தரையில் ஓங்கி பெருத்த சத்தம் எழ கைபொத்தி அடித்தான். நெஜமாகவே பதறிப்போனார்கள் எல்லோரும்! அவனுடைய விழிகள் வெளியே பிதுங்கும்படியாக ஓங்கிய குரலில் ஓம் ரீம் ஸம் என்று இன்னும் என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டு அவர்களைக் கோபமாகப் பார்த்தான். அது அனைவரையுமே கொஞ்சம் திகிலடையச் செய்தது. அடுத்த வினாடியே சாந்தமடைந்து மிருதுவான குரலில் "மொதலாளியம்மா, சின்ன மொதலாளி எங்கையோ பயந்திருக்காக, வேற ஒண்ணுமில்லெ இந்தத் திருநீறை காலையிலும் ஒரு தபா பூசுங்க. ராத்திரியே காய்ச்சல் இறங்கி சரியாபோயிரும்" என்று சொல்லி அந்தச் சிறுவனுக்கு நெற்றியில் இட்டு புஜங்கள் இரண்டிலும் தடவிக்கொண்டே போய் ஒரு சொடக்குடன் முடித்தான். அவன் இப்படிச் செய்தது குழந்தைகள் அனைவருக்குமே பிடித்திருந்தது.

பெரியவர்கள் வந்து திருநீறைக் குனிந்து மரியாதையாக வாங்கிக்கொண்டார்கள். பெரிய முதலாளிக்கு இந்தப் பயலிடம் போய் இப்படிக் குனிந்து வாங்கவேண்டுமா என்றிருந்தது. வீட்டம்மாவின் அழுத்தம் அவரையும் வந்து குனிந்து ரெண்டு கைகளையும் நீட்டி வாங்கும்படி செய்தது.

"சின்ன முதலாளி"யின் காய்ச்சல் இறங்கி மறுநாளே சரியாகி விட்டது. ஒரு பக்கம் ஊராரின் இளப்பம் அவன்பேரில் நீங்கிக் கொண்டு வரும்போது

இன்னொரு பக்கம் கேலிபீரங்கிகள் அவன்மீது சரமாரியாய்க் குண்டு மாரி பொழிந்துகொண்டிருந்தன. இவர்களுக்கு ரொம்பச் சௌகரியமான விஷயம் அவன் முகத்துக்கு நேரேயே அதைப் பிரயோகிக்கலாம்.

*

அந்த வருஷம் மழைக்காலம் சீக்கிரமே தொடங்கும்போல் தெரிந்தது. ஆவணி மத்தியில் ஒரு நல்ல மழையும் ஒரு துணை மழையும் பெய்து நிலத்தையும் மனசையும் குளிர்வித்தது, சொல்லி வைத்தது போல உடனே கரிசல்க்காடு அனைத்தும் சுறுசுறுப்படைந்தது.

பருவம் செய்ய ஆரம்பித்தார்கள்; முங்க உழறது குப்பை சிதறுகிறது எழுப்படிக்கிறது என்று.

புரட்டாசி முதல் பட்டத்தில் விதைக்க எல்லோருமே தயார். பருவ மழையைத்தான் காணோம்.

சரி போகுது; நடுப்பட்டத்தில் பேயும், அதுதானே நமக்கு உகந்த பட்டம்.

நடுப்பட்டத்திலும் பெய்யவில்லை. சம்சாரிகளின் நெற்றி சுருங்கியது. முகம் கடுக்க ஆரம்பித்தது.

விறுவிறு என்று காரியங்கள் 'மழையைத் தருவிக்க' என்று ஆரம்பமாயின,

மழைக்கஞ்சி எடுத்தார்கள்.

கொடும்பாவி¢ கட்டி இழுத்து ஒப்பு சொல்லி 'அழுதார்கள்', கிராம தேவதைகளுக்கெல்லாம் கொடை நடத்தி, பலி கொடுத்து அவைகளின் மனசைக் 'குளிர்வித்'தார்கள்.

புரட்டாசியின் கடேசிப்பட்டமும் வெள்ளைவெயிலாகவே கடந்து போனது.

கடவுளே, ஐப்பசி மாசமாவது நீ மழையாக வரமாட்டீயா? பிறாந்துகளே

நீங்கள் எங்கே போய்த் தொலைந்தீர்கள்?

வானத்தின் உச்சியில் நூற்றுக்கணக்காய்ப் பறந்து வட்டமிட்டு மழை வரப்போவதைச் சொல்லுவீர்களே.

சிறிய நங்கூர வடிவத்தில் பறக்கும் சலங்கைப் பறவைகளையும் காணோமே.

சாயந்திரங்களில் மேகங்கள் 'நீர்வாய்க்கால்' இடவில்லையே, சந்திரன் எட்டத்தில் கோட்டை கட்டவில்லையே, டொர்க் டொர்ர்க் என்று எங்காவது ஒரு தவளை கூப்பிடாதா.

மோசம் போயிட்டோம்! மோசம் போயிட்டோம் என்று சம்சாரிகள் ஒருவர்க்கொருவர் மாறிமாறி சொல்லிக் கொண்டார்கள்.

வேலைகள் ஸ்தம்பித்துப் போனதால் கூலிகள் பட்டினி கிடந்தார்கள்.

மாசாணத்தின் வீட்டில் ஐப்பசியின் அடைமழைக்காகக் கொஞ்சம் சேமித்து வைத்திருந்த தானியமும் தீர்ந்தது. "இனி மண்ணைத் திங்கவேண்டியதுதான்" என்று சொன்னாள் மாசாணத்தி, கடேசியாகக் கிண்டிய கம்மங்கூழை அவன் கும்பாவில் ஊற்றிக்கொண்டே.

"மண்ணை என்னத்துக்காகத் திங்கணும் மாசாணன் இருக்கிறவரைக்கும்?" என்றான் அவன். உடனே, "ஆஹ ஹாக" என்று இளப்பமாக அவனை நோக்கி வலிப்புக்காட்டிக் குரல் கொடுத்தாள் மாசாணத்தி.

## 4

பட்டினி ஊரோடு ஆரம்பமானது. ஓரளவு வசதியான வீடுகளில் மட்டும் அடுப்பு புகைந்தது. கூலிகள் பஞ்சம் பிழைக்கக் கிளம்ப வேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டார்கள். ஆனாலும் பூமாதேவி தனது குழந்தைகளுக்குக் கொடுக்க என்று தன் மடியில் கிழங்கு வகைகளை

வைத்துக்கொண்டிருந்தாள்.

மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டு போய் காடுகளில் புதைந்திருக்கும் சட்டிக்கிழங்கு சாளைக்கிழங்கு வகைகளைத் தோண்டிக்கொண்டு வந்து பக்குவம் செய்து தின்று கிடைத்த தண்ணீரைக் குடித்து நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

'மழை பெய்யாமல் போகாது; அப்படி இருக்க முடியுமா; இருந்தால் உலகம் என்னத்துக்காகும்' என்று நினைத்தார்கள்.

மாசாணம் இரண்டு நாள் பட்டினி இருந்தான். ராத்திரிகளில் தூக்கமே வரவில்லை, 'குத்தப்பட்டவன் தூங்கினாலும் குறைவயித்துக்காரன் தூங்கமுடியுமா'

*

மூணாவது நாள் மதியம் ஒரு முடிவோடு படுக்கையிலிருந்து எழுந்து நின்றான். தலைசுற்றும்போல் இருந்தது. நிலையைப் பிடித்துக்கொண்டான்.

நேரே பார்வதி அம்மன் கோவில்முன் வந்து நின்றான். வேலை இல்லாததால் ஊர்க்காரர்கள் அங்கே உட்கார்ந்து மழை செய்த வங்கொடுமையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மாசாணம் அவர்கள் முன்னால் வந்து நின்று மே வேட்டியை எடுத்து இறுக்கிக்கொண்டு தரையில் விழுந்து அம்மனை வணங்கினான். நீட்டி கூப்பிய அதே நிலையில் ஒன்றிரண்டு நிமிடங்கள் கிடந்தான். ஊர்க்காரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

எழுந்திருந்த மாசாணம் தரையைக் கிள்ளி நெற்றியில் இட்டு சபதம் போல் உரத்துச் சொன்னான், மழை பெய்கிறவரை இங்கேயே அம்மனுக்கு முன்னால் உட்கார்ந்து வயணம் காக்கப்போவதாகவும் மழை பெய்யாமல் போனால் பட்டினி இருந்து இங்கேயே உயிரை விடப் போவதாகவும்

சொல்லி அந்த மைதானத்தில் கிழக்காமல் பார்த்து சப்பணம் போட்டு உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

பலபேருக்கு இது வேடிக்கையாகவும் சிலபேருக்கு இது கோமாளித்தனமாகவும் பட்டது. ஊருக்குள் இதைக் கேள்விப்பட்டவர்களுக்கு அப்படி இல்லை; கேள்விப்பட்டதும் உணர்ச்சிவயப்பட்ட ஒரு பரபரப்புக் கொண்டார்கள்.

பார்க்க பலபேர் அந்த இடத்துக்கு விரைந்து வந்தார்கள். ரொம்ப நேரம் நின்று பார்க்கக்கமுடியாமல் வெயில் வாட்டியது.

உடம்பெல்லாம் வேர்த்து வடிய அதே நிலையில் மாசாணம் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

ராத்திரியில் அவனை அந்த நிலையில் விட்டுவிட்டு வீட்டில் படுக்க ஊராருக்கு மனசு வரவில்லை.

ஒருவர் மாற்றி ஒருவர் முழித்துக்கொண்டு கோவிலின் முன் தாழ்வாரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு லாந்தர் வெளிச்சத்தில் சத்தம் போட்டு "விராட பர்வம்" படித்தார்கள், அவர்களுக்குப் பெரிய முதலாளியின் வீட்டிலிருந்து 'சுடுதண்ணி' - கருப்பட்டி போட்ட தேயிலைத் தண்ணி கொடுத்தனுப்பினார்கள்.

மறுநாளும் மாசாணம் அதேநிலையில் இருந்தான். காலையிலிருந்தே புழுக்கம் தாங்கமுடியாததாய் இருந்தது.

மாசாணத்தின் இந்த முடிவுபற்றிக் கேள்விப்பட்ட கீதாரி கிருஷ்ணக்கோனார் கிடையிலிருந்து வந்தார்.

குருத்துப்பனை ஓலையைப் பட்டை பிடித்து அதில் ஆட்டுப்பாலைக் கறந்துகொண்டு வந்திருந்தார். அவன் இருப்பு அவருடைய மனசைத் தொடுவதாய் இருந்தது.

மாசாணத்தின் முன்னால் மண்டியிட்டு அவனுடைய வாய்க்குப் பக்கத்தில் பால்ப்பட்டையை ஏந்திப் பிடித்துக்கொண்டு "மாசாணம்; மாசாணம்" என்று மெல்லிய குரலில் சத்தங்கொடுத்துக் கூப்பிட்டார்.

மாசாணம் கண்ணைத் திறந்து பார்க்கவில்லை. பலர் இதை வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள்.

"மாசாணம்; ஐயா மாசாணம், இந்தா கொஞ்சம் பால் கொண்டு வந்திருக்கேன். ஒரு மடக்கு குடியய்யா"

மெதுவாகக் கண்ணைத் திறந்து கீதாரியைப் பார்த்தான். அவர் தனது வாயருகே ஏந்தியிருக்கும் பட்டையில் ததும்பும் பாலைப் பார்த்தான். அதே மெதுவாக கண்களை மூடிக்கொண்டே வேண்டாம் என்று சொல்வதுபோல் தீர்மானமாகத் தலையை அசைத்துவிட்டான்.

அங்கே கூடியிருந்த முகங்களில் புன்சிரிப்போடு கூடிய வியப்புத் தோன்றி மறைந்தது.

வயசாளியான அந்தக் கீதாரி சொன்னார். "பிள்ளே, எல்லாரும் தமக்காகத்தான் வயணம் காப்பாக. உலகத்துக்காகக் காக்கெ, ஒன் புண்யத்திலெ மழை பெஞ்சி ஜீவராசிக பொழைக்கட்டும்," என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்து பக்கத்திலுள்ள 'கங்கை'யில் கொண்டுபோய் பாலை ஊற்றிவிட்டு பட்டையை நெரித்து அதை ஒரு ஓரமாகப் போட்டுவிட்டு வந்தார்.

எல்லோரும் கீதாரியைச் சுற்றிக்கொண்டு மழை வரும் அறிகுறி ஏதாவது கிடையில் தெரிகிறதா என்று கேட்டார்கள்.

"நேத்துலேயிருந்து ஆடுக சரியா மேயாமெ கூடிக்கூடி அடையுது மழை வராமப் போகாது" என்றார். பால் கறந்துகொண்டு வர விடலைப் பனையில் குருத்தோலை வெட்டப் போனபோது தூக்கணாங்குருவிகள் வேகமாய் கூடுகள் கட்டி முடிப்பதைப் பார்த்திருந்தார்.

தரைப் புற்றுகளிலிருந்து தேங்காய்ப்பூப் போன்ற வெண்ணிறத்தில் தங்களின் முட்டைகளை 'அள்ளிக்கொண்டு' மொலோர் என்ற எறும்புக் கூட்டங்கள் கிளம்பிப் போவதையும் அவர் பார்த்திருந்தார்.

மூணாம்நாள் காலையில் மஞ்சள் வெயில் அடித்தது. அலசிவிட்டதைப்போல் வானம் சுத்த நீலமாய் இருந்தது.

யாரோ மேற்கே கைகாண்பித்தார்கள். வெகுதூரத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை இன்று ரொம்பக்கிட்டெ வந்து இருப்பது போல்த் தெரிந்தது. எப்பவும் ஒரு நீளமான நீலநிற அம்பாரமாக மட்டுமே தெரியும் மலை இன்று, அதனுள்ளே இருக்கும் மலையின் திருப்பங்கள் மடங்கள்கூடத் தெளிவாகத் தெரிந்ததைப் பார்த்தார்கள். யாரோ அதிலுள்ள பாறைகள் மரங்கள்கூடத் தெரிவதாக சொன்னார்கள். கோவிலின் படிக்கட்டின் அடியிலிருந்து "டொர் . . . டொறக்" என்று ஒரு சொரித்தவளை சத்தம் கொடுத்தது. ஒருவர் முகத்தை ஒருவர் சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டார்கள்.

ஏறுவெயிலின் வெக்கை தாளமுடியாதபோது மாசாணத்தின் மேலே நிழல் படும்படியாக ஒருவர் ஒரு காடிவண்டியை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்.

துடைத்ததுபோலிருந்த வானத்தில் நேரம் ஆக ஆக மேக கோபுரங்கள் எழுந்து வந்தவண்ணமாக இருந்தன. திடீரென்று காலநிலையில் சொல்ல இயலாத மாறுதல் - பார்த்துக்கொண்டிருக்கும்போதே நிகழ்ந்துகொண்டிருந்தது.

வேகமாக நகர்ந்துகொண்டிருந்த வெள்ளை மேகங்கள் மதியத்துக்கு மேல் நிறைசூல்கொண்ட யானை மந்தைகளைப் போல் நகரமுடியாமல் அப்படியே நின்றுவிட்டது உச்சியில். கட்டுத்தரையிலிருந்து கயிற்றை அறுத்துக்கொண்ட காளையொன்று குதியாளம் போட்டது. இரைக்குச் சென்றிருந்த கரைமரத்துக் காகங்கள் பாதியிலேயே கத்திக்கொண்டு திரும்பி வந்துகொண்டிருந்தன. வடஞ்சுருட்டி - மூலையில் திடீரென்று

மின்னல் அந்தப் பகலிலும் கண்ணை வெட்டியது.

'இருட்டிக்கொண்டு வருகிறது மழை' என்று யாரோ சத்தம் போட்டுச் சொல்லுவது தூரத்தில் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு இரைச்சல் நெருங்கி வருவதை உணர்ந்தார்கள்.

நெல்லிக்காய் அளவுள்ள கனமுள்ள குளிர்ந்த தூற்றல் முகத்தில் தலையில் கையில் விழ ஆரம்பித்தது.

அந்த இரைச்சல் இப்போது பெரிதாகக் கேட்டது.

அருகேயுள்ள பனங்காட்டின்மேல் கொட்டுகிற மழையின் சப்தம் அது.

திடீரென்று தட்டாங்கற்களை வாரி இறைப்பதுபோல ஆலங்கட்டிகள் தரைமேல்க் கொட்டியது. அனைவரும் கோவிலுக்குள் ஓடி நுழைந்துகொண்டார்கள். நிழலுக்காகக் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருந்த காடிவண்டி மாசாணத்துக்குப் பாதுகாப்பாக அமைந்தது.

மாசாணம் கண்ணைத் திறந்து பார்த்தான் "ஈஸ்வரீ..." என்று சொல்லிக்கொண்டே தனக்குப் பக்கத்தில் உருண்டு வந்த ஒரு ஆலங்கட்டியை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

ஆகாயத்துக்கும் பூமிக்கும் பாவாற்றியதுபோல் இறங்கிக் கொண்டிருந்த கம்பித்தூரல் திடீரென்று வலுத்த மழையாகக் கொட்டியது. மழையின் ஓசை காதுக்கு இனிமையாக இருந்தது. காற்றின் இசைவுக்கு ஏற்ப மரங்கள் முதுகைத் திருப்பி திருப்பி காட்டிக் குளித்தது மழையில்.

மாசாணம் தெப்பமாக நனைந்துவிட்டான். உட்கார்ந்திருந்த இடத்திலெல்லாம் மழைநீர் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. பிரம்மாண்டமான ஒரு இடி முழக்கத்தை தொடர்ந்து "அர்ஜ்ஜுனன் பேர் பத்து" என்று கூவினார்கள் அங்கிருந்தவர்கள்.

விடாமல் பெய்துகொண்டே இருந்தது மழை. மாசாணத்தை எல்லோரும்

கோவிலுக்குள் வந்துவிடும்படி அழைத்தார்கள். அதை மறுத்துவிட்டு அவன் எழுந்திருந்து நின்றான். நிற்கமுடியாமல் தள்ளாடியதால் ஒருவர் ஓடிவந்து அவனைப் பிடித்துக்கொண்டார்.

வானத்தையும் அவர்களையும் அவன் பெருமிதத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

ஆனந்தமாக எல்லோரும் நனைந்துகொண்டே கைத்தாங்கலாக நடத்திக்கொண்டு ஊர்வலம்போல் அவன் வீட்டுக்குப் போனார்கள்.

வாசலில் வந்து நின்று பார்த்த மாசாணத்தி தனது புருஷனை ஊர்ப் பெரியாட்கள் அம்பலகாரர் பெரிய முதவாளி முதலானோர் மாலைபோட்டுக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு வருவது பார்க்க அவளுக்கும் பெருமையாகவே இருந்தது.

எப்படி அங்கே பூமாலை வந்தது, மாசாணத்துக்கு உடைமாற்றிக் கொள்ள எப்படிப் புதுவேட்டி வந்தது என்று கேட்கவில்லை. அந்த மழைக்கு ஒழுகிக்கொண்டேயிருக்கும் அந்தச் சிறிய்ய கூரைவீட்டில் இடம் போதவில்லை அந்த ஜனக்கூட்டத்துக்கு; தெருவிலும் நின்றார்கள்.

சூடான பசும்பாலை சில்வர் டம்ளரில் விட்டு "இந்தா, மாசாணம்; குடி" என்று பிரியத்தோடு நீட்டினார் பெரிய முதலாளி, அதை வாங்கிக்கொண்டான். வாங்கிக்கொண்டு, எல்லோருடைய முகத்தையும் பார்த்தான். மாசாணத்தியின் முகத்தையும்தான்.

பிறகு, அண்ணாந்தே இதுவரை குடித்து வந்த மாசாணம் அன்று இந்த டம்ளரில் சப்பிக் குடித்தான்.

"போதும்" என்று அவன் சொன்னபோதும் "இன்னும் கொஞ்சம்" என்று பெரிய முதலாளி சொன்னதும் எல்லோரும் "இன்னுங்கொஞ்சம், இன்னுங்கொஞ்சம்" என்று அவனை வற்புறுத்தினார்கள்.

கணையாழி, அக்டோபர் 1981

***

# கண்ணீர்

அம்மன் சிலையின் கண்களிலிருந்து துடைக்கத் துடைக்க நீர்க்கசிவு வந்துகொண்டே இருந்தது.

குளிப்பாட்டி முடிந்தது,

துடைக்கிறது என்ற பேரில் எண்ணெய்ப் பிசுக்குடைய சிகப்புக் கந்தல்ச் சேலையால் ஈரத்தை ஒத்தியெடுத்தாள் பூசாரி மாடத்தி.

அன்றைக்கு, வேற சிகப்புச்சேலையை உடுத்தி அலங்காரம் பண்ணணும் என்பதால் கூடக் கொஞ்சம் ஒத்தியும் அழுந்தவும் துடைத்தாள்.

மாடத்தியின் புருசன் செத்துப் போனதிலிருந்து, அவள்தான் பூசை செய்கிறாள். முக்கியமான விசேசப் பூசை நாட்களில் மட்டும் அவளுடைய பையன் வந்துவிடுவான். அவனுக்கு டவுனில் ஒரு பூக்கடையில் வேலை.

அவன் தவிர இவளுக்கு ஒரே மகள்; "மூக்கரை" என்று பட்டப் பெயர். பிறக்கும்போதே மூக்குக்குக் கீழே மேல் உதடு இல்லை. அதனாலோ என்னவோ மேல்முன்னத்தம் பற்கள் நாலும் முளைக்கவேயில்லை. அதோடு அவள் பேசுவது மூக்கிலிருந்து வரும் ஒலியே தவிர வார்த்தைகள் திருத்தமாக இருக்காது. அவளுடைய அம்மாவுக்கும் தம்பிக்கும்தான் அவை சரியாகப் புரியும். மற்றவர்களுக்குப் புரிவது போலிருக்கும். இதனாலேயே அவளைப் பள்ளிக்கூடத்தில்ப் "போட" முடியவில்லை. காட்டில் களை செதுக்கவும் பருத்தி எடுக்கவும்தான் அனுப்ப முடிந்தது. வலிப்புநோய் உள்ள ஒரு கிழவனுக்கு அவளைக் கட்டிக்கொடுத்து அவன் மண்டையைப் போட்டபிறகு, வெள்ளைப் பாவாடை வெள்ளைத்தாவணி போட்டுக்கொண்டு அம்மாவுக்கு ஒரு துணையாகக் கூடமாட ஒத்தாசனை செய்துகொண்டிருக்கிறாள். வேலை கிடைக்காத நாட்களில், காட்டோரம் கரையோரம் வேப்ப முத்து புளியமுத்து என்று பொறுக்கிச் சேர்ப்பது. வண்டிப்பாதைகளில் கால்நடைகள் போடும் சாணியை எடுத்துக்கொண்டு

வந்து குப்பை சேர்ப்பது, ஊருக்குள் யாரும் குதிரைவாலித் தானியம் குத்தக் கூட கூப்பிட்டால் தாயும் மகளும் போய் குத்திக்கொடுப்பது, அதில்க் கிடைக்கும் குருணை, தவிடு இதுகளைக் கொண்டுவந்து கஞ்சி காய்ச்சியோ களிக்கிண்டியோ பொழுதைத் தள்ளுவது. சில நாட்களில் தனித்தவிட்டையே களியாகக் கிண்டிப் புளிய இலைத் துவையலோடு உண்பார்கள். உப்பு வாங்கப் பணம் இருக்காது; மழைக்காலம் முடிந்து கோடைத் தொடக்கத்தில் உப்போடையில் அங்கங்ககே திட்டுத் திட்டாக உப்பு பூத்திருக்கும் மெல்லிசாக. ஏட்டோலையினால் அவற்றைப் பக்குவமாகச் சிரட்டையில் சேகரித்துக் கொண்டுவந்து வைத்துக்கொள்வார்கள்.

வெள்ளியும் செவ்வாயும் அம்மனுக்கு மதியம் ஒருவேளை மட்டும் உப்பு இடாத வெண்சோறு படைத்துப் பூசையிடுவார்கள். ஊர்ப் பொதுவிலிருந்து இதுக்காகவே இவர்களுக்குக் கால்க்கிலோ பச்சரிசி கடையில் சொல்லியிருந்தார்கள். இந்நாட்களில் யாராவது அம்மனுக்குத் தேங்காய் உடைக்க வருவார்கள். பூசைத்தட்டில் கொண்டு வந்து வைத்து உடைக்கச் சொன்னால் பூசாரிக்கு ஆண்மூடியும் தேங்காய்க்காரர்களுக்குப் பெண்மூடியும் உண்டு. சிலர் தேங்காயை விடலை (சிதறுதேங்காய்)யாக வீசிவிட்டுப் போய்விடுவார்கள். அதில் இவர்களுக்கு ஒரு சில்லுகூடக் கிடைக்காது.

தேங்காய்மூடி கிடைத்த அன்றைக்கு, உப்பில்லாத வெண்சோற்றுக்குக் கடித்துக்கொள்ள ருசியாக அமையும். தேங்காய் பசியும் தாங்கும். அம்மனுக்கு உடைக்கும் தேங்காய் சிலசமயம் பெண்மூடி பெரிசாகவும் ஆண்மூடி சிறிசாகவும் உடைந்துவிடும். என்ன செய்ய; அம்மன் அருள் என்று நினைத்துக்கொள்வார்கள்.

பொங்க வைக்கும் வெண்சோற்றில் சரிபாதி காக்காய்களுக்குப் போய்விடும். பூசை நேரம் அதுகளுக்கு எப்படித்தான் தெரியுமோ! கோயில்முன் உள்ள பலிபீடத்தில் படைத்துத் தண்ணீர் தெளிப்பதுதான் தாமதம்; பயமில்லாமல்ப் பாய்ந்து வந்து கொத்தி முழுங்கும்.

காக்கைகளின் உருவத்தில் அம்மன்தான் அப்படி வந்து சாப்பிடுவதாக அய்திகம்.

பூசை முடித்து, திருநீற்றுப் பிரசாதத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு திருநீற்றுக் கப்பறையிலிருந்து கிள்ளிக் கிள்ளித் தந்து அனுப்பிவிட்டு, மாடத்தியும் மகளும் நார்ப்பெட்டியினுள் மீதியுள்ள வெண்பொங்கல்ச் சோற்றையும் கிடைத்த தேங்காய்மூடியையும் வைத்து எடுத்துக்கொண்டு இடிந்து கிடக்கும் அவர்களின் கூரைமண் வீட்டுக்கு புறப்பட்டுப் போவார்கள். இது அவர்களின் வழக்கமான வாழ்க்கை. அன்றைக்கு மட்டும் அது ரொம்ப வித்தியாசமாக அமைந்தது.

பூசைக்காகத் தேங்காய் பழம் கொண்டு வந்தது, சப்பாணியம்மாவின் பேத்தி. இவளும் சப்பாணிதான். நடந்துவர ரொம்பச் சிரமப்பட்டு, தேங்காப்பெட்டியையும் கையில் ஏந்திக் கொண்டு தள்ளாடி நடந்து வந்துசேர்ந்தாள்.

மாடத்தி எதிரே போய் தேங்காய்ப்பெட்டியை வாங்கிக் கொண்டு,

"நீ நடந்து வாரதே பெரிசு; ஏம் யாரிட்டயாவது தந்தனுப்புறதுதானெ,"

தலையைக் கவிழ்ந்து மவுனத்தையே பதிலாக்கினாள் அவள். அந்தப் பெண்குழந்தையைப் பார்க்கப் பார்க்க மாடத்திக்குத் துக்கத்தால் தொண்டை வலித்தது.

'இது ஆத்துற குறையுமில்லெ தேத்துற குறையுமில்லெ. தலைமுறை தலைமுறையா அந்தக் குடும்பத்துல நடந்து வார பிறப்புக'

தேங்காய்ப்பெட்டியை வாங்கி, மூலத்தானப் படியில் வைத்துவிட்டு, உள்ளே அம்மனைப் பார்த்தாள் மாடத்தி.

'இப்படிப் பண்றயெ' என்று மனசினுள், உள்விசும்பலுடன் சொல்லிக்கொண்டாள்.

நின்றுகொள்ள சங்கடப்பட்ட சப்பாணியைப் பார்த்து,

"உக்காரு தாயீ; சும்மா உக்காரு" என்று அவளை அமர்த்திவிட்டு, அம்மனைக் குளிப்பாட்டக் கொண்டுவந்த தண்ணீர்க்குடத்தை மூலத்தானத்துக்குள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு திரையை இழுத்து பேருக்கு மறைத்துக்கொண்டு அம்மனின் ஒட்டியாணத்தைக் கழற்றி, சேலையை உருவிக் கதவின்மேல்ப் போட்டாள். திருநீற்றுப் பட்டைகளைக் கழற்றி வைத்தாள். கண்மலர்களைக் கவனமாகக் கழற்றி எடுத்தாள். "ஒனக்குக் கண்ணுயில்லை" என்று கனத்த துக்கத்துடன் சொல்லிக் கொண்டாள். மாடத்திக்கு அது நல்லாவே ஞாபகமிருந்தது.

இப்போது இங்கே வந்து நிற்கமுடியாமல் உட்கார்ந்து கொண்டிருக்கும் இந்தச் சப்பாணியின் பாட்டி, "பெரிய சப்பாணியம்மா" இறந்தபோது இரண்டாவது தடவையாக ஊர் கண்ணீர் வடித்தது. அந்தத் தாயாரம்மாவின் பெயர், வடிவத்துக்கேத்தபடி செவத்தம்மா என்றே அமைந்திருந்தது. இந்த ஊரில்லை அவளுக்கு. அவள் பிறந்த ஊரிலிருந்து இங்கே வந்து கால்வைத்தது நன்றாக ஞாபகமிருக்கிறது. அப்பவெல்லாம் கல்யாண முகூர்த்தங்கள் ராத்திரி நேரங்களில்த்தான். விளக்குப் பொருத்துகிற நேரம். வில்வண்டிகள் வரிசையாக வந்தது. வரிசையில் முதல்வண்டி "பொண் வண்டி".

ஊருக்கு உள்ளே அந்தக் கல்யாணப்பொண் வண்டி நுழைவதுக்கு முன்னால் குளத்தங்கரை பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் வந்து நின்றது; அதைத் தொடர்ந்து மற்ற வண்டிகளும்.

பெரிய்ய தாம்பாளத்தில் நிறைய்ய தேங்காய்கள். பொண்ணு அவைகளைத் தொட்டுக் கும்பிட்டுத் தந்தாள். எல்லா கிராம தேவதைகளுக்கும் விடலை வீசினார்கள். தேங்காய்ச்சில்லு பொறுக்கும் சிறுமிகளோடு மாடத்தியுமிருந்தாள்.

வண்டியிலிருந்து பொண்ணு இறங்கித் தரையில் கால்வைக்கும் போதுதான் மாடத்தி அந்தக் கால்களைப் பார்த்தாள். செவேரென்ற அந்த நிறம்

கொண்ட கால்கள் அந்த ஊரிலேயே கிடையாது.

பொம்பளைப் பிள்ளைகள் அதிசயமாகப் பேசிக்கொண்டன.

எந்தப்பாவி கண்ணுபட்டதோ . . . அதே கால்களை இவள் கரிக்கட்டையாகவும் பார்க்க நேர்ந்தது.

கடவுளுக்குக் கண்ணு அவிஞ்சிதாம் போச்சி.

*

எண்ணெக் குடத்தைப்போல உள்ள கருத்தய நாயக்கருக்கு இப்படியும் ஒரு செவத்தப்பொண்ணா!

உலகந்தாங்கல. கடைசியில, அவுக ரெண்டுபேத்துக்கும் உள்ளெ "ஏழாப் பொருத்தம்"மாயிட்டது தினோம் . . . தினந்தவறுனாலும் அடிதவறாது செவத்தம்மாவுக்கு. என்னத்துக்குத்தான் சண்டெ வருமோ; யாருக்கும் தெரியாது.

வாய்விட்டு அழுது சொன்னாத்தானெ தெரியும்.

வாயத் தொறப்பானாங்காளெ. ரெத்தங் கன்னிப்போறாப்ல அடி வாங்குனாலும் வாயத் தொறக்கமாட்டா பாதகத்தி. அந்தப்பாவி மனுசனும் இந்த அடியா அடிக்கணும். அப்பிடி அடிக்கும்படியா அந்த மகராசி என்ன குத்தந்தான் செஞ்சா? ஒன்றுமே தெரியவில்லை ஊர்க்காரர்களுக்கு.

கருத்தநாயக்கர் வீட்டில் இல்லாதபோது பக்கத்துவீட்டுப் பாட்டிமார்கள் போய் கேட்டுப் பார்த்தார்கள். கண்களிலிருந்து கரகரவென்று நீர் வடியும். மூக்கும் சிவந்த உதடுகளும் துடிக்கும். அப்படியே கண்ணை மூடிச் சிலைபோல ஆகிவிடுவாள். அடிவிழுந்து கன்னிப்போன இடங்களை இவர்கள் தடவி விடுவார்கள். எண்ணெய் தேய்ப்பார்கள். ஒத்தடம் கொடுத்த நாட்களும் உண்டு. "பொண்ணூண்ணா, இதுல்ல பொண்ணு.

வீட்டு வார்த்தெய வெளியில விடாமெ" பாராட்டுச் சொற்களோடு அவர்கள் வீடு போய்ச் சேர்வார்கள்.

ஊர்ல ஒரு வழக்கம். அண்ணந் தம்பிகளுக்குள்ளெ அடிபிடி வந்தா ஊர்க்காரன் பக்கத்துவீட்டுக்காரன் ஓடியாந்து விலக்குப் பிடிப்பான். அப்பனும் மகனும் அடிச்சிட்டுக் கிடந்தாலும் ஓடியாந்து விலக்கிவிட்டு சண்டைபிடித்துப் புத்திசொல்லி, விவகாரம் பேசித் தீர்த்து வைக்கிறது உண்டும்.

எல்லாச் சண்டைகளையும் இப்படி ஓடியாந்து ஓடியாந்து விலக்குப் பிடித்து முகரையில் போடுகிற ஊர், பொண்டாட்டியப் பிடித்து புருஷன் என்ன மொத்து மொத்துனாலும் கிணுங்காமல் இருக்கிறதெ!

'அது அவுக பாடு' என்று, பார்த்தாலும் பார்க்காததுபோல இருக்கிறது. "புருஷம் பொண்டாட்டிக்குள்ளெ ஆயிரம் இருக்கும்; நாம போயி தலையிடலாமா; செ" என்று முகம் திருப்பிக் கொள்ளும் ஊர்.

அன்றைக்கு மத்தியான நேரம். கடுங்கோடை; அக்கினி நட்சத்திர நாட்கள். கருத்தய நாயக்கர், செவத்தம்மாளை நடுத்தெரு வழியாக அடி உதை மிதி என்று போட்டு, இழுத்துக்கொண்டும் தள்ளிக்கொண்டும் வருகிறார். ஊரே கதிகலங்கிப் போய் பார்த்துக்கொண்டிருக்கிறது. பெண்டுகளெல்லாம் கண்ணீர் பிதுங்க முந்தானைகளால் வாயைப் பொத்திக்கொண்டு, 'இப்படி வங்கொடுமையும் உண்டுமா' என்பது போல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வயதான நாணம்மா கேட்டாள் சன்னமான குரலில் "அந்தக் கொழுந்தை இந்த வேகாவெயில்ல எங்கடி இழுத்துகிட்டுப் போராம் பாவி; பாங்கிணத்துல கொண்டி தள்ளப் போரானா . . ."

இன்னொரு வயோதிகப் பெண்ணிடமிருந்து அதே ஸ்தாயையில் வந்தது பதில். "ஒரேடியா அப்பிடிச் செஞ்சிட்டாலும் தேவலெயே; இந்தப் பாட்டெ நிதோமும் கண்கொண்டு பார்க்கமுடியலையே தாயீ . . ." என்று

அழுகைக் குரலில்.

கருத்தய நாயக்கர் அவளைத் தள்ளிக்கொண்டே போனார். அவள் திகைத்து நிற்கும்போதெல்லாம் "பொ" என்ற உரத்தகுரலில் அவளுடைய பிட்டத்தில் ஓங்கி மிதித்துத் தள்ளுவார். அவிழ்ந்த தலைமுடி அவளுடைய முகத்தை மூடியிருந்தது. தெருவில் நின்று பார்க்க நாணப்பட்டவர்கள் தெருவாசக் கதவுக¬ளை ஒருச்சாய்த்து மூடிக்கொண்டு கதவு இடுக்கின் வழியாகப் பார்த்தார்கள். தெரு மரத்தடி நிழலில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் போட்டது போட்டபடி திகைத்து பீதியோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்; பெற்றவர்கள் அவர்களை சைகை செய்து வந்துரு, உள்ளே வந்துரு என்று அழைத்த வண்ணமிருந்தார்கள். இந்த பிள்ளைகளும் இப்படியான காட்சிகளைப் பார்த்தது உண்டு; வீட்டினுள்த்தான், தெருவில் அல்ல.

ஆண்கள் உட்பட யாருக்கும் இன்னது செய்ய என்று தெரியவில்லை அவரை யாரால்த் தடுக்கமுடியும். ஊர் பெரியமனிதர் அவர். ஊர் வழக்குகளையெல்லாம் தீர்த்துவைத்து புத்தி சொல்லுகிறவர். ரெட்டைவட வெள்ளி அரைஞாணில் இரும்புப்பெட்டியின் சாவிகள் சிலுசிலுக்கும் இடுப்பை உடையவர் அவர். கைகாட்டுகிற இடத்தில் வந்து ஊர் பணிவோடு நிற்கும்.

ஊர் மனிதர்களில் பெரும்பாலோர் வந்து கணமாய்க் கரை ஆலமரத்தின் நிழலடியில் நின்றுகொண்டு பரபரப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

உச்சிவானத்திலிருந்துகொண்டு சூரியதேவி அந்த மண்ணை சுட்டுப் பொசுக்கிக்கொண்டிருக்கிறாள்.

நின்று பார்த்துக்கொண்டிருந்தவர்களின் உடம்புகளும் கண்களும் உப்புநீரால் நனைந்துகொண்டிருக்க, கொஞ்சதூரத்தில் அந்தக் "கங்காட்சி" நடந்துகொண்டிருக்கிறது.

புல்லின் சிறுநிழல்கூட இல்லாத நுண்மணல் மட்டுமே நிறைந்த

உப்போடைக்கு அவளை இழுத்துக்கொண்டு போன கருத்தயநாயக்கர் சுடுமணலில் நிற்க வைப்பது தெரிந்தது.

பிறகு அதுவுஞ் சரியில்லை என்று தோன்றியதோ என்னவோ குனிந்த வேகமாக மணலைப் பறித்துக் குழிசெய்து அதனுள் செவத்தம்மாவை நிற்கவைத்து அவளுடைய பாதங்களைச் சுடுமணலினால் மூடினார். அப்படியே மணலைக் குவித்து முழங்கால் வரை மூடினார்.

தள்ளி வந்து நின்றுகொண்டார். இடுப்பில் கைகளை ஊன்றிக்கொண்டு அவளைப் பார்த்தார்; 'இப்ப எப்படி இருக்கு' என்பதுபோல. அப்போது செவத்தம்மா அவரை நோக்கித் தனது இரண்டு கைகளையும் யாசிப்பதுபோல் நீட்டி எதையோ கேட்பதுபோலத் தெரிந்தது.

அதுக்குக் கருத்தயநாயக்கர் ஓணான்போலத் தலையை மேலும் கீழும் ஆட்டிச் சிரிப்பது தெரிந்தது.

யாசிப்பதுபோல் நீண்ட அந்தக் கைகளும், தலையும் பிறகு வானத்தை நோக்கி உயர்ந்தன.

பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்திலிருந்து ஒரு பெண்குரல் இப்படிச் சொல்வதும் கேட்டது: "தூ; விளக்கம் கெட்ட பயல்"

நாயக்கரைப் பார்த்து யாசிப்பதுபோல நீண்ட அந்த அவளுடைய கைகளும் தலையும் வானத்தை நோக்கி உயர்ந்தபடியே நின்றன.

அப்போதுதான் அந்தக்குரல் ஊருக்குள்ளேயிருந்து கூவிக் கொண்டே ஓடிவந்தது. அது ஒரு பெண்குரல்.

"அடேய்; அடேய்"

ஓடிவந்தவர் ஊர் அம்பலக்காரரின் தாயார். வயோதிகமாய் இருந்தாலும் தாட்டியமாக இருந்தது உடல். அவரைப் பின்பற்றிக் கூட்டமும் உப்போடையைப் பார்த்துப் போனது. அப்படி ஓடி வந்தவர்களில்

மாடத்தியும் இருந்தாள். நாயக்கர் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

இவர்கள் போய் பார்த்தபோது செவத்தம்மா தலைவிரிகோலமாகவும், முகத்தையும் கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தியபடி மூடிய கண்களுடன், ஆடையெல்லாம் வியர்வையால் நனைந்து, லேசாக முன்னும்பின்னும் ஆடியபடி மூர்ச்சையாகி விழும் நிலைக்கு வந்துவிட்டிருந்தாள். ஓடிவந்த அந்தத் தாயார் "நாம் பெத்த மகளே . . ." என்று செவத்தம்மாவை ஆவி சேர்த்துக் கட்டிக்கொண்டு அழுதார்.

உண்மையில்; அந்தத் தாயாரம்மாவுக்கு மகள் என்று யாரும் கிடையாது.

அதன்பிறகு ஊர், செவத்தம்மாவை அதே மூடிய கண்களுடன் வாய்வார்த்தை நின்றுபோன இறுகிய முகத்துடன், அன்னந்தண்ணீர் இறங்காமல், வெந்து கருகிய கால்களுடன் படுத்தபடுக்கையாகப் பார்த்துதான்.

கொஞ்சநாள் அப்படியே கிடந்து, செத்துப்போனாள்.

அன்றும், அதுக்குப்பிறகும்கூட ஆறுகிற துக்கமாகயில்லை ஊர்ப்பெண்டிருக்கு. அதைப்பற்றிப் பேச வாய் நிறந்தாலே வார்த்தைகள் விக்கிக் கண்ணீர் பிதுங்கும்.

அதன்பிறகு கருத்தயநாயக்கர் குடும்பத்தில் பிறந்த பெண்குழந்தைகள் எல்லாமே பிறவியிலேயே கால்கள் ஊனமாகவே பிறந்தன. சப்பாணி (நொண்டி)க் குடும்பம் என்ற பேர் ஆகிவிட்டது.

மகா பெரிய சோதிட சிகாமணிகளையெல்லாம் கொண்டுவந்து யாருடைய சாதகத்தில் என்ன கோளாறு என்று பார்த்தார்கள். எல்லாம் சரியாக இருந்தது; எதில்க் கோளாறு என்றுதான் தெரியவில்லை.

சிவத்தம்மாவின் உடல் கிடந்து ஆவிபிரிந்த இடத்தில், உள்ளூர் பரிகாரி கேட்டுக்கொண்டபடி "தொன்னூறு நாள் மூட்டம்" கட்டிப் பிரித்துப் பார்த்தார்கள்.

வேளாரிடம் சொல்லி தனியாகச் சுள்ளிவைத்து பதினெட்டு மண்பானைகளும் உலைமூடிகளும் செய்துகொண்டு வரச்செய்தார்கள். அந்தப் பானைக் நிறைய்யக் குளிர்ந்த குடிதண்ணீர் நிரப்பி உலைமூடிகளால் மூடி, மூன்று பானை அகலத்தில் ஆறுபானை நீளத்தில் வைத்து குழைத்த மண்ணினால் மூடி, திண்ணைப்போல் ஆக்கினார்கள். ஆக்கிய மண்மூட்டத்தை சாணியால் மொழுகி, மலர்சாத்தி தீப தூபங்பகளால் பூசனை செய்தார்கள்.

தொன்னூறு நாட்கள் கழித்து, உற்றார் உறவினரை வரவழைத்து மூட்டத்தைப் பிரித்துப் பார்த்தால் . . . எந்த ஒரு பானையிலும் சொட்டுத் தண்ணீர் இல்லை! பாத்த யார் மூஞ்சி யிலும் அருளில்லை. சோர்வுதான் மிஞ்சியது. சத்தங்காட்டாமல்க் கலைந்தார்கள்.

*

அம்மன் சிலையில்க் கண்மலர்களை ஒட்ட வைக்க அவை கீழே உதிர்ந்து விழுவதைப் பார்த்த மாடத்தி, முதலில் அதைத் தற்செயல் என்றுதான் நினைத்தாள்.

அந்த வெள்ளிக் கண்மலர்களைத் திரும்பவும் திருநீற்றுக் கப்பரையில்ப் போட்டுத் தேய்த்து சுத்தப்படுத்தி ஒட்டவைத்தாள்.

கொஞ்சநேரத்தில் மறுபடியும் அவை கீழே விழுந்தன. துடைக்கத் துடைக்க கண்ணீர் வந்துகொண்டிருந்தது. அந்த நீர் அவள் கையில் பட்டதும் சுடுவது தெரிந்தது.

திரும்பிப் பார்த்தபோது குழந்தை சப்பாணியம்மா ஒரு கட்டெறும்போடு விளையாடிக்கொண்டிருந்தாள். மகள் மூக்கரைச்சி பொங்கப்பானைக்குள் அகல வெண்கலக் கரண்டியைக் கொடுத்து அதன் காம்பைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு வருவது தெரிந்தது.

'என்ன செஞ்சிக்கிட்டிருக்கா உள்ளெ இந்த அம்மா. இதுக்குள்ளெ

அம்மனைக் குளிப்பாட்டி அலங்காரமெல்லாம் செஞ்சி முடிக்காமெ.'

நேற்று இந்நேரம் சாப்பிட்டது. குடலைப் பசி பிசைந்தது. தனது மகள் மூக்கரையைப் பார்த்ததும் மாடத்திக்கு அழுகை உடைத்துக்கொண்டு புறப்பட்டது.

மூக்கரை அதிர்ந்துபோனாள். இப்படி வாய்விட்டுக் கேவி அழ அவளுக்கும் எவ்வளவோயிருந்தது. அரிக்கும் ஏழ்மை, ஆறுதல் பெற இயலாத அனாதரவு, வாழ்விலிருந்து தள்ளிவிடப்பட்ட கொதிநிலை, இப்படி.

மகள், தாய் இருவர் கண்களிலிருந்தும் சுடுகண்ணீர் பொங்கிவர, அவர்கள் அழுத அழுகை ஒலி குழந்தை சப்பாணியையும் பற்றிக்கொண்டது. ஓடமுடியாத சூம்பிய கால்கள்கொண்ட அவள், தவழ்ந்துகொண்டே கோயிலைவிட்டு வெளியே வந்து அவளும் கூப்பாடு போட்டு அழுதாள், பயத்தினால்.

அதைக் கேட்டவர்கள், என்ன என்ன என்று கேட்டுக் கொண்டே பெண்டிரும் குழந்தைகளும் ஓடிவந்தார்கள்.

கொஞ்சநேரத்தில் செய்தி பரவி கோயிலுக்குள்ளேயும் வெளியேயும் கூட்டம் நெரிபட்டது.

"ஊர் அம்மன் சிலையின் கண்ணிலிருந்து கண்ணீர் துடைக்கத் துடைக்க வந்துகொண்டேயிருக்கிறதாம்"

கேள்விப்பட்டவர்கள் வாயடைத்துப்போனர்கள்.

கூட்டத்திலிருந்த அனைத்துப் பெண்டுகளின் கண்களிலிருந்தும் கொதிக்கும் கண்ணீர் அக்கினித்திராவகமாய் இறங்கிவர ஆரம்பித்தது.

கதை சொல்லி, மே-1997

***

# கரிசல்க்காட்டில் ஒரு சம்சாரி

வீட்டடிக்கு வேம்படி சொகம் என்று உட்கார்ந்தோம்.

"ஏதாவது சொல்லுங்களேன் கேப்போம்" என்றார் நண்பர்.

என்னத்தைச் சொல்ல. பேசாமெ இப்பிடியே உக்காந்திருக்கிறதுதான் சொகமா இருக்கு என்றேன்.

"அது எனக்கு சொகமா இல்லையே!" என்றார் அவர்.

சரி, ஏதாவது சொல்றேன். கதை வேணுமா; நிஜம் வேணுமா என்று கேட்டேன்.

"கதைதான் லேசு. நிஜம் கஷ்டமில்லையா?"

ஒருவகைக்கு நீங்க சொல்றதும் சரிதான். இப்போதைக்கு ஒரு கதையே சொல்லுவோம்.

*

அந்த ஊரிலேயே அவர்தான் பெரிய்ய மனுசர். உயரத்திலுங்கூட! எல்லாரும் எட்டடி உயரம் என்று சொல்லுவார்கள். நான் அப்படிச் சொல்லமாட்டேன். ஏழடிக்குக் குறையாது. நல்ல எலும்புத்தாக்கான ஆள். நிறம் கருப்புத்தான். உடம்பில் அனாவஸ்யமான சதை கிடையாது. உயரத்தின் காரணமாக ஒல்லியாய்த் தெரியும். பெரிய, கப்படா மீசை. அது அவங்க வம்ச பாரம்பரிய அடையாளம்.

சம்மர் கிராப் என்று சொல்லுவோமே அதுமாதரி, அதையும்விட குட்டையாகவே தலைமுடியை வெட்டியிருப்பாரு. அவர் செய்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஓர் அர்த்தம் இருக்கும். தலையை இப்படி ஒட்ட

வெட்டி இருக்கிறார்ண்ணா, அதுக்கு எண்ணெய் குறைச்சலாய்ப் பிடிக்கும்ண்ணு அர்த்தம்.

"ஏன் மொட்டை அடிச்சிக்கிடலாமே" என்று கேட்டார் நண்பர்.

அடிச்சிக்கிடலாம்; அது துலுக்காள்ண்ணு அர்த்தம் ஆயிரும். அப்புறம், மொட்டை அடிச்சிக்கிடறதுக்குண்ணு சில சந்தர்ப்பங்கள் சம்பிரதாயங்கள்ளாம் இருக்கே, அதுக்கென்ன செய்ய. இதெல்லாம் அவருக்குத் தெரியும். அவ்வளவு லேசுப்பட்ட ஆளில்லை; ஆள் பெரிய்ய எம்டன். முதல்லே பேன் பத்தாது; தலை சீவ வேண்டாம். வேர்த்து வேனத்தடுமம் பிடிக்காது. முக்கிமுக்கித் தலை துவட்டவேண்டாம். தலை உலரணுமேண்ணு கவலை வேண்டாம். எவனும் எட்டி குடுமியைப் பிடிக்கமுடியாது! இப்படி எத்தனையோ.

நண்பர் சிரித்தார்.

இதுலெ சிரிக்கிறதுக்கு ஒண்ணுமில்லை. இதெல்லாம் நல்லதுண்ணு தெரிஞ்சும் நாம் அதைப் பின்பற்றாமல் இருக்கோமே. அதைக் கண்டு அவரு சிரிக்காராண்ணா அதுவும் இல்லை.

அவரைப் பற்றி அவருடைய சின்ன வயசிலே ஒண்ணைச் சொல்லி கேலி செய்வாங்களாம் எல்லாரும். அதாவது அவரு பன்னிரெண்டு வயசுவரைக்கும் அம்மாகிட்டெ பால் குடிச்சாராம்!

'இது என்ன கூத்து!' என்று அதிசயப்பட்டார் நண்பர்.

சரி; பன்னெண்டு இல்லைண்ணா ஒண்ணுரெண்டு வயசு குறைச்சிக்கிடுங்களேன்.

அவரொடெ அம்மா குனிஞ்சி முத்தம் தூத்துக்கிட்டே போவாளாம்; இவரு பாலைப்பிடிச்சி குடிச்சிக்கிட்டே நடந்து போவாராம்.

நண்பருடைய பலமான சிரிப்பு இதை அவர் நம்பவில்லை என்று

காட்டியது.

சில விஷயங்களை நம்பமுடியாதுதான்; பார்த்தாலுங்கூட நம்பமுடியாது. கிராமத்திலெ சில பெண்களின் பால்ச்சாரம் அந்தமாதிரி.

அப்படிப் பால் கொடுத்ததினாலேயோ என்னமோ அவருக்கப்புறம் அந்த அம்மாவுக்கு வேறு குழந்தையே இல்லை. இவர் ஒரு பையன்தான்.

இவருடைய தகப்பனாருக்கு நாலேக்கர் கரிசல்க்காடு. தொலைக்காடு. வெள்ளைத்தரைப் புஞ்சை. விசேசம் ஒண்ணும் விளையாது. அதனாலே மற்ற சம்சாரிகளின் நிலத்திலே இவர்கள் பாடுபட்டாத்தான் சாப்பிடமுடியும். நல்ல பாட்டாளிகள். கோழிகூப்பிட எழுந்திருச்சா பொழுது அடைஞ்சாத்தான் வீடு திரும்புற வழக்கம்.

இவருடைய அப்பாகூடப் பிறந்த பெரியப்பாவுக்கு நாலு பெண்கள். கட்டிக்கொடுத்த இடத்தில் விதவைகள் ஆகி நாலுபேருமே இங்கேயே திரும்பி வந்துவிட்டார்கள். அதுகளுக்குக் குழந்தைகள் இல்லாதினாலும் உடன்பிறந்த ஆம்பிளைகள் இல்லாததுனாலேயும் இவரையே சகோதரனாகக்கொண்டு இவரு வீட்டோடேயே வந்து இருந்துகொண்டார்கள். அதுகளுக்கு ஏற்பட்ட பங்குநிலம் நாலேக்கர் போக, சிறுவாடு சேர்த்தது, கொஞ்சம் நகை நட்டு எல்லாமே கொண்டு வந்து இவருடைய குடும்பத்திலேதான் போட்டார்கள்.

இவருடைய அம்மா ஒரு கூடையை எடுத்துக் கக்கத்திலே இடுக்கிக்கொண்டு கம்மாய்க்கரை, ரோட்டு என்று விடிஞ்சதிலிருந்து அடைகிறவரை தினமும் மூணுநாலு கூடை சாணி பொறுக்கிச் சேர்த்துவிடும்.

சகோதரிகளில் ஒருத்தி முழுப்பொறுப்பாக வீட்டில் இருந்து கொண்டு சமையல் முதக்கொண்டு எல்லாக் காரியங்களையும் கவனித்துக்கொள்வாள். மற்றப்பேர்கள் அனைவரும் கூலிவேலைக்குப் போவார்கள்.

இவரும் இளவட்டம் ஆகி, ஒரு சம்சாரி வீட்டில் கலப்பை பிடித்து உழ ஆரம்பித்து சகல சம்சாரி வேலைகளையும் பழகிக்கொண்டார். அந்தச் சம்சாரி வீட்டிலே, இவர் ராவும் பகலும் செய்கிற வேலையைப் பார்த்து இவருக்கு சில சலுகைகள் உண்டு. இவருடைய நாலேக்கர் இவருடைய அக்காக்காரிகளின் நாலேக்கரும் சேர்த்து உழுவதும் விதைத்துக் கொடுக்கிறதுக்கும் அந்த சம்சாரி இவரிடம் ஒன்றும் கேட்கமாட்டார்.

இந்த எட்டு ஏக்கர் நிலத்தை, கோடை உழவு நல்ல முங்கப் பிடிப்பார். தனீச் சாணியாக சேர்த்த குப்பையை வண்டிவண்டியாக ஒவ்வொரு ஏக்கராவாகக் கொட்டி மழை பெய்த ஈரப்பருவத்தில் பக்குவமாய் சிதறி உழுவார்.

நல்ல உரம் விழுந்ததினால் அந்த வெள்ளைத்தரைக்காடு அப்படியே கனிஞ்சி மைப்புக் கொடுத்து விளைய ஆரம்பித்து விட்டது.

இவருடைய புஞ்சையின் அமைப்பு 'கோமணத்துணி மாதரி' நீளமாக இருக்கும். அந்த நீளவசத்தில் இவருடைய பிஞ்சையிலே விளிம்பை ஒட்டியும் கொஞ்சம் உள்ளே தள்ளியும் ஒரு ஒத்தையடிப்பாதை போனது. ஞாயப்படி இந்தப் பாதை பக்கத்துப் புஞ்சைக்காரரின் புஞ்சையின் விளிம்பிலும் இவருடைய புஞ்சையின் விளிம்பிலும்தான் போகவேண்டும். ஆனால் ஜனங்கள் அப்படியா நடப்பார்கள்? அவர்கள் இஷ்டத்துக்கு நடந்து பாதையை உண்டாக்கிவிடுவார்ள். இவர் மழைபெய்து வெறித்த நாட்களில், ஊர் ஒடுங்கிய அல்லது தலைக்கோழி கூப்பிடுவதற்கு முன்னாடி புஞ்சைக்குப்போய், வண்டிப்பாதையிலிருந்து பிரியும் அந்த ஒத்தையடிப் பாதையை - மழை பெய்ததனால் அது அழிந்துபோயிருக்கும் - இவர் பக்கத்துப் புஞ்சைக்காரன் நிலத்திலேயே மாறி மாறி நடந்து நடந்து ஒரு பாதையை உண்டாக்கி விடுவார்! அவருடைய வளந்த, நீளமும் அகலமும் கொண்ட பாதங்கள் மொங்கங்கட்டை மாதரி வெகுவிரைவில் ஒத்தையடிப் பாதையை உண்டாக்கிவிடும்.

காலையில் எழுந்திருந்து வரும் ஜனங்களுக்கு இதெல்லாம் தெரியாது. அவர்கள்பாட்டுக்கு அந்தப் பாதையிலே நடந்து போவார்கள் பக்கத்துப்

புஞ்சைக்காரனுக்கும் இதில் சந்தேகம் வராது. 'ஏற்பட்ட பாதை; ஜனங்க நடந்த வழி' என்று நினைத்துக் கொள்வான். இப்படி பாதைகளை தடம் மாற்றி வைக்க அந்த வயசில் அவரால் முடிந்தது.

எல்லோரும் மழை பெய்ய ஆரம்பித்தவுடன் காட்டிலிருந்து வீட்டுக்கு ஓடிவருவார்கள். நாயக்கரோ வீட்டிலிருந்து காட்டுக்குப் போவார்! இவருடைய புஞ்சையின் ஒரு பகுதியில் மழைத்தண்ணீர் அரித்து பரவலாக ஒரு ஓடைப்பள்ளம் விழுந்து அந்தப்பகுதி முழுவதும் மண் அரிப்பால் சரியாக மாசூல் பிடிக்காமல் இருந்தது. மழைக்காலம் வந்துவிட்டால் தன்னுடைய புஞ்சையின் ஒரு இடத்தில் மண்வெட்டியைப் புதைத்து வைத்திருப்பார். மழை பலமாக நீண்ட நேரம் பெய்து கொண்டிருக்கும்போது அங்கே போவார். அந்த சமயத்தில் மின்னலுக்கும் இடிக்கும் பயந்து ஒரு சுடுகுஞ்சுகூட காட்டில் இருக்காது. திரண்டு வருகிற மழைத்தண்ணீரை பக்கத்துப் புஞ்சை வழியாக வெட்டி திசை திருப்பிவிடுவார். மழைத்தண்ணீருக்கு ஆரம்பத்தில் ஒர தடம் விழுந்துவிட்டால் அந்த மழைக்காலம் பூராவுமே அதே வழியாகத்தான் போகும். மனுசர்களுக்குக் கால்த்தடம் ஏற்படுத்திக் கொடுத்தமாதரி மழைக்கும் கால் ஏற்படுத்திக் கொடுத்துவிடுவார். பெருங்கொண்ட தண்ணீர் மண்வெட்டித் தடத்தையெல்லாம் அழித்துக்கொண்டு போய் ஒரு புதிய பாதையை உண்டாக்கிவிடும். நாயக்கர் தனது புஞ்சையில் ஓர் அடையாளமான இடத்தில் 'பொன்னம்போல' மண்வெட்டியைப் புதைத்து வைத்துவிட்டு மழையோடு மழையாய் விட்டுக்கு வந்துவிடுவார். ஒரு ஈக்குஞ்சுக்கும் கூட இந்தக் காரியம் தெரியாது,

தண்ணீர் அரிப்பிலிருந்து தந்திரமாக தனது புஞ்சையை வருஷத்துக்குக் கொஞ்சமாகச் செய்து பூரணமாக மீட்டிவிட்டார்.

அவருடைய வீட்டுப் பெண்கள் வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில் சதா பழியோபழி என்று புஞ்சையே கதி என்று கிடப்பார்கள். அவர்களே அருகைத் தோண்டி எடுத்தார்கள். பொடிப்பொடீக்கல்கள். அது எவ்வளவு சிறிய கல்லாய் இருந்தாலும் பொறுக்கி எடுத்து அப்புறப்படுத்தினார்கள்.

ஒரு களையோ செடி செத்தையோ எதுவும் இல்லாமல் புஞ்சையைக் 'கண்ணாடி மாதரி' ஆக்கிவிட்டார்கள். பருத்தி போட்டால் நிலம் பள்ளமாகிவிடும் என்று கம்படிகம்பாகவே வைத்துக்கொண்டு வந்தார். இதனால் அது மேட்டுப் புஞ்சையாக உயர்ந்தது. நஞ்சையில் பள்ளம்; புஞ்சையில் மேடு என்பது சொலவடை. மேலும் பருத்தியைப்போல கம்பு உரம் வாங்காது. இதனால் நல்ல உரக்கால் ஆகிவிட்டது.

விளைந்த புல்லை அவர்கள் அப்படியே குலுக்கைகளில் சேமித்து வைப்பார்கள். கூலிவேலைக்குப் போய் கொண்டுவந்த தவசத்தையே குத்திப்போட்டு கஞ்சி காய்ச்சி சாப்பிடுவார்கள். கடை கண்ணிக்குக்கூட தவசம் கொண்டுபோக மாட்டார்கள்.

ஒரு தடவை குத்திப் போடும் கம்மங்கஞ்சியை மூன்று நாட்களுக்கு வைத்துக்கொள்வார்கள். காணப்பருப்புத் துவையல் அறைத்து வைத்துக்கொண்டு கம்மஞ்சோற்றை பட்டதோ படலையோ என்று தொட்டு சாப்பிடுவார்கள். இரண்டாவது தடவைக்குத் தண்ணீர் விட்டுக் கரைத்துச் சாப்பிடுவார்கள்.

சாப்பாட்டு விஷயத்தில் அந்தக் குடும்பம் பின்பற்றிய சிக்கன முறையை வேறு யாராலும் பின்பற்ற முடியாது. நெல்லுப் பருக்கையை அவர்கள் வீட்டுக்குள்ளேயே நுழையவிடவில்லை!

அந்த ஊர்க்காரர்களுக்கு, அதிசயத்திலெல்லாம் அதிசயம் அவர்கள் எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவதில்லை என்பதுதான். கிராமத்தில் ஒரு பலமான நம்பிக்கை, எண்ணெய் தேய்த்துத் தலையை முழுகவில்லையென்றால் உடம்பு சூடாகிவிடும், கண்கள் பாதிக்கும், கண்ணே கெட்டுப்போனாலும் போகும் என்பது. இந்த நம்பிக்கையைத் தகர்த்தவர் நம்முடைய துரைசாமி நாயக்கர்.

அவருக்கும் அவர்கள் வீட்டு ஆட்களுக்கும் சூடு பிடிக்க வில்லை; கண்கள் சிவந்து கெட்டுப்போகவும் இல்லை; தலையிலும் உடம்பிலும் சொளுசொளுவென்று வடிய வடிய எண்ணெய் தேய்த்து சீயக்காயாலும்

அரப்பாலும் தேய்த்து பாழக்குகிறதை திங்கிற சோத்திலெ கொஞ்சங்கொஞ்சமாக விட்டுத் திண்ணாலும் பிரசணம் உண்டும் என்பார் அவர்.

சுத்தமான நல்லெண்ணையை ரெண்டு மண்குடம் வாங்கி விளைஞ்ச கருப்பட்டி வட்டுகளைப் பொடிசெய்து போட்டு துணியால் வண்டுகட்டி வைத்துக்கொள்ளுவார்கள். நல்லெண்ணெயில் கருப்பட்டி போட்டு வைத்துக்கொண்டால் எண்ணெய் மணமாக இருக்கும்; காரல் ஏறி கெட்டுப்போகாது.

வெறும் கம்மஞ்சோற்றில் தனீ நல்லெண்ணையை விட்டு தொட்டுச்சாப்பிடுவார்கள். அதோடு கொஞ்சம் கருப்பட்டியையும் நுணிக்கிப் போட்டு குழைத்து அதைத் தொட்டுச் சாப்பிட்டால் தேவாமிர்தமாக இருக்கும்.

*

நாயக்கருடைய ஆரோக்கியமான உடம்புக்கு ஊரார் சொல்லும் ஒரே காரணம், தாயிடம் அவர் பன்னீரெண்டு வயசுவரை அமிர்தப்பால் உண்டு வளர்ந்ததுதான் என்பார்கள்.

நாயக்கர், தனக்கு ஒவ்வொரு வருஷமும் விளையும் தானியங்களை அப்படியே விற்றுப் பணமாக்கிவிடுவார். அப்படி விற்பதிலும் சில முறைகள் வைத்திருந்தார். புரட்டாசி மாசம் விதைப்பு விழும். கார்த்திகைக் கடேசியில் அறுவடைக்கு வரும். ஐப்பசியில் சம்மங்கதிர் பால்கூட்டி கதிராக நிற்கும். அதைப் பார்த்தபிறகு தான் நாயக்கர் குலுக்கைகளிலிருந்து கம்மம்புல்லை எடுத்து அளப்பார்.

மற்ற சம்சாரிகளெல்லாம் அப்படியில்லை; விதைப்பு முடிந்தவுடனேயே அளந்துவிடுவார்கள். நாயக்கர் மனசுக்குள் சொல்லிக் கொள்வார், கோட்டிக் கழுதைக; இந்தமானைக்கு மேமழை பெய்யாமல் போயிட்டா

மண்ணைத் திங்கவேண்டியதுதான்.

ஒரு வருஷம் அப்படியே ஆகிவிட்டது. பெரிய பெரிய சம்சாரிகள் கூட கையிலிருந்த துட்டைப்போட்டும் கடன் வாங்கியும் வெளியிடங்களுக்குப் போய் சாப்பாட்டுக்கு கம்மம்புல் வாங்கிக்கொண்டு வந்தார்கள். நாயக்கர் இதையெல்லாம் பார்த்து வாயே திறக்கமாட்டார்; கண்களால் சிரித்துக்கொள்வார்.

அந்தக் கிராமத்தில் தங்கள் தேவைக்குப்போக கம்பை விற்பவர்கள், அதிகமாப்போனால் நாலைந்து புள்ளிகள்தான் மற்றவர்களுக்கு தங்களுக்கே பற்றாக்குறையாக இருக்கும். ஆனாலும் அவர்கள் தங்களுக்கு நல்ல மகசூல் என்று சொல்லிக்கொள்வார்கள்! நாயக்கருக்கு எவ்வளவு அமோகமாக விளைந்தாலும் ஒன்றுமே சரியில்லை என்றுதான் சொல்லுவார் 'பேய் அடிக்கிறமாதரி' பயிர்கள் கன்னங்கரேர் என்று இருக்கும் அவருக்கு. பயிர் பச்சையெல்லாம் எப்படி இருக்கு? என்று கேட்பவர்களுக்கு, விலுவிலுண்ணு வெளுத்துப் போயி பயிரே நல்லா இல்லை என்று சொல்லுவார்!

"ஏன் அப்படி?"

அவருடைய சுபாவம் அப்படி. உண்மையைக்கூட மிகவும் குறைத்தே சொல்லுவார். மற்றவர்கள் பேசும் பெருமையைக் கண்டு ஏற்பட்ட வெறுப்பு. மற்றவர்கள், அவருடைய செழுமையைக் கண்டு ஏற்படும் பொறாமையை திசைதிருப்ப.

ஐப்பசி கார்த்திகை மாதங்களில் அவருடைய கம்மம்புல்லுக்கு நல்ல விலை கிடைக்கும். அந்தக் காலத்தில் ரூபாய் நோட்டுகளே கிராமங்களில் அமுலுக்கு வராத காலம். ஆகவே ஒரு ரூபாய் நாணயங்களாகவே கொடுப்பார்கள்; நல்ல சுத்தமான வெள்ளி ரூபாய் நாணயங்கள். அந்த நாணயங்களைப் பெற்றுக்கொள்கிறவர்கள் அவைகளை தரையில் - கல்லில் - போட்டுப் பார்த்து (சில கெட்டிக்காரர்கள் ஆள்க்காட்டி விரலையும் பெருவிரலையும் சேர்த்து வைத்து - அப்படிச் சேர்த்து

வைப்பதில் பெருவிரலைக் கொஞ்சம் பதிவாக வைத்துக்கொள்ளணும். ஆள்காட்டிவிரலின் வளைவில் வெள்ளி ரூபாய் படுத்திருக்கும் - கீழே பதிந்துள்ள பெருவிரலின் நகம் நாணயத்தை ஒரு சுண்டு சுண்டியவுடன் கணீரென்ற ஓசையுடன் சிரித்துக் கரணம் அடித்துக்கொண்டே மேலே போய் உள்ளங்கையில் வந்து விழும்). அந்த ஓசையை வைத்தே சுத்த நாணயம் கள்ள நாணயம் என்று கண்டுபிடித்து விடுவார்கள்.

*

நாயக்கருக்குள்ளஎட்டேக்கர் நிலம் அவருடைய தகப்பனார் காலத்தில் ஒன்றும் விளையாத - மாட்டுத்தீவனமான நாத்துமட்டுமே விளையும் - வெறும் வெள்ளைத் தரைக்காடாக, பொக்கு நிலமாக இருந்ததை, இவருடைய அரும்பாட்டால் விளைநிலமாக மாற்றிவிட்டார். தெலுங்கிலே ஒரு சொலவடை உண்டு; நல்ல நாயக்கனைக் கண்டு நிலம் பயப்படும் என்று. நல்லமுறையில் பெண்டாளத் தெரிந்த ஒரு நாயக்குக்கு ஒரு பெண் எப்படி பயங்கலந்த மரியாதையோடு நடந்து பணிவிடைசெய்வாளோ அதுமாதரிதான் நிலமும்.

ஏக்கருக்கு முக்கால் கோட்டைக்கு ஒரு கோட்டை விளைந்த நிலத்தை, கம்படி கம்பாக வைத்து தனீச்சாணி உரமாகப் போட்டு சாரமுள்ள நிலமாக மாற்றியதால் ஏக்கருக்கு மூணுகோட்டை நாலு கோட்டை என்று விளைய ஆரம்பித்துவிட்டது. கதிரை களத்தில் கொண்டுவந்து சாணை வைத்து மேய்ந்தால், பெரிய சம்சாரிகளின் சாணையோடு போட்டி போட்டுக்கொண்டு கோபுரமாக வளர்ந்துகொண்டு வந்தது ஒவ்வொரு வருஷமும்.

இவர் வேலை செய்துகொண்டு வந்த சம்சாரி வீட்டில் இவரை ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. அந்த வீட்டு நாயக்கர் இவருக்கு மந்தைப் புஞ்சையில் நாலேக்கர் நிலத்தை எழுதிக் கொடுத்து தனது மகளில் ஒருத்தியைக் கட்டிக்கொடுத்தார் இவருக்கு.

"துரைச்சாமி நாயக்கருக்கு ஏன் நாலு நாலு ஏக்கராக நிலம் சேருது; என்ன விஷயம்" என்று கேட்டார் நண்பர்!

அதுக்கு விசேஷ அர்த்தம் ஒண்ணும் கிடையாது; நாலு என்கிறது ஒரு எண்ணிக்கை அவ்வளவுதான். கொஞ்சம் கூடலாம் குறையலாம் அதைப்பற்றி என்ன! நீங்கள் என்கிட்ட கதைதானே கேட்டீர்கள்; நிஜம் என்னத்துக்குக் கேக்கணும்?

"சரி; சொல்லுங்க"

கல்யாணம் ஆனபிறகு நாயக்கர் அந்த வீட்டிலிருந்து விலகி சொந்தத்திலேயே விவசாயம் செய்ய ஆரம்பித்தார். அதுக்கு முதல்ப்படியாக ஒரு மாடு பிடித்தார்.

"ஒரு மாடா!"

ஆமா. ஒரு மாடுதான். ஒரு ஜோடி மாட்டுக்கு என்றால் குறைந்தது 20 ஏக்கர் நிலமாவது இருக்கணும். கூட்டு மாடு சேர்த்துக்கிடலாமென்று ஒரு மாடு பிடித்தார். அது ஒத்தைக் கொம்பு உள்ள மாடு. ஞாயமா முதல்லெ மாடு பிடிக்கிறவன் இப்படிப் பிடிக்கக்கூடாது. இதுக்கு பெரிய்ய எதிர்ப்பு இருந்தது ஊரில். வழக்கம்போல் அவர் இதை சட்டை செய்யலை. மாடுதானே உழப்போகுது கொம்பா உழப்போகுது என்று கேட்டார்.

ஒத்தைக்கொம்பு மாடு ஆனதினாலே விலை சலிசு. பொதுவாக நாயக்கர்களிடம் ஒரு 'கம்பீரம்' ஒண்டு உண்டு. சம்சாரித்தனம் கட்டுப்படி ஆகிறதோ இல்லையோ மாடுகள் நன்றாக இருக்கணும். ஊரிலேயே உசந்த சோடி நம்மதுதான், சுத்துப்பட்டியிலேயே இதுக்கு சோடி கிடையாது. எப்பிடி சோடி அமைஞ்சிருக்கு பாத்தியளா ராமர் லச்சுமணர் மாதரி. வண்டியிலெ பூட்டிப் பாப்பம்; ஓம் மாடு இதெ விலகிட்டதுண்ணா எங்காதை அறுத்துக் கீழே வச்சிருதேன், இப்படி! நீ ஒரு சோடி மாட்டுக்கு ஆறு பொதிதானே பருத்திவிதை வாங்கிரெ; நா எட்டுப் பொதி போடுரேனாக்கும். இந்த மாதரி!

இது காரணமாக அடிக்கடி சந்தைக்குப்போய் மாடுகளை மாற்றி பொருள் நஷ்டப்பட தயங்கமாட்டார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு துரைசாமி நாயக்கரைக் கண்டால் ரொம்ப இளப்பம்.

இவரோடு கூட்டுமாடு சேர்ந்தவர், உயர்ந்த ஜாதி காங்கேயம் காளையை வைத்திருந்தார். இவருடைய தொத்தல் மாடு ஒரே வருசத்தில் தகர்ந்து போய்விடும்; பிறகாவது புத்திவந்து ஒரு நல்ல மாடு பிடித்துக்கொண்டு வருவார் என்று கூட்டுமாட்டுக்காரர் மட்டுமில்லை அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

கூட்டு மாட்டுக்காரருக்கும் சேர்த்து நாயக்கரேதான் வேலை பார்த்தார். இதனால் தன்னுடைய மாட்டைப் பேணுதலோடு பத்தினார். கொஞ்சநாள்க் கழித்து ஒத்தைக்கொம்பு மாடு பின்னடைய ஆரம்பித்தது. பார்த்தார் நாயக்கர். நுகத்தடியின் சரிமத்தியில் இருக்கவேண்டிய கலப்பையின் ஏர்க்காலை காங்கேயம் காளையின் பக்கத்தில்த் தள்ளி பூட்டினார்!

நெம்புகோல் தத்துவத்தைப்பற்றியெல்லாம் நாயக்கர் கேட்டறிந்தவரல்ல. ஆனாலும், தத்துவார்த்தங்களின் ஞானம் இல்லாமலே நடைமுறைகளின் தேவை மனித மூளையை இயக்கிவைத்து விடுகிறது! கூட்டுமாட்டுக்காரரும் மற்றவர்களும் நினைத்து எதிர்பார்த்தபடி ஒத்தைக்கொம்பு மாடு ஒண்ணுங் கீழே சாய்ந்துவிடவில்லை. பல வருஷங்கள் ஈடு கொடுத்ததோடு நல்ல மாடு என்ற பெயரையும் துரைசாமி நாயக்கர் யோகக்காரர் என்றும் சொல்ல வைத்தது.

மற்ற சம்சாரிகள் பொதிபொதியாய் பருத்திக்கொட்டையை விலை கொடுத்து வாங்கி தங்கள் மாடுகளுக்கு வைப்பார்கள். விவசாய வருமானத்தின் பெரும்பகுதி இதற்கே சரியாய்ப் போய்விடும்.

நாயக்கர் ஒரு மூடை விதைக்குமேல் வாங்கமாட்டார். அவருடைய மாடு நல்ல உறுதியுடனும் ஆரோக்கியமாகவும் இருக்கும். வேலை முடிந்ததும் அவர் வீட்டு ஆட்களில் யாராவது ஒருத்தர் மாட்டை மேய்க்கக் கொண்டுபோவார்கள். அதோடு வருஷத்தில் முக்கால்வாசி பச்சைப்புல்

போடுவதும் காரணம். வேலை முடிந்ததும் மாட்டை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டு எங்காவது தொலைக்காடுகள் சுற்றி எப்படியாவது ஒரு சாக்கு பச்சை கொண்டுவந்து விடுவார் மாட்டுக்கு. மழைக்காலம் இரண்டு மாசமும் அதையொட்டிய இரண்டு மாதங்களும் பச்சைப்புல் யாருக்கும் கிடைக்கும். அதுக்கப்புறம் பச்சை அறுந்தலாகிவிடும். காடுகளிலும் கட்டாப்புகளிலும் பலபேர் புல் அறுத்துக்கொண்டு போனபிறகும் இவருக்கு அங்கே புல் கிடைக்கும் அறுக்க! ஒரு வரப்பைப் பார்த்துவிட்டு இதில் புல் இல்லை என்று கைவிட்ட இடத்தில் இவர் உட்கார்ந்து பன்னறுவாள் பிடித்தால் கொஞ்சநேரத்தில் ஒரு சாக்குப் பச்சையை அறுத்துச் சேர்த்துவிடுவார்!

பச்சை ஊட்டத்தினால் மாடு பார்க்க கட்டியாக ஒரு ஆரோக்கியமான குதிரைமாதரி இருக்கும்; திமிர்ந்து நிற்கும். அதனுடைய தோல் சன்னமாக ரோமங்கள் மினுமினுத்துக் காணும். எவ்வளவு வேலை செய்தாலும் அதுக்கு அலுப்பு வருவதில்லை. அதை வேலை வாங்குகிறவனுக்கும் சந்தோசமாக இருக்கும்.

பச்சையே கிடைக்காத ஓரிரு மாதங்கள்தான் அவர் பருத்திக் கொட்டையை நனையப்போட்டு 'மையாக' ஆட்டிவிடுவார் மாட்டுக்கு.

அவருடைய மாட்டுக் காடியில் போய்ப் பார்ப்பவர்களுக்கு, காடியில் மருந்துக்கு, பல்குத்த ஒரு துரும்பை எடுக்கமுடியாது. மற்றவர் தொழுவிலுள்ள காடிப் பலகைக்குள் எட்டிப்பார்த்தால் பவுன் நிற நாத்துக்கூளம் மாடு சரியாகத் தின்னாமல் கழித்துக் கிடக்கும். துரைச்சாமி, நீ மாட்டுக்கு கூளமே போடமாட்டியா! என்றுதான் கேட்பார்கள்.

அவருக்குத் தெரியும்; மாட்டுக்கு எப்படி, எப்போ கூளம் போடணும் என்று.

*

நாயக்கருடைய வருஷ வருமானம் மூணுபங்கு உயர்ந்தது. அவருடைய

வீட்டின் எழுதாத பேரேட்டில் வரவுக் கலம்தான் உண்டே தவிர பற்றுக் கலமே கிடையாது. ஒவ்வொரு வருஷ வருமானப் பணத்தையும் எண்ணி சரிபார்த்து ஒரு கலயத்தில்ப் போட்டு வீட்டின் தரையில் ஓரிடத்தில் அடையாளமாகப் புதைத்து வைத்துவிடுவார்.

அவர் தனக்கென்று சில நடைமுறைகளை பிடிவாதமாக பின்பற்றினார். சொந்தக்காரர்களோடு, பழகியவர்களோடு ஒட்டமாட்டார். அவர்கள் வந்து ஒட்டவும் விடமாட்டார். தேனைத் தொட்டையோ நீரைத் தொட்டையோ என்றுதான் இருக்கும் அவருடைய பழகுமானம்.

சொந்தக்காரர்கள், அக்கம்பக்கத்துக்காரர்களுடைய வீட்டு நல்லது பொல்லதுகளுக்கு முதல் ஆளாகப் போய் நிற்பார். வேலை செய்வார். ஒத்தாசனையாக இருப்பார். ஆனால் 'கை நனைக்க' மாட்டார்; மொய் எழுதவும் மாட்டார்.

ஊரில் கொஞ்சம் வசதியான சம்சாரிகள் தெற்கே - தீர வாசம் - போய் சாப்பாட்டுக்கு என்று நெல் பிடித்துக்கொண்டு வருவார்கள். நெல்லுச்சோறு தின்பது நாகரீகத்துக்கு அடையாளம் சரிசல்க்காட்டில். இவர் அந்த மூணு நேரமும் கம்மங்கஞ்சிதான். ஏதாவது விசேச நாட்களில் மட்டும் குருதவாலிப் பருக்கை; அது அவருடைய மானம்பாரியில் விளையும் ஒரு கரிசல்த் தானியம். நம்ம நிலத்திலெ விளையிறதத்தான் நாம திங்கணும்; அதுதான் நிலைச்சி நிக்கும் என்றுவிடுவார்.

கரிசல்க்காட்டு சம்சாரிக்கு விருந்தாடுதல் என்பது நடைமுறைக்கு முடியாத காரியம் என்பது அவருடைய பிடிவாதமான கொள்கை. மற்ற சம்சாரி வீடுகளில் அவர்களுடைய சொந்தக்காரர்கள் மாசக்கணக்கில் வந்து இருப்புப்போட்டுக் கொண்டு விருந்து உண்டுகொண்டு இருப்பார்கள். இதை நாயக்கர் அறவே வெறுத்தார். இது என்னத்துக்கு; ஏழூரான் கூட்டம் போட்டுக்கிட்டு என்பார். "கிரிமினல் வேஸ்ட்" என்கிற வார்த்தை அவருக்குத் தெரியாது, தெரிந்தால் அதையே சொல்லிவிடுவார்.

*

இந்த சமயத்தில் அந்த ஊரில் ஒரு தோட்டம் விலை ஆடியது. மந்தைத் தோட்டம், வத்தாத கிணறு, நல்ல தண்ணீர். நாலேக்கருள்ள அந்தத் தோட்டத்தை முவ்வாயிரம் ரூபாய் என்றால் கொடுத்துரலாம் என்று சொன்னான் தோட்டக்காரன். பலருக்கு அதை வாங்கிறணும் என்று ஆசை. ஆசைமட்டும் இருந்தாப் போதுமா.

ஒரு சில துட்டுள்ள புள்ளிகள் நெருங்கினார்கள்.

மத்தியான வேளைகளில் கம்மாய்க்கரை மரநிழலில் ஊர் முக்கியஸ்தர்கள் வந்து காற்றாட உட்காந்திருப்பார்கள். துரைசாமி நாயக்கரும் வந்து ஒதுங்கலாக சித்தநாழி படுத்திருப்பார். ஊர் சமாச்சாரமெல்லாம் பேச்சில் வரும். மந்தையடித் தோட்டமும் விலையாடும் விஷயம் பேச்சில் அடிபட்டது. அப்பொழுது நாயக்கர் மணலில் படுத்தபடியே கண்ணை மூடிக்கொண்டு சாதாரணமாகவே தன்னுடைய அபிப்ராயத்தைச் சொன்னார்.

முவ்வாயிரம் என்ன கூடவேகூட கொடுத்து வாங்கிறலாம் அதை. ஆனா, இதுலெ ஒண்ணு நாம யோசிக்கணும். தோட்டத்துக்கு உரம் செய்கிறதுங்கிறது லேசு இல்லை. பிஞ்சைக்கு ஏக்கருக்கு இருவத்தஞ்சி முப்பது வண்டி குப்பை போட்டாப்போதும். தோட்டத்துக்கு அப்பிடி முடியுமா? ஏக்கருக்கு எழுவத்தஞ்சி எம்பது வண்டி போடணும். நாலேக்கருக்கு, நாலெட்டா முப்பத்திரெண்டு ஆக, முன்னூத்தி இருபது வண்டி குப்பை போடணும். தாலியந்து போகும்! தோட்டத்துக்கே இருக்கிற குப்பையைப் போட்டுட்டா கரிசல்க்காட்டுக்கு என்ன செய்ய? நாலு வருஷத்திலே கரிசக்காட்டு விவசாயம் படுத்துரும். அந்தத் தோட்டக்காரனுக்கு ஏன் கரிசக்காடு விளையமாட்டேங்கிது; அவங்கிட்ட இருக்கிற குப்பையெல்லாம் தோட்டமே சாப்பிட்டுறது; நமக்கு ஜீவநாடியே கரிசல் விவசாயம்தானே? என்று கேட்டு, கொஞ்சம் நிறுத்தி இடைவெளிக்கு தொடர்ந்தார்.

அதுலேயும் இந்தத் தோட்டம் இருக்கே, அப்ப்ப! அழிவு ரொம்ப ஜாஸ்தி. மந்தை பார்த்தீளா; 'கொல்லைக்கு' வாரவனும் அங்கெதான்; குளிக்க வாரவனும் அங்கெதான் குளிச்சீட்டுப் போறவன் சும்மா போறானா? காய்கறி பறிச்சீட்டும் போயிருதான் குளிச்சதுக்கு வாடகை இந்த அழிமானத்துக்குப் பாதி அவனுக்கு விக்கணும்ண்ணு வயத்தெரிச்சல் வந்திட்டதுபோலிருக்கு.

இந்த அளகுலெ ஊருக்குள்ளெ எந்தப் பொம்பளைக்கும் கோவம் வந்தாலும் வேறெ கிணறு கிடைக்கமாட்டேங்கிது அதுகளுக்கு பாவம்.

இதைக்கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். நாயக்கர் சிரிக்காமல், நாஞ்சொல்றது பொய்யா? வருசத்துக்கு எப்படியாவது ஒரு ஆளாவது விளுந்து சாகுதா இல்லையா? சை! ஆக்கங்கெட்ட பய கிணறு அதை வாங்கிட்டாலும் மணந்தான் என்று சொல்லிவிட்டு லேசாய்ப் புரண்டு படுத்து அமைதியாகிவிட்டார்.

நிஜமாகவே அந்தத் தோட்டத்தை 'எடுத்துப்போட்டு வைக்கணும்' என்று நினைத்த சரியான புள்ளிகள் ரெண்டுபேர் அங்கே இருந்தார்கள். நாயக்கருடைய இந்த நிதானமான பேச்சு அவர்களை யோசிக்கவும் பின்வாங்கவும் செய்துவிட்டது.

இந்தக் கம்மாய்க்கரைப் பேச்சு நடந்த நாலாம் பக்கம் அந்தத் தோட்டத்தை துரைசாமி நாயக்கரே இரண்டாயிரத்தி எண்ணூறு என்று கிரயம் முடித்துக்கொண்டார்!

"என்னது!?" என்று திடுக்கிட்டுக் கேட்ட நண்பர் 'ஆமா; இவரு இப்படிக் கவுலாப் பேசி தனக்கே முடிச்சிக்கிட்டாரேண்ணு அந்த ரெண்டு புள்ளிகள் இவரு பேரிலெ ஆத்திரப்படலையா?" என்று கேட்டார்.

படலை. அதுதான் விஷயம்; அங்கெதான் இருக்கார் துரைசாமி நாயக்கர்!!

கம்மாய்க்கரையில் தான் பேசிய பேச்சு இவர்கள் யார் மூலமாகவாவது

தோட்டக்காரனுக்கும் எட்டும் என்று நாயக்கருக்குத் தெரியும். அவன் விழுந்தடிச்சு நேராய் இவரிடம் தான் ஓடிவந்தான்.

என்ன அண்ணாச்சி காரியத்தைக் கெடுத்திட்டியளே; உங்களுக்கு நா என்ன பண்ணினேண்; கம்மாய்க்கரையிலே வச்சு இப்படிச் சொன்னீயளாமே; வாஸ்தவந்தானாண்ணு கேக்கலாம்ண்ணுதான் வந்தேன் என்றான்.

நாயக்கர் கொஞ்சநேரம் சலனமில்லாமல் இருந்தார். பிறகு அமைதியாக, உனக்கு யாரு சொன்னா இதெ? என்று கேட்டார்.

யாரு சொன்னா என்ன; நீங்க சொன்னது உண்டுமா இல்லையா; அதைச் சொல்லுங்க முதல்லெ என்று பிடித்தான்.

நா சொல்லலைண்ணு சொன்னாத்தானே வெவகாரம். நல்லாச் சொன்னேன்; அது இருக்கட்டும். ஒங்கிட்டெ வந்து சொன்னது யாரு?

தோட்டத்தெ வாங்கணும்ணு நெனைச்சிருந்த ரெண்டு புள்ளிகளுமே எங்கிட்ட சொன்னாக.

சரி; இப்பொ அவங்களுக்கு தோட்டம் வேண்டாமாமா?

இப்படிச் சொன்னபிறகு அவுகளுக்கு வாங்கத் தோணுமா?

நீயொரு பைத்தாரன். அவங்க நோக்கம் வேரெ. இதெ ஒரு காரணமா வச்சிக்கிட்டு விலையைக் குறைக்கணும்ண்ணு நோக்கமா இருக்கப்படாதா.

இல்லெ; அப்படித் தோணலெ.

அப்போ அவங்களுக்குத் தோட்டம் வேண்டாம்?

அப்படித்தாந் தெரியிது.

சரி இருக்கட்டும். நீ முடிவா என்ன விலைதாஞ் சொன்னெ அவங்ககிட்டெ?

ரெண்டுபேரும் போட்டிபோட்டா முவ்வாயிரம் வரைக்கும் அதுக்கு மேலேகூட போகும்ண்ணு நெனைச்சேன். ஆனா நா அவுககிட்டைச் சொன்னது கடேசியா ரெண்டாயிரத்தி எண்ணூறு.

அவுகளுக்கு இன்னும் பதிச்சி வாங்கணும்ண்ணு நோக்கம் இருக்கும்ண்ணு தெரியுது. போட்டும். நா இப்போ ஒங்கிட்டெக் கேக்கேன்; என்னாலெ கெட்டதுண்ணு வேண்டாம். நீ கடைசியாச் சொன்ன வெலை, நா எடுத்துக்கிடுதேன்; சரிதானே என்று சொல்லி இந்தா பிடி என்று ஒரு நூறு ரூபாயை அச்சாரமாகவும் கையில்த் திணித்துவிட்டார்.

பிறகுதான் அந்தப் புள்ளிகளுக்குத் தாங்கள் செய்த தப்பும் நாயக்கரின் சாமார்த்தியமும் புரிந்தது.

"ஆமா . . . நாயக்கருடைய 'எழுதாத பேரேட்டில்' பற்றுக்காலம் கிடையாதுண்ணீளே; இப்பொ எப்பிடி நிலம் வாங்கிய பற்று வந்தது?" என நண்பர் கேட்டார்.

ஒரு தொகையை எடுத்து அதே பெறுமானமுள்ள பொருளை வாங்கினால் அது பற்று. இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாயை எடுத்து ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள தோட்டத்தை வாங்கினால், இரண்டாயிரத்து இருநூறு வரவு!

ராமனுடைய பாணத்தைப்பற்றி ஒன்று சொல்லுவார்கள், மற்ற வீரர்களுடைய அம்பு எதிரிகளை கொன்றுவிட்டு வந்து அம்புராத்தூணியில் புகுந்துகொள்ளுமாம். ராமனுடைய பாணம் எதிரியைக் கொன்றுவிட்டு அவனுடைய மனைவியரின் கண்ணீரையும் துடைத்தபின்பே அம்புராத் தூணியில் வந்து புகுமாம்!

மற்றவர்களுடைய பணம் பெட்டியை விட்டுப் போகும்போது பெறுமானத்தை மட்டுமே விலைகொடுத்து வாங்கும். நாயக்கருடைய பணம் பெட்டியைவிட்டுக் கிளம்பினால் பெறுமானத்தையும் கொண்டு, லாபத்தோடு திரும்பும்.

*

நாயக்கர் அந்தத் தோட்டத்தை வாங்கியது பெரிசுல்லை; அதுக்கப்புறம் அது சம்பந்தமாக எடுத்த காரியங்கள் சுவாரஸ்யமானவை!

முதல்க் காரியமாக கிணற்றுத் தண்ணீரில் நாலுகட்டு ஆவரங்குலையைக் கொண்டுவந்து போட்டார்.

"என்னத்துக்கு! அது நல்ல உரமோ!"

உரத்துக்காக இல்லை ஐயா! தண்ணீர் குளிக்க முடியாதபடி சிகப்பு நிறமாக மாறி, ஒருவித நாற்றம் எடுக்க ஆரம்பித்துவிடும்.

"ஐயையோ . . . சை" சரியான உடைமுள்ளை கவைகவையாக கொண்டுவரச்சொல்லி ஒரு ஈக்குஞ்சு நுழையாமல் சுற்றிலும் வேலி நட்டுத் தடுத்தார்.

தப்பித் தவறி வேலியோரங்களில் யாரும் மேய்க்க மாடுகளைக் கொண்டுவந்தாலோ, யாரும் 'வெளிக்கு' வந்தாலோ தன் வீட்டுப் பெண்களை விட்டு தாறுமாறாக வையச்சொல்லி ஏற்பாடு செய்தார். அவர்கள் வையும் வசவுக்குக் குறுக்கே நாய்கூடப் போகாது. அப்படி ஒரு 'வசனம்'.

'பட்டமரம் பால் சொரியும்' என்பார்களே, அந்தமாதிரியான ஒரு மந்திரக்கை அவருடையது. பாறையை மண்ணாக்கி மண்ணைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையை விவசாயத்தில் செய்து காட்டக்கூடியவர் நாயக்கர். ரெண்டே வருஷங்களில் தோட்டம் அடையாளமே தெரியாதபடி பசுஞ்சோலையாக மாறத் தொடங்கிவிட்டது. பாடு பாடு அரும்பாடு; அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் அப்படிப் பாடுபட்டார்கள். எலும்பை உரமாக்கி ரத்தத்தை நீராகப் பாய்ச்சு என்று சொல்லுவார்களே, அது அவர்களுக்குத்தான் செல்லும்.

நம்ம 'ஜனங்களுக்கே' ஒரு புத்தி உண்டும். அதிலும் சிலருக்கு, செழுமையைக் கண்டாலே கண்ணை உறுத்தும்! இதுக்குப் பரிகாரமாக நூறு மண்பானைகளின்மேல் சுண்ணாம்பு தடவி கரும்புள்ளி குத்திக் கவிழ்த்து வைத்தாலும், வைக்கோலையும் பழைய துணிகளையும் கொண்டு ஆயிரம் கோமாளி பொம்மைகள் செய்து வைத்தாலும் காணாது! செழுமையான மிளகாய்ச் செடியின் அழகைப் பார்த்து குழந்தைமாதிரி ஆனந்தப்பட்டு குதித்துக் கைதட்டி சிரித்து மகிழவேண்டாம்; இந்த மண்ணில் எப்படிக் கொண்டுவந்து விட்டான் பாத்தியா இதை என்று ஒரு விவசாயப்பார்வை பார்க்கக்கூட வேண்டாம்; பிடுங்கி எறியாமல் இருந்தாலே போதும்!

எண்ணைக்காவது ஒரு நாள் எவனாவது ஒருத்தன் திடீரென்று ராத்திரிவேளைகளில், அசந்த நேரம் பார்த்து வேலியைத் தாண்டி விழுந்து இந்த மிளகாய்ச் செடிகளை பிடுங்கிப்போட்டாலும் போட்டு விடுவான் என்று பயந்தார் நாயக்கர்.

அவர் தோட்டத்தை வாங்கவிருந்த சில நாட்களுக்கு முன்பு, வெள்ளை என்ற பெயருடைய ஒரு வாணியச் செட்டியார்ப் பொம்பளை - ஆள் பார்க்கிறதுக்கு நல்லா இருப்பாள்; தலைமயிர் நீளமாக இருக்கும் - ரொம்ப நாளாகக் குழந்தையில்லாமலிருந்து உண்டாகி இருந்தாள். பிரசவ வலி பொறுக்கமுடியாமல் பாவிமக அந்தக் கிணத்துலெ விழுந்து செத்துப்போனாள்.

நாயக்கர் ஒரு நாள், ஊர் அடங்குகிறதுக்கு முன்னாடி; அப்பதான் கடைகளை எடுத்துவைத்துக் கொண்டிருந்தார்கள். வேர்க்க விறுவிறுக்க திடுதிடுவென்று ஓடிவந்தார். எல்லோரும், என்ன என்ன கள்ளன் வந்திட்டானா என்று கேட்டார்கள் பயந்துபோய். அவரால் பேசமுடியலை. கண்கள் நிலைக்குத்தியமாதரி அப்படியே அசந்து விழுந்துவிட்டார். அங்கிருந்தவர்கள் அவர் முகத்திலெ தண்ணீர் தெளித்து, குடிக்க நீத்துப்பாகம் கொடுத்தார்கள். சுற்றிலும் ஜனங்கள், முக்கியமாக பெண்கள் கூடிவிட்டார்கள். அவர் கண்களைத் திறந்து ஈனஸ்வரத்தில் ஒரே

பேச்சுத்தான் பேசினார். நிறைகுளத்து ஆசாரியை வரச்சொல்லுங்க.

நிறைகுளத்து ஆசாரி திருநீறு போடுவார். காத்து கருப்பு என்று பயப்படுகிறவர்களுக்கு அவர்தான் சரணம்.

ஆசாரி வந்து பார்த்தார். பார்த்ததும் கண்டுகொண்டார். ஒரு தாம்பாளத்தில் திருநீறு கொண்டுவரச் சொன்னார். மேல்த் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். தாம்பாளத்தில் திருநீற்றைப் பரப்பி சமன்செய்து ஓம் என்று எழுதி அதில் ஒரு சக்கரத்தைப் போட்டார். நாயக்கருக்கு எதிராக உட்கார்ந்துகொண்டு நீர்யானைமாதரி வாயைப் பிளந்து ஒரு கொட்டாவி விட்டார். கிசுகிசு ஒலியில் மந்திரமும் கொட்டாவியும் மாறிமாறி வேகமாக வந்து கொண்டிருந்தது;

யாரும் எதிர்பார்க்காத வேளையில் திடீரென்று பெருத்த ஓசையுடன் ஆசாரி தரையில் ஓங்கி கையால் அறைந்தார். நாயக்கர் உட்பட அனைவரும் உண்மையிலேயே பயந்துபோனார்கள்! அப்படி ஒரு பேய் அறை.

நாயக்கருடைய தலையில் சிறு திருநீற்றைத் தெளித்து அவர் நெற்றியில் மூன்றுதரம் பூசினார். மார்பு, புஜங்கள் எல்லாம் தடவினார்.

அங்கிருந்தவர்களெல்லாம் திருநீறு பெற்றுக் கொண்டார்கள்.

பிறகு, நாயக்கர் தான் கண்டதைச் சொல்ல ஆரம்பித்தார்.

தோட்டத்துப் பக்கம் போனேன் . . .

யாரோ ஒர பொம்பிளை அழுகைச் சத்தம் கேட்டுது. இடம் நிதானம் பிடிபடலை. கிணத்துப்பக்கம் போனேன். போனா . . ! ஒரு பொம்பிளை அம்மணமா கமலைக் கல்லிலே கால் நீட்டி உக்காந்திருக்கா. தலைமுடி விரிஞ்சி நீளமா தொங்குது. அதுலேர்ந்து தண்ணி சொட்டிக்கிட்டிருக்கு. நீட்டின ரெண்டு காலுக்கும் மேலே அப்பதாம் பிறந்து செத்துப்போன ஒரு குழந்தையைப் போட்டுக்கிட்டு, அதெ முகத்தைப் பார்த்து ரெண்டுகையும்

விரிச்சி ஒப்புசொல்லி அழுதுக்கிட்டு இருந்தா. நா கொஞ்சம் கவனிச்சிப் பார்த்தேன் . . . யப்பாபா . .! ஒடம்பு சலேர்ண்ணு புல்லரிச்சுட்டது. அந்தமானைக்குப் பிடிச்ச ஓட்டந்தான்; திரும்பியே பார்க்கலை.

அவர் சொல்லி வாய் மூடறதுக்கு முன்னால் பெண்களில் பலர், வெள்ளைதான் அது வெள்ளையேதான் என்று சொன்னார்கள்.

வெள்ளிக்கிழமையும் அதுவுமா அந்த அகாலத்துலெ இப்படி அங்கனெ போகலாமா ராசு என்று ஒரு கிழவி கைகள் ரெண்டையும் விரித்துக்கொண்டு சொன்னாள்.

விடிகிறதுக்குள்ளாகவே செய்தி ஊர் பூராவும் பரவிவிட்டது.

நாயக்கரைக் கைத்தாங்கலாய் அவருடைய வீட்டுப்பெண்கள் வந்து அழைத்துக்கொண்டு போனார்கள். கொஞ்சநாள் அவர் படுக்கையிலேயே விழுந்துகிடந்தார். எழுந்து நடமாடவே இல்லை.

*

பிறகொரு நாள் நல்ல மத்தியான வேளை. கமலையை நிறுத்தி விட்டு வேலைக்காரன் அப்பத்தான் மாடுகளைப் பத்திக்கொண்டு போயிருப்பான். நாயக்கர் தண்ணீர் விலகிக் கொண்டிருந்தார். வேலிக்கு அப்பால் தள்ளி ஆட்டுக்காரர்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று நாயக்கர் ஓ ஓ என்று கூச்சல் போட்டுக்கொண்டு தோட்டத்துக்குள்ளே மறுக்கி மறுக்கி ஓடினார். தூரத்திலிருந்த ஆட்டுக்காரர்கள் பார்த்துவிட்டார்கள். அவர்களும், என்னமோ ஏதோ என்று ஓடிவந்தார்கள். அதற்குள் அவரே வேலியை ஒரே தாண்டாய்த் தாண்டி அவர்களைப் பார்த்து ஓடினார்.

என்ன சின்னியா என்ன என்ன என்று ராமசுப்புதான் கேட்டான் முதல்லெ.

ராமசுப்பு கம்பு வச்சிருக்கியா, நல்லவேளை; வா எங்கூட என்று

கூப்பிட்டார். என்ன சின்னியா விசயத்தைச் சொல்லுங்க என்று தயங்கினான் அவன்.

பாம்புடா; வெறட்டி வெறட்டிக் கொத்த வருது. நல்ல சரியான நாகப் பாம்புடா என்றார்.

போகவேண்டாம் சின்னியா சொன்னாக் கேளுங்கெ; அது அடைகாக்கிற பாம்பா இருக்கும். எங்கெ போனாலும் விடாது. நீங்க மறுக்கி மறுக்கி ஓடப்போயி தப்பிச்சிட்டியே. நேர ஓடியிருந்தீயெ இதுக்குள்ளார ஒங்க கதை முடிஞ்சிருக்கும் என்றான்.

இதுக்குள் அங்கே ஓடி வந்த, என்ன ஏது என்ற விசாரித்த மற்ற ஆட்டுக்காரர்களுக்கு நாயக்கர் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. ராமசுப்பே விஸ்தாரமாய் பாம்பு விரட்டும்போது அவனே நேரில் பார்த்ததுமாதரி விசயத்தை சாங்கோபாங்கமாக விளக்கினான்.

கேட்டுக்கொண்டிருந்த ஆட்டுக்காரர்களில் ஒருவரான முத்துக்கோனார், இப்படித்தாந் தம்பி ஒரு தடவை . . . என்று இன்னொரு பாம்பு விரட்டிய அனுபவத்தை இதைவிட ரசமாகச் சொல்ல ஆரம்பித்தார்!

வாஸ்தவத்தில் உண்மை என்ன தெரியுமா? அவர் பேயையும் பார்க்கலை; பாம்பையும் பார்க்கலை. அம்புட்டும் 'டுப்பு'. மூலதன பயத்தில், உடமைக்காரர்கள் செய்யும் சாகசமான காரியங்கள் இதெல்லாம். அந்தக்காலத்து மனிதர்களில் வளர்ச்சியுற்றவர் துரைசாமி நாயக்கர். அதனால் இவரைக் கண்டுகொள்ள முடியவில்லை அவர்களால்.

*

நாயக்கருக்கு தலைக்குழந்தை பெண் பிறந்தது. அதில் அவருக்கு ரொம்பத் திருப்தி; சந்தோஷம்.

இங்கே, தலைச்சன் பெண்ணாகத்தான் பிறக்கவேணும். அவள்

தலையெடுக்கும்போது பெரியவர்களுக்கு குடும்பத்தின் பாரம் கொஞ்சம் குறையும். அடுத்துப் பிறக்கும் குழந்தையை அன்போடு கவனிக்க, எடுத்து வைத்துக்கொள்ள ஒரு ஆண்குழந்தையால் முடியுமா? அவசரத்துக்கு ஒரு அடுப்பை கவனித்துக்கொள்வாள். வீட்டோடு ஒட்டிக்கொண்டு வீட்டுக்கு உதவியா இருப்பாள். அலுத்து வீட்டுக்குள் நுழையும்போது அப்படி ஒரு பெண்பிள்ளை இருந்தாலே அலுப்பெல்லாம் பறந்துபோகும்.

தன் அருமை மகளுக்கு மகாலெட்சுமி என்று பெயர் வைத்து அழைத்தார்.

மூன்று வருஷத்துக்குப் பிறகு ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

இந்தப் பிள்ளையை அவர் லட்சம் என்று கூப்பிட்டார். இது, ஊர்க்காரர்களுக்கு ஒரு கேலியாக இருந்தது. நாயக்கருக்கு அது உண்மையாக இருந்தது.

பையன் தனது பன்னீரெண்டாவது வயசில் தகப்பனாரைப் பார்த்து அய்யா, நம்மூரிலெ எல்லாரும் காரவீடு கட்றாகளே, நாமளும் ஒரு காரவீடு கட்னா என்ன? என்று கேட்டான். பயலின் ஆசையைப்பார்த்து அப்பரின் கண்கள் வியப்பினால் மின்னியது.

கோட்டிப் பிள்ளெ, நம்ம என்னத்துக்குடா காரவீடு கட்டனும். இந்த ஊரிலே இருக்கிற காரவீடுகள்ளாம் நமக்குத்தான்டா என்றார்.

இந்தோ அவுக வீட்லெ ஒரு இரும்புப்பெட்டி வாங்கியிருக்காஹெ; அது மாதிரி நாமளும் ஒண்ணும் வாங்குவமே?

கோட்டிப்பிள்ளெ, அந்த இரும்புப் பெட்டியும் நமக்குத்தான்!

பையன் அதை அப்படியே நம்பினான். குழந்தைகளுக்கு தகப்பன்தான் மாவீரன். தகப்பனாரால் முடியாததும் இந்த உலகத்தில் உண்டா அவர்களுக்கு?

ஆனால் நாயக்கர் இதை வேடிக்கையாகச் சொல்லவில்லை;

தட்டிக்கழிக்கவும் சொல்லவில்லை.

அவர் குடியிருந்தது ஒரு தகரவீடு. அதுவும் துருப்பிடித்த தகரங்கள். கிராமத்தில் அவருக்கு தகரவீட்டு துரைசாமி நாயக்கர் என்றுதான் பேர். அந்த மண்வீட்டுக்குள் நுழைந்தால் பெரிய பெரிய நாலைந்து குலுக்கைகள். அந்தக் குலுக்கைகள் கம்மங்கதிரிலுள்ள கொம்மைகள் போட்டு ஊறவைத்து மிதித்து அழுகிப்போன கரிசல் மண்ணினால் செய்யப்பட்டவைகள்.

அவைகளில் நிறைய்ய தானிய வகைகள் எப்பொழுது பார்த்தாலும் பொங்கித்ததும்பும், தானிய லட்சுமியின் நிரந்தர இருப்பிடம்.

மண்தரை. அந்தத் தரையை பல இடங்களில் தோண்டினால் வெள்ளியும் தங்கமுமாக செல்வலட்சுமி துதிகொண்டு விளங்குவாள்.

வீட்டுக்கு முன்னுள்ள தொழுவில் பசுக்களும் காளைமாடுகளும் எருமைகளும் கன்று - காலிகளுமாக கண்நிறைந்து விளங்கும். கால்நடைகளின் அதிதேவதை அவர் வீட்டுக்கு முன்னால் குடியிருந்தாள்.

அங்கே வீடு, மனித வாசத்தின் சௌகரியத்துக்காக இல்லை. விவசாய சம்பந்தப்பட்ட சாமான்களின் கிட்டங்கியாகவே இருந்தது. அதனால் ஜன்னல்கள் கிடையாது. உழைப்புக்கும் சேமிப்புக்கும் முதல்படி; மனிதன் ரெண்டாம்பச்சம்தான்.

நாயக்கர் இந்த ஊர் சம்சாரிகளுக்குத் தானியத்தை வட்டிக்குக் கொடுத்தார். அவர்கள் மறுவருடம் அறுவடையின் போது தானியத்தை அசலும் வட்டியுமாக திருப்பிக்கொடுப்பார்கள். நாயக்கர், அவர்களுடைய களத்திலேயே போய் தானியத்தை அளந்துகொள்வார். அப்படித்தான் பேச்சு.

அவர் கடன் கொடுப்பதும் ஆட்களை பொறுத்துத்தான் நல்ல புள்ளிகள், தாட்சண்யம் நிறைந்தவர்கள், எதிர்த்துப் பேசாதவர்கள், சொல்லுக்குப்

பணிந்து போகக்கூடியவர்கள், அப்புராணிகள் இந்தமாதரி இந்தமாதரி.

மற்ற ஆட்கள் யாருக்கும் "இல்லை" யென்று சொல்லாமல் வேறு ஏதாவது காரணங்கள் சொல்லி அனுப்பிவிடுவார். யாராவது அவரைத் தேடிப்போனால், அது யாராய் இருந்தாலும் - ரொம்ப சாதாரணமான ஆளாய் இருந்தாலும்கூட - ஐயா வா; ஐயா வா என்ற இனிமை பொங்க வரவேற்பார்! அவர்களிடமே பொடி வாங்கிப் போட்டுக்கொள்வார் - என்ன ஐயா; சாமீ; ஆள் மெலிஞ்சமாதரி இருக்கியே என்று - தொடக்கூடிய ஜாதியாக இருந்தால் - தடவிவிடுவார். அவனுடைய வீட்டில் எப்பவோ ஒரு கன்னுக்குட்டிக்கு உடம்பு சௌகரியம் இல்லாமல் இருந்திருக்கும். அதை இப்பொழுதுதான் கேள்விப்பட்டது போல எனக்கு அது தெரியாது சாமி; அதெ வந்து ஓங்கிட்டெ கேக்கணும் கேக்கணும்ண்ணு நினைக்கிறதுதான். இப்பொ எப்படி இருக்கு கண்ணுக்குட்டிக்கு? தேவலையா ஐயா? உன்னோட பயல் சின்னவன்; அவம் பேரு என்ன, இவன், அய்யலுசாமி என்று சொல்லுவான். ம் - ஆமாம்; அய்யலுசாமி அய்யலுசாமி. பயல்; கெட்டிக்காரன். ரொம்பக் கெட்டிக்காரனா வருவான்.

இப்படி அவனோடு ரொம்பக் குழைகிறார் என்றால் அவன் கேட்கப்போவதை 'இல்லை' என்று சொல்லப்போகிறார் என்று அர்த்தம்.

பிச்சைக்காரர்கள் யாராவது வந்து இவரிடம் என்ன கஜகர்ணம் கோகர்ணம் போட்டாலும் பைசா பெயராது. குடுகுடுப்பைக்காரன் வந்து வாசல்முன் நின்றுகொண்டு நல்லகாலம் வருது அதுவருது இதுவருது என்று ஆர்ப்பாட்டமாக அடுக்கிக்கொண்டே இருப்பான். இவர் ஒன்றும் அறியாதவர்போல் முகத்தை வைத்துக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டு கொஞ்சநேரம் கழித்து, அப்பா இது தொழு என்று சுருக்கமாகச் சொல்லி நிறுத்திக்கொள்வார். அவ்வளவுதான்; அவன் பேசாமல் போய்விடுவான்.

இது தொழுவா வீடாண்ணு தெரியா பயலுக்கு நல்லகாலம் வர்ரது எப்படித் தெரியும் என்பார்.

கிராமத்துக்கு எப்பவாவது அபூர்வமாக, எதிர்பார்க்காத வேளையில்

களைக்கூத்தாடிகள் வருவார்கள். அந்தக் கூட்டத்துக்கு ஒரு பெண்தான் தலைவியாக இருப்பாள். அவளுக்கு பங்காருபட்சி என்று பட்டம். பங்காருபட்சி என்றால் தங்கப்பறவை என்று அர்த்தம். அவள், அந்தக் கூட்டத்திலுள்ள ஆண்களில் யாருக்கும் மனைவி அல்ல. அத்த பட்டத்துக்கு தங்களில் அழகான ஒரு பெண்ணை சிறுவயசிலிருந்தே தேர்ந்தெடுத்து அவளுக்கு அது சம்மந்தமான சகல விளையாட்டுகளிலேயும் பயிற்சி கொடுத்து தேர்ந்தபிறகு அவள் 'பெரிய மனுஷி' ஆனவுடன் ஒரு நல்லநாளில் அவள் ஏறிவிளையாடும் களைமரத்துக்கே தாலிகட்டிக் கொள்வாள்.

பங்காருபட்சியின் விஜயம் கிராமத்து இளவட்டங்களின் மனசில் கிளர்ச்சியும் கொந்தளிப்பும் உண்டுபண்ணுவதாய் இருக்கும்.

இந்த பங்காருபட்சிகள் வேடிக்கைக்காக பெரியதனத்துக் கிழவர்களின் மேல்வேட்டியை மல்லுக்கட்டி உரிமையோடு பறித்துக்கொண்டு போவார்கள். அந்தக் காட்சி பார்க்கிறதுக்கு ஒரு ஆனந்தம்!

மேல்வேட்டியை பறிகொடுப்பதுபோல் ஒரு கேவலம் வேறு உண்டா? அவமானத்தின் காரணமாக அவர்கள் அவளோடு போராடுவார்கள். அவளை ஒன்றுஞ் சொல்லவும் முடியாது. இவர்களுக்கு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனை உரிமை உண்டோ அவ்வளவுக்கு அவர்களிடமிருந்து அதைப் பறிப்பதற்கு அவளுக்கு உரிமை உண்டு. இது பரம்பரையாக வந்த அங்கீகரிக்கப்பட்ட உரிமை.

ஒரு பங்காருபட்சி வந்து ஒரு பெரியமனிதனின் 'மேல் விழுந்து' மேல்வேட்டியை உரியும்போது பேசாமல் விட்டுக்கொடுத்துவிட்டால் அது அவருக்கும் பெருமை இல்லை; அவளுக்கும் மதிப்பு இல்லை. மேல்வேட்டியைப் பிடுங்கும்போது எவ்வளவுக்கு நேரம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கு அந்த ஆண்கள் சமர்த்தர்கள் என்று அர்த்தம்.

அய்யோ அந்தக் கிழவனார்கள் அவளிடம் படும் பாடு . . .

இதில் ஆடை கிழியக்கூடாது; கிழிந்தால் விளையாட்டு 'பவுல்'! இப்படி சமயங்களில் பங்காருபட்சி அவர்களை 'கிச்ச'மூட்டுவாள். கூச்சமுள்ளவர்கள் விழுந்துவிடுவார்கள். சிலருக்கு உடம்பில் கூச்சமே இருக்காது; அவர்களை என்ன செய்ய? உடனே கீழ்வேட்டியை அவிழ்க்கப் போவதுபோல் பாவலாக்காட்டுவாள். அவர்களுடைய கைகள் கீழவேட்டியை காப்பாற்ற வேகமாக வரும்; இமை தட்டுவதற்குள் மேல்வேட்டி பறிபோய்விடும்!

பொதுவாக, மேல்வேட்டியை ஒரு பங்காருபட்சி பறிப்பதற்குச் சில காரணங்கள் உண்டு.

ஒருசமயம் அந்த ஊரில் களை நட்டி விளையாட, பெரிய மனிதர்கள் அனுமதிக்க மறுக்கவும் இல்லை. அனுமதிக்கவும் இல்லை. நாட்களை கடத்திக்கொண்டே வந்தார்கள். அவளும் வீடுவீடாக இதுக்காக நடந்து நடந்து அலுத்துப்போனாள்.

ஒருநாள் காலை அவள் திடீரென்று அவர்கள்மேல்ப் பாய்ந்து எல்லாப் பெரியமனிதர்களின் மேல்த்துண்டுகளையும் 'பறிமுதல்' செய்துகொண்டு போய் ஒரு இடத்தில் வைத்துக்கொண்டு மேளம் கொட்டும்படி செய்து அங்கே காத்துக்கொண்டிருந்தாள். பிறகென்ன; இவர்கள் மேல்வேட்டியில்லாமல் எப்படி தங்கள் வீட்டுக்குப் போவார்கள்! ஒழுங்காக எல்லாரும் அவள் இருக்குமிடம்போய், அவர்களை நட்டி விளையாட அனுமதி கொடுத்தார்கள். அவளும் மரியாதையாக அவள் கைப்படவே அவர்களுடைய மேல்வேட்டிகளை ஒவ்வொருவர்பேரிலும் போர்த்திவிட்டு வணங்கி விடைகொடுத்து அனுப்பினாள்.

இன்னொன்று, விளையாட்டு நடக்கும்போது, வட்டத்தின்மீது ஒரு வெங்கல வட்டிலில் உட்கார்ந்துகொண்டு, சமன்நிறைக்காக ஒரு கம்பை ஏந்திக்கொண்டு வட்டத்தில் நகர்ந்துகொண்டு வருவாள். அப்படி அந்த வட்டிலுக்குள் உட்காரும்போது அதன் விளிம்புகள் அவளது பெரும் துடைகளை அழுத்தாமலிருக்கும் பொருட்டு துணிகள் வைத்துக்கொள்ள வேண்டியதிருக்கும். இந்த விளையாட்டுக்காக அவள் மேல்த்துண்டுகளை

கூட்டத்திற்குள் வந்து பறிப்பாள். முதல்த்துண்டை அம்பலக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்வாள். பாக்கிக்கு அந்த கிராமத்தின் மைனர் அல்லது அவளுக்குப் பிடித்த ஒன்றிரண்டு இளவட்டங்களின் துண்டுகளைப் பறித்துக்கொள்வாள். பறித்துக்கொண்டதுமில்லாமல், இந்த மேல்த்துண்டுகளை அவர்கள் அவளுக்கே என்று கொடுத்துவிட்டதாகவும், இனி அதை அவர்கள் தன்னிடம் கேட்கமாட்டார்கள் என்றும் கூட்டத்தில் உரத்துச் சொல்லுவாள்! கூத்தாடிகளில் ஒருவன் கோமாளியாக நடிப்பவன் இருப்பான். அவன் உடனே அவளைப் பார்த்து சத்தம் போட்டு, ஏ பங்காருப்பச்சி யோவ்!

என்ன?

அந்த மேல்த்துண்டுக்கு பதிலாக மைனர் முதலாளி அவுஹ ஒனக்கு ஒரு பட்டுச்சேலை வாங்கிக் கொடுப்பாகளாம்; அதனாலே அதைத் திருப்பிக் கொடுத்திரு.

ம்க்ஹூம்; நா மாட்டேன். இந்தத் துண்டுமேலே எனக்கு ஆசையா இருக்கு.

கூட்டத்தில் ஒரு கலகலப்பும் கிளுகிளுப்பும் உண்டாக்கும் இந்த உரத்த சம்பாசனையை ஜனங்கள் ரசித்துச் சிரிப்பார்கள். பங்காரு பட்சிக்கு புதுச்சேலை கிடைக்கிறதும் உண்டும்!

அவள் களைமரத்தின் உச்சிமுனையில் தன் அடிவயிற்றை மட்டும் ஊன்றிப் படுத்து கைகள் கால்கள் இரண்டையும் விரிப்பாள் ஒரு பறவையைப்போல. அப்போது அந்தக் கோமாளி மேலே பார்த்து,

ஓ . . . பங்காருப் பச்சியோவ்!

என்ன?

ஒன் ஆட்டத்தைப் பாத்து நம்ம அம்பலகார முதலாளி அவுஹ சந்தோஷப்பட்டு ஒனக்கு ஒரு கிடா வாங்கிக்கொடுக்கப் போறாகளாம்.

எனக்கு அம்பலகார முதலாளியவுஹ கிடாதான் வாங்கிக் கொடுப்பாகளோ, என்னை கிடாவித்தான் விடுதாகளோ என்பாள்.

விளையாட்டின்போதுதான் அவள் இப்படி என்று இல்லை; சாதாரணமாக நடந்துகொள்ளும்போதும் கிராமத்தில் பெரியவர்களிடமும் குறிப்பிட்ட சில பெரிய குடும்பத்து வாலிபர்களிடமும் அவள் அடிக்கிற லூட்டி அவளுடைய அழகுக்காகவும் அவளுடைய மதிமயக்கும் யௌவனத்துக்காகவும் மன்னிக்கப்படும்.

துரைசாமி நாயக்கர் இந்தமாதரியான இடங்களுக்கே வரமாட்டார். அவர் தற்செயலாகத் தெருவழி போகும்போது யாரோ பங்காருபட்சியிடம் கண்ணைக் காட்டிவிட்டார்கள்! அவள் விடுவிடு என்று போய் அவருடைய மேல்வேட்டியைப் பிடித்து இழுத்தாள்.

அவருடைய முகத்தில் எந்தவித ஆச்சரியமோ திகிலோ இல்லை. அவர் தன் மேல்வேட்டியை மறுக்கவும் இல்லை; கொடுக்கவும் இல்லை; கொடியில் கிடக்கும் துணியை எடுப்பதுபோல எடுத்துக்கொண்டாள். அவரும் அதை பார்க்காததுபோலப் போய்விட்டார்.

பங்காருபட்சிக்கு அவமானமாகப் போய்விட்டது. அவளுக்கு இன்னது செய்ய என்று தெரியவில்லை! கொஞ்சநேரம் அவள் இடது ஆள்காட்டி விரலில் அந்தத் துணியின் நுனியைச் சுற்றிக்கொண்டே யோசித்தமாதரிப் பட்டது. பிறகு அவருக்குப் பின்னாடியே அவருடைய வீட்டுக்குப்போய் மேல்வேட்டியைக் கொடுத்துவிட்டு அந்த வீட்டுப் பெண்களிடம் நாலு வாங்கிக் கட்டிக்கொண்டு வந்தாள்.

"நாயக்கருக்கு 'செக்ஸ்' விஷயத்தில் அவ்வளவாக ஈடுபாடு கிடையாதோ?"

ஏன், ஈடுபாடு இல்லாமல் என்ன! அவரும் வயசில் 'விளையாடி'யவர்தான்; ஆனால் அவருக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் உண்டும்.

"அதென்ன உண்டும் வித்தியாசம்?"

மற்றவர்கள் 'அது' சம்மந்தமான விஷயங்ளுக்கு முதலை செலவழிப்பார்கள். அவருடைய பாஷையில் 'மொதுலை' அழிப்பார்கள்.

"இவர்?"

இவருடைய ராசி அங்கனெயும் வரவுதான்!

"?"

செக்ஸ் விஷயத்தில் பெண்களுக்காக ஆண்கள் செலவழிக்கிற மாதிரி ஆண்களுக்காக செலவழிக்கும் பெண்களும் இருப்பார்கள். அல்லவா!

நண்பர் அர்த்தத்தோடு சிரித்தார்.

*

அவர் சம்சாரிகளுக்குக் கொடுக்கல் வாங்கல் செய்ததில் அசலும் வட்டியுமாக ரொக்கம் திரும்பி வந்தது அபூர்வமே. பெரும்பாலும் நிலங்கள்தான் வந்துசேரும். கொடுத்த பணத்தை சாமானியாகத் திருப்பிக் கேட்கமாட்டார். உட்கார்ந்து கொடுத்த கடனை நடந்து வாங்கு என்ற சொலவடைகளெல்லாம் அவர் விஷயத்தில் கிடையாது. எவ்வளவுக்கு நாட்களைக் கடத்துகிறாரோ அவ்வளவுக்கு லாபம் அவருக்கு வட்டிமூலம். அவர் நிம்மதியாகத் தூங்கலாம்; ஆனால் வட்டி தூங்குமா? ராவும் பகலும் அது குட்டிபோட்டுக்கொண்டே இருக்குமே!

பூனை, வளைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வளைளையே பார்த்துக்கொண்டிருக்கும் எலியை அது பயமுறுத்துகிறதும் இல்லை; பார்த்து உறுமுகிறதும் இல்லை. அது செய்வதெல்லாம் ஒரே சீராக வளைக்குள்ளே பார்த்துக்கொண்டே இருப்பதுதான். என்ன மாயமோ; எலி வளைக்குள்ளே தைரியமாக இருக்கலாம்; ஆனால் அது நடப்பதில்லை! பார்க்கிற பார்வையில் எலி தானாகவே வந்து பூனையின் காலடியில் வந்து விழுந்துவிடும்.

நாயக்கரிடம் கடன்பட்டவன் நெலத்தை எடுத்துக்கோ சாமி, ஆளைவிடு என்றுதான் வந்து சொல்லுவான். அவரோ, எனக்கென்னத்துக்கப்பா நெலம்; இருக்கிற நெலத்தை வச்சி சம்சாரித்தனம் பண்ணாக் காணாதா என்று கெத்துவிடாமல் கேட்பார். இரத்தத்தை சுற்றுகிறமாதரி மனசு அவன் நிலத்தை சுற்றிச்சுற்றி வரும். கடேசியில் மனசில்லாதமாதரி ஈனக்கிரயமாக நிலத்தை முடித்துக்கொள்வார்.

கிராமத்தில் அவருடைய நிலாதிபத்யத்தின் வட்டம் விரிந்துகொண்டே வந்தது திமிங்கலத்தின் வாய் அகண்டமாதரி.

அந்த கிராமத்தில் ஒரு வசதியான புள்ளி. நிறைய்ய பருத்தி மாசூல் செய்கிறவர். ஒரு வருஷம் அவருக்கு நூறு பொதி பருத்தி ஆனது. அதை அவர் வழக்கம்போல வியாபாரிகளுக்கு விற்காமல் சொந்தத்தில் அரைத்து விற்றார். விலையும் பஞ்சுக்கு இருந்ததால் நல்ல லாபம் கிடைத்தது. அடுத்த வருஷமும் அதேமாதரி செய்ததோடு நிற்காமல், சொந்தத்தில் நிறைய பருத்தியை மற்ற சம்சாரிகளிடமிருந்து விலைக்கு வாங்கினார். இதனால் வழக்கமாக கிராமத்தில் வந்து வாங்க வரும் பருத்தி வியாபாரிகளோடு போட்டி ஏற்பட்டது. புது வியாபாரம் அல்லவா; அதிலுள்ள நெளிவுசுளிவுகள் இவருக்குத் தெரியாது. உள்ளூர்க்காரனுக்குப் பேய்; அசலூர்க்காரனுக்கு தண்ணி என்று சொல்லுவார்கள். ஆற்றின் வெள்ளத்திலுள்ள சுழல் தெரியாத அசலூர்க்காரனைப்போல இறங்கிவிட்டார் அவர். திடீரென்று பருத்தியின் விலை மளமளவென்று இறங்கிக்கொண்டே வந்தது. என்ன காரணம் என்று அவருக்குத் தெரியவில்லை; திகைத்துப்போனார். பருத்தி தூக்கிய சம்சாரிகள் பணத்துக்கு நெருக்கினார்கள். நகரத்துப் பஞ்சு வியாபாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அவரைப் பழிவாங்கி விட்டார்கள். பாவம், அவருக்கு கட்டிய வேட்டிதான் மிஞ்சியது. அந்த ஊரிலேயே அவருடைய காரவீடும் இரும்புப்பெட்டியும்தான் பெரிசு. அவைகள் எல்லாமுமே இப்பொழுது தகரவீட்டு துரைசாமி நாயக்கர் கைக்கு வந்துவிட்டது. அந்தமாதரி ஒருவீடு நகரத்தில் இருந்தால் லட்ச ரூபாய்க்கும் மேலே போகும். நாயக்கர் அதை பதினாயிரம் ரூபாய் மட்டும் என்றே வாங்கினார்.

காரவீடு வாங்கினாலும் நாயக்கர் அந்த வீட்டுக்குக் குடிபோகவில்லை. பணத்தையும் நோட்டுகள் பத்திரங்களையும் அந்த பெரிய இரும்புப் பெட்டிக்குள் கொண்டுவந்து வைத்துப் பூட்டினார். தானிய தவசங்களையெல்லாம் அந்த வீட்டில் கொண்டுபோய் கொட்டி அதை ஒரு 'கோடவுண்' ஆக மட்டும் உபயோகப்படுத்தினார். ராத்திரிக்கு மட்டும் அவர் அந்த வீட்டுக்கு வந்து நன்றாக 'பெட்டிப் பூட்டை' போட்டுக்கொண்டு உள்ளே படுத்துக்கொள்வார். ஒண்ணுக்குக்கூட வெளியில் வருவதில்லை. ஒரு மண்சட்டி வைத்து அதில் இருந்து கொள்வார். அதிகாலையில் ஆள் நடமாட்டத்துக்கு முன் அதை தெருவில் கொண்டுவந்து கொட்டிவிடுவார்.

"எதுக்காக அப்படிச் செய்தார்?"

நடுச்சாமத்தில் ஒண்ணுக்கு இருக்க கதவு திறந்து வெளியே வந்தால் திருடர்கள் நுழைந்துவிடுவார்கள் என்று பயம்.

இதுக்குப்பிறகு சில வருஷங்களுக்குள் நாலைந்து காரவீடுகள் இரும்புப்பெட்டிகள் அவர் கைக்கு வந்துவிட்டது.

ரெண்டாவது உலக மகாயுத்தத்தின்போது, வெள்ளைக்காரனுடைய ரூபாய் நோட்டுகள் செல்லாமல் போய்விடும் என்ற ஒரு வதந்தி பரவியது. நாயக்கர் தந்திரமாக, இப்படி வரும் என்று நினைத்தோ அல்லது அவருக்கு என்ன தோன்றியதோ, வெள்ளி கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்களாக சிறுகச் சிறுக மாற்றி ஒரு சிறிய குலுக்கை நிறையப் போட்டு வைத்துவிட்டார்! இந்த வெள்ளி நாணயங்களை செல்லாது என்று அரசு அறிவித்துவிட்டாலும் கூட கவலையில்லை; வெள்ளியாகவே விற்றுவிடலாம்.

நாயக்கர் கடுமையான பிரிட்டிஷ் விசுவாசி. யுத்தம் பயங்கரமாக நடந்துகொண்டிருந்தபோது எல்லாருமே ஹிட்லர் வருகிற வரத்தைப் பார்த்து அவன்தான் ஜெயிப்பான் என்று தீர்மானமாகச் சொன்னார்கள். நாயக்கர் ஒருத்தன்தான் அந்த ஊரில் ஹிட்லர் நிச்சயமாகத் தோற்பான் என்று சொன்னவர். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த யுத்தத்தில் தோற்றால் என்

உள்ளங்கையில் அடுப்புமூட்டி உங்களுக்கெல்லாம் சோறுபொங்கிப் போடுவேன் என்றும் சொன்னார்.

"அது என்ன; அதுக்கு என்ன அர்த்தம்?"

ஒருக்காலும் இது நடக்காது என்பதுதான் இதுக்கு அர்த்தம். உள்ளங்கையில் மூன்று கற்களை வைத்து அடுப்பு மூட்டத்தான் முடியுமா; அத்தனைபேருக்கும் சமையல் செய்துதான் போடமுடியுமா! கிராமத்தில் ஏதோ அப்படி ஒரு பிரயோகம் இன்னுங்கூட இருந்து வருகிறது.

பிரிட்டிஷ்காரன் செல்வந்தர்களுக்கு தருகிற பாதுகாப்பும் அவன் ராஜாங்கம் பண்ணுகிற அழகையும் அவர் வாயால் சொல்லிச் சொல்லி மாளாது.

அவன் ரயில் போட்டிருக்கானே அது ஒண்ணு போதுமே என்பார்.

பல நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்த எந்திரங்கள் சூக்குமங்கள் அனைத்துமே பிரிட்டிஷ்காரன்தான் கண்டுபிடித்தது என்று நம்பினார்! நம்மவன் - வெள்ளைக்காரன் என்ற ரெண்டே பிரிவுதான் அவருக்கு. வெள்ளைக்காரன் கெட்டிக்காரன்; நம்மவன் சப்பட்டை இதுதான் அவர் தீர்மானம்.

*

தன்னுடைய ஒரே மகள் மகாலெட்சுமியை உள்ளூரிலே ஒரு நல்ல அமரிக்கையான சம்சாரிவீட்டுப் பிள்ளைக்குக் கட்டிக்கொடுத்தார். மகன் லட்சத்துக்கும் உள்ளூரிலே ஒரு பொண்ணைப்பார்த்து கட்டிவைத்தார். அந்த ஜாதி வழக்கப்படி கல்யாணம் என்றால் மூன்று நாட்கள் நடக்கும். அதற்கு முந்தி ஐந்துநாள் கல்யாணமாம்! அந்த சமூகத்தின் பிரமுகர்கள் கூடி ஐந்துநாள் என்றால் ரொம்பச் செலவும் அலப்பறையுமாகவும் இருக்கிறது. அதை மூன்றுநாட்களாகக் குறைத்து விடவேண்டும் என்று தீர்மானித்ததின்பேரில் மூன்றுநாள் கல்யாணம் வழக்கத்துக்கு வந்தது.

ஆனாலும் மூன்றுநாள் என்றாலும் பல குடும்பங்களால் செலவைத் தாங்க முடியவில்லை. கல்யாணம் செய்து கடன்பட்டு கெட்டுப்போன குடும்பங்கள் ரொம்பரொம்ப. நாயக்கர் துணிந்து அதை ஒரு நாள் கல்யாணமாக்கினார் மகளுக்கு.

மகன் கல்யாணத்தை அவர் நடத்தியதுதான் ஊரே சொல்லி அதிசயித்தது; தூற்றியது.

பெண்ணையும் மாப்பிள்ளையையும் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனார். தாலியைக் கட்டச் சொல்லி கூட்டி வந்துவிட்டார். வெத்திலை பாக்கு சந்தனம் தான் செலவு, வேறு ஒரு செலவும் இல்லை. ஊருக்கு ஒருவாய் சாப்பாடு போடவில்லை. ஊர்க்காரன் வாய் சாப்பாட்டை மெல்லுவதற்கு பதிலாக அவர் கல்யாணம் செய்து வைத்த 'அளகை' பேசிப்பேசி தீர்த்துக்கொண்டது.

ஜனங்கள் அவரை பணம்காக்கும் பூதம் என்று வர்ணித்தார்கள். வாழ்க்கையில் ஒன்றையும் அனுபவிக்காமல் இவர் 'போகும்போது' என்னத்தைக் கொண்டுபோகப் போகிறார் என்று பேசுவார்கள்.

நாயக்கர் ஒன்றையும் அனுபவிக்கவில்லை என்று ஊர்க்காரர்கள் சொன்னாலும் அவர் மனநிறைவோடுதான் வாழ்ந்தார். கரைக்கஞ்சி குடிக்கும்போது அவருடைய நாக்கு அறுசுவை போஜனத்தை எண்ணி அழுததில்லை. கோரைப்பாயில் சாயும் உடம்பு இலவம்பஞ்சு மெத்தையை நினைத்து ஏங்கியது இல்லை. தலைக்குத் தலையணைகூட கிடையாது; கிழிந்த பழந்துணிகள் கொண்ட ஒரு பொட்ணம்தான் தலைக்கு.

நாலரைமுழம் லாயல்மில் கச்சைதான் அவருக்கு வேட்டி, அந்தக் காலத்தில் கோவில்பட்டி லாயல்மில்லில் ஒரு கால்ரூபாயைக் கொண்டுபோய்க் கொடுத்தால் ஒரு கட்பீஸ் பொட்ணம் ஒன்று கொடுப்பார்கள். அதை அவிழ்த்துப் பார்த்தால் - கரையில்லாத கச்சைத் துணிகள்

கொண்டவை - நாலரைமுழத்துக்கு ஒரு வேட்டி போர்த்திக்கொள்ள துண்டுமாதரியில் ஒன்று, இதுபோக ஆண்கள் 'பாடி' என்ற பெயரில் தைத்துக் கொள்ளும்படியாக இரண்டு துண்டுகள், இந்தமாதரி இருக்கும். ஒரு கால்ரூபாயோடு அவர் தன்னுடைய ஒருவருச ஆடைத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வார். எல்லாம் மனம் ஒட்டிய நிறைவோடு இருக்கும் அவருக்கு.

ஆரூடம் ஜோதிடம் ஜாதகம் இவைகளில் அவருக்குத் துளிக்கூட நம்பிக்கை கிடையாது. ஆனாலும் ஏதாவது ஒரு காரியம் ஆரம்பிக்க மட்டும் நல்லநேரம் பார்ப்பார். இந்த நல்லநேரம் என்ற ஒன்றில் மட்டும் அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் ஆகாத நேரங்களில் குடும்பத்தின் மூத்தவர்கள் இறந்தால், அந்த வீட்டில் அவர்கள் ஆவிபிரிந்த இடத்தில் ஒரு மண்பானை நிறையத் தண்ணீர், எண்ணெய் ஊற்றி திரிப்போட்டு வைத்த ஒரு அகல்லிளக்கு இவைகளை வைத்து, ஆறுமுழநீளம் மூன்றுமுழ அகலம் மூன்றுமுழ உயரம் மண்ணினால் மூடி, கொஞ்சம் காலம் வைத்திருந்து பிறகு ஒரு குறிப்பிட்ட நாளில் அதைத் திறந்து பார்ப்பார்கள். இதற்கு அடைப்பு என்றுபெயர். அதில், இறந்தவர்களின் நேரத்தைப் பொறுத்து மூன்று மாத அடைப்பு ஆறுமாத அடைப்பு, இருபதுநாள், அறுபதுநாள் அடைப்பு என்றெல்லாம் உண்டு.

அடைப்பைத் திறந்து பார்க்கும்போது குடத்திலுள்ள குளிர்ந்த நீர் வற்றி இருந்தால் அந்த ஆத்மாவின் தாகம் அடங்கியதாக நினைப்பார்கள். நிறைகுடமாகவே இருந்தால், மறைந்த ஆத்மா நிறைவுடனேயே பிரிந்திருக்கிறது என்று கொள்வார்கள்.

நாயக்கர் இறக்கும்போதும் நேரம் பார்த்தார். அதேபடி நல்லநேரத்திலேயே எவ்வித அவஸ்தையும் இன்றி நிம்மதியாக இறந்தார். அவருடைய வாழ்வின் அந்தக் கடேசி நேரங்கள் அனைவரையும் யோசிக்க வைத்தது. அதை நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது.

அவர் சிலநாட்களே நோயில் படுத்தார். அதற்கு முன்னால் அவர் அறிய அவர் ஒரு காய்ச்சல் தலையடி என்று படுத்தவரல்ல. ராத்திரி ஒரு

எட்டுமணி இருக்கும். தனது அருமை மகளை வரச்சொல்லி ஆள் அனுப்பினார். இந்த அம்மாளும் என்னமோ ஏதோ என்று அவசரமாக வந்தாள்.

அம்மா எங்கிட்டெ வா. உன்னெ நான் நல்லாப் பாத்துக்கணும் என்று சொல்லும்போதே அவளுக்குக் கண்ணீர் பொங்கிவிட்டது.

மகனையும் அருகே வரச்சொன்னார். மகாலட்சுமியை அவனுக்குக் காட்டி, அவளுக்கு ஒரு குறைவும் வராமல் நீ பார்த்துக்கொள்ளணும் என்றார். அவனும் கண்களைத் துடைத்துக்கொண்டே சரி என்று தலையை ஆட்டினான்.

நீங்க ரெண்டுபேரும் போயி தலையிலெ எண்ணெய் தேச்சிட்டு வாங்க என்றார்.

வீட்டிலுள்ளவர்கள் யார் இறந்தாலும் அவர்களுடைய 'விசேஷம்' முடிகிறவரை மற்றவர்கள் தலையில் எண்ணெயே தேய்க்கக் கூடாது. லட்சம் நினைத்தான். இதென்ன பைத்தியக்காரத்தனம்; அப்பா நாலு நாள் படுத்திருக்கிறார்; அதற்குள் தான் இறந்துபோய்விடுவோம் என்று நினைக்கிறாரா? ஆனால் மகாலட்சுமி அப்படி நினைக்கவில்லை. அவள் புத்திசாலி; பெண்மைக்கே உரிய நுட்ப உணர்வில் அதைக் கவனத்தில் கொண்டாள்.

பேரன் பேத்திகளையெல்லாம் வரச்சொன்னார். அவர்களோடு கொஞ்சநேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தார். பிறகு, சரி; நேரமாய்விட்டது போயி படுத்துக்கிங்க என்று சொல்லி அனுப்பினார்.

மகனையும் மகளையும் போய்ப் படுத்துக்கிங்க என்று அனுப்பிவிட்டு மகளை மட்டிலும், நீ இண்ணைக்கு வீட்டுக்குப் போகவேண்டாம்; இங்கேயே தங்கீரு என்று சொல்லிவிட்டு, கொஞ்சம் தாகமா இருக்கு தண்ணி கொண்டுவா என்று சொன்னார்.

ஒரு மடக்குதான் உள்ளே போயிற்று இரண்டாவது மடக்கு வெளியே வழிந்துவிட்டது.

இப்படி அவர் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு ஏதோ ஊருக்குப் பயணம் புறப்படுகிறமாதரி இறந்துபோனது உண்மையிலேயே ஒரு அதிசயம்தான்! மேலும் கொஞ்சநேரம் உயிர் இருந்து பேசும் சக்தியும் இருந்திருக்குமானால் தன் 'விசேஷத்தை' எப்படிச் செய்யவேண்டும் செலவே இல்லாமல் என்று விவரமாக சொல்லியிருப்பார்.

*

ஆச்சி தகரவீட்டு துரைசாமி நாயக்கர் 'கதை' ஒரு வகையாய் முடிஞ்சது. ஆனா அவரோட உண்மையான கதை சொத்தின் கதை முடியவில்லை. அது வளர்ந்தது. அவர் சேகரித்த பல லட்சங்களில்தான் அவருடைய நிஜமான கதை அடங்கி இருக்கிறது.

அவருடைய மகன் இப்பொழுது அந்தக் கிராமத்தில் பெரிய ஜின்னிங்பாக்டரி கட்டி முடித்திருக்கிறான். மரக்கலப்பைகளையும் உழவு காளைகளையும் விவசாயத்திலிருந்து விடுவித்து சகலத்தையும் இயந்திரமாக்கிவிட்டான்.

ஸ்ரீலக்ஷ்மிதேவியானவள் நிலத்தில் ஊன்றியிருந்த தனது திருப்பாதங்களை எடுத்து இப்பொழுது இயந்திரங்களில் பலமாக ஊன்றிக்கொண்டாள்.

இந்த அளவில் துரைசாமி நாயக்கரின் கதை நிறைவு பெறுகிறது.

"மங்களம்" என்றார் நண்பர்.

இப்போதைக்கு என்றேன் நான்.

மார்ச்சு 1975

***

கி. ராஜநாராயணன், ஜானகிராமனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஜானகிராமனைப் போலவே அபூர்வமான அழகுணர்ச்சியும் ரசனையில் திளைக்கும் மனோபாவமும் கொண்டவர். இவரது கதை உலகத்தைத் தமிழ் மண்ணுக்கே உரித்தான ஒரு பழத்தோட்டம் என்று சொல்லலாம். வித்தியாசமான மனிதர்களைக் கதாபாத்திரங்களாக மாற்றும் ஆற்றல் இவர் கலை வன்மை.

– சுந்தர ராமசாமி

கரிசல் இலக்கியத்தின் முன்னோடி
கி. ராஜநாராயணனின் தேர்ந்தெடுத்த 17 கதைகளின்
தொகுப்பு இந்நூல்.



தொகுப்பாசிரியர்

**சபரிநாதன்**

அட்டை வடிவமைப்பு
ரோஹிணி மணி